www.padippakam.com

காலாண்டிதழ் ரூ.25

# பன்முகம்

முகம்: 3 ஆண்டு:2002



- பிரம்மராஜனுடன் ஓர் உரையாடல்
- பிரைமோ லெவியின் சிறுகதை
- ரமேஷ் - பிரேம் கவிதைகள்

இது ஒருபுதுப்புனல் வெளியீடு

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே....


5 பிரம்மராஜனுடன் ஓர் உரையாடல் - பிரேம்


## சிறுகதை


16 ''மீகாமரே - மீகாமரே'' - யுவன் சந்திரசேகர்

28 வித்தைக்காட்டி - ப்ரைமோ லெவி
தமிழில் : லதா ராமகிருஷ்ணன்

36 வெறும் நுரை மட்டும், அவ்வளவுதான் -
ஹெர்னான்டோ டெலெஸ்
தமிழில் : ஆர்.சிவகுமார்

39 கொல்கதாவில் கிறிஸ்துவின் முதல் புன்னகை
- எம்.ஜி.சுரேஷ்

49 இடம் - ஆபிதீன்


## கவிதை


15 ●இரா.கந்தசாமி ●மாலதி மைத்ரி

26 ●இளையபாரதி

27 ●விக்ரமாதித்யன் நம்பி

34 ●ரமேஷ் - பிரேம்

42 ●ரெங்கநாயகி

62 ●மாலதி

63-64 ●தமிழ் மணவாளன் ●ஹவி ●இரா.கை.சங்கர்
●கீதாஞ்சலி ப்ரிதர்ஷினி ●யவனிகா ஸ்ரீராம்


## கட்டுரை


21 இன்றைய தமிழ் இலக்கியம் வாழ்வும் வளர்ச்சியும்
- ஞானி

44 பால் சக்காரியாவிடமிருந்து

45 புனைவுகளின் தளம் - ந.முருகேச பாண்டியன்

60 பன்முகம் நூலகம்

65 எதிர்வினை


# பன்முகம்

காலாண்டிதழ்


**படைப்புகள், சந்தா மற்றும் விளம்பரக் கட்டணம் அனுப்ப தொடர்புக்கு:**

புதுப்புனல், 32/2, ராஜி தெரு,
அயனாவரம், சென்னை-600 023.


☆☆☆

படிப்பகம்

www.padippakam.com


# பன்முகம்

கலை இலக்கிய கோட்பாட்டு இதழ்

(காலாண்டிதழ்)

முகம் - 3

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

ஆசிரியர்

எம்.ஜி.சுரேஷ்

தனியிதழ் : ரூ.25/-

ஆண்டு சந்தா : ரூ.100/-

வெளிநாட்டு சந்தா : ரூ.400/-

சந்தா தொகையை PUDHU PUNAL என்ற பெயரில் பணவிடையாகவோ, வரைவோலையாகவோ அனுப்புக

இது ஒரு புதுப்புனல் வெளியீடு


## இளம் இலக்கியவாதிகளுக்கான ஒரு கையேடு

புதிதாகத் தமிழில் எழுதவரும் இளம் எழுத்தாளர்கள் பலர் என்னிடம் வந்து தங்களது எழுத்து பற்றியும் – தங்களது இலக்கிய எதிர்காலம் குறித்தும் – அடுத்து எப்படி இயங்குவது என்பது பற்றி – ஆலோசனைகள் கேட்கிறார்கள். நவீன தமிழ்ச் சூழலில் எனக்கு இருக்கும் அனுபவத்தை வைத்து என் மனதில் படும் ஆலோசனைகளை இங்கு முன்வைப்பது நல்லது என்று தோன்றுகிறது.

முதலாவதாக, புதிதாக எழுத ஆரம்பித்திருக்கும் இலக்கியவாதிகள் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விஷயம்: அவர்களுக்கு நன்றாக எழுதத் தெரிய வேண்டியதில்லை. தினசரிப் பத்திரிகைகளின் வார மலர்களில் கிசுகிசு எழுதுகிற அளவுக்கு எழுத்து சாமர்த்தியம் இருந்தாலே போதுமானது. ஏனெனில், தன்னை ஒரு டால்ஸ்டாய் தாஸ்தாவெஸ்கி, ஹெமிங்வே என்றெல்லாம் கற்பிதம் செய்து கொண்டு, அவர்களைப் போலவே தானும் தீவிரமாக உழைத்து நல்ல இலக்கியப் பிரதிகளை உருவாக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கு இப்போது இது ஒரு தப்பான இடம். ஒரு விதத்தில் பார்த்தால் இது ஒரு நிம்மதி தரும் விஷயம். எழுத்துச் சனியனோடு முட்டிமோதி சிரமப்பட வேண்டாமே. கொஞ்சம் எழுத்துத் திறமை, கொஞ்சம் வாய்ச்சவடால் இருந்தாலே போதும் பிழைத்துக் கொள்ளலாம். சரிதானா?

இதை மீறி பைத்தியக்காரத்தனமான கனவுகளுடன் நீங்கள் கடுமையாக உழைத்து ஒரு தீவிரமான இலக்கியப் பிரதியை உருவாக்க முனைந்து அதில் வெற்றியும் பெற்றுவிட்டால் (அது தேவையற்ற வேலை என்ற போதிலும்) அதன் பிறகு நீங்கள் மிகவும் எச்சரிக்கையாகவும் பீதியுடனும் வாழ வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாக வேண்டி வரும். ஏனெனில்,

(அ) தெருவில் புதிதாக நுழையும் ஒரு நாயைப் பார்த்து பழைய நாய்கள் பற்களைக் காட்டி உறுமுவது போல் உங்களைப் பார்த்து பழைய படைப்பாளிகள்(!) உறுமுவார்கள். பின்னங்கால்களுக்கு இடையே வாலைச் சுருட்டிக் கொண்டு நீங்கள் உங்கள் பிரதியுடன் பின்வாங்க நேரிடும்.

(ஆ) நவீன தமிழ் இலக்கியவெளி என்பது மாம்பலம் ரங்கநாதன் தெருவைவிட ஜனநெரிசல் மிக்கது. எனவே பிரதியை எழுதிப் பிரசுரித்த கையோடு ஒரு வெளியீட்டு விழா வைக்காவிட்டால் நீங்களும் உங்கள் பிரதியும் காணாமல் போய்விடுவீர்கள். கூட்டம் போட்டால்தான் குறைந்தபட்சம் உங்கள் பிரதியை நிராகரிக்கவாவது செய்வார்கள். இல்லாவிட்டால் மௌன அரசியல் நடத்திக் கொன்றே விடுவார்கள்.

(இ) நவீன இலக்கியவாதிகள் குழுக்களாக செயல்படுகிறார்கள். குழுக்கள் என்றதும் என்னமோ கால்பந்தாட்டக்குழு, ஹாக்கி குழு போல ஆரோக்கியமான போட்டிக் குழுக்கள் என்று தப்பிதமாகக் கற்பனை செய்து கொள்ளக் கூடாது. இவை வேறு மாதிரி குழுக்கள். மத்திய கால வரலாற்றில் உலவிக் கொண்டிருந்த ரகசியச் சங்கங்களைப் போன்றவை. இவர்களது செயல்திட்டம், ஒரு கொலைத்திட்டம். எழுத முயன்று தோற்றவர்களால் உருவாக்கப்பட்ட சங்கம் இது. ஆதலால் புதிதாக எவனாவது நன்றாக எழுதுபவன் இலக்கிய உலகில் பிரவேசித்துவிட்டால் அவனைத் தீர்த்துக் கட்டுவதே இவர்களது லட்சியம். இவர்கள் நவீன இலக்கிய உலகை பனிப் பிரதேசங்களைப் போல் வழுக்கலான பிரதேசமாக்கி இருக்கிறார்கள். கால் வைத்த மறுநொடியே நீங்கள் வழுக்கி விழுந்து விடுவீர்கள். (இந்த கும்பலின் அழிச்சாட்டியத்திற்கு பயந்துதான் பல இலக்கியவாதிகள் வணிகப் பத்திரிகைகளுக்குப் போய் மின்ன ஆரம்பித்து விடுகிறார்கள்).

(ஈ) வணிகப் பத்திரிகைகளுக்குப் போகும் உத்தேசம் இல்லையெனில் நீங்கள் உங்களை ஏதாவது ஒரு இலக்கியக் குழுவில் இணைத்துக் கொள்வது நல்லது. ஒவ்வொரு இலக்கியக் குழுத் தலைவரும் தன்னை ஒரு போப்பாண்டவராக நியமித்துக் கொண்டவர். அவர் உங்களுக்கு ஞானஸ்நானம் வழங்குவார். ஞானஸ்நானம் பெறுமுன் உங்கள் பிரதி தமிழில் எழுதப்பட்டிருந்தபோதிலும், தமிழைத் தவிர வேறு ஏதோ 'துளு' 'காண்டனீஸ்' 'இட்டிஷ்' போன்ற மொழிகளில் எழுதப்பட்டதாகவே கருதப்படும். அதற்கும் தமிழ் இலக்கியத்திற்கும் எவ்விதமான தொடர்பும் இல்லை என்றே கொள்ள வேண்டும். நானஸ்நானம் பெற்ற பிறகே இது தமிழ்ப் பிரதியாகக் கொள்ளப்படும்.

(உ) உலகின் மிகப் பெரிய இலக்கிய மேதைகளான டால்ஸ்டாய், தாஸ்தாவெஸ்கி, ஆல்பெர்கெமூ, காஃப்கா, யசுனேரி கவபட்டா, ஜெர்ஸி கோஸின்ஸ்கி, இடாலோகால்வினோ போன்றவர்களைப் படித்துவிட்டு அவர்களைப் போலவே நீங்களும் எளிமையாக எழுத முயன்றால் உங்களை விழுங்க ஒரு அதல பாதாளம் காத்திருக்கிறது. நவீன தமிழ் இலக்கியச் சூழலில் 'எளிய' 'புரிகிற மாதிரி' 'படிப்பதற்கு இன்பம்தரத்தக்க' என்பது போன்ற வார்த்தைகள் தடை செய்யப்பட்டவை. இதனால், உங்கள் எழுத்தில் 'Consistency' இல்லை; 'வணிக எழுத்து மாதிரி இருக்கிறது' 'தட்டையாக இருக்கிறது' என்றெல்லாம் சொல்லி ஒரே முஷ்டிக் குத்தில் உங்களை மல்லாத்தி விடுவார்கள். எனவே ஒவ்வொரு வார்த்தை எழுதும்போதும் உங்களை சாட்டையால் அடித்து வருத்திக் கொண்டு கடினமான வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து எழுதுவதுதான் உங்களை ஒரு இலக்கியப் பேராசானாய்க் காட்டும். (உங்கள் உள்ளொளி உங்கள் தலைக்குப் பின்னே, பின்னந் தலையில் ஓர் ஒளிவட்டமாக மாறிச் சுழல ஆரம்பிக்கும். இருட்டில் 'டார்ச் லைட்' இல்லாமலேயே நீங்கள் நடந்து போவது சாத்தியம். ஒளிவட்டம் போதிய வெளிச்சம் தரும்).



படிப்பகம்

www.padippakam.com

(ஊ) உங்கள் நடை ஒருவேளை, இப்படி இருக்கலாம்,
ரோகவனத்தில் உதிரும் பாறைகளில்
செதில் உதிரும் பாதரச எலும்பின் தூள்
படிந்த கல்கோவிலில் நூல் சுருளும்
சர்ப்பம் மணல் உதிர நகர்ந்தது.
புரியவில்லை என்கிறீர்களா? அதனால் என்ன புரிந்தால்தானே சிக்கல்.

இப்படி எழுதிய கையோடு உங்கள் எழுத்தை மார்க்வஸ், போர்ஹே மாதிரி இருப்பதாக நீங்களே வெளியே சொல்லிப் பரப்பவேண்டும். தமிழர்கள் தமிழையே ஒழுங்காகப் படிப்பதில்லையாதலால் பிறமொழி இலக்கியத்தை எங்கே படித்திருக்கப் போகிறார்கள். எனவே நீங்கள் சொல்லும் கருத்துக்கு அப்பீலே இருக்காது. பிறகென்ன? நீங்கள்தான் வெற்றியாளர். தமிழ் எழுதுகிறவர்களுக்குப் பிறமொழியில் எழுத வருபவர்களுக்கு இல்லாத ஒரு அரிய வசதி இருக்கிறது. தமிழர்கள் இளிச்சவாயர்கள். ஏமாளிகள் என்பதுதான் அது. எனவே அவர்களை ஏமாற்றுவது எளிது. இது மாதிரி சாமர்த்தியத்தை மலையாளத்திலோ, வங்காளத்திலோ காட்ட முடியாது என்பதால் தமிழ்ச் சூழலில் இருக்கும் இந்த சாதகமான அம்சத்தைப் பயன்படுத்தி முன்னேறப் பார்க்க வேண்டும்.

புரியாமல் எழுதுவதில் ஒரு பெரிய சௌகர்யம் இருக்கிறது. தலித்தியவாதிகளிடம் இதை தலித் இலக்கியம் என்று சொல்லலாம். பெண்ணியவாதிகளிடம் இதைப் பெண்ணிய இலக்கியம் என்று சொல்லலாம். இலங்கைத் தமிழர்களிடம் இது ஈழப் பிரச்சனை பற்றிப் பேசுகிறது என்று சொல்லிவிடலாம். அனைவரது ஓட்டு மொத்த ஆதரவையும் பெற்றுவிடலாம். தெளிவாக எழுதினால் இப்படியெல்லாம் ஏமாற்ற முடியுமா?

(எ) ஒருவேளை நீங்கள் இப்படியும் எழுதலாம்.

____________________

____________________

(ஆபாசத்தின் கடுமை கருதி மேற்கண்ட வரிகள் தணிக்கை செய்யப்பட்டுள்ளன)

ஒரு காலத்தில் சென்னை பிளாட்பாரங்களில் சரோஜாதேவி கதைகள் என்ற பெயரில் இதுபோன்ற எழுத்துக்கள் கிடைத்து வந்தன. இப்போது இவற்றை நவீன தமிழ்ச் சூழலில் தீவிர இலக்கியமாக்கி இருக்கிறார்கள். உங்களுக்குப் பிடித்திருந்தால் இதைப் போலவும் நீங்கள் எழுதிவிட்டு இது ஸாதே, ழீத் எழுதியது போன்று இருப்பதாகப் பிரச்சாரம் செய்ய வேண்டும். பலன் கிடைப்பது நிச்சயம்.

(ஏ) அப்புறம் ஒரு விஷயம், நீங்கள் எழுதிய முதல் நாவல் பேசப்பட வேண்டுமானால் இரண்டாவது நாவலை உடனடியாக எழுதி வெளியிட வேண்டும். அப்போதுதான் முதல் நாவல் பேசப்படும். ''அது பரவாயில்லை அந்த அளவுக்கு இந்த இரண்டாவது நாவல் இல்லை'' என்பார்கள். ஒரு வழியாக முதல் நாவலைப் பேச வைத்துவிட்ட வெற்றி உங்களுக்கு கிடைக்கும்.

(ஐ) இப்படியாக நீங்கள் ஒரு பிரதியை எப்படியோ தயார் செய்து பிரசுரித்து ஒரு இலக்கியவாதியாகி விட்டீர்கள். அதோடு விஷயம் முடிந்துவிடவில்லை. அதற்குப் பின்புதான் விவகாரமே இருக்கிறது. வெகுஜனப் பத்திரிகைகள் சமீப காலமாக தீவிர இலக்கியவாதிகள் பால் கரிசனம் காட்டி வருகின்றன. அதில் ஏதாவது ஒன்று இலக்கிய மலர் வெளியிடும் அப்போது உங்களிடம் 'பேட்டி' அல்லது 'கட்டுரை' கேட்டு வரும். அதுசமயம் கவனமாக நடந்து கொள்வதன் மூலம் நீங்கள் ஜெயிக்க வேண்டியது முக்கியம்.

'புதுமைப்பித்தனின் நடை குடைசாய்ந்த நடை'
'கு.ப.ரா. காலாவதியாகிவிட்டார்'
'மௌனியின் கதைகளில் ஒன்று கூட தேறாது'
'புதுமைப்பித்தனுக்கு சமூக அக்கறை இல்லை'

என்றெல்லாம் குண்டுகளைத் தூக்கிப் போட வேண்டும். இப்படி நீங்கள் அள்ளி வீசும் அதிரடி ஸ்டேட்மெண்டுகள் உங்களை இலக்கியவானில் ஒரு நம்பிக்கை நட்சத்திரம் போல் மிளிர வைக்கும். உங்கள் புகழ் எய்ட்ஸ் போல் பரவும். வெளிநாட்டுத் தமிழர்கள் உங்களை அவர்கள் நாட்டுக்கு வரவழைத்து பாராட்டுக் கூட்டம் நடத்தி கை நிறைய டாலர்களாகக் கொடுத்து அனுப்புவார்கள். அப்புறம் என்ன, நீங்கள்தான் நவீன இலக்கியவாதி; தீவிரமான படைப்பாளி; எல்லாமும்.

(ஒ) கடைசியா ஒரு விஷயம், தமிழ்நாட்டில் அரசு, தனியார் நிறுவனங்களின் உதவியின்றி சாதாரண தனிநபர்களின் முயற்சியினால் சிறு பத்திரிகைகள் சிரம தசையில் இயங்கி வருகின்றன. பேட்டியில் பத்திரிகைக்காரர்கள் உங்களுக்குப் பிடித்த சிறு பத்திரிகை எது என்று கேட்டால், இந்த தரித்திரம் பிடித்த பத்திரிகைகளில் ஒன்றின் பெயரைச் சொல்லிவிடக் கூடாது. பெயரைச் சொன்னாலே தரித்திரம் ஒட்டிக்கொள்ளும். எனவே

நெதர்லாந்திலிருந்து வெளிவரும் 'நூற்று இருபத்தெட்டாவது மனிதன்' என்ற பத்திரிகைதான் பிடிக்கும்? என்று சொல்ல வேண்டும். தமிழ்நாட்டிலிருந்து வெளியாகும் பத்திரிகையின் பேரைச் சொல்வதால் யாருக்கு என்ன லாபம்? நெதர்லாந்தில் இருக்கும் புலம்பெயர் தமிழர் நடத்தும் பத்திரிகையின் பெயரைச் சொன்னாலாவது அவர்கள் நாளைக்கு நம்மை நெதர்லாந்துக்கு வரவழைத்து சாப்பாடு போட்டு ஊரைச் சுற்றிக் காட்டுவார்கள். குளிர்காலக் கோட் வாங்கிக் கொடுப்பார்கள். எனவே இதுபோன்ற விஷயங்களில் உஷாராக இருந்து காரியத்தை சாதிக்க வேண்டும். இந்த மாதிரி திட்டமிட்டு இயங்கினால் நீங்கள் வெற்றிகரமாக இலக்கியவாதியாவது நிச்சயம்.

ஏதாவது வேலை செய்து கொண்டே இலக்கியப் பணியைத் தொடரும் நீங்கள் வெளிநாட்டு டாலர்கள் தேறுவதைப் பொறுத்து முழுநேர எழுத்தாளனாகி விடலாமா வேண்டாமா என்பதை முடிவு செய்து கொள்ளலாம். அப்புறம் என்ன; சுறுசுறுப்பாக இயங்க ஆரம்பியுங்கள். வெற்றி உங்களுக்கே.

அது சரி; இதற்கெல்லாம் ஒத்து வராமல் தான் உண்டு, தன் எழுத்து உண்டு என்று தான்தோன்றியாக இயங்கிக் கொண்டிருக்கும் இலக்கியப் பைத்தியங்கள் என்ன ஆகும்? அதுகள் பாடு பாவம்தான். நான்காம் பேருக்குக் கூடத் தெரியாமல் அந்த ஜன்மங்கள் காலம்பூராவும் இருட்டிலேயே இருந்து மறைய வேண்டியதுதான். திருத்தக்கத்தேவரை உ.வே.சா கண்டுபிடித்தது போல், அவர்களைப் பின்வரும் நூற்றாண்டில் எவனாவது ஒரு வாசகன் கண்டுபிடித்தால்தான் உண்டு. இல்லாவிட்டால் அதற்கும் வழி இல்லாமல் போய்விடும். சரி கிடக்கிறார்கள்; பிழைக்கத் தெரியாதவர்கள். அவர்களைப் பற்றி நமக்கென்ன கவலை. நம் பிழைப்பை நாம் பார்ப்போம். அதுதானே நமக்கு நல்லது? மிஸ்டர் ஹெமிங்கே நீரா சொன்னீர் 'தீவிர இலக்கியம் எழுத்தாளனைக் கொன்றுவிடும்' என்று. திட்டமிட்டு செயல்பட்டால் அது வென்றுவிடுமய்யா வென்றுவிடும்.

**எம்.ஜி.சுரேஷ்**



படிப்பகம்

www.padippakam.com

# பிரம்மராஜனுடன் ஓர் உரையாடல்

பிரேம்

'அறிந்த நிரந்தரம்' கவிதைத்தொகுதி மூலம் தமிழ்க் கவிதைக்கு அறிமுகமான பிரம்மராஜனின் ஐந்தாவது தொகுதியாக 'மஹா வாக்கியம்' வெளிவந்தது. ஒரு கவிஞராக இருப்பதுடன் பத்திரிகை ஆசிரியராக மொழிபெயர்ப்பாளராக, கட்டுரையாளராக, தொகுப்பாளராக செயல்படும் இவரின் இலக்கியம் பற்றிய பார்வைகள் விமர்சனங்களின் மூலம் பதிவாகிறது. 1983-91 காலகட்டத்தில் வெளியான மீட்சி 35 இதழ்கள்வரை வந்திருக்கிறது. சிறுபத்திரிகை என்ற தளத்தையும் மீறி இலக்கியவாசிப்புக்கு தேர்ந்தெடுத்த பங்களிப்பை செய்திருக்கிறது இது. இலக்கிய இயக்கங்கள், கோட்பாடுகள், இலக்கிய ஆளுமைகள் பற்றிய ஒரு அறிமுகத் தளத்தை மீட்சி அமைத்துக் கொடுத்ததற்கு பிரம்மராஜனின் இலக்கியத் தேர்வுகளே காரணமாக அமைந்திருந்ததை தற்போதைய அவரது எழுத்துக்கள் மூலம் அறியமுடியும். கலைந்துபட்ட பிரக்ஞைகளின் படிமங்களும், இடைவெளியுடைய நினைவுகளின் குறியீடுகளும் பிணைந்த ஒரு மொழி இவரது கவிதையாக மாறுகிறது. மையப்படுத்தப் படாத மொழி மற்றும் நிகழ்நிலை இரண்டையும் கவனப்படுத்தும் பிரம்மராஜனின் கவிதைகள் இடையீட்டு பிரதிக்குறிப்புகளை வெளிப்படையாக பயன் படுத்துவதன் மூலம் ஒரு சர்வதேசமொழிவலை சார்ந்த கவித்துவ மனோ நிலையை கவனப்படுத்துகின்றன. இவருடனான உரையாடல் இவரது எழுத்துக்களை பலவேறு பின்புலங்களில் விளங்கிக் கொள்ளவும், எழுத்து ருவாக்கம் பற்றிய சில கூறுகளை பதிவு செய்யவுமாக அமைந்திருக்கிறது.



**கேள்வி:** இலக்கியத்தின் பழகிய வடிவங்களில், மரபு உறுதி செய்த போக்குகளில் எழுதுவது என்பது ஒருவகை. புதிய வடிவங்களை உருவாக்குவதும், புதிய மொழியைக் கண்டறிவதும் இன்னொரு வகை. நீங்கள் இரண்டாவது வகையைத் தெரிவு செய்தீர்கள். குறிப்பாக கவிதையில் ஒரு பரிசோதனை முயற்சியைத் தொடங்கி பின்பு அதன் வேறுபட்ட வெளிப்பாட்டு வடிவங்களைக் கையாண்டு வருகிறீர்கள். உங்களுக்கென்று ஒரு கவிதை வடிவம், கவிதைமொழி உருவாகி வந்திருக் கிறது. இதை நீங்கள் எந்தத் தேவையின் அடிப் படையில் தேர்ந்தெடுத்தீர்கள். அல்லது உங்கள் கவித்துவ முறையை எந்த தாக்கங்கள் மாற்றிய மைத்தன?

**பிரம்மராஜன்:** எழுபதுகளின் தொடக்கத்தில் ஃ பத்திரிகையுடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது. அதன் செயல்பாடுகளில் எனக்கு ஈடுபாடு இருந்தது. இதை ஒரு தொடக்கமாகக் கூறமுடியும். நான் ஆசிரியர் குழுவின் வேலைகளைப் பகிர்ந்து கொண்டேன். பிழை திருத்தல், கவிதை தேர்ந் தெடுத்தல் இரண்டையும் நான் செய்திருக்கிறேன். ஒரு பத்திரிகை எப்படி நடத்தப்படக்கூடாது என்பதை நான் அங்கு அதிகம் கற்றுக் கொண்டேன். குறிப்பாக அரசியல் மற்றும் விவாதங்கள் தொடர்பாக. இன்னொன்று கவிதை சார்ந்தது. ஞானக்கூத்தன், நா. காமராசன் இருவர் கவிதையும் ஒரே இதழில் வெளிவந்த போது பரந்தாமன் அதற்கான காரணங்களை முன்வைத்தார். நான் அதற்கு மாற்றான கருத்தை முன்வைத்தேன். கவிதை பற்றிய இரு எதிர் எதிர் முனைகள் பற்றிய விவாதம் இது. பத்திரிகையுடன் தொடர்பு கொண்டிருந்த காலத்தில் நான் கவிதை எழுதவில்லை, ஒரு வகையில் எழுதத் தொடங்கவுமில்லை.

எப்படி எழுதக்கூடாது என்பதைத்தான் நான் அப்பொழுது அதிகம் தெரிந்து கொண்டேன். எந்த வடிவங்களில் எழுதக்கூடாது என்பதைத் தேர்ந்த பிறகுதான் எனது எழுத்து ஆரம்பிக்கிறது என்று சொல்லலாம். வேறு யாருடையதைப் போலவும் எனது கவிதை அமையக்கூடாது என்பதையும், புதிய ஒரு வடிவம் தேவை என்பதையும் நான் முடிவு செய்து கொண்டபிறகுதான் நான் எழுத ஆரம்பித்தேன். எழுபத்து எட்டுக்குப் பிறகுதான் நான் எழுத ஆரம்பித்தேன். எழுபத்து எட்டுக்குப் பிறகு தான் எனது கவிதைகள் தொடங்குகின்றன. எண்பது வரை ஃ பத்திரிகை வந்தபோதும் எனது ஒரே ஒரு கவிதைதான் அதில் வெளியானது.

படிமத்தைத் தவிர்ப்பது, உருவகமொழியைத் தவறாக பயன்படுத்தாமல் இருப்பது இரண்டை மட்டுமே நான் முதன்மையாக கவனித்தேன். பரிசோதனை முயற்சி என்பதைப் பொருத்தவரை



படிப்பகம்

www.padippakam.com

பிரக்ஞைப் பூர்வமாகவும் தேவையின் அடிப் படையிலும்தான் நான் செய்ய வேண்டியிருந்தது. கவிதை மிகவும் மலிந்து இருந்த காலம் அது. வழக்கமான சில வகைகள் இடத்தை அடைத்துக் கொண்டிருந்தன. இந்த பொதுப்போக்கிலிருந்து விலகி இருந்ததனால் வழக்கமான காதல் கவிதைகளையும், புலம்பல் கவிதைகளையும், குடும்பம் சார்ந்த கவிதைகளையும் நான் எழுதாமல் இருக்க முடிந்தது. இவற்றைத் தவிர்த்ததின் மூலம் எனக்கு பரிசோதனைக்கான தளம் அமைந்து விட்டது. இன்னொரு நட்புச் சூழல் **'கசடதபற'** நிற்பதற்கு சற்று முன்னான காலங்களில் அவர்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. அந்த நண்பர்களுடன் இசைக் கேட்பது, இலக்கிய உரையாடல்களில் ஈடுபடுவது எனக்கு பயனுடைய தாக இருந்தது. கசடதபற பத்திரிகையிலும் நான் கற்றுக் கொண்டது இலக்கிய அரசியல் விவாதங்களைத் தவிர்க்க வேண்டும் என்பதுதான். ஏற்கனவே பரந்தாமன் தனது நேரத்தையும் பணத் தையும் தர்மு சிவராமுவுக்காகவும் வெங்கட் சாமிநாதனுக்காகவும் வீணடித்திருந்தார். இது இல்லாத வேறு வகை இலக்கியச் சூழல் தேவை என்று எனக்குத் தோன்றி இருந்தது. கவிதையிலும் இதன் தாக்கம் எனக்கு ஏற்பட்டது.

**கேள்வி:** கவிதைச் சூழலில் எவற்றை தவிர்ப்பது என்பது உங்கள் அழகியல் சார்ந்த தேர்ந்தெடுப்பு. அதே சமயம் நீங்கள் உருவான காலகட்டத்தின் அரசியல் சூழல் மிகுந்த தாக்கம் உடையதாக இருந்தது. இவற்றில் எவற்றுடன் உங்களுக்கு உறவு இருந்தது. எவற்றை நீங்கள் சந்தித்து பிறகு தவிர்க்க வேண்டும், வெளியேற வேண்டும் என்று நினைத்தீர்கள்?

**பிரம்மராஜன்:** நான் பிறந்து வளர்ந்த ஊரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பலமாக இருந்தது. ஒன்றிணைந்த கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கி இருந்த லட்சியங்கள், கனவுகள் எங்களைச் சிறுவயதில் பாதித்து இருந்தது. கட்சி இரண்டாகப் பிரிந்த பிறகு அதில் இருந்தவர்கள், எங்களுக்கு போதித்தவர்கள் வேறுவகையாக மாறி இருந்தார்கள். கட்சிக்கான பிரச்சாரப் பாடலைப் பாடிய, நாங்கள் மதித்த ஒருவர் இரண்டு மூன்று கட்சிமாறி பின் காங்கிரஸ் கட்சியில் இணைந்தார். அதற்கு காரணம் கேட்டபோது எங்களுக்கு புரியாது என்று கூறிவிட்டார். இந்தச் சூழலில் கட்சிகள் பற்றிய கனவு, நம்பிக்கைகள் என்னிடம் இல்லாமலேயே போனது. பின்னால் நான் அரசியல் இயக்கம் அல்லது நிறுவனங்களை பெரிதாக எடுத்துக் கொள்ளாமல் இருப்பது இயல்பாகவே எனக்கு இருந்தது. அதேசமயம் அரசியல் கோட்பாடுகள் பற்றிய தெளிவும் எனக்கு ஊர்ச்சூழலிலேயே கிடைத்தது என்றுதான் கூறவேண்டும். ஜீவா போன்றவர்கள் பேச்சை முழுமையாக புரியாத நிலையிலேயே கவனித்ததும், கட்சி சார்ந்த நண்பர்களின் வாசிப்புக்களும் எனக்கு அந்த வாய்ப்பைத் தந்தன.

**கேள்வி:** உலக அளவில் நவீனத்துவம் மற்றும் அவன்கார்ட் போக்குகள் புரட்சிகர மற்றும் கம்யூனிச இயக்கங்களோடு உரையாட வேண்டிய தும், முரண்பட வேண்டியதுமான சூழல் இருந்தது. தமிழ்ச் சூழலில் நவீன இலக்கியம் திராவிட இயக்கங்களோடு, மொழி இன அரசியல் மற்றும் பகுத்தறிவு இயக்கம் போன்றவற்றோடு உரையாட வேண்டியதும் உறவு கொள்ளவேண்டியதும் இருந்தது. உங்களைப் பொருத்தவரை அது எப்படி அமைந்தது. உறவு அல்லது எதிர்ப்பு என்ன வகை யில் இருந்தது?

**பிரம்மராஜன்:** இதுவும் எனது நேரடி அனுபவங்கள் மூலம் அமைந்த ஒன்றுதான். ஊர்சார்ந்தும், ஊரின் மனிதர்கள் சார்ந்துமே இந்த உறவும் அமைந் திருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து வெளியேறிய சில மூத்தவர்கள் தி.மு.கவிற்கு தொண்டர்களாகச் சென்றார்கள். அவர்களுக்கு அங்கு எந்த முக்கியத் துவமும் இல்லை. மக்கள் பற்றிய எந்த பேச்சும் அங்கும் எழவில்லை. கட்சி மற்றும் தொண்டர்கள், என்ற அளவில்தான் இருந்தது. பேச்சாளர்களுக்காக நாங்கள் சிலர் கூட்டங்களுக்குச் சென்றோம். அதைவிட நாகூர் அனிபாவின் பாடலும் குரலும் பலருக்குப் பிடித்திருந்தது. பேச்சைக் கேட்காம லேயே பாடலை மட்டும் கேட்டுவிட்டு வந்தவர் களும் உண்டு. ஒருவகையில் ஆரம்பத்திலிருந்தே கட்சிகள், அரசியல் அணிகள் பற்றிய உண்மை தெரியவந்துவிட்டது. இதில் நாங்களும் உணர்ச்சி வசப்பட்ட தொண்டர்களாகவோ ஆதரவாளர் களாகவோ மாற வேண்டுமா என்ற கேள்வி உருவாகிவிட்டது. என்னைப் பொருத்தவரை தொடக்கத்திலிருந்தே apolitical ஆகவும் non political ஆகவும் இருப்பது இயல்பாக அமைந்து விட்டது. அதைப்பற்றி எனக்கு வருத்தமோ குற்றஉணர்வோ இன்றுவரை இல்லை. பின்பு ஒருவகையில் என்னை சுதந்திரமாக சிந்திக்கவும் செயல்படவும் தூண்டியது என்றுதான் கூற வேண்டும். அதிலிருந்து தப்பியது பலவழிகளில் பயனுடையதாகவும் நிம்மதியாகவுமே இருந்தது.

**கேள்வி:** ஏற்கனவே இருந்த அரசியல், இலக்கியப் போக்குகளுடன் முரண்படுவதும் விலகுவதும் உங்களுக்கு நேர்ந்தது என்று கூறும் போது, அவற்றின் மீது நீங்கள் வைத்த விமர்சனம் என்ன, அவற்றின் எந்த கூறுகளை நீங்கள் விலக்க நேர்ந்தது? இன்னொரு வகையில் நீங்கள் உருவாக்கிய புதிய பார்வை என்ன? இதைக் கவிதை என்ற தளத்தில் வைத்து நீங்கள் விளக்கலாம் என்று தோன்றுகிறது.

**பிரம்மராஜன்:** கவிதையைப் பொருத்தவரை இரண்டு வகையான எதிரிடைகள்தான் இருந்தன. ஒன்று நா. காமராசன் வகையில் அதிகமாக எழுதியவர்கள் முற்போக்கு கவிஞர்கள் என்ற பொது அடை யாளத்திற்குள் முடிந்து போனாவர்கள். கங்கைகொண்டானின் நைலான் கனவுகள் போன்றவை பாராட்டப்பட்டாலும் இந்த அளவு ஒரு துயரத்தை எப்படி ரொமாண்டிசைஸ்



படிப்பகம்

www.padippakam.com


Bertolt Brecht

செய்யமுடியும் என்று அப்போதே தோன்றியது. அப்படி எழுதிவிடவில்லை என்றாலும் அதுபோல எழுதக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தேன். இந்த சமயத்தில் கசடதபற நின்று 'பிரக்ஞை' தொடங்கி இருந்தது. ஒரு மாற்று உணர்வு நிலைக்கு அதில் இடமிருந்தது. மார்க்ஸிய லெனினீய அரசியல் பின்னணியில் இருந்தபோதும் ஒரு மூடிய நிலை இல்லாமல் இருந்தது. ஆத்மாநாம் குறிப்பிட்ட 'முற்போக்கு மடையர்கள்' என்பது போல் இருக்கவேண்டிய அவசியம் அவர்களுக்கு இல்லை. அதனால் முதலில் அவர்கள் பெர்டோல்ட் பிரக்ட், வாஸ்கோ போப்பா போன்றவர்களைச் சரியாக அறிமுகப்படுத்தினார்கள். வேறுசில சரித்திர ஆவணங்களை மொழிபெயர்ப்பில் அறிமுகப்படுத்தி னார்கள். இவற்றின் பின்னணியில் என்னால் நவீனக்கவிதையை புதிய தளத்தில் புரிந்து கொள்ள முடிந்தது. பிரக்ட், போப்பா போன்றவர்கள் எனக்குள் தாக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

**கேள்வி:** இருபதாம் நூற்றாண்டு நவீனத்துவம் என்பது ஒவ்வொரு பத்தாண்டுகளிலும் ஒரு புதிய இயக்கம் அல்லது கோட்பாட்டு குழுக்களால் மாற்றம் கண்டிருக்கிறது. கவிதையிலும் பல்வேறு வடிவ வகைகள் அறிமுகமாகியிருக்கிறது. நீங்கள் எழுதத்தொடங்கியபோது ஏறக்குறைய இவை அனைத்தும் ஒரு முடிவு நிலை அடைந்து அவற்றின் பின்தாக்கம் மட்டும் இருந்தது. உங்களை நேரடியாக பாதித்த கவிதைக் கலைக் கோட்பாடுகள் எவை? உங்கள் கவிதை மீதான நேரடித்தாக்கம் என்ன?

**பிரம்மராஜன்:** தமிழிலிருந்து எனக்கு தாக்கம் எதுவும் இல்லை. எனது ஆரம்பகால படிமநிலைக் கவிதைகளில் தர்மு சிவராம் தாக்கம் இருந்ததாக சொல்லப்பட்டாலும். நான் அவரிடமிருந்து அதை எடுத்துக் கொள்ளவில்லை. விரும்பவுமில்லை. அவருடைய மற்ற பகுதியின் பலஹீனமான தன்மையினால் எனக்குப் பொருந்தாமல் இருந்தது. அய்ரோப்பிய கவிதைகளில் ரோஸ்விச் எனக்கு பிடித்தமாக இருந்தது. டி.எஸ். எலியட் டிற்குப் பிறகு வந்தவர்களின் தாக்கம் இருந்தது.

ரோஸ்விச் போன்றவர்கள் ஆங்கில கவிதைகளுக்கு முன்பே nonlinear poetry ஐ அழகாக பயன் படுத்தினார்கள். எஸ்ரா பவுண்ட்டை தொடர்ந்து படித்ததின் காரணமாக அவருடைய காண்டோஸ் முக்கியமாகப் பட்டது. நோஸ்விச்க்கு இணையாக ஹெர்பர்ட்டும் முக்கியமாக இருந்தார். அவர்களுடைய barbarian பற்றிய கருத்துக்கள் எனக்குப் பிடித்திருந்தன. இவையெல்லாம் கலந்த ஒரு தாக்கம் என் கவிதை பற்றிய உணர்வுகளில் இருந்தது.

**கேள்வி:** இந்தியச் சூழலில் நவீனத்துவ உணர்வும், இலக்கியச் செயலும் ஒருவகையில் முரண்படுதல் மற்றும் வெளியேறுதலில் தொடங்குகிறது என்று தோன்றுகிறது. இந்தியாவின் பிரதான அமைப்பு களான குடும்பம், மதம், சாதி மற்றும் கலாச்சார நிறுவனங்கள் ஒரு ஏற்றுக்கொள்ளப்பட்ட வன் முறையை இயல்பானதுபோல் பாதுகாத்து வரு கின்றன. நவீன சிந்தனை அல்லது உணர்வு முதலில் இவற்றிலிருந்து வெளியேறுதலை, தப்பித்தலை செய்ய நினைக்கிறது. குறிப்பாக இலக்கிய மனம் தப்பித்தலை அதிகம் தேர்ந்தெடுக்கிறது. உங்களிடம் இந்த முரண்படுதல் வெளியேற்றம் அல்லது அடையாள மறுப்பு பிரக்ஞைப்பூர்வமாக இருந்ததா?

**பிரம்மராஜன்:** முக்கால்வாசி இது சரி. திராவிட கட்சிகள், கம்யூனிச கட்சிகளிலிருந்து தப்பியது போலவே குடும்பம் என்பதிலிருந்து தப்பிக்க வேண்டி இருந்தது. பல புராதன வன்முறைகளில் ஒன்றாகத்தான் குடும்பம் இருந்து கொண்டிருக்கிறது. தனிமனிதர், குடும்பம் என்ற முரண்பாடு அல்ல இது.

நுண்ணுணர்வு, கலைமனம், சுதந்திரமான சிந்தனை இவற்றிற்கும் அமைப்பிற்கும் இடையில் உள்ள மோதல். கவிதை ஒருவகையில் இந்த ஒடுக்கு முறையில் இருந்து தப்பிக்கும் ஒருவழி. சிலருக்கு இசை, ஓவியம் போல பிற கலைகள் இருக்கலாம். எனது குடும்பத்தில் அண்ணன் ஒருவர் திடீரென ஊரைவிட்டுச் சென்றுவிட்டார். நீண்ட நாட் களுக்குப்பின் அவர் ஒரு கமர்சியல் பெயிண்டராக திரும்பிவந்தார். அதில் அவருக்கு நல்ல தேர்ச்சி இருந்தது. பெயிண்டிங் என்று ஒன்று இருப்பதே தெரியாத விவசாய குடும்பத்திலிருந்து வந்தவர். வீட்டை விட்டு தப்பிக்க வேண்டும் என்றுதான் அவர் வெளியே சென்றார். ஆனால் அவர் எங்கேயோ எப்படியோ அந்த திறமையை வளர்த்துக் கொண்டு திரும்பி வந்தார். அவருடைய படங்கள் சிறுவயதில் எனக்கு ஆச்சரியமூட்டுவதாக இருந்தன. மீண்டும் அவர் விவசாயியாக மாறியபொழுது அவருக்குள் ஒரு வன்முறை வளர்ந்திருந்தது. எனக்கும் இந்த தாக்கம் இருந்தது. ஒரு கடுமையான சூழலில் இருந்து தப்பிக்க இசை, இலக்கியம் தேவைப்பட்டது. எனது கவிதைகளில் பின்பு இது வேறுவகையான கலாச்சார தாக்கமாக அமைந்தது.

**கேள்வி:** ஒரு இந்தியப் பொது மனநிலையிலிருந்து வெளியேற நினைப்பது உங்கள் ஆரம்பகட்ட கவிதைகளில் பதிவாகிறது. ஒரு வகையான காஸ்மா பலிட்டன் உணர்நிலையை நீங்கள் அடையாளம் காட்டுகிறீர்கள். இந்த நிலையில் உலகத்தன்மை பற்றி சிந்தித்த அய்ரோப்பிய கலைஞர்களுடன் எப் பொழுதும் ஒரு அணுக்கம் தோன்றும். அவர்களுக்கு இரண்டுவித தன்மைகள் உண்டு ஒன்று அவர்களின் அழகியல் கலை இலக்கிய கோட்பாடுகள் செயல்பாடுகள் தொடர்பானது மற்றது அவர்களின் அரசியல் தொடர்பானது. இவற்றில் எது உங்களை அதிகம் ஈர்த்தது?

**பிரம்மராஜன்:** நான் ஈர்க்கப்பட்டது அவர்கள் கலைஞர்களாக செயல்பட்டது தொடர்பானது. குறிப்பாக காண்டினோவிஸ்கி, ரஷ்யுனாக இருந்து



படிப்பகம்

www.padippakam.com

பாரிஸுக்கு வந்தது. இது ஒரு இன்டர் நேஷனலிசம் சார்ந்த இடமாற்றம். இதே போல், ஸ்ட்ராவின்ஸ்கி ரஷ்யன் என்பதைவிட உலக கலாச்சாரம் சார்ந்தவராக தன்னை அடையாளப்படுத்தினார். ஒரு இசைக்கலைஞராக, கம்போசராக, இவர்களுடைய அரசியலை விட கலை உணர்வு முக்கியமாகப் பட்டது. militancy என்பதைவிட poetical sensibility என்பதற்காக நான் பலரை ஏற்றுக் கொள்கிறேன். எஸ்ரா பவுண்ட்டுடைய அரசியல் மற்றும் மிலிடன்ஸி அவரை மனிதத் தன்மைக்கு எதிரான நிலைக்குத் தள்ளி இருக்கிறது. அதே சமயம் கவிதைக்காக தன்னை ஒரு லுனாடிக் நிலைக்குத் தள்ளிக் கொண்டு செயல்பட்டார். அவரைப்பற்றி நான் நூல் எழுதியபோது இந்த விமர்சனத் துடன்தான் பார்த்தேன். இதேபோல் கம்யூனிச நாடுகளில் இருந்து வந்த பல கவிஞர்களுடைய அரசியலை விட கலை மற்றும் கவிதை உணர்வுத் தளம் கவரக்கூடியதாக இருந்தது. அதில் எனக்கு விமர்சனங்களும் இருந்தன. சிலரிடம் மட்டும்தான் மிலிட்டன்சியையும் சேர்த்த ஒரு உணர்வுத்தன்மை இருந்தது. கவிஞர்களாக, கலைஞர்களாக அவர்கள் செயல்பட்டதின் நுட்பம்தான் எனக்கு முக்கியமாகப்பட்டது.

**கேள்வி:** வலி உணரும் மனிதர்கள், அறிந்த நிரந்தரம் இருகவிதைத் தொகுதிகள் தொடங்கி வைத்த ஒரு வடிவ முயற்சி உங்களுடைய 'புராதன இதயம்' தொகுப்பில் திடமாக வெளிப்பட்டது. புராதன இதயத்திற்கு பிறகு பிரம்மராஜன் கவிதைக்கான ஒரு நிலவரைப்படம் அல்லது மொழி வரைப்படம் கிடைக்கிறது என்று சொல்லலாம். இதில் ஒரு கவிதைத் தொழில்நுட்பம் பதிவாகி இருக்கிறது. உங்கள் கவிதைகளில் 'பொருள்' என்பதை சூழலில் உள்ள 'பருண்மை' என்பதை குறியீடுகளாக எடுத்து அவற்றை defamiliarize செய்வது அவற்றின் வரிசை முறையை, வைப்பு முறையை அல்லது தளத்தை மாற்றுவதன் மூலமாக நூதன நிலைக்கு ஒரு விநோத நிலைக்கு கொண்டு செல்வது என்பது ஒரு நிலை, நவீன ஓவியத்தில் பயன்படும் நிறங்கள், விளிம்புகள், கோடுகள், முரண் வண்ணங்கள், நிழல் வண்ணங்கள் போன்றவற்றிற்கு இணையாக மொழியைப் பயன் படுத்துவது, இந்த ஓவியக் கூறுகளை கவிதைக்குள் கொண்டுவருவது. இரண்டாவது நிலை, சில கவிதைகளில் தென்படுவது பெரிய பின்புலத்தில் கவிதையை உருவாக்கி அதன் பின்புலத்தை நீக்கி விடுவதன் மூலம் உருவாகும் வெற்றிடமான முரண். இதில் கவிதைக்கான theatrecality கற்பனைப் பரப்பில் மறைத்து வைக்கப்படுகிறது. இதைக் கண்டுபிடித்த பின்புதான் கவிதை அசையத் தொடங்கும் இதுவும் உங்கள் கவிதை வடிவத்தின் ஒரு முக்கிய பகுதி. அடுத்தது இசையின் தன்மை-நவீன இசையின் தன்மை - பல முரண்பட்ட ஓசைகளை ஒரு ஒழுங்கிற்குள் பன்மைத்தன்மையும் வித்தியாசங் களும் குறையாமலேயே பொருத்துவது hormony இல் அமைவது போல உங்கள் கவிதைகளை விளக்க பயன்படுத்தலாம். இயற்கை மற்றும் இயற்கைச் சூழல் சார்ந்த ஒரு வரைபடம் உங்கள் கவிதைகளில் இருப்பது போலவே உயர்தொழில் நுட்பத்தின் இடையீடுகளும் உள்ளன. இவற்றினூடான ஒரு சோகம் தொடர்ந்து இணைப்பை உருவாக்குகிறது. சில காட்சிப்படுத்தல்களில் கூட இது ஊடாடி வருகிறது. இந்த இணைப்பாக்கம், composition என்பதை எந்த விளைவுகளை ஏற்படுத்த நீங்கள் பயன்படுத்துகிறீர்கள். இவற்றை பிரக்ஞை பூர்வமாகவே தொடக்கத்திலிருந்து செய்து வருகிறீர்களா?

**பிரம்மராஜன்:** சுற்றுச்சூழல், இயற்கை ஒழுங்கு என்பது எனக்குள் ஒரு உணர்வாகத்தான் முதலில் இருந்தது. என்னை அறியாமல் அதன் முக்கியத் துவத்தை நான் உணர்ந்து கொண்டே இருந்தேன். என் ஊரின் சூழல்தான் எனக்கு முதலில் நினைவுக்கு வருகிறது. முன்பு அது தூய்மையான சுத்தமான அழகான கிராமமாக இருந்தது. அதன் தெருக்கள் அவை இணையும் இடத்தில் இருந்த கோயில். ஊரில் இருந்த குளம் அதைச் சுற்றி இருந்த எட்டி மரங்கள். இந்த இயற்கை அழகின் ஒரு பகுதியான அதன் மௌனம் நிசப்தம். இதிலிருந்து பிறக்கும் ஒரு இசை, இவை எனக்கு முக்கியமானவை. இசை எந்த ஒரு துயரமான நம்பிக்கையற்ற சூழலையும் வேறொரு அர்த்தத்திற்கு மாற்றிவிடுகிறது. எனக்கு என் கிராமத்தின் இன்றைய நிலையும் ஞாபகத்திற்கு வருகிறது. அவ்வளவு சீரழிவும் ஏற்பட்டுவிட்டது. சுற்றுச்சூழல் என்பதை ஒரு கோட்பாடாக இயக்கமாக நான் புரிந்து கொள்வதற்கு முன்பே எனக்குள் அது ஒரு உணர்வாக இருந்தது. அதே சமயம் அதனுடன் முரண்படக்கூடிய டெக்னாலஜி என்பதையும் ஒரு அழகியல் உணர்வோடு நான் வாசிக்கவும் புரிந்துகொள்ளவும் தொடங்கினேன். அதைப்பற்றிய விமர்சனத்துடன் எனது கவிதைகளிலும் கொண்டு வந்திருக்கிறேன். தூய்மை யான சுற்றுச்சூழல் அதன் மூலம் உருவாகும் மௌனம் அதிலிருந்து உருவாகும் இசை இவற்றை உருவாக்க மேலும் புரிந்து கொள்ள உதவும் உயர்விஞ்ஞானம் என்ற அளவில் hormony என்பதை structural ஆக எனது கவிதைகளில் நான் பயன்படுத்தி இருக்கிறேன். இசை பலவித முரண்பட்ட பகுதி களை ஒருங்கிணைப்பது போல எனது கவிதைகளில் இவற்றின் முரண்தன்மைகளை ஒருங்கிணைக்கும் தன்மை உண்டு.

**கேள்வி:** தமிழில் இலக்கிய வாசிப்பு என்பது கூடுதலாக வாழ்க்கை, அனுபவம் மற்றும் தன் னெழுச்சி என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. கவிதையில் கூட வாழ்க்கை, அனுபவம் மற்றும் நிகழ்வியல் சார்ந்த கூறுகளை எதிர்பார்க்கும் ஒரு போக்கு இருக்கிறது. இவற்றை ஒட்டியே விமர்சன கோட்பாடுகளும்கூட உருவாக்கபட்டி ருக்கிறது. அரிஸ்டாட்டிலிய பிரதிபலிப்புக் கோட் பாடு இங்கு மிக அழுத்தமாக தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. உங்கள் கவிதைகளோ ஒருவித கற்பனை நிலப்பரப்பை உடையது. imaginery landscape என்பது இங்கு அதிகமும் எதார்த்தத்திற்கு வெளியே



படிப்பகம்

www.padippakam.com

உள்ளது. இத்துடன் நீங்கள் உங்கள் கவிதைகளில் உணர்வு என்பதற்கு மீறிய அறிவு என்ற ஒரு தளத்தையும் கொண்டுவருகிறீர்கள். பலதுறை சார்ந்த தொழில் நுட்பக்குறிப்புகளைப் பயன்படுத்து கிறீர்கள். Inter textuality என்பதை கவிதையின் ஒரு அழகியல் பகுதியாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். 'நொபக்கோவின் நிழல் படிந்த வீதி' என்பது போன்றவரிகளில் intercultural மற்றும் inter textual sense முக்கிய பின்புலமாகிறது. வாழ்ந்து பெற்ற அனுபவம், 'அறிவு கவிதைக்கு எதிரானது' போன்றவற்றிற்கு அதிக முக்கியத்துவம் தரும் சூழலில் உங்கள் கவிதைகள் அதிகமும் மறுப்புக் குள்ளாகி இருக்கின்றன. இவைபற்றி நீங்கள் என்ன விளக்கம் தருகிறீர்கள்?

**பிரம்மராஜன்:** அறிவு மறுப்பு என்பது கலைக்குத் தேவையில்லாதது. பலதுறை அறிவு என்பதும் கூட கவித்துவ உணர்வை தீவிரப்படுத்தக் கூடியதுதான். நான் லியர்னாடோ டாவின்சி, மைக்கேல் ஏஞ்சலோ போன்றவர்களைக் கண்டு வியப்படைகிறேன். இவர்களின் பலதுறை அறிவும் அன்றைய சூழலில் அவர்கள் செய்த கலகமும் கலைத்தன்மையைத் தீவிரப்படுத்தி இருக்கின்றன. டாவின்சியை வெறும் ஓவியராக மட்டுமே அறிந்து வைத்திருபவர்களுக்கு அவரது பொறியியல் தொழில் நுட்ப பங்களிப்புகள் தெரிய வராது. அவர் பலதுறை வல்லுனராக இருந்தார். மைக்கேல் ஏஞ்சலோ கவிதைகளும் எழுதினார். பல நூற்றாண்டுகளுக்கு முன்பே கலை உணர்வு என்பது பலதுறை சார்ந்த அறிவால் தீவிரப்படும் என்றால் நமது நூற்றாண்டில் அது இன்னும் கூடுதலாக அமைய வேண்டும். கலைகளின் ஒருங்கிணைப்பு கவிதைகளில் சாத்தியம்.

**கேள்வி:** ஒரு பின்நவீனத்துவப் புரிதலில் கவிதை என்பது எந்த உண்மையைக் கூறவோ, ஒரு செய்தியை, தகவலைத் தரவோ தேவையில்லை என்று இன்று நாம் கூற முடியும். அது எதையும் கூறவோ புரிய வைக்கவோ ஆன வடிவம் அல்ல என்றும் இசையைப் போல ஒரு அலை அல்லது தோற்ற நிலை மட்டும் எழுப்பி மறைந்து விடலாம் என்றும் கூட கூறமுடியும். ஆனால் அப்பொழுது நீங்கள் எந்த விளக்கத்தைத் தந்தீர்கள்? குறிப்பாக split அல்லது dissociation போன்றவை பற்றி, உங்கள் கவிதை மீதான எதிர்ப்பு பற்றி.

**பிரம்மராஜன்:** எனது கவிதைக்கான எதிர்ப்பில் ஒருவித அறிவு மறுப்பு, அறிவியல் மறுப்பு உள்ளது. இதற்கு கலை அறிவுத்துறை இரண்டையும் தவறாகப் புரிந்து கொண்டதுதான் காரணம். பலதுறை மற்றும் கலைகளின் synthesis என்பது ஒற்றைத் தன்மையை மறுத்துவிடக்கூடியது. லா வியக் கோண்டா வரைந்த டாவின்சி இன்றுவரை பாராட்டப்படும் மருத்துவ உடற்கூறு படங் களையும் வரைந்தவர். இவை இரண்டும் ஒன்று என்றும் கூறமுடியாது. எதிரானவை என்றும் கூறமுடியாது. கலை, அறிவு என்பவை ஒன்றை ஒன்று ஊடுருவிச் செல்லக் கூடியவை. இதைப் புரிந்து கொள்ளும் பொழுது எனது கவிதைக்கான எதிர்ப்பு பொருளற்றதாகத் தோன்றும்.

**கேள்வி:** Inter textuality மற்றும் multireference என்பது fiction எழுத்தில் அதிகம் காணக்கூடியது இவற்றை நீங்கள் கவிதைகளில் பயன்படுத்தி இருக்கிறீர்கள். அடிக்குறிப்புகள், தொழில் நுட்ப விளக்கங்கள் போன்றவற்றை கவிதையை விளக்க நீங்கள் பயன்படுத்தி இருக்கிறீர்கள் இவையும் கூட அதிகம் மறுப்புக்குள்ளானது.

**பிரம்மராஜன்:** இதை மறுத்தவர்கள் அறிவை கவிதையில் கலக்கக்கூடாது என்று சொன்னார்கள். இவர்கள் defemilarize செய்வதையே குற்றமாக பார்ப்பவர்கள். அது தரக்கூடிய அதிர்ச்சி text ஐயே மறுக்கும் நிலைக்குத் தள்ளியது. தமக்குத் தெரியாத எதுவும் இருக்கக்கூடாது என்னும் பழமைவாதப் பார்வை அது. ஒரு பிரதியின் முன் வாசகன் குன்றிக்குறுகிப் போகவேண்டிய தேவை இல்லை. அறிவு மறுப்பின் மூலம்தான் இது உருவாகிறது. புராதன இதயம் வெளிவந்தபோது நான் அதிகமும் பரிசோதனைத் தளத்தில் எழுதி இருக்கிறேன் புதிய கவிதைத் தளத்தைக் கண்டறியும் முயற்சியாக. இங்கு புதுமை என்பது ஆபத்தானதாக பார்க்கப்படுகிறது.

**கேள்வி:** தூய்மை வாதம், ஒருமை மையவாதம் இரண்டும் கலந்த ஒரு மரபான பார்வை இலக்கிய விமர்சனமாக இங்கு அதிகாரம் செலுத்திக் கொண்டிருக்கிறது. முழுமையான உண்மை, முழு மையான அர்த்தம் என்பதைக் கொண்டாடும் மதத்தன்மை இலக்கியத்தில் பலமாக இருக்கிறது. ஆனால் இதற்கு மாறாக கலப்பு, ஒருமையின்மை, disintegration போன்றவற்றின் அழகியலை பின்நவீனத்துவம் முன்வைக்கிறது. madness என்பது இலக்கியத்தில் கலையில் ஒரு அழகியல் நிலையாக ஏற்கப்படுவதும் unified self என்ற ஃபாசிச நிலைக்கு எதிரானதாக ஆக்கப்படுவதும் இன்று பேசப்படக் கூடியது. sanity, insanity என்ற எதிரிடைகள் கலக்கப்பட்டு எல்லாவற்றிற்குள்ளும் உள்ள தர்க்கம், அதர்க்கம் இரண்டும் குழம்பிய நிலை விவாதிக்கப் படுகிறது. இந்திய மாற்று மரபுகளில் காணப்படும் nomadic poetics மற்றும் பித்தநிலையின் அழகியல் போன்றவற்றை இதன் பின்னணியில் நாம் புரிந்து கொள்ள முடியும். நீங்கள் உங்கள் கவிதைகளின் கலைப்புநிலை, திடமறுப்பு நிலை போன்றவற்றிற்கு இந்திய மரபுகளில் இருந்தே ஏதும் விளக்கங்களை உருவாக்கியதுண்டா?

**பிரம்மராஜன்:** எல்லாவற்றையும் வகைப்படுத்தி ஒழுங்குபடுத்தும் பார்வையும் கூட ஒருவித madness தான், ஆனால் தனது split தனக்கே தெரியாத நிலை. ஆனால் நான் split என்பதை அடையாளம் கண்டு கொண்டேன். irrationality என்பதை கவிதையில் கொண்டு வருவதன் மூலம் ஒரு மொழிச் சிகிச்சையை செய்து கொள்ள முயற்சித்தேன். ஒருவகையில் கவிதை எனக்கு சிகிச்சை ஆகத்தான் இருக்கிறது. இதை மறுக்க வேண்டியதில்லை. ஒருமைவாதம் பேசுபவர்கள் இதைக் கண்டு



படிப்பகம்

www.padippakam.com



Ezra Pound.

பயப்படுகிறார்கள். இதை மறைப்பதன் மூலம் அவர்கள் கூடுதலாக தமது irrationality ஐ வளர்த்துக் கொள்கிறார்கள். அறிவின் அடிப்படையில் ஒரு irrationality, split உண்டு. மேற்கில் இதுபற்றிய பயம் அதிகம். கால வரிசை அவர்களுக்குத் தேவை. இந்திய மனதிற்கு இது சுழலானது நேர்கோட்டுத் தன்மையற்றது. இங்கு மேற்கின் சிந்தனை என்று எதிர்ப்பவர்கள் தம்மையறியாமல் கூடுதலான மேற்கின் சிந்தனை இறுக்கத்தை உடையவர்களாக இருக்கிறார்கள். நான் என் கவிதைகளுக்கு உருவாகும் எதிர்வினைகளை மறந்துவிட முயற்சிக்கிறேன். வாசகர் என்பதையோ அங்கீகாரம் என்பதையோ முன்வைத்து நான் எழுதுவதில்லை. நிறுவனத்திற்காக எழுதப் பட்டதல்ல என் கவிதை. உளவியல் சிகிச்சையில் குறிப்பிடப்படுவது போல் வெளியேற்றம் என்பது முக்கியமாகப்படுகிறது.

**கேள்வி:** உங்கள் கவிதைகளைப் புறக்கணிப்பதற்காக வைக்கப்படும் வாதங்கள் சில உண்டு. மிகவும் அந்நியத்தன்மையாக இருக்கிறது. அனுபவங்களில் இருந்து பெறப்பட்டதாக இல்லை. 'கவித்துவம்' இல்லை. இயந்திரத்தன்மையாக இருக்கிறது. கவிதைக்கான ஒரு ஒருமை உணர்வை ஏற்படுத்த வில்லை, plastic symbol ஆக இருக்கிறது. இதனால் தமிழில் இதை கவிதை எனக்கூற முடியாது. இவற்றிற்கு மாற்று விளக்கமாக நீங்கள் என்ன முன் வைக்கிறீர்கள்? இதற்கு முன் ஏதும் மறுப்பு தந்திருக்கிறீர்களா?

**பிரம்மராஜன்:** நான் மறுப்பு எதையும் இருவரை தரவில்லை. இவற்றைக் கூறுபவர்கள் தேவையில்லாத ஒரு பீதியை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். எந்த ஒரு புதிய வடிவத்தையும் பயத்துடன் பார்ப்பது. இவர்கள் கவித்துவம் என்று பார்ப்பது கூட மிகவும் பழமைவாதம் சார்ந்தது. தொடக்கம், நடு, முடிவு என்கிற வடிவத்தில் எதையும் இவர்கள் எதிர்ப் பார்கிறார்கள். இதை வலியுறுத்துவதும்கூட ஒரு சர்வாதிகாரத் தன்மையுடையது. polyphony என்பதை இவர்களால் ஏற்கமுடிவதில்லை. தனது பழக்கத்திற்கு உட்படாததை அழித்துவிடும் மனநிலையின் ஒரு வடிவம் இது. எனக்கு இசை இதற்கு மாற்றான உணர்வை பக்குவத்தை தருகிறது. polyphony என்பதை நான் இசையிலிருந்து எடுத்து கவிதைக்குக் கொண்டு வருகிறேன். இந்த sensiblity இசையைக் கவனிக்கிற எந்த வாசகருக்கும் உருவாகும். Homogenous இல்லாத ஒரு பார்வை. நான் உலகத்தின் பல வடிவ இசைகளிலும் இதைத்தான் புரிந்து கொள்கிறேன். இந்த புரிந்து கொள்ளல் இல்லாத நிலையில்தான் இலக்கியத்தில் இவ்விதமான மறுப்புகள் உருவாகின்றன.

**கேள்வி:** நாம் சொல்லக்கூடிய கவிதை அல்லது பிரதி என்பது எப்போதும் ஒன்றுபோல் இருப்பதும் ஒரே அர்த்தம் தரக்கூடியதாக இருப்பதும் இல்லை, ஒருவரே கூட வெவ்வேறு மனோநிலையில் கவிதைகளை வெவ்வேறாக புரிந்து உணர நேரலாம். உங்களுடைய கவிதைகளை பல கலாச்சார பின்புலத்தில் வாசிக்கும்பொழுது அணுக்கமாகத் தோன்றுவதும் ஏதாவது ஒரு கலாச்சார தேர்ந்தெடுப்புடன் வாசிக்கும் பொழுது குழப்பமாக மாறுவதும் நேர்கிறது. கவிதையின் தளம் நம்மால் உணரக்கூடிய, நமக்கு அனுபவமாகக்கூடிய நிலையில் மட்டும் இருப்பதில்லை. வேறொருவரால் உணரப்பட்டதை வேறொரு நிலையில் உணர் வானதை நாம் விலகி நின்று உணர வேண்டிய நிலைகளும் உண்டு. நம் சன்னலைத் திடீரெனக் கடந்து செல்லும் வேறுநிலப்பகுதியின் பறவைபோல தோன்றிமறையலாம். நாம் அதை மீண்டும் பார்க்கப் போவதில்லை. நமது சன்னலுக்குள்ளோ கூண்டுக் குள்ளோ அது வரப் போவதும் இல்லை. வேறு ஒன்று அது. உணரப்பட்ட ஒன்றின் கடந்து செல்லும் நிலை. இதற்கு கலைந்த, தன்மையம் அற்ற வாசிப்பு தேவை என்று தோன்றுகிறது. ஆனால் இதற்கு மாறான கோட்பாட்டு ஆயுதங்கள் இங்கு பலமாக உள்ளன. இதை உங்கள் ஆரம்ப கட்டத்தில் எப்படி எதிர்கொண்டீர்கள்?

**பிரம்மராஜன்:** ஒரு பிரதி இப்படித்தான் இயங்கவேண்டும் என்ற கட்டாயப்படுத்துதல் உண்டு. முதல்வரியின் முதல் வார்த்தையில் ஆரம்பித்து கடைசிவரியின் கடைசி வார்த்தையில் முடிந்து நிறைவான ஒரு அர்த்தத்தைத் தர வேண்டும். அந்த நிறைவான அர்த்தம் என்பது வாசகர் எதிர்பார்க்கும் ஒன்று. அது வாசகரின் பயிற்சியை புரிதலின் பரப்பளவைச் சார்ந்தது. ஆனால் ஒரு பிரதி பலதளங்களை உடையதாக இருந்தால் என்ன செய்வது. எனது கவிதைகளைப் பொருத்தவரை சுழல்வடிவத்திலோ, குறுக்கு நெடுக்காகவோ வேறு வேறு வரிகளில் தொடங்கி முன் பின்னாகவோ வாசித்து பொருள் கொள்ளப்பட வேண்டும் என்று நினைக்கிறேன். நான் பல எழுத்துக்களை இதுபோல் முன்பின்னாக வாசித்து பிறகு வரிசைக்கிரமமாக வாசிப்பதுண்டு. எனது கவிதைகளைப் பொருத்த வரை அவை open text ஆக உள்ளது. அச்சு வடிவத்தில் linear ஆக இருந்தால் கூட அதன் வடிவம் circular ஆகத்தான் உள்ளது. ஒரு வாசகப்பிரதி எல்லாவற்றையும் சொல்லிவிட வேண்டும் என்பதை நான் ஏற்கவில்லை. அப்படி சொல்லிவிடும்போது பிரதி காலாவதி ஆகிவிடுவதாகத்தான் நினைக் கிறேன். ஒருபிரதி தான் சொல்ல கூடுதலாக இன்னும் பலவற்றை வைத்துக்கொண்டே இருக்க வேண்டும் என்று நான் எதிர்ப்பார்க்கிறேன். ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பிறகு ஒரு பிரதிக்கு முக்கியத்துவம் கூடவோ குறையவோ செய்யலாம் அப்போதும் அது சொல்ல அதற்குள் விடுபட்ட பகுதிகள் இருக்க வேண்டும். எவ்வளவு விளக்கம் கூறப்பட்ட பிறகும் விடுபட்டபகுதிகள் அதற்குள் இருக்கவேண்டும்.



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப்பட்ட புரிதலுடன் விமர்சகர்கள் இங்கு இல்லை. சில சமயம் வாசகர்களாக மட்டும் இருப்பவர்கள் விமர்சகர்களைவிட நுட்பமாக வாசிக்கிறவர்களாக இருக்கிறார்கள். எனது நண்பர் பழமலை ஒரு முறை, 'உன்னுடைய கவிதைகளுக்கு யாரையாவது உரை யெழுதச் சொன்னால் எனக்கு வசதியாக இருக்கும்' என்று சொன்னார். நான் அவரைப் பார்த்து பரிதாபப்படத்தான் வேண்டியிருந்தது. எனக்கு யாருடைய எழுத்தையும் புரிந்து கொள்வதில் சிரமம் இல்லை. மீண்டும் மீண்டும் படித்தாவது புரிந்து கொள்ளவே செய்கிறேன். ஆங்கில மொழிபெயர்ப்பில் உள்ள கிழக்கை ரோப்பிய கவிதைகள் கூட கடுமையாக இருந்தாலும் புரிந்து கொள்ளமுடியாததாக இல்லை. இதற்கு கவனமும் சிரத்தையும் தேவை. வேறு ஒரு துறையில் உள்ள நூலை யாரும் இப்படி கவனக்குறைவாக வாசிப்பது இல்லை. இலக்கியத்தில் மட்டும்தான் இப்படி. ஏனென்றால் இது பயனற்ற ஒன்றுதானே என்ற எண்ணம் பரவலாக இருக்கிறது. இதே எண்ணத்தை உடைய பொறுப்பற்ற உழைக்க தயாராக இல்லாத ஒரு விமர்சகர் கவிஞர் கூறுவதை நான் இலக்கிய விமர்சனமாக ஏன் எடுத்துக் கொள்ள வேண்டும். இவை வெறும் மேம்போக்கான அபிப்பிராயம் கூறல் மட்டுமே. நான் கூடுமான வரையில் புதிதாக வருபவற்றை உடனே படித்து புரிந்து கொள்ளவும் கருத்துக் கூறவும் விரும்புகிறேன். இது எழுத்துக்குச் செய்யவேண்டிய மரியாதை. இந்த மரியாதையைத் தராதவர்களுடைய கருத்தை நான் பொருட்படுத்தத் தேவையில்லை என்று தான் நினைக்கிறேன்.

**கேள்வி**: தமிழில் இந்திய தமிழ் மரபுகளின் பின்னணியில் தீவிரமாக இயங்கக்கூடிய விமர்சன முறையோ, மேற்கத்திய போக்குகளைப் புரிந்து கொண்ட அறிவியல் பூர்வமான முறைகளோ உருவாகாத சூழல் இருந்தது. வெறும் கருத்துக் கூறல், தீர்ப்பு வழங்குதல் என்பதையே இலக்கிய விமர்சன வாசிப்பு என்று நம்பி வந்ததும் தொடர்ந்தது. ஆனால் எண்பதுகளில் சில மாற்றுப் பார்வைகள் முன்வைக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன, மீட்சி பத்திரிகையைக்கூட உதாரணமாகக் கூறமுடியும். எலியட், பவுண்ட், பிரக்ட் என அறிமுகங்கள் மொழிபெயர்ப்புகள், ஓவியர்கள், எழுத்தாளர்கள் பற்றி கட்டுரைகள் என விரிவான களம் முன்வைக்கப்பட்டது. இந்தச் சூழலில் செயல்பட்ட விமர்சகர்களில் யாருடைய பங்கு உங்களுக்கு ஊக்கமளிப்பதாக இருந்தது?

**பிரம்மராஜன்**: இலக்கியம் பற்றிய பயன்பாட்டு பார்வையை உடைய முற்போக்குகள் பலமாக இருந்த சூழல் அது. அவர்கள் நகைப்புக்கிடமாக இருந்தார்கள். poem need not to mean but to be என்று கால்பிரெய்ட் பென் சொன்ன இடத்திற்குச் செல்ல வேண்டும் என்றுகூட நான் சொல்லவில்லை. ஜியார்ஜ் லூக்காஸ், பிரக்ட் போன்றவர்கள் வைத்த பார்வைகளைக்கூட இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இவர்களிடம் இருந்த cosmopolitan தன்மை மறைக்கப்பட்டது. பிரக்ட்டின் சர்ரியலிசத்தன்மை மறைக்கப்பட்டது. கட்சி ஊழியர் என்ற தளத்தில் தான் அறிமுகப்படுத்தப்பட்டார். நான் இதற்கு மாற்றாகத்தான் சில தேர்ந்தெடுத்த கவிதைகளை மொழிபெயர்த்து வெளியிட்டேன். நிறுவனம் சொன்ன எல்லைக்கு வெளியே எதுவும் இருக்கக் கூடாது என்ற பார்வை விமர்சனமாக இருந்த சூழலில் வேறு கட்டத்திற்கு விமர்சனத்தை நகர்த்திய வராக நான் கண்டது தமிழவன் மட்டும்தான். அவர்தான் திறந்த மனதுடன் புதியவற்றை வாசித்து புதியவர்களை ஊக்கப்படுத்தியவர். நாம் இன்று செய்ய வேண்டியதை அவர் காலத்தில் அவர் செய்தார். பல அறிமுகங்களை செய்தார். அடுத்த அடுத்த கட்டத்திற்கு அவர் மாறி வந்தார். தான் ஏன் அடுத்த கட்டத்திற்கு போக நேர்ந்தது என்பதையும் கூட அவர் தொடர்ந்து விளக்கிக்கொண்டே இருந்தார். அவர் சிலவற்றை விட்டுவிட்டால் கூட அதற்கான காரணத்தைக் கூறவே செய்தார். ஒரு கட்டம் தோல்வி அடையும்போது, போதாத போது வேறு கட்டத்திற்குச் செல்ல வெட்கப்பட வேண்டியது இல்லை என்பதை நாம் தமிழவனிடமிருந்து கற்றுக் கொண்டோம். அவரையும் தாண்டிச் செல்லக் கூடிய மனநிலையை நமக்கு அவர் தந்திருந்திருக்கிறார். மிகவும் பரந்த பார்வை உடைய விமர்சகர் அவர். எதையும் பொறுப்பாக படிக்க வேண்டும் என்பதையும் கூட அவர் கற்றுக் கொடுத்தார். வேறுயாரும் அப்பொழுது இல்லை. மற்றவர்கள் அதிகம் அபிப்பிராயக்காரர்களாக இருந்தார்கள். சிலர் தனிமனிதர்களாக இருந்தபடி நிறுவனத்தைவிட இறுக்கமாக மாறினார்கள். தமிழவன் கூடுதலாக தெரிந்து கொள்வது, சக படைப்பாளிகளை பொறுப்பாக அணுகுவது போன்றவற்றை தொடர்ந்து செய்ததின் மூலம் மிகுந்த ஊக்கம் அளிப்பவராக இருக்கிறார். நமக்கு இன்று பலதளங்களை இலகுவாக்கி தந்திருக்கிறார். இலக்கியம் பற்றி கூடுதலாகப் பேச வசதி ஏற்படுத்தியிருக்கிறார்.

**கேள்வி**: இன்று சிறிய அளவிலேனும் நாம் மையமின்மை, ஒற்றை அர்த்தமின்மை, தன்னிலையின் கலைப்பு போன்ற பலவற்றை மிகச் சாதாரண இலக்கியச் சொல்லாடலில் பயன்படுத்த முடிகிறது. வேறு பல தீவிரமான விவாதங்கள் கூட சாத்தியமாகி இருக்கிறது. ஆனால் மீட்சி தொடங்கிய கால கட்டத்தில் பல தொடக்க நிலையில் இருந்தன. பின் கடுமையான விவாதங்கள் நிகழ்ந்தன. மீட்சியும் சில மாற்றங்களை அடைந்தது. குறியியல், அமைப்பியல், பின் அமைப்பியல் போன்றவற்றிற்கு உடன்வினை புரிந்தது. ஆனால் மீட்சி நிற்பதற்கு முன் அது பின் நவீனத்துவம் வரை புரிதலை நகர்த்தி இருந்தது. நீங்கள் மீட்சியை ஆரம்பித்த போது என்ன திட்டம் இருந்தது? அதற்கான பின்னணி எப்படி அமைந்தது?

**பிரம்மராஜன்**: விபரக் குறிப்பாகக் கூறுவதென்றால், 83 முதல் 91 வரை பத்திரிகை நடந்தது. முதலில் 32 பக்கத்தில் தொடங்கப்பட்டது. பல தளங்களிலிருந்தும்



படிப்பகம்

www.padippakam.com

எழுத்துகள் பெறப்பட்டன. பக்கவரையறையுடன். எல்லோருமே எழுதியிருக்கிறார்கள். பத்திரிகைக்காக மொழிபெயர்க்க பலர் தயாராக இருந்தார்கள். உலகக் கவிதை தொகுப்பு தயாரிக்க வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டபோது கூட இரண்டு மூன்று மாதத்திற்குள் எல்லோருமே மொழி பெயர்ப்புகளைத் தந்தார்கள். அந்த அளவுக்கு ஒத்துழைப்பு இருந்தது. கருத்து மாறுபாடு உடையவர்கள் கூட எனக்கு உதவிகள் செய்திருக்கிறார்கள். ஆத்மாநாம் சில மாறுபட்ட கருத்து கொண்டிருந்தபோதிலும் மீட்சிக்கு பங்களித்தார். முதலில் திட்டம் என்று எதுவும் இல்லை. இலக்கியத்திற்கு அதிக முக்கியத்துவம், புதிய இஸங்கள், கோட்பாடுகளை அறிமுகம் செய்தல் போன்றவைதான் முக்கிய நோக்கம். இலக்கியம் சண்டைகளை தவிர்ப்பது அரசியல் விவாதங்களுக்கு பக்கங்களை வீணடிக்காமல் இருப்பது போன்ற வற்றை நான் ஏற்கனவே முடிவு செய்திருந்தேன். கடிதங்களை வெளியிடாதது கூட இதன் ஒரு பகுதிதான். புதியவர்களை அறிமுகப்படுத்துவது முக்கியமாகத் தோன்றிது. கவிதைகளுக்கு அதிக முக்கியத்துவம் தந்தேன். ஒருவருடைய ஒரு கவிதை என்று இல்லாமல் குறிப்பிடும்படியான சில கவிதைகளை சேர்த்து வெளியிடுவது. வெளிநாட்டு கவிஞர்களின் மொழிபெயர்ப்புகளை முழு விபரங்களுடன் வாழ்க்கைக் குறிப்புடன் வெளியிடுவது இவையெல்லாம் எனக்குப் பிடித்தமானவைகள். மாடர்னிசத்திற்கும் போஸ்ட் மாடர்னிசத்திற்கும் இடைப்பட்ட சிக்கல்களை கையாள வேண்டிய மையமாக இருந்ததால் நிறைய மொழிபெயர்ப்புகளை சேர்க்கவும், புதியவற்றை அறிமுகம் செய்யவும் தேவை ஏற்பட்டதால் பக்கம் கூடிக் கொண்டே சென்றது. அப்போது பொருளாதார சிரமங்கள் ஏற்பட்டன. என்றாலும், ஒரு பிடிவாதத்துடன் நான் நடத்தினேன். 130 பக்கம் வரைக்கும் கூட இதழை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. கட்டுரைகள் நிறைய வரவேண்டி இருந்தது. கிடைக்கவும் செய்ததால், சிரமம் நிறைய இருந்தபோதும் நிறுத்திவிடக் கூடாது என்று தோன்றியது. சிறுபத்திரிகை என்றால் அழகிய வடிவத்தில் ஏன் இருக்கக் கூடாது என்று நான் நினைத்ததால் அதிக செலவு செய்து நல்ல தயாரிப்புகளைத் தந்தேன் பல வசதிக் குறைவுகளுடன். எனக்கு வசதிகள் கிடைத்தபோது மீட்சி நின்று விட்டது. ஒரு கட்டத்தில் நான் சலித்து சோர்ந்து போயிருந்தேன். இடமாற்றமும் வந்தபோது நான் வேறு ஏதாவது செய்தால் என்ன என்று தோன்றியது. மனநிலையில் ஒரு crisis என்றுதான் சொல்ல வேண்டும். மொழிபெயர்ப்புகளில் ஈடுபட்டது, வேறுசில அறிமுகக் கட்டுரைகள் எழுதியது போன்றவற்றால் இதைக் கடந்து வந்தேன். மீட்சி போதும் என்று தோன்றியது.

**கேள்வி:** ஏதாவது ஒரு இலக்கிய வகையை, அல்லது எழுத்தாளரை வரவேற்று அதன் முக்கியத்துவத்தைக் கூறுவதன் மூலம் பிறவற்றை தேவையில்லை என்று ஒதுக்குவதாக அர்த்தமாக முடியாது. டால்ஸ்டாய் வேண்டும் என்றால் சாத் வேண்டும்தான். செர்வாண்டிஸ் ஒரு பகுதியென்றால் ரெபெல்லேய் இன்னொரு பகுதி. பத்தாயும் தேவை கல்வினோவும் தேவை, பர்ரோசும் தேவை. புரானிகத் தன்மையோ, நாட்டுப்புற மரபுசார் கதையோ, மனச்சிதைவு வகை கதையாடலோ, பாலியல் சாத்தியங்கள் பற்றியதோ எழுத்தில் அனைத்திற்கும் இடமும் அவசியமும் உண்டு. தமிழில் ஒரு வகையை சிறப்பானது என்று சொல்லிவிட்டால் பிறவற்றை ஒன்றுமில்லை என்று சொல்லிகிற ஒரு நோய் தீவிரமாக உள்ளது. நீங்கள் மொழிபெயர்ப்புக்கோ தொகுப்புக்கோ, எடுக்கும் போது எல்லாவகைகளுக்கும் சமமாக இடம் கொடுப்பதாகத் தெரிகிறது. மாறுபட்ட போக்குடைய எழுத்தாளர்களை வெவ்வேறு சமயங்களில் முக்கியத்துவத்துடன் அறிமுகப்படுத்து கிறீர்கள். லத்தின் அமெரிக்க சிறுகதைகள், உலகக் கவிதைகள் போன்றவற்றிலும் பதினைந்து அய்ரோப்பிய நவீனவாதிகள் தொடரிலும் வேறு அறிமுகங்களிலும் பலதரப்பட்ட எழுத்துக்களை சமமாக வாசிக்கும் தன்மை தென்படுவதற்கான காரணம் என்ன?

**பிரம்மராஜன்:** எனக்கு இயல்பாகவே வகைவகையான எழுத்துகள் மீது ஈடுபாடு உண்டு. ஒற்றைத் தன்மையை அழகியலுக்கு எதிராகத்தான் நான் பார்க்கிறேன். கவாபாட்டா வையும் ஃபாக்னரையும் நான் அவர்களுடைய வேறுபாடுகளுடன் ஒரே ஆர்வத்துடன் வாசிக்கிறேன். dictatership க்கு எதிரான ஒரு மனநிலையில் பன்முகத் தன்மை தேவைப்படுகிறது. எனது கவிதைகளில் நான் விரும்பும் multilayer தன்மை எனது வாசிப்புகளிலும் உண்டு. அய்ரோப்பிய நவீனவாதிகள் எழுதும் போது யாரைப்பற்றி வேண்டுமானாலும் எழுதுவதற்கான சுதந்திரம் எனக்கு சுபமங்களா பத்திரிகையில் கிடைத்தது. நான் Random ஆகத் தேர்ந்தெடுப்பதாக குற்றச்சாட்டு வந்தபோதும் எழுத்து வகைகளுக்கு அவற்றைத் தேர்ந்தெடுத்தேன். பிரைமோ லெவியில் எனக்குப் பிடித்தமானது அவருடைய பல வடிவ எழுத்துக்கள். பலதரப்பட்ட கலைஞர்களை பக்கத்தில் பக்கத்தில் வைப்பது எனக்குப் பிடித்திருக்கிறது.

**கேள்வி:** புராதன இதயம் வெளிவந்து பத்து ஆண்டுகள் கழித்து மஹா வாக்கியம் வந்திருக்கிறது. பத்து ஆண்டு இடைவெளி எப்படி ஏற்பட்டது. கவிதைகளை விடுத்து மொழிபெயர்ப்பு, வாசிப்பு என்று செய்து கொண்டிருந்தீர்களா, அல்லது?

**பிரம்மராஜன்:** மீட்சி நின்ற பின் நான்கு ஆண்டுகள் நான் எதையும் எழுதவோ, இலக்கிய நண்பர்களைச் சந்திக்கவோ இல்லை. ஒருவித மனிதவெறுப்பு இடைக்காலமாக என்னைச் சூழ்ந்திருந்தது. வேறுவகையான வேலைகளில் எனது நேரத்தை செலவிட்டேன். மரம் நட்டு வளர்த்தல் போன்ற நேரம்பிடிக்கும் வேலை. மீண்டும் நான் இலக்கியத்திற்கு வந்தபோது புதிய வடிவத்தில் புதிய உணர்வுடன் எழுத இடைவெளி தேவை என்று



படிப்பகம்

www.padippakam.com

தோன்றியது. இதுதான் நான் எழுதுவதை ஒத்திப் போட்டதற்கு காரணம். மொழிபெயர்ப்பு, விமர்சனம் போன்றவை எழுதினாலும் அவை எனது கவிதையை தடுப்பதில்லை. புதிய வடிவத்திற்காக நான் காத்திருக்க வேண்டி இருந்தது.

**கேள்வி:** கவிதையல்லாத வேறு இலக்கிய வடிவங்களான சிறுகதை, நாவல் போன்றவற்றில் உங்களுக்கு ஈடுபாடும் பயிற்சியும் உண்டு. அந்த வடிவங்களில் எழுத வேண்டும் என்று தோன்ற வில்லையா?

**பிரம்மராஜன்:** கவிதை மொழிவேறு புனைகதை மொழி வேறு என்று எனக்குத் தெரிவதால் இரண்டையும் நான் குழப்பிக் கொள்வது இல்லை. world masters எழுத்துக்களைப் படித்தபிறகு புனைகதை எழுதுவதற்கான பக்குவம் எனக்கு இல்லை என்றுதான் நான் புரிந்துகொண்டேன். எனது உணர்வுக்கான மொழியை புனைகதை ஆக்கும் பக்குவம் எனக்குத் தற்போது இல்லை. அந்த முயற்சியில் இறங்குவதைவிட நல்ல எழுத்துக்களை அறிமுகப்படுத்துவது, மொழிபெயர்ப்பது போன்ற வற்றை செய்யலாம் என்று நினைக்கிறேன்.

**கேள்வி:** நீங்கள் அவ்வப்போது சிலவற்றை மொழிபெயர்த்தது இல்லாமல். போர்ஹே, இட்டாலோ கல்வினோ இருவரையும் தொகுப்பு அளவுக்கு மொழிபெயர்த்திருக்கிறீர்கள். இருவரை தேர்ந்தெடுத்ததற்கான காரணம் அல்லது இவர்களில் பிடித்த அம்சம் என்ன?

**பிரம்மராஜன்:** இருவருக்கும் பொதுவான அம்சம் மொழியின் பன்முகத்தன்மை. மொழியைப் பயன்படுத்தி புனைவை உருவாக்குவதில் உள்ள தீவிரம். போர்ஹேவை கல்வினோ அதிகம் பாராட்டி இருக்கிறார். கல்வினோவிடம் அதிகம் வகைகள் உண்டு. அவரிடம் உள்ள ஒரு என்சைக்ளோபீடிக் தன்மை கவரக்கூடியது. கல்வினோவின் vareities of sexuality முக்கியமானது. உடலை மீறிய meditative தன்மை உடைய sexuality அவருடைய எழுத்துக்களில் தொடர்ந்து வருகிறது. இந்த இருவரையுமே முழுமையாக அறிமுகப்படுத்த வேண்டும் என்று எனக்குத் தோன்றியதற்குக் காரணம், 70 களிலிருந்து இன்று வரை மொழி பெயர்ப்பு பொறுப்பற்ற முறையில் நடந்து வரு கிறது. ஒரு இடத்தில் வரும் ஒரு பெயர் மீண்டும் வருவதில்லை. வேறு புதிதாக ஒன்று வந்துவிடுகிறது. இதற்கு மாற்றாக முழுமையான அறிமுகமும் விரிவான தொகுப்பும் தேவை என்று நினைக்கிறேன். போர்ஹே தொகுப்பில் முன்னுரை மிகவும் நீளமாக உள்ளது என்று ஒரு நண்பர் கூறினார். ஆனால் கூடுதல் விபரம் தேவை என்று வேறு சிலருக்குத் தோன்றுகிறது. இந்த வரிசையில் இன்னும் சிலரை முழுமையாக அறிமுகப்படுத்த வேண்டும் என்ற திட்டமும் இருக்கிறது.

**கேள்வி:** ஒவ்வொரு மொழிபெயர்ப்பும் ஏதோ ஒரு வகையில் தமிழில் எழுத்துமுறையை பாதிக்கிறது. மொழிப் பயன்பாட்டில், கதையாக்க முறையில், கதைப்பரப்பின் தேர்ந்தெடுப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டதற்கு மொழிபெயர்ப்புகள் காரணம். சில மொழிபெயர்ப்புகள் கதைமொழியில் உடைப்பு களை ஏற்படுத்த முடியும். நீங்கள் போர்ஹே, கல்வினோ போன்றவர்களை மொழிபெயர்ப்பதன் மூலம் தமிழ் கதையெழுத்து மொழியில் என்ன வகை மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்று நினைக்கிறீர்கள்?

**பிரம்மராஜன்:** தமிழில் எழுதுபவர்கள் மொழியின் மீது சொற்களின் மீது மோகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். உருவகம், உவமை, படிமம் என்பதை உரைநடையிலும் கவிதையிலும் அதிகம் பயன் படுத்தும் வேகம் இருக்கிறது. படிமம் மட்டுமே கவிதை என்று சிவராமு வகையான நம்பிக்கைகளும் இருக்கின்றன. மொழியை மோகத்துடன் பயன் படுத்துவதை விட பிரக்ஞையுடன் பயன்படுத்து வதற்கு போர்ஹேவின் எழுத்து நமக்குச் சொல்லித் தரும். தெளிவாக நேரடியாக அதே சமயம் Encylophedic தன்மையுடன் எழுதுவதை நாம் கற்றுக் கொள்ள முடியும்.

**கேள்வி:** மொழிபெயர்ப்புகளுக்கு அடுத்து நீங்கள் விமர்சன எழுத்தை கையாளுகிறீர்கள். மேற்கின் இலக்கிய வரலாறு, சில இலக்கிய கோட்பாடுகளில் பரிச்சயமுடைய நீங்கள் மேற்கிலிருந்து சில எழுத்தாளர்களை சிலாகித்து அது போல் தமிழில் இவர்கள் எழுதவில்லை என்று கூறுவதாக ஒரு குற்றச்சாட்டு உண்டு. உங்கள் விமர்சன முறை தமிழ் பின்புலத்தை உடையதாக இல்லை என்பதும் இன்னொரு வகை கருத்து. போர்ஹேவை கூறுவதன் முலம் தமிழில் போர்ஹே வகை எழுத்து வரவேண்டும் என்று நினைக்கிறீர்களா? உங்கள் விமர்சன முறையின் அடிப்படை என்ன? மேற்கத்திய மனோநிலையாலே வாசிப்பதாகச் சொல்வதை ஏற்கிறீர்களா?

**பிரம்மராஜன்:** எல்லோருடைய எழுத்துக்களையும் நான் மேற்கத்திய பின்புலத்தில் பார்ப்பது இல்லை. இந்திய மனதின் தன்மையுடன் எழுதப்படும் சில புதிய கதைகள் உலகின் பிற எழுத்துக்களுக்கு இணையாக உள்ளன. சில புதியவர்கள் எழுதுவதை வைத்து நான் இதைக் கூறுகிறேன் ஆனால் போர்ஹே என்றும் கால்வினோ, மார்க்வெஸ் என்றும் கூறி அதற்கு இணையாக தங்களைக் கூற விரும்பும் சில எழுத்தாளர்கள் அந்த தரத்திற்கு இல்லை - சிலருடையது எழுத்தாகவே இல்லை என்றுதான் நான் கூற விரும்புகிறேன். இந்த பெயர்களை சொந்தம் கொண்டாடாமல் வேறுசிலர் தொன்மங்கயையும், புனைகதைகளையும் தற்போது பயன்படுத்துகிறார்கள். அவற்றைப்பற்றி இனிமேல் தான் எழுத வேண்டும். மேற்கத்திய மனோ நிலை எனக்குச் சொல்லிக் கொடுத்திருப்பதே திறந்த மனோ நிலையில் இருப்பதைத்தான். இது வாசிப்புக்குத் தேவை என்றே நினைக்கிறேன்.

**கேள்வி:** சமீப காலமாக நீங்கள் மொழி இலகுவாக இருக்க வேண்டும், துரித வாசிப்புக்கு இடம்



படிப்பகம்

www.padippakam.com

தரவேண்டும் என்று கூறிவருகிறீர்கள். சில நூல்களைப் பாராட்டவும் சில நூல்களை மறுக்கவும் இது பயன்படும்போது ஒரு கோட்பாடு போல வடிவம் பெறுகிறது. இது உங்கள் எழுத்துக்கு முரணானது இல்லையா? உங்கள் கவிதைகளை மறுக்கவும் கூட இதைப் பயன்படுத்த முடியுமே. இந்த முரண்பாட்டை எப்படி நீங்கள் எதிர்கொள்கிறீர்கள்.

**பிரம்மராஜன்:** நான் சிக்கலான மொழி, அடர்த்தியான மொழி உள்ள எழுத்தை மறுப்பவன் இல்லை. Ulysses போன்றவை மொழியின் அடர்த்தியினாலேயே கவிதை நிலையை அடைகின்றன. அந்தவகை அடர்த்தி பிரக்ஞை பூர்வமாக மொழி பயன்படுத்தப்படுவதன் மூலமாக ஏற்படுவது. தமிழில் சிலர் மொழியை பயன்படுத்தத் தெரியாமல், மொழிபற்றிய பிரக்ஞை இல்லாமல் பயன்படுத்தும் போது இலக்கியமாக அது அமையாமல் போகிறது. கதையை கூறுவதற்கான தயாரிப்பு இல்லாமல் ஏற்படும் குழப்பம் எழுத்தை அழகுபடுத்துவதில்லை. மொழியைப் பிரக்ஞைபூர்வமாக பயன்படுத்தி செரிவான ஒரு பிரதியை உருவாக்கித் தந்தால் நான் முதலில் அதை வரவேற்பேன். உலகின் பிற மொழிகளில் உருவாகும் வாசகப்பிரதி போல தமிழில் உருவாக வேண்டும் என்பது தான் என் எதிர்பார்ப்பு. பொறுப்பற்ற கதை கலைப்போ, மொழிக்கலைப்போ இதைச் செய்வதில்லை, பின்னால் வேறு வகைப் பிரதிகள் வரும்போது நான் எனது அணுகு முறைகளை மாற்றிக் கொள்ளுவேன். நான் எதிர்பார்ப்புடைய வாசகன். இதனால் எனக்கு புதிய வகைப் பிரதிகள் வேண்டும். வாசிப்பு இன்பம் என்பது பன்முகத்தன்மை உடையது. நான் புராணிக் என்சைக்ளோ பீடியாவை சமீபத்தில் படித்தேன் இது தரும் வாசிப்பு இன்பம் விஷ்ணுபுரம், பாழி என்ற பெரிய அளவில் பேசப்பட்ட நாவல்களில் இல்லை என்பது என் கருத்து. இதை ஒரு கருத்தாக முன்வைக்க உள்நோக்கம் எதுவும் இல்லை. எனது வாசிப்புதான் காரணம். நான் விமர்சகனாக இருப்பதைவிட வாசகனாக செயல்படவே விரும்புகிறேன். விமர்சகனாக இருப்பது ஒரு கவிஞனுக்கு கூடுதலான சில சமயம் தேவையற்ற வேலை என்றுதான் உணர்கிறேன்.

OOO


விரைவில் வெளிவருகிறது

**கறுப்பு வெள்ளைக் கவிதை**

ரமேஷ் – பிரேம்

அகரம் வெளியீடு



# புதுப்புனல்

**புதிய வெளியீடுகள்**

நவீன தமிழ்க் கதை சொல்லலில் மற்றுமொரு புதிய சாத்தியம் தோற்றநிலை மெய்ம்மைப்(vertual reality) புதினம்

**சிலந்தி**

**எம்.ஜி. சுரேஷ்** 135.00

ஞானியின் கட்டுரைகள்

**மார்க்சியத்திற்கு அழிவில்லை**

**ஞானி** 90.00

**எமது இதர வெளியீடுகள்**

தமிழில் முதல் பன்முக (cubist) நாவல்

**அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன்**

(திருப்பூர் தமிழ்ச் சங்க விருது பெற்ற நாவல்)

**எம்.ஜி. சுரேஷ்** 250.00

தன் பெருக்கி (auto fiction) நாவல்

**அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பை தேனீரும்**

**எம்.ஜி. சுரேஷ்** 115.00

**கனவில் பெய்த மழையைப் பற்றிய இசைக் குறிப்புகள்**

குறுநாவல்

**ரமேஷ் – பிரேம்** 70.00

**எம்மிடம் கிடைக்கும் இதர நூல்கள்**

**யார் அந்த 'அட்லாண்டிஸ் மனிதனும் மற்றும் சிலரும்'**

நாவல் மீதான கருத்துக்களின் தொகுப்பு

**தொகுப்பாளர் – ஞானி** 20.00

**கான்கிரீட் வனம்**

நாவல்

**எம்.ஜி. சுரேஷ்** 14.00

**சமூக விச்சின் புதிய பரிமாணங்கள்**

கவிதைகள்

**ரவி** 5.00

**புதுப்புனல்**
புத்தகப் பதிப்பகம்

32/2, ராஜி தெரு, முதல் மாடி,
அயனாவரம்,
சென்னை – 600 023




படிப்பகம்

www.padippakam.com

## ~ இரா. கந்தசாமி கவிதைகள் ~

**1**

ஏமாந்து அலைவுறும் அடிவேர்கள்
அந்தரத்தில்
நவீன ஓவியமாய் நெளியும்

கொல்லைப்புறம் மட்கிக் கிடக்கும்
நண்பனாய்ப் பேசிய மிதி வண்டி

தவித்தலையும் தனிமைக் கிளைகள்

இறந்த தாய் நண்டு
மல்லாந்த வயிற்றில் மொய்க்கும் குஞ்சுகள்

முண்டியடிக்கும் கால்களின்
இடைவெளி வாய்ப்பில்
நெளிகிறது சோகம்

**2**

மேசை இழுப்பறை
திறந்து கிடக்கிறது
கிடக்கும் துப்பாக்கியில்
விரல் பொருத்தி விலகும்

நிற்க, உட்கார, படுக்க
இருபது நொடிகளுக்கு மேல் இயலவில்லை

எதிர்பாராததில்லை இது
மீண்டும்
துப்பாக்கியில் பொருந்தும் விரல்கள்
கண்ணாடி பார்த்து
தலையில் தண்ணீர் தெளித்து
படிய வாரி
மூக்கு கண்ணாடி அணிந்து
விபூதி இடுகிறேன்
சுவரோரம் சிறிது
தலைகீழாய் நிற்கிறேன்

பரபரப்பு

சடச்சட வென
கான்க்ரீட் சுவர் துளைத்து
சிதறி விழும் தோட்டாக்கள்

பெருமூச்சுடங்கத்
தூங்கச் செல்கிறேன்

◆

## ~ மாலதி மைத்ரி கவிதை ~

### சூரியனுக்கு கீழ்

மணலில் புதைய புதைய
பாதை நீளும் பரந்த மணற்படுகை

பாதங்களின் கீழ்
மணல் காந்தமாய் என்னை
கவ்வி நழுவுகிறது
குட்டை சவுக்கும் முந்திரிக்காடும்
பச்சையலையடித்து நிற்கின்றன
எதிரே கடல் அடர்நீலத்தில்
குழந்தையின் கையில் கிடைத்த
தண்ணீர்க் குவளையென
தளும்பிக் கொண்டிருக்கிறது

என் நிழல்மேலே அடிவைத்து
பாதம் பொறுக்கப் பொறுக்க ஓடி வந்து
முந்திரிப் புதருக்குள் நுழைகிறேன்
பட்டுப் போன்ற வழவழப்பில்
கால்களைக் கூசவைக்கும் சந்தன மணல்
கோழிக்குஞ்சைத் தடவுவது போல்
கைகள் அலைந்து கொண்டிருக்கின்றன
இந்த இதத்தையும் குளிர்ச்சியும்
கைகொண்ட ரகசியத்தை
யாரிடம் சொல்லும் மணல்

அடர்த்தியான இலைகளுக்குள்
ஒளி பெய்கிறது
எல்லா முதல் கிளைகளும்
தரை தட்டியே வளர்கின்றனவே ஏன்

போன மாதம் செல்லம்மா
அங்கிருக்கும் கோண மரத்தில்
உட்கார்ந்தபடியே தூக்கிட்டுக்கிடந்தாள்

குட்டைச் சவுக்கிலிருந்து மாடுகள்
வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றன

ஊத்துக் குட்டையில்
இறங்கி தெளிந்த நீரைக் கலக்கி
முகம் அலம்புகிறேன்
பானை சிறு ஒலியுடன்
நீருக்குள் அமிழ்கிறது

ஒரு மீன் குஞ்சு
துள்ளி எழுந்து நழுவுகிறது
அந்தரத்தில்.

◆


படிப்பகம்

www.padippakam.com

# "மீகாமரே..., மீகாமரே."

யுவன் சந்திரசேகர்

"1714-ஆம் வருடம் ஜுலை மாதம் 9-ஆம் தேதி அதிகாலையில் கடலுக்குள் இறங்கினேன். கடற்காற்றின் இதமான குளிரில் ரெட் ஸிடார் மரத்தாலான என் பாய்மரப் படகைத் தள்ளிக் கொண்டு நீரில் இறங்கும்போது, அலைகள் என் முழங்காலைக் கட்டிக்கொண்டன சிறுகுழந்தைகள் போல. முந்தின தினம்தான் மஹாராணி ஆன்-னின் அரசாங்கம் கடற்பயணத்துக்கு உதவக்கூடிய, புதிய கடிகாரமொன்றுக்கான தேவையையும், கண்டுபிடித்துத் தருபவர்களுக்கு இருபதாயிரம் பவுண்டுகள் வெகுமதியையும் அறிவித்திருந்தது.

அவர்கள் கண்டுபிடிக்கட்டும், கடல்கடந்து பொருட்களைக் கொண்டு விற்று, பணம் குவிக்கும் பேராசையின் விருப்பத்துக்குக் காலத்தை வளைக்கும் ராட்சசர்கள். என் போன்ற ஏழைச் செம்படவனுக்குச் சமுத்திரம் தாய்போல, அவள் மடியில் சிலநாட்கள் கிடந்துவிட்டு, அவள் அன்புப் பரிசாகத் தரும் மீன்களைக் குவித்துக் கொண்டுவரும் இன்பம் போதும். என் மன உலகின் ரகசிய அடுக்குகளிலிருந்து பீறி எழும் அதீதங்களும், சுதந்திரங்களும், துயரங்களும் போதும். உடுக்க உடையும், இருக்கக் கடலும், உண்ண மீனும் தட்டுப்பாடில்லாமல் கிடைக்குமானால், உயிர்வாழ வேறு தேவைகள் உண்டா என்ன? கடலிலிருந்து திரும்பி வரும் தினங்களில் மரியாளின் பூண்டு மணம் கமழும் முத்தத்துக்கு ஈடுதான் உண்டா?

கருநீல இருளாய்க் கிடக்கும் என் தாயின் மேனி மெல்ல நிறம் மாறுகிறது. அலைமுகடுகளில் வெண்மையும், அலைப்பள்ளங்களில் இளநீலமும் படர்கின்றன. அதோ, அந்த மகத்தான ஆரஞ்சுப் பழம் கனிந்து உயர்கிறது. என் தாயின் உடல் பொன்னிறம் கொள்கிறது. கோடை காலங்களில் கடற்கரையில் சூரியக் குளியல் முடிந்து எழுந்து வரும் என் மரியாளின் இடுப்புப் போல வெண்கல நிறத்துக்கு மாறுகிறது.

என்னுடைய படகு சற்று அகலமானது. சுருட்டுப் பிடித்தவாறு படகில் முன்னும் பின்னும் நடக்கும் போது, கரையில் இருக்கும் உணர்வையும், நீரில் நடக்கும் பிரமையையும் மாறிமாறிக் கொள்கிறது மனம். படகின் மந்தகதிக்கு விரோதமாக, என் தலையைத் தாண்டி விரையும் கடற்குருவிகளை நோக்கி விசிலடிக்கிறேன். சில குருவிகள் என்னைத் திரும்பிப் பார்த்துவிட்டுக் கடக்கின்றன. லேசான பொறாமை எழுகிறது. அவற்றுக்கு ஒரு மீன் போதும், ஒரு நாளைக் கழிக்க.

தூண்டில் இல்லை அதனிடம்,
வலையும் இல்லை கைவசம்.
நெருப்பு இல்லை வாட்டிட
அடுப்பு இல்லை பொரித்திட
கரையில் காத்து நின்றிட
இணையும் இல்லை ஸீகலுக்கு
ஆனால், ஆனால், செம்படவா,
ஸீகலின் மீன் உனதில்லை
ஸீகரலின் கடலும் உனதில்லை.

என்று தொடங்கி வளரும் நாடோடிப் பாடலை முனகிக் கொள்கிறேன். கால் விரல்களால் படகின் தரையில் தாளமிடுகிறேன்.

மறுநாள் மதியம், அலைகளின் ஆர்ப்பாட்டம் குன்றிய தொலைவில் மிதந்து கொண்டிருந்தது படகு. பாய்மரத்தின் புடைப்பு வற்றியிருந்தது. இது நல்ல அறிகுறியில்லை. புயலின் சின்னம். மாலைப் பொழுதில் காற்று சீற்றம் கொண்டது. என் சமுத்திரத்தாய் மதம் பிடித்த வனமிருகம் போல துள்ளித் துடிக்கத் தொடங்கினாள். அவள் மடியில் தவழும் குழந்தையை மீண்டும் கருப்பைக்குள் திணித்துக்கொள்ளத் துடிக்கிறவள் போலத் தென்பட்டாள். மழைத் தாரைகள் பொழியத் தொடங்கின. மின்னல் வெட்டும்போது வெள்ளிக் கம்பிகளாய் மின்னிய தாரைகளை வெகுநேரம் பார்த்திருக்கும் பாக்கியமில்லை எனக்கு. படகு மரத்துண்டுகளாய் ஆனது.

மரப்பலகையையும், என் உயிரையும் இரு கைகளாலும் இறுகப் பற்றியபடி அலை உருட்டும் விதங்களிலெல்லாம் உருண்டபடி நீரில் கிடந்தேன். புயல் ஓயும்வரை. என் சருமம் ஊறிச் சுருக்கங்கள் கொள்ளலாயிற்று. காற்றின் கருணையோ, கடலின் கருணையோ, விதியின் கருணையோ என்னை ஒரு நிலப்பரப்பில் கொண்டு ஒதுக்கியது. விதியின் கருணை என்றுதான் சொல்ல வேண்டும். தொடர்ந்த நாட்களில் நடந்தவற்றைப் பொருட்படுத்தினால்.

முந்தா நாள் சூரியனுக்கும் இன்றைய சூரியனுக்கும்தான் எத்தனை வித்தியாசம்?

★★★★★ ★★★★★★ ★★★★★

நிலக்கரையில் நடக்கத் தொடங்கினேன். அலைவிளிம்புக்கு வெகுதொலைவில் மூங்கிற் புதர்க்கூட்டம் தென்பட்டது. துவளும் கால்களுடன் அதை நோக்கிச் சென்றேன். புதர்களைக் கடந்து வெகுதூரம் நடந்த பிறகு சிறு வனம் ஒன்று இருப்பது தென்பட்டது. விதவிதமான மரங்கள், செடிகொடிகள், மரங்களின் இடைவெளியில் இயற்கையாய் ஊறிக் கிடந்த நன்னீர்க் குட்டை.


பருகும்போது விசித்திரமாய் உணர்ந்தேன். இரண்டாம் முறை நீரைச் சேந்தி உறிஞ்சும்போது புரிந்து விட்டது. சரிதான், உறிஞ்சும் ஓசை எழவில்லை. நீரைக் கொப்புளித்துத் துப்பினேன்.



படிப்பகம்

www.padippakam.com

புளிச்சென்ற சப்தம் எழவில்லை. அடிவயிற்றில் பீதி உயர்ந்தது. ஜான்.. என்று என்னையே கூப்பிட்டுக் கொண்டேன். தொண்டையிலிருந்து சப்தம் வெளியேறும் உணர்ச்சி இருக்கிறது. காதில் ஓசை விழவில்லை. சிறுமரம் ஒன்றைப் பற்றி உலுக்கினேன. இலைகள் அசைகின்றன. காய்ந்த இலைகள் உதிர்கின்றன. நிசப்தத்தின் ஓசை மட்டுமே கேட்கிறது. உள்ளங்கைகளைக் கூப்பி உதடுகளில் பொருத்தி ஜாாாாாான் என்று அலறினேன். தொண்டை கிழிவது போலக் குரல் நாண்கள் வலித்தன. சப்தமே கேட்கவில்லை.



வெளிச்சத்தின் ஓசை மட்டுமே கேட்கும அந்த நிலவொளியின் அமானுஷ்யம் தாளாது சிறுநீர் முட்டியது. வலிக்கும் அடிவயிற்றுடன் அலைவிளிம்பை நோக்கி ஓடினேன். கரை மணலில் மூர்ச்சையற்று வீழ்ந்திருக்க வேண்டும் நான். எத்தனை நேரம் கிடந்தேனோ.

பார்வை மெல்ல மெல்லத் திரும்பியபோது, நிர்த்தட்சண்யமாய்ப் பரந்திருக்கிறது சமுத்திரத்தரை.

தோற்றவனாய் திரும்பினேன். எங்கெங்கோ கால்போன போக்கில் திரிந்தேன். அந்த இடத்தின விட்டம் ஆறேழு மைல்களுக்கு அதிகமிருக்காது. மனித நடமாட்டமேயில்லை. இதுபோன்ற பிரதேசங்கள் சமுத்திரத்தின் மையப் பகுதிகளில் இருப்பதாகக் கதைகளில், கடலோடிகளின் வாக்குகளில் கேட்டிருக்கிறேன்.

உயிர் வாழ்வதற்குத் தேவையான சகலமும் இருக்கிற இடம்தான். வனவெளியின் கனிமரங்கள் பசியாற்றிவிடும். மரங்களின் கூரைக்கடியில் படுத்துறங்குவது கடினமல்ல. ஆள் நடமாட்டமற்ற இடத்தில் உடைகளுக்கு அவசியமில்லை. ஆனால் உயிர் வாழ்தல் என்பது அவ்வளவுதானா?

மெல்ல அந்தி நெருங்கிய போது, உயிர்க்களை கொள்ளத் தொடங்கியது இந்த இடம். கரையோர மூங்கில்களில் இயற்கையாய் உண்டான துளைகளில் காற்று ஊதும் ஒலி, பறவைகள், விலங்குகளின் சப்தங்களும், காற்று மரங்களிடம் கிசுகிசுக்கும் ஒலியும் கேட்க ஆரம்பித்தது. இலைகளிலும், மரத்தண்டுகளிலும், கடற்கரையின் மணல்வெளியிலும் இருள் பளபளக்கத் தொடங்கியது. மேகத்திலிருந்து வெளிப்பட்ட கீற்று நிலா, தனிமையின் பாடலை இசைத்தது. மரியாளின் நினைவில் காந்தியது மனம்.

மழை ஓய்ந்த நாட்களின் முன்னிரவுகளில் மரியா ஒரு அபூர்வமான தின்பண்டமாக மாறுவாள். வருடக்கணக்காகப் புசித்தும் தீராத தின்பண்டம். தனியாக இருந்தபடியே தின்று முடிக்கும் தின்பண்டம். யாரிடமாவது பேசும் வேட்கை தோன்றி, வெறியாக மாறியது. தனிமையை தொலைக்கும் உபாயமாகவே மொழி தோன்றியிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். அப்போதுதான் அந்தக் குரலைக் கேட்டேன்.

''மீகாமரே..., மீகாமரே.''

வெகு அருகில் கேட்பதுபோலவும், ஆகாயத் தொலைவுகளிலிருந்து எதிரொலிப்பது போலவும் தொனித்த அந்தக் குரலில் இருந்த வாஞ்சையில் என் உடலின் ரோமங்கள் குத்திட்டன. குரல் வந்த திசையை நோக்கினேன். ஆள் யாரும் தென்படவில்லை. தனிமையின் நெருக்கடியில் என் மனம் கொள்ளும் பிரமை என்று தலையை உதறிக் கொண்டேன். அந்தக் குரல் மீண்டும் கேட்டது.

''ஐயா, மீகாமரே, மீகாமரே...''

கடலின் பரப்பில் நான் கண்டதைச் சொன்னால் நீங்கள் நம்பமாட்டீர்கள். பன்னிரண்டு நாட்கள் கழித்து, என்னைத் தேடி வந்த படகில் இருந்த நண்பர்கள் நம்பவில்லை. என் உயிருக்குயிரான மரியாள் நம்பவில்லை. ஏன் இத்தனை ஆண்டுகள் கழித்து இதைச் சொல்லும்போது, அன்று அடைந்த அதே கிலேசமும், ஆசுவாசமும் அடையத்தான் செய்கிறேன் என்றாலும், எனக்கே பரிபூரணமாய் நம்ப முடியவில்லை.

கடலின் மேற்பரப்பில் மிதந்து மிதந்து வந்தது ஒரு பெண்ணுருவம். பளிங்கு நிறத்துடன் மூடப்படாத முலைகளுடன் அவள் நீர்ப்பரப்பில் நகர்ந்து வந்தாள். வருடங்களின் ஊர்தலில் தொய்ந்த சரிந்த என் மரியாளின் முலைகள் போலன்றி, யௌவனத்தின் மதர்ப்புடன் மேலேந்தி இருந்த முலைகளிலிருந்து பார்வையை அகற்ற முடியாதவனாய்ப் பார்த்தவாறிருந்தேன். நடந்து வருவது போலில்லை அவளது இயக்கம். தத்தித் தத்தியும், நீர்மேடையில் தவழ்ந்தும் முன்னேறி வந்தவளின்



படிப்பகம்

www.padippakam.com

இடுப்புக்குக் கீழே - அதுதான் ஏற்கனவே சொன்னேனே, நம்ப மாட்டீர்களென்று - மீனின் உடல்!

நீரில் பளபளக்கும் செதில்களும், தொடைகளின் வெளிப்புறம் அசையும் துடுப்புகளும் அவள் என்னை விளித்த குரலுக்கு சம்பந்தமில்லாமல் இருந்தன. இடுப்புக்கு மேல் ஆணுடல் இருந்திருந்தால், இத்தனை கிளர்ச்சி அடைந்திருப்பேனா, அல்லது மிரட்சியின் உச்சத்தில் மரணமுற்றிருப்பேனா என்பது போன்றும், இன்னும் பலவாறும் யோசனைகள் நீரூற்றாய்ப் பொங்கிய வேளையில், அவள் கரையேறினாள்.

கைகளை மணற்பரப்பில் ஊன்றி, மீனுடலைத் தரையில் இழுத்தவாறு தவழ்ந்து முன்னேறி என்னை நோக்கி வந்தாள். சீரான லயத்தில் சலனமுற்றன அவளது இளம் முலைகள். அவள் தன்னை அறிமுகம் செய்து கொண்டதும். நான் அவளுடன் சுவாதீனமாய் உணர்ந்ததும், உறவின் ரகசியத் தடங்களில் அடுத்தடுத்த எல்லைகளுக்கு நாங்கள் இசைவாய் நகர்ந்ததும் சொற்களுக்கு அப்பாற்பட்டவை.

***** ****** *****

என்னோடு பேசிக்கொண்டிருக்கும்போதே சடாரென்று நீர்விளிம்பை நோக்கி விரைவாள். தன் இரு கரங்களாலும் நீரைச் சேந்தி குடிப்பாள் - வெறிக் கொண்டவள்போல், விழுங்கிய நீர் காதுகளின் வழி அவள் மேனியை நனைத்து வழியும் - பவளச் சில்லுகள் போலிருக்கும் அவளது முலைக்காம்புகள், சொரிபழங்கள் போல மினுங்க, மனித மேலுடல் இருந்தாலும் அவளது சுவாசப்பைகள் மீனுக்குரியவை என்று சொன்னாள். எனினும், மனிதப் பாதி இருப்பதால், இரண்டு நாழிகைகள் நீருக்கு வெளியில் இருக்க முடியும்.

பெண்ணுடல் எனக்கு புதியதல்ல. என் மரியாளின் உடலில் இருக்கும் ஒவ்வொரு மச்சமும், மருவும் உறக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் வரிசை பிசகாமல் என்னால் சொல்ல முடியும். அவள் மனதின் ரகசியத் தாழ்வாரங்களில் புனலாய்ப் பெருகி வழியும் வேட்கையின் ஒவ்வொரு துளியையும் பருகி இச்சித்திருக்கிறேன். ஆயினும், இவள் உடலில் பெருகிய கடல்வாசனை எனக்குப் புதியது.

இயற்கையாய்ப் பழுத்த கனிகளும், கடற்காற்றின் தழுவலில் உறக்கமும் தீர்த்தது போக என் பசியைப் போக்க வந்த விருந்திடம் என் விழைவைத் தெரிவிக்கத் தயக்கம் ஏதும் இருக்கவில்லை எனக்கு. தயக்கமெல்லாம், அவள் உடலின் கீழ்ப்பகுதியில் மண்டியிருந்த செல்கள் கீறுமோ என்பது பற்றித்தான். அவள், செதில்கள் பற்றிக் கவலையுற வேண்டியதில்லை என்றும், தற்காப்புக் காரணங்கள் உண்டாகும்போது முள்ளம்பன்றியின் முட்கள் போலக் கூறாக விறைத்துக் கொள்ளவும், காதல் நேரங்களில் பூனையின் நகங்கள் போல உள்ளிழுத்துக் கொள்ளவும் கூடியவை அவை என்றும் எடுத்துச் சொன்னாள்.

அவளுக்கு அஷோபா என்று பெயரிட்டேன். என் பாட்டன் ராபின் வில்லியம்ஸ் எனக்குச் சொன்ன தேவதைக் கதையில் வரும் புனித ஆந்தையின் பெயர். கிறிஸ்துமஸ் மாதத்தில் நைட்டிங்கேலின் குரலில் பாடவும், புனித வெள்ளிக்கு பதின்மூன்று நாட்களுக்கு முன் தொடங்கிப் பதினாறு நாட்கள் மட்டும் நள்ளிரவில் ஊளையிடும் நாயின் குரல் கதறவும், பிற மாதங்களில் ஆந்தையின் குரலில் அலறவும் செய்யும் புராணிகப் பறவை அது. உடல்கள் பிணைந்த நேரங்களில் அவள் காதோரம் நான் அஷோபா என்று கரகரக்கும்போது, அவள் உடலின் மயிர்க்கால்கள் விறைத்து நிற்கும். மரியாளுக்கும் இது போலவே சிலிர்க்கும் என்பது ஞாபகம் வரும்.

மனதின் அடித்தளத்தில் மரியாளை நினைவு கூராமல் ஒரு வேளையும் அவளுடன் சம்போகம் கொள்ள முடியவில்லை என்னால். எத்தனையோ ஆண்டுகள் கழிந்தும் இன்னும் தீராத குற்ற உணர்ச்சி அது. என்ன செய்வது, உண்மையின் ஞாபகமின்றிப் பொய் சொல்ல முடியுமா என்ன?

உடல் சோரும் நேரங்களில் எங்களுக்குப் பேசவும் விஷயங்கள் இருந்தன. அவள் பேசியது ஆங்கிலம் போலவே இருந்ததா, அல்லது அவள் பேசுவதையெல்லாம் நான் ஆங்கிலத்தில் புரிந்து கொண்டேனா என்பதைத் தீர்மானமாகச் சொல்ல முடியவில்லை. ஆயினும், பிரதேசம் தாண்டிய பொதுத் தன்மையொன்று அவள் மொழியில் இருந்ததைக் கண்டேன். அந்தக் கணத்தில் காட்சிகொள்ளும் விஷயங்களைப் பற்றி மட்டுமே பேசினாள் அவள்.

புலன்களால் தொட்டுணர முடிந்த பருப்பொருட்கள் மட்டுமே பெயர்ச் சொற்களாய் உள்ள மொழி அது. காதல், காமம், பசி, கடவுள், கோபம், பாவம், புண்ணியம், வலி போன்ற எந்தச் சொல்லுக்கும் பொருள் தெரியவில்லை. அவளுக்கு முத்தம், மாதுளம்பூ, கடல்நீர், காற்று, மழை, நிலவு போன்ற சொற்களைப் பயன்படுத்திப் பேசும் அவளுடனான தொடர்புமொழியை வெகு சீக்கிரம் உண்டாக்கிக் கொண்டுவிட்டேன் என்றாலும், சில சொற்களைத் தவிர்க்க முடியவில்லை. அவற்றை விளக்க நேரும்போது, பிறவியிலேயே பார்வையற்றவனுக்கு நிறங்களைப் பற்றி விவரிக்கும் சிரமத்தை அடைவேன்.

உதாரணமாக,

என் தனிமையைப் போக்க வந்த தேவதையே!



படிப்பகம்

www.padippakam.com

என்று அவளைக் கொஞ்சிய போது, தனிமை என்றால் என்ன? என்று கேட்டாள்.

நான் விளக்க முனைந்தபோது, இத்தனை மீன்களும், இத்தனை அலைகளும், இடையறாத காற்றும், இத்தனை மரங்களும், இவ்வளவு மணலும் இருக்கும்போது தனிமை என்ற ஒன்று எவ்வாறு இருக்க முடியும் என்றாள்.

மேலும் விளக்க முயற்சித்தபோது, நீங்கள் சொல்லும் அர்த்தத்தில், யார்தான் தனியாக இல்லாமல் இருக்க முடியும்? நான், இன்னொன்று என்று அறிந்த மாத்திரத்திலேயே தனிமை என்ற ஒன்று இருந்துதானே தீரும்? என்றாள். அவளுக்கு என் சொற்களைப் பயிற்றுவிப்பதற்குப் பதிலாக, என் மொழியின் பலவீனங்களை நான் உணரும் விதமாகவே எங்கள் உரையாடல் நகர்ந்து வந்தது.

அந்த இடத்தின் பெயர் என்ன என்று கேட்டேன். இடத்தின் பெயர் என்றால் என்ன என்று திருப்பிக் கேட்டாள்.

என் பெயர் ஜான் வில்லியம்ஸ் என்பது போல, அவளுக்கு நான் அஷோபா என்று வைத்தது போல, நாம் இருக்கும் இந்த நிலபரப்புக்கு என்ன பெயர் என்று கேட்டேன். ஒருவேளை என் போன்ற மனிதர்கள் வசித்திருந்தால், அந்த இடத்திற்கு பெயர் வைத்திருப்பார்கள் என்றும், மீன்களோ, தவளைகளோ, ஆமைகளோ, பாறைகளோ பெயர்கள் வைப்பதில்லை என்றும், நான் விரும்பினால் தனக்கு வைத்தது போலவே அந்த இடத்துக்கும் பெயர் வைக்கலாம், அந்தப் பெயரிலேயே தானும் அழைக்கச் சம்மதமே என்றும் தெரிவித்தாள்.

நான் கனவுக்கோளம் என்று பெயர் சூட்டியபோது, கனவு என்ற வார்த்தைக்குப் பொருள் கேட்டு என்னைச் சங்கடப்படுத்தினாலும், அந்தப் பெயர் தனக்குப் பிடித்திருப்பதாகச் சொல்லி, என் உதடுகளில் அழுந்த முத்தமிட்டாள்.

★★★★★ ★★★★★★ ★★★★★

என் பாட்டன் ராபின் வில்லியம்ஸுக்குச் சமுத்திரத்தின் ஒவ்வொரு அங்குலமும் உள்ளங்கை ரேகை போல அத்துப்படி. எந்தெந்தக் காலங்களில் என்னென்ன மீன் அதிகம் கிடைக்கும். எந்தெந்த நாட்களில் அலைமுகடுகள் வானளாவ உயரும், சுறாவை எதிர்கொண்டால் என்ன செய்ய வேண்டும், புயற்காற்றில் சிக்கிக் கொண்டால் தப்புவது எப்படி (கைக்குக் கிடைக்கும் மரத்துண்டைப் பற்றிக் கொள்வது மட்டும் போதாது. உயிர்தப்பிக் கரைசேருவது பற்றிய கனவு ஒன்றிலும் தொற்றிக் கொள்ள வேண்டும் என்பான்). விண்மீன்களை வைத்துத் திசையறிவது எப்படி, கரை புலப்படாத தொலைவுக்குள் சென்ற பிறகு, (அன்றாடம் மாற்றமற்ற அளவில் உயர்ந்து நகர்ந்து மறையும் சூரியன் உதவாது நாட்களைக் கணக்கிட) கடலின் நாட்காட்டி நிலவுதான், என்பது போன்று சமுத்திர சாஸ்திரத்தை எனக்குக் கற்றுக் கொடுத்தது என் பாட்டன்தான்.

கடலில் துழாவித் திரியும் நாட்களில் என் பாட்டனை நினைவுகூராமல் இருந்ததில்லை நான். மணற்கரையில் மண்டியிட்டுத் தொழுதுவிட்டுப் படகை நீருக்குள் நகர்த்த வேண்டும் என்பான். சமுத்திரத்தைப் பார், எனக்கும் தாய், என் பேரனான உனக்கும் தாய். உன்னுடைய பேரனுக்கும் அவள் தாய்தான். இந்த வகையில் அவளும் கன்னி மேரியும் ஒன்று என்பான். செம்படவ குலத்தின் எத்தனை தலைமுறைகளை ஈன்ற பின்னும் கன்னியாக இருப்பவள் சமுத்திரத்தாய் என்பான்.

ஆனால் அவனும் சொல்லாத சில தகவல்களை அஷோபா எனக்கு எடுத்துரைத்தாள். அவள் என் முன் அமர்ந்திருப்பதே அவன் எனக்கு சொல்லாத விந்தைதானே. நாங்கள் இருந்த கனவுக்கோளம் பகலில் நிசப்தத்தை ஆடையாய்ப் பூணுவதும், அஷோபாவும் நானும் சந்திக்கும் இரவுகளில் ஓசையின் ரீங்காரத்தைப் போர்த்திக் கொள்வதும் பற்றி அவளிடம் கேட்டபோது அவள் சொன்ன சங்கதிகளின் பிரகாரம், அளவற்றுப் பரந்து விரிந்திருக்கும் பிரபஞ்சம் ஒன்றைக் கூரையிட்ட சிறு குடிசை என்பது போன்ற சித்திரம் உண்டானது எனக்குள். அவள் சொன்னதைக் கேளுங்கள்.

சில நிலப்பரப்புகளில் இதற்கு நேர்விரோதமாய் இருக்குமாம். பகற்பொழுதுகள் பேரிரைச்சலுடனும், இரவுகள் மௌனமாகவும் இருப்பவை. சிலவற்றில் காற்று வெண்மேகக் கூட்டம்போல கண்ணுக்குத் தென்படுமாம். தீண்டின மாத்திரத்தில் மரணத்தை வழங்கும் கனிகளும், உணவாகப் பயன்படும் பாம்புகளும் உள்ள நிலவெளிகளும் உண்டாம். திராட்சைத் தோட்டங்களின் மத்தியில் ஒயின் ஊறும் கிணறுகள் உள்ள பிரதேசம் ஒன்றுக்குத் தான் சென்றதுண்டு என்று தெரிவித்தாள். மனிதர் வசிக்கும் பகுதிகள் பெரும்பாலும் மனிதர்களைப் பிரதிபலிப்பதாகவும், மனிதர் இல்லாத பகுதிகளில் ஆமைகள் ஓடித்திரியும் என்றும் சொன்னாள்.

தன் இனம் பற்றி அவள் சொன்ன ஒரு செய்தி மறக்க முடியாது. அவளுடைய இனத்தில் குழந்தைகள் ஒற்றையாய்ப் பிறப்பதே இல்லை. மேற்பகுதி மீனாகவும், கீழ்ப்பகுதி மனித உடலாகவும் பிறக்கும். மறுபாதி பிறக்கும்போதே நிலவில் இருக்குமாம். என்னால் இதை விளங்கிக் கொள்ள முடியவில்லை. அப்படியானால் இந்த இரட்டைக் கருவைத் தரிக்கும் கருப்பையின்



படிப்பகம்

www.padippakam.com

அளவு என்ன, கொள்ளளவு என்ன. அவள் மேலும் சொன்னாள். ஆனால் இரண்டு பிறவிகளுக்கும் ஒரு வேற்றுமை உண்டு. எங்களால் தண்ணீருக்கு அடியில் இருக்கும் தரையில் தவழ முடியும். அவர்களால் தரைக்கு அடியில் இருக்கும் தண்ணீரில் நீந்த முடியாது.

எங்கள் உரையாடல்களின் வாயிலாக அன்றாடம் நகர்ந்து கொண்டிருந்த நிலவு மெல்ல மெல்ல முழு வட்டமாகி வந்தது.

★★★★★ ★★★★★★ ★★★★★

''மீகாமரே...., மீகாமரே.''

என் இதயத்துக்கு வெகு அருகிலிருந்து கேட்டது அந்தக் குரல். அஷோபாவின் அணைப்பில் இருந்த நான் எப்போது உறங்கினேன்? அவள் குரலில் பின்னொட்டாக அவளது மூச்சுக்காற்று என் வலது செவியின் மடலில் வருட, கண்களைத் திறந்தேன். சமுத்திரத்தின் தொலைவில் தன் விரலை நீட்டிச் சுட்டினாள்.

பௌர்ணமி நாளின் நிலவு முழுவீச்சில் பொலிந்த இரவு அது. அலைகள் பெரும் ஆரவாரம் எழுப்பிய சமுத்திரவெளியின் மறுகோடியில் ஒரு கரும்புள்ளி தெரிவதுபோல இருந்தது. என்னை அழைத்துச் செல்ல ஒரு படகு வருகிறது என்றும், அதிலிருப்பவர்களுக்கு நாங்கள் இருக்கும் நிலப்பரப்பு தட்டுப்பட்டு விட்டது தன் உள்ளுணர்வுக்குப் புலனாகிறது என்றும் தெரிவித்தாள்.

தனக்குத் தானே பேசிக் கொள்பவள் போல, என் பதிலை எதிர்நோக்கியிராதவள் போல, நட்சத்திர மண்டலங்களிலுள்ள தன் இணையை நோக்கி ஆதங்கமாய்ப் புலம்புபவள் போல, கடற்கரையின் மணற்துகள் ஒவ்வொன்றையும் தழுவத் துடிப்பவள் போல, கரைப்புதர்களில் தன் குரல் பட்டு எதிரொலிப்பதைச் செவி மடுப்பவள் போல, நான் வந்த நாளிலிருந்து இன்று வரையிலான ஒவ்வொரு நிகழ்வையும் மனனம் செய்து ஒப்பிப்பவள் போல ஏதோதோ சொல்லிக் கொண்டே போனாள்.


அலைகளின் பொன்னிற ஆர்ப்பரிப்பின் ஒளிபட்டு அவள் தேகம் மின்னியது. கண்களின் ஆழம் கூடிவிட்டதாய்ப் பட்டது. அவற்றின் பளபளப்பில் வார்த்தைகளாய் வெளியேறாது மீந்த துயரமும், உடனடியாக என் மரியாளின் இருப்பிடம் நோக்கிப் புறப்படத் தயாராகிவிட்ட என் மீதான எள்ளளவும் துகில் போலப் படர்ந்திருந்ததைக் கவனித்தேன். என்னுடன் வந்துவிடும்படி கூறினேன் அவளிடம்.

அவள் புன்னகைத்தாள்.

நீரிலோ, நீர்ப்பரப்பின் மத்தியிலான குறுநிலவெளியிலோ என்னால் நெடுங்காலம் வசிக்க முடியாதது போலவே, நான் வசிக்கும் இடத்தில் வந்த தன்னால் வசிக்க முடியாது என்றாள்.

''ஆயினும் மீகாமரே, நீர் இங்கு வந்த பின்னர் தண்ணீரை விடவும் தரை எனக்கு உவப்பான இடமாகி விட்டது. உவப்பு என்ற சொல்லைப் பயன்படுத்துபவளாகி விட்டேன் பார்த்தீரா? உம் தயவால் தனிமை என்ற சொல்லுக்கும் பொருள் புரிந்தவளாகி விட்டேன்.''

அவள் குரல் தேய்ந்து வந்தது. மூச்சிறைக்க ஆரம்பித்தது. விடியலை நோக்கி நகர்ந்த பொழுதின் மெல்லிய வெளிச்சத்தில் அவள் உடல் நீலம் பாரிக்கத் தொடங்கி விட்டதைக் கண்டேன். அடடா! எத்தனை நாழிகைகள் ஓடிவிட்டன!



அவள் உடலை என் இருகைகளாலும் ஏந்தியபடியே நீர்விளிம்பை நோக்கி நடக்கத் தொடங்கினேன். சமுத்திரம் நகர்ந்து கொண்டே போகிறது. அவள் உடலின் கனம் கூடிக் கொண்டே போகிறது. ஒரே சமயத்தில் நாலைந்து பாய்மரப் படகுகளின் பளுவை என் கொடுங்கைகளில் உணர்ந்தேன். மிகுந்த சிரமம் தோன்றக் குரலெழுப்பி, அதட்டும் குரலில் சொன்னாள்:

''மீகாமரே, நில்லும்.''

எனக்கு வேறு வழியில்லை. வேர் பிடித்த மரமாக நின்றேன். அவள் முன்னிலும் கம்பீரமாகச் சொன்னாள்:

''மீகாமரே... உம்முடைய கைகளில் நான் இறக்க விரும்புகிறேன்.''

என் பாதம் ஊன்றின நிலவெளியெங்கும் வைகறையின் நிசப்தம் ஆவேசமாய்ப் படர்ந்தது.''



படிப்பகம்

www.padippakam.com

# இன்றைய தமிழ் இலக்கியம் வாழ்வும் வளர்ச்சியும்

## ஞானி

மதிப்பிற்குரிய நண்பர்களே வணக்கம். உடல்நலக் குறைவு காரணமாக நேரில் வர இயலாமைக்கு அனைவரது மன்னிப்பையும் வேண்டுகிறேன். சாகித்திய அகாதெமி ஈரோடு வரை வந்தமைக்காக எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஈரோட்டுக்கு கொண்டு வந்தவர்களுக்கும் என் பாராட்டுக்கள்.

மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுக்கு ஒரு முறையேனும் இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்தும் முறையில், அந்தப் பகுதி எழுத்தாளர்களை சாகித்திய அகாதெமி ஊக்குவிக்க முடியும். ஈரோடு வட்டாரம் என்றால் நவீன இலக்கியத்தில் துடிப்போடு செயல்படும் நண்பர்கள் தேவிபாரதி, கவுதம சித்தார்த்தன், கா.சி. சிவக்குமார் ஆகியவர்களை எப்படி முன்னிலைப் படுத்தாமல் இருக்க முடியும்? இது குறித்து அகாதெமியினர் சிந்திக்குமாறு வேண்டுகிறேன்.

இலக்கியத் திறனாய்வாளன் என்ற முறையில் வெளிப்படையாகப் பேசுவது என்பதை ஒரு கடமையாக மேற்கொண்டுள்ளேன். மார்க்சியச் சார்பு உடையவன் என்ற போதிலும், மார்க்சியத்தை ஆழ்ந்து கற்றதன் விளைவாக வறட்டுச் சூத்திரவாதங்களை நான் பயன்படுத்துவது இல்லை. மார்க்சியத்தைத் தழுவிக் கொண்டவர் என்பதற்காக நான் எந்த எழுத்தாளரையும் உச்சிமேல் வைத்துக் கொண்டாட வில்லை. நவீனத் தமிழ் இலக்கியத்திற்குப் புதிய சக்திகளைச் சேர்த்த தமிழ் எழுத்தாளர்களைச் சாதி என்றும், இனம் என்றும் பாராமல் கொண்டாடுவதில் நான் தவறவில்லை.

தமிழில் இலக்கியத் திறனாய்வு வளரவில்லை என்று திரும்பத் திரும்ப சிலர் சொல்வதை என்னால் ஏற்க இயலவில்லை. பிரமிள், வெங்கட் சாமிநாதன், சுந்தர ராமசாமி, தமிழவன் முதலியவர்களின் திறனாய்வுப் பார்வையை நான் என்றும் மதிக்கிறேன். இவர்களில் ஒரு சிலரை ஓரம் கட்டுவதையோ, இவரைப் போல இன்னொருவர் இல்லை என்று தூக்குவதையோ என்னால் செய்ய இயலாது. நமது பல்கலைக் கழகங்களும் அரசும் ஆரோக்கியமாகச் செயல்பட்டிருக்குமென்றால், கா.ந.சு. வுக்குப் புதுவைப் பல்கலைக் கழகம் இடம் கொடுத்ததைப் போல, இலக்கியத் திறனாய்வு என்ற இருக்கையை ஏற்படுத்தி இவர்களின் அறிவுத் திறனைத் தமிழ் இலக்கியத் திறனாய்வின் மேன்மைக்குப் பயன்படுத்தி இருக்கமுடியும்.

புதுமைப்பித்தனை இன்னும் தொடர்ந்து கற்பதற்கும் புரிந்து கொள்வதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதனாலேயே மௌனியையோ, கு.பா.ரா. - வையோ, பிச்சமூர்த்தியையோ கீழ் இறக்கிப் பேசுவதில் எனக்கு உடன்பாடு இல்லை. புதுமைப்பித்தனுக்குப் பிறகு இவர் தான் என்று ஒரு பெரியவரைச் சுமப்பதிலும் எனக்கு உடன்பாடு இல்லை. என்னதான் ஒருவர் மேதை என்ற போதிலும் சமூகமும், வரலாறும் தமக்குள் வைத்திருக்கும் ஆற்றல்களில் கூடியவரை அதிக அளவில் இவர் செரித்துக் கொண்டவர் என்பதால், இவரை மட்டுமே போற்றி இலக்கியத்தில் மட்டுமல்லாமல் சமூகத்தின் களங்கள் பலவற்றில் புதியவை படைத்தவர்களை நாம் மறைத்துவிடக் கூடாது. இலக்கியத்தினுள்ளும் சிலர் நுழைந்து செய்யும் ஆர்ப்பாட்டங்களில் இவ்வகைப் போக்குகளை நாம் கண்டறிய முடியும்.

இலக்கியப் பரிசுகள், விருதுகள் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டும். இலக்கியம் படைக்காமல் இருக்க முடியாது என்று இலக்கியத்திற்குள் வந்தவர் புகழையோ, பரிசுகளையோ பொருட்படுத்துவதற்கு இல்லை. இலக்கியம் என்பது ஒரு பணி கூட இல்லை. எனக்கு ஏன் இந்தத் துயரங்கள், எனக்கு மட்டுமா இந்தத் துயரங்கள். சமூகத்தில் என்னதான் நடந்து கொண்டிருக்கிறது. எனக்குள்ளும் உள்ள முரண்பாடுகளை நான் எப்படி விளங்கிக் கொள்வது. என்னை எப்படிப் படைத்துக் கொள்வது - இம்மாதிரிச் சில கேள்விகளோடு இடையறாது தமக்குள் போராடி, இவ்வகைத் துயரங்களின் வேர்கள் என்ன? கிளைகள் என்ன? என்பதை ஆராய்ந்து இதற்கு மேலும் செல்ல இயலுமானால் இந்த வேர்களின் வரலாற்றைத் தேடி, தத்துவத்தில் செறிவு பெற்றுத் தனக்கு மட்டுமல்லாமல் ஒட்டு மொத்தமான சமூத்தின் விடுதலை என்ற உள்ளுணர்வோடுத் தீவிரமாகத் தனக்குள் செயல்படும் ஒருவரை இலக்கியத்திற்குக் கிடைத்த பேறு என நாம் கொண்டாட முடியும். இதற்காக மற்றவர்களை, மக்களைத் தாழ்த்துவது ஒரு மாபெரும் குற்றச் செயல் ஆகும். இவர்களுக்கு பரிசுகளும், விருதுகளும் தேவை இல்லை என்ற போதிலும், ஒரு வேளை கிடைக்குமானால் இவரோடு சேர்ந்து நாமும் மகிழ்ச்சி அடைய முடியும். இத்தகைய படைப்பாளிகள் மூலம்தான் ஒரு மொழி இலக்கியத்தின வாழ்வும், வளமும் நிலைபெறும்.

தமிழகச் சூழலில் எத்தனையோ இலக்கிய அமைப்புகள் ஆண்டுதோறும் பரிசுகள் வழங்குகிறார்கள். வேண்டியவர் களைக் கொண்ட நடுவர் குழு ஒன்றை வைத்துக் கொண்டு, வேண்டியவர்களுக்குப் பரிசுகள் வழங்குகிறார்கள். பழி வந்து விடக் கூடாதே என்பதற்காக ஏதாவது ஒரு ஆண்டில் தகுதி உள்ளவர்களுக்குப் பரிசு வழங்குகிறார்கள். தமிழகத்தில் கட்சிசார்ந்த இயக்கங்களும் இதே திருப்பணியைத் தொடர்ந்து செய்கிறார்கள். இப்படிச் செய்வதற்கு இவர்கள் வெட்கப்படுவதில்லை.

கிடைத்த பரிசை எழுத்தாளர்களும் ஆசையோடு பெற்றுக் கொள்கிறார்கள்.

"தெருவில் சென்றபொழுது அங்கே ஏதோ கலவரம் நடந்து கொண்டிருந்தது. காவல் துறையினர் மக்களை ஓட ஓடத் துரத்தி அடித்தனர். நான் இடையில் மாட்டிக் கொண்டேன். இப்பொழுது தியாகிகளுக்கான ஓய்வூதியம் எனக்கும் கிடைக்கிறது". இப்படி வேடிக்கைகளும் இங்கு இலக்கிய உலகிலும் நடைபெறுகின்றன. இலக்கியம் செய்வதற்காக இவர்கள் இறங்கியபொழுது எதையோ இழந்து விட்டோம். இழப்பீடாக இந்தப் பரிசு எனக்கு வாய்த்திருக்கிறது. இப்படிக்



படிப்பகம்

www.padippakam.com

கருதும் ஒரு எழுத்தாளனை நம்மால் எப்படி மதிக்கமுடியும். இவரால் எந்த மொழி ஆற்றல் பெற்றிருக்கும். மாபெரும் சமூகம் நமக்கு வழங்கியவை அதிகம். இவற்றைத் திருப்பித் தருவதில் 5/10 விழுக்காட்டையேனும் நாம் செய்தாக வேண்டும்.

இப்படிக் கருதும் ஒரு எழுத்தாளன் பரிசை தனக்கென அபகரித்துக் கொள்வதில் எந்த வகையில் நியாயம் ஆகும். ஒரு மொழி இலக்கியத்தின் வளத்திற்கு எனத் தன்னை ஒப்புக் கொடுத்த ஒரு எழுத்தாளர் அந்த மொழியைக் காப்பதற்கும், வளர்ப்பதற்குமான சில நற்பணிகளுக்கு அந்தத் தொகையை ஒப்படைப்பார் என்றால் அவர் நம் மரியாதைக்குரியவர். தமிழில் இப்படி ஒரு அற்புதம் இதுவரை நடந்ததில்லை. காலமெல்லாம் விருதுகள் வேண்டாம் என்று ஓயாமல் மறுத்து வந்த சி.சு. செல்லப்பா அவர்களுக்கு இப்பொழுது பரிசு வழங்குவது அவரைக் கேவலப்படுத்துவது அன்றி வேறு என்ன.

நண்பர்கள் இப்பொழுது புதிய சர்ச்சை ஒன்றைக் கிளப்பி இருக்கிறார்கள். சாகித்திய அகாதெமியின் பரிசுகள் தகுதி உடைய பலருக்குக் கிடைக்கவில்லை என்பது உண்மைதான். 1980-க்கு முன்னர் தமிழ் இலக்கியத் துறையில் ஈடுபட்டுச் சாதனை புரிந்த பலருக்கு இப்பரிசு கிடைக்கவில்லை. இவர்களின் தொகை சுமார் முப்பது என்ற எண்ணைத் தொடுகிறது. இவர்களுக்கெல்லாம் பரிசு வேண்டாமா? என்று இவர்கள் கேட்கிறார்கள். இந்த முப்பது எழுத்தாளர்களுக்கும் தொடர்ச்சியாகப் பரிசு கிடைக்கும் என்று வைத்துக் கொண்டாலும் 2030க்குப் பிறகுதான் மற்றவர்களுக்குப் பரிசு கிட்டும். இப்படி ஒரு மதிப்பீடு, மூத்த மகனுக்கே சொத்து முழுவதும் என்ற காலத்திற்கு ஒவ்வாத விதிமுறை ஆகிவிடும். பரிசுகளைக் கொண்டா இலக்கியத்தை மதிப்பிட வேண்டும். இது முதலாளிய மனப்பான்மையின் ஒரு கூறு அல்லவா?

இதுவரை பரிசு பெறாத நாஞ்சில் நாடன், இன்குலாப், தமிழன்பன், வண்ணதாசன், வண்ணநிலவன், பா. செயபிரகாசம், சிற்பி, கலாப்ரியா, ஞானக்கூத்தன், வைத்தீஸ்வரன் முதலியவர்களுக்கு இந்தப் பரிசு என்ன மரியாதையைச் சேர்க்க முடியும். தமிழ் இலக்கியம் இத்தகையவர்களை இனம் கண்டறிந்து பாராட்டியிருக்கிறது. பரிசு பெறுவது என்பதே கூட இப்பொழுது ஒரு மரியாதை என நாம் மதிக்க வேண்டியதில்லை. நவீனத் தமிழ் இலக்கிய வரலாற்றில் அழிக்க முடியாத இடங்களைப் பெற்றுள்ள இத்தகையவர்களுக்கு இதற்கு மேல் என்ன மரியாதை வேண்டும். பரிசு பெற்றவர்களையும் சிலசமயம் கீழ்நோக்கிப் பார்க்கவும் வேண்டி இருக்கிறது. இவர்களை யார் எத்தனை காலத்திற்குத் தாங்க முடியும். குழு மனப்பான்மை உடையவர்களோ, கட்சி சார்ந்தவர்களோ எதை எதையோ செய்து கொண்டிருக்கட்டும். நாம் கவலைப்பட வேண்டியதில்லை.

*பிரேம்-ரமேஷின் கவிதைகள், கதைகள், நாவல்கள் மற்றும் திறனாய்வுகள் அனைத்துமே ஆற்றலோடு புனைவு என்னும் தளத்தில் இயங்குகின்றன. இவர்களது படைப்புக்களில் வெளிப்படும் பன்முகப் பரிமாணங்கள் இதுவரை தமிழ் இலக்கியம் எதிர்கொள்ளாதவை.*

1980-க்குப் பிறகு புதிய பார்வை மற்றும் புதிய ஆற்றல்களோடு நவீனத் தமிழ் இலக்கியத்திற்குள் வீரியத்தோடு வந்துள்ள இளைஞர்களுக்குத்தான் பரிசு வழங்குவது பொருத்தமாகவும், சிறப்பாகவும் இருக்கமுடியும். மூத்தவர்கள் ஏற்கனவே தமக்குக் கிடைத்த மரியாதை களோடு நிம்மதியாக இருப்பதே நல்லது. இளைஞர்கள் தான் இலக்கியத்தின் எதிர்காலத்தையும் உருவாக்கும் தகுதி உடையவர்கள். இவர்களைப் போற்றி முன் நிறுத்தாத எந்தச் சமூகமும் வளர்ச்சி பெறுவதற்கில்லை. பழமைக்கே பரிசுகளும் பாராட்டுக்களும் என்றால் இலக்கியமும் நாறித்தான் போகும். சாகித்திய அகாதெமி இப்படி ஒரு விதி செய்வதற்கு இயலாது என்றபோதிலும் நடுவர்கள் இத்தகைய கருத்தோடு செயல்பட முடியும்.

சாகித்திய அகாதெமி அரசின் சார்பில் இயங்கும் இலக்கியக் கழகம் என்பதால், இது தரும் விருதுகள் குறித்து நாம் கவலைப்பட வேண்டியிருக்கிறது. தனியார் வழங்கும் பரிசுகள் பற்றி நாம் எதுவும் சொல்வதற்கு இல்லை. அவர்களும் எந்த எந்த தேவைகளுக்காகவோ பரிசு வழங்கு கிறார்கள். அவர்களைப் பற்றி இங்கு விவாதிப்பதுகூட அவர்களுக்குச் செய்யும் ஒரு மரியாதை ஆகிவிடும். அவர்களை விட்டுவிடலாம். சாகித்திய அகாதெமி அரசு நிறுவனம். இதன் தேர்வுகள் அதிகளவில் நியாயம் கொண்டவையாக இருக்க வேண்டும்.

நடுவர்கள் குறித்தும் நாம் பெரிதாகச் சொல்வதற்கில்லை. ஓர் உரிமையை நாம் கேட்டுப் பெறவேண்டும். பரிசுக்கென இறுதிப்பட்டியலில் யார் யார் இடம் பெறுகின்றனர்? நடுவர் மூவரும் பட்டியலில் இடம்பெற்ற எழுத்தாளரின் படைப்பு பற்றி என்ன கருத்து கொண்டிருக்கிறார். நடுவர்களுக் கிடையில் நடைபெற்ற விவாதங்களில் இறுதியில் என்ன முடிவுக்கு வந்தார்கள். இப்படி ஒரு விவரத் தொகுப்பை வெளியிடுவது அரசு நிறுவனம் என்ற முறையில் நாம் எதிர்ப்பார்க்கும் ஒரு நேரிய செயல். நடுவர் குழுவின் முடிவுகள் சிலசமயம் குறைந்த அளவுக்கேனும் மரியாதை பெறுவதில்லை. விவரத் தொகுப்பை வெளியிடுவது என்றால் நடுவர் மூவரும் தமக்கு வந்து சேரும் எல்லாப் படைப்புகளையும் பழுதறப் படித்து சில மதிப்பீடுகளுக்கு வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். நடுவர் குழு ஒன்றில் நானும் பணி புரிந்தவன் என்ற முறையில் என்னால் இதை உறுதியாகச் சொல்லமுடியும். தமிழ் இலக்கியத்தின தாழ்வுக்கு சாகித்திய அகாதெமி துணைபோவது ஒரு கேவலமான அரசியல். இன்றைய ஊழல் மிகுந்த சமூகச் சூழலில் இப்படி எல்லாம் எதுவும் நடைபெற்று விடும் என்று கனவு காண்பது நம் அறிவீனத்தையே வெளிப்படுத்தும்.

சாகித்திய அகாதெமி பரிசுக்கே அன்றி, ஞானபீடப் பரிசுக்கும் தகுதி உடைய இலக்கியவாதிகள் இங்கு இருக்கத்தான் செய்கின்றனர். நகுலன், சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், இந்திரா பார்த்தசாரதி, வாசரா, அம்பை நீலபத்மநாபன் ஆகியவர்களுக்கு இதற்கானத் தகுதி உண்டு. இராமானுசருக்கு போய்ச்சேர வேண்டிய பரிசை இடையில் இந்திரா பார்த்தசாரதி பெற்றுக் கொண்டதுஒரு விநோதம். இவர்களை நாம் கற்றறிவ தோடு, தமிழ் மக்களுக்கும் இவர்கள் படைப்புக்கள் போய்ச்சேரும் முறையில் பணிபுரிவது நம் கடமை. திறனாய்வாளர்களுக்கு இது முதற் பெருங்கடமை என்று நான் சொல்ல வேண்டியதில்லை.



படிப்பகம்

www.padippakam.com

சாகித்திய அகாதெமியின் கிளைகள் மாநிலம் தோறும், ஏதோ ஒரு பெயரில் செயல்படுவதை நாம் வரவேற்க முடியும். தமிழக அரசு இந்த வாய்ப்பை இது நாள்வரை தவறவிட்டிருப்பது, தமிழ் இலக்கியத்திற்கு நன்மை செய்வதாக இல்லை. நாங்களே எங்களுக்கு வேண்டிய ஓர் அமைப்பை ஏற்படுத்திக் கொள்கிறோம் என்ற முறையில் உருவாக்கப்பட்டதுதான் குறள் பீடம். தமக்கு வேண்டியவர்களுக்கே பரிசுகளை, விருதுகளை வாரி வழங்குவதில் தேர்ச்சி பெற்ற தமிழக அரசு, குறள் பீடத்திற்கான பரிசு வழங்குவதிலும் ஊழல் செய்யாமல் இல்லை. தமிழ் இலக்கியம் இப்படியும் தமிழ் அறிஞர்களைக் கொண்டே தண்டிக்கப்படுகிறது. இத்தகைய போலித் தமிழ் அறிஞர்களால் அனைத்திந்திய அளவில் தமிழ் இலக்கியத்திற்கு என்ன மரியாதை கிடைத்துவிடும். கேரளாவையும், கர்நாடகத்தையும் நினைத்துப் பார்க்கும்பொழுது நாணித் தலைகுனிய வேண்டியிருக்கிறது.

இனி தற்கால இலக்கியம் பற்றிச் சில சொல்ல வேண்டும். 1980-க்குப் பிறகு தமிழ் இலக்கியத்திற்குள் நுழைந்து இன்று சாதனையாளர்களாகத் திகழ்பவர் பற்றிச் சொல்லவேண்டும். தமிழ் பயிற்சிமொழியாக, ஆட்சி மொழியாக இல்லை என்பது ஆறு கோடி மக்களைக் கொண்ட ஓர் இனத்திற்கு எத்தனை பெரிய அவமானம். தமிழை அழிப்பதன் மூலம் தம் வாழ்வை வளர்த்துக் கொண்ட அக்கிரமக்காரர்களைப் பற்றி நாம் மரியாதையோடு சொல்வதற்கு என்ன இவர்கள் விட்டு வைத்திருக்கிறார்கள்.

ஆங்கிலத்திற்கே முதன்மை தந்து தமிழைத் தாழ்த்தப்பட்ட இனத்தோடு சேர்த்து அழிக்கும் நிகழ்ச்சி இன்று உச்சம் பெற்றுள்ளது. தமிழ் வரலாறு என நாம் இனியும் எத்தனை காலத்திற்குப் பெருமை பேசமுடியும். தமிழை வைத்து வணிகம் செய்பவர் தொகை இன்று எத்தனை ஆயிரங்களுக்குள் அடங்கும். தமிழகத்தின் இயற்கை நலன்களை அழிப்பதன் மூலமும், தமிழ் மக்களுக்குள் சாதி உணர்வை தூண்டி வளர்ப்பதன் மூலமும் பணம் பதவி வெளிநாட்டில் குடியிருப்பு முதலிய தேவைகளுக்காக தமிழை ஓரத்திற்கு ஒதுக்குவதன் மூலமும் தமிழ் வாழ்வு என்ன ஆகும். இப்படி நூறு கேள்விகளைப் பதற்றத்தோடு நாம் எழுப்புகிறோம். தமிழ் அழிந்து கொண்டிருப்பதைக் காண நம்மால் பொறுக்க இயலவில்லை.

தமிழ்ச் சான்றோர் என ஒருவர் என்ன தகுதி வைத்துத் தன்னைத்தானே பெருமைப்படுத்திக் கொள்ள முடியும். தமிழ் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் தமிழை எப்படி அழிக்க நேர்ந்தது. இது பொறுப்பதற்கில்லை என்ற கனல் தான் நமக்குள் ஏறுகிறது. வள்ளுவரும், இளங்கோவும், கம்பரும், பாரதியும், பாரதிதாசனும் வளர்த்த தமிழை நம்மால் எப்படி இழக்க முடியும்? தமிழைப் போற்றாத இனம் அயலவனுக்கு அடிமைப்பட்டு அழிவதைத் தவிர வேறு என்ன விதி நமக்கு இருக்கிறது. இப்படியெல்லாம் எப்படி நேர்ந்தன. யார் இதற்குப் பொறுப்பாளிகள். நாம் சீற்றத்தோடுதான் கேட்கிறோம்? யார் நமக்கு பதில் சொல்வார்கள்? அவர்கள் பதிலுரையில் எத்தனை சதம் உண்மை இருக்கும்.

மீண்டும் தற்காலத் தமிழ் இலக்கியத்திற்கு வருவோம். உண்மையில் தமிழை, தமிழ் இலக்கியத்தை இன்றைய ஆற்றல் மிக்க படைப்பாளிகள் காத்துவருகின்றனர். அரசியல் வாதிகளும், வணிகர்களும் தமிழை அழிப்பதில் முனைந் திருக்க இலக்கியத்துறையில் தமிழின் ஆக்கத்திற்கென இவர்கள் பாடுபடுகின்றனர். இவர்களில் பலருக்கு நமக்குள் இருப்பதைப் போன்ற தமிழ்ப்பற்று இல்லை என்று இவர்களை குறை சொல்ல முடியும் என்றாலும் தமிழில் தான் இவர்கள் எழுது கிறார்கள். நுட்பமாகவும், அழகியல் உணர்வோடும், அர்த்தச் செறிவோடும் எழுதுகிறார்கள். இவர்கள் படைப்புகளுக்குள் இடம் பெறுவது தமிழகத்து மக்களின் வாழ்வுச் சிக்கல்கள் தான். இவர்களின் பார்வை குறித்து விமர்சனம் செய்ய இடம் உண்டு என்ற போதிலும் இவர் களின் ஆக்கத் திறன்களை நம்மால் மறுக்கமுடியாது. இவர்களுக்குள் செயல்படும் கவித்துவம் தமிழை மிகச்சிறந்த முறையில் அழகுபடுத்தி இருப்பதோடு நவீனப்படுத்தவும் செய்தி ருக்கிறது. இவர்கள் சிலரிடம் வெளிப்பட்டுள்ள அழகிய தமிழ் நடை, எந்தப் பேராசிரியருக்கு வசப்பட இயலும்.

---

*எம்.ஜி. சுரேஷின் நாவல்கள் நமக்குள் விரிவான பார்வையை எழுப்பக்கூடியவை. ஆதிமனிதன் நமக்குள் சாகவில்லை. மரபணு மாற்றத்தோடு வரும் எதிர்காலம், ஏற்றத்தாழ்வை மேலும் பெருக்குவதாகத்தான் இருக்கமுடியும். போர் வெறியனாக திரிந்த அலெக்சாண்டருக்குள்ளும் ஓர் எதிர் மனிதன் இல்லாமல் முடியாது.*

---

புதுமைப்பித்தனைத் தோளில் ஏற்றித் துதிபாடிக் கொண்டாடும் பெரியவர்களையும் மீறி இந்த இளைஞர்கள் உயிர்த்துடிப்போடு படைக்கிறார்கள். இவர்களைப் புதுமைப்பித்தன் பிறவிகள் எனப்பெயரிட்டு அழைப்பதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். சிலரை இங்கு குறிப்பிடுகிறேன். கோணங்கி, ஜெயமோகன், பிரேம்-ரமேஷ் தற்பொழுது சு. வேணுகோபால் இவர்களை இப்படிக் குறிப்பிடுவதில் எனக்குத் தயக்கம் இல்லை. பெரியவர்கள் ஏதோ இவர்களைக் கண்டு கொள்வதற்கும், வாழ்த்துவதற்கும் தயங்குகிறார்கள். பெரியவர்கள் தம் மகுடங்களை இறக்கி வைப்பதற்கு ஏன் தயங்க வேண்டும்? தந்தையைக் காட்டிலும் ஆற்றல் பெரும் மகனை முன் சென்று வாழ்த்தாதத் தந்தையை நாம் மதிக்க முடியுமா?

1980-க்குப் பிறகு தமிழ் இலக்கியத்தில் புதிய போக்குகள் தோன்றி உள்ளன. தமிழுக்கு இவை புதிய ஆற்றலை வழங்குகின்றன. யதார்த்தவாதம் செத்துவிட்டது என்ற குரல் தீவிரமாக எழுந்தபோதிலும், யதார்த்தவாதம் மடிந்து விடவில்லை. மார்க்சிய வரையறைகளோடு கூடிய யதார்த்தவாதம் கேள்விக்குள்ளாகியதில் தவறு இல்லை. இலக்கியத்தின் பன்முகப் பரிமாணங்களை இன்க் கட்டவிழ்த்து விட முடியும்.

நண்பர்கள் தலித்தியம் என்றும், பெண்ணியம் என்றும், அமைப்பியல் என்றும், பின்-நவீனத்துவம் என்றும் உரத்துப் பேசுவதோடு, கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள் எனத் தொடர்ந்து படைக்கிறார்கள். புதிய படைப்புக்களில்



படிப்பகம்

www.padippakam.com



ஈடுபட்டவர்கள் எனச் சிறப்பாக சுமார் 20 பேர்களையாவது குறிப்பிட முடியும் என்.டி. ராஜ்குமார், யூமா.வாசுகி எனத் தொடரும் ஒரு பத்துப்பேர் கொண்ட பட்டியலில் இறுதியாகப் பாலை நிலவனையும் உள்ளடக்க முடியும். சிறுகதை நாவல் என்று வரும்பொழுது பாவண்ணன், கடைசியாக தமயந்தி எனப் பலரைக் குறிப்பிடமுடியும். நாவல் ஆக்கத்தில் ஜெயமோகனின் சாதனை வியப்புக்குரியது. கல்கியின் வரலாறு நாவல்களைப் படித்தவர்கள் ஜெயமோகனின் விஷ்ணுபுரத்தைப் படிக்கும்பொழுது வரலாறு குறித்து ஆற்றல் மிக்க பார்வையை யார் வெளிப்படுத்தியுள்ளார் என்பதை அறியமுடியும். இமயம், சோ.தர்மன், விசாலம் கடைசியாக எம்.ஜி. சுரேஷ் புதிய பார்வைகளோடு வந்திருக்கிறார்கள்.

மொழி பெயர்ப்புக்களும் இங்கு வந்து குவிகின்றன. என். கே. மகாலிங்கம் மொழிபெயர்த்த "சிதைவுகள்" அமரந்தா மொழிபெயர்த்த "சிலுவையில் தொங்கும் சாத்தான்" - தமிழுக்குப் புதிய பார்வையைத் தரக்கூடிய நாவல்கள். இன்றைய நம் அரசியல் மற்றும் பொருளியல் சூழலை 1980 களில் கென்யாவின் கதையை இந்த நாவலில் காணமுடியும். எம்.ஜி. சுரேஷின் நாவல்கள் நமக்குள் விரிவான பார்வையை எழுப்பக்கூடியவை. ஆதிமனிதன் நமக்குள் சாகவில்லை. மரபணு மாற்றத்தோடு வரும் எதிர்காலம், ஏற்றத்தாழ்வை மேலும் பெருக்குவதாகத்தான் இருக்கமுடியும். போர் வெறியனாக திரிந்த அலெக்சாண்டருக்குள்ளும் ஓர் எதிர் மனிதன் இல்லாமல் முடியாது.

கம்யூனிஸ்டுக் கட்சிக்குள் நடந்த களை எடுப்புக்கள், தலைமையிலிருந்து ஒருவரைப் பிடித்து வெளியேற்ற நடைபெறும் சதிகள். வெளியேற்றப்பட்ட நிலையில் கட்சியையே நம்பி வாழந்த அந்த மனிதன் தனக்குள் சீர்குலைந்து சிதைந்து போகிற சோகம். இவ்வகைக் கொடுமைகள் இரஷ்யாவில் மட்டும் நடைபெறவில்லை, இங்கும் தான் நடைபெற்றன என்பதைச் சரியாகவே ஜெயமோகன் பின்தொடரும் நிழலின் குரல் நாவலில் சித்தரிக்கிறார். குறுகத் தரித்த மார்க்சியத்தைக் கொண்டாடும் கட்சிகளுக்கு இந்தப்படைப்பு உவப்பாக இருக்க முடியாது. பிரேம்-ரமேஷின் கவிதைகள், கதைகள், நாவல்கள் மற்றும் திறனாய்வுகள் அனைத்துமே ஆற்றலோடு புனைவு என்னும் தளத்தில் இயங்குகின்றன. இவர்களது படைப்புக்களில் வெளிப்படும் பன்முகப் பரிமாணங்கள் இதுவரை தமிழ் இலக்கியம் எதிர்கொள்ளாதவை.

இப்படியே மேலும் பலவற்றைச் சொல்வதை நிறுத்திக் கொள்கிறேன். தலித் இலக்கியவாதிகள் ஓர் இயக்கம் போல் செயல்படுவதை நாம் வரவேற்கிறோம். தொடக்க காலத்தில் மார்க்சிய இலக்கியவாதிகள், மார்க்சியர் அல்லாத பிற இலக்கியவாதிகளை காய்ந்ததைப் போல் இவர்களும் மற்றவர்களைக் காய்கின்றனர். இவர்களுக்குள்ளும் நிதானம் ஏற்படும் என்று நாம் நம்புகிறோம். இதன் காரணமாக தலித் மக்களின் வாழ்வியல் குறித்து இவர்கள் எழுதுவதை நாம் மறுக்கவில்லை. இந்தச் சமூகத்தில் மேல்தட்டு மக்களைப் போலவே நடுத்தர மக்களாகிய நாமும் நாறித்தான் போயிருக்கிறோம் என்பதைத்தான் தலித்தியப் படைப்புகள் நமக்கு வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன. இவர்களும் பிற மொழிகளிலிருந்து தலித் படைப்புகளை இறக்குமதி செய்கிறார்கள். இங்கும் தான் தலித் மக்கள் பேரவலத்தோடு வாழ்கிறார்கள். இவர்களின் கதையை, சுயசரிதைகளை ஆழந்த அக்கறையோடு பதிவு செய்வதில் தலித் படைப்பாளிகள் முனைப்புக் கொள்ள வேண்டும். ஒரு படையெடுப்புப்போல தமிழ் இலக்கியத்திற்குள் வரும் இவர்களை இரு கரம் நீட்டி நாம் வரவேற்க முடியும். இன்று பெருகி வரும் சமூக அவலங்களுக்கு மத்தியில் நமக்குள்ளும் தலித் வாழ்க்கை வந்து கொண்டிருக்கிறது என்ற புரிதலோடு இவர்களின் வருகையை நாம் கொண்டாட முடியும். தலித் இலக்கியவாதிகள் தமக்குள் ஒரு இயக்கமாக செயல்படுவதைப் போல பெண்ணியலாளர் இலக்கிய இயக்கம் எனத் தம்மைத் திரட்டிக் கொள்வதன்மூலம் தமிழ்ச் சமூகத்தின் பெண்களின் அவலம், கலகம் எனப் பலவற்றை பலர் எழுத ஊக்குவிக்க முடியும். பெண்களின் சிறுகதைகள், கவிதைகள், நாவல்கள், திறனாய்வுகள் தனித்தனித் தொகுப்புக்களாக வெளிவர வேண்டும்.

பெரிதாகப் பேசப்படும் பகுத்தறிவு இயக்கமோ, தமிழியக்கமோ, பாரதிதாசன், கண்ணதாசன் முதலிய ஒரு சிலரைத்தவிர நவீனத் தமிழ் இலக்கியத்திற்கு எதையும் தந்துவிடவில்லை. அறிவுமதி, தியாகு ஆ[illegible]யவர்கள் சில அரிய விதிவிலக்குகள். மார்க்சிய இ[illegible]தவான இலக்கியம்/படைப்புக் கொள்கையில் சில கடுமையான தவறுகள் இருந்தபொழுதிலும் இவற்றையும் மீறி மிகச்சிறந்த இலக்கியங்களைப் படைத்துள்ளனர். பூமணி, பா. செயப்பிரகாசம், பொன்னீலன், இன்குலாப் என்று தொடங்கி இன்னும் பலரைச் சொல்லமுடியும். இலக்கியத்தில் நவீனத்துவம் குறித்து இவர்களின் பார்வை விரிவு பெறத்தான் வேண்டும்.

அமைப்பியலோ, பின்-நவீனத்துவமோ மரபானத் தமிழிலக்கியத்திற்கு கேடு எதுவும் செய்துவிடவில்லை. பழைய இலக்கியங்களை உடைத்துப் பார்ப்பதன்மூலம் புதிய வாசிப்புக்களுக்கு இவர்கள் வழி திறக்கிறார்கள். இதனால் தமிழ் இலக்கியத்திற்கு உள்ளிருந்து புதிய வெளிச்சங்கள் கிளம்புவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. இறுக்கம் அடைந்த எதுவும் தகர்க்கப்பட்டு புதியதிற்கு வழிவிடத்தான் வேண்டும். காலந்தோறும் புதிய போக்குகளை படைத்து வரும் தமிழ் இலக்கியத்திற்கு உள்ளிருந்தே நாம் இதைச் செய்யமுடியும்.


படிப்பகம்

www.padippakam.com

எந்த இலக்கியத்திற்குள்ளிருந்தும் நம்மை, நம் காலத்தை கண்டறிந்து வாசிக்க முடியும். கண்ணகிக்கு என்றும் அழிவில்லை. மாதவியும் மணிமேகலையும் தமிழ் வாழ்விலிருந்து பிரிக்க முடியாதவர்கள். கோவலன் மீண்டும் மீண்டும் நமக்குள் உயிர்த்தெழுகிறான். இராவணர்களின் ஆதிக்கம் ராமனால் அழிக்கப்படத்தான் வேண்டும். அப்புறம் ராமனுக்குள்ளும் ஓர் ஆதிக்கவாதி தலையெடுக்கத்தான் செய்கிறான்.

இறுதியாக ஒன்றைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன். முன்னைய பெரியவர்களும் சரி, இன்றைய இளைஞர்களும் சரி - இவர்களுக்குள் மார்க்சியம் குறித்து அக்கறை இல்லை. மனிதர்களை, அவர்களுக்குள் செயல்படும் முரண்பாடுகளை, வெற்றிகளை, தோல்விகளை ஆதிக்க உணர்வை, அடிமைத்தனத்தை ஆழமாகப் புரிந்து கொள்வதற்கு மார்க்சியம் தவிர வேறு எங்கிருந்து பார்வையைப் பெறமுடியும். மார்க்சியத்தை ஒதுக்கிய நிலையில் தமிழ் வாழ்வை எப்படித் தோண்டித் துருவி ஆராயமுடியும். தமிழன் அகப்பட்டுள்ள நெருக்கடிகளைத் தமக்குள்ளும் கண்டுணராமல் தீவிரமான எந்தப் படைப்பை உருவாக்க முடியும். நமக்குள் டால்ஸ்டாய் இல்லையே, தாஸ்தாவெஸ்கி இல்லையே என்ற ஒப்பாரி பாடுவதில் அர்த்தம் இல்லை. உலகத் தரங்களை முன்னிறுத்தி உள்ளூர்த் தரங்களை நாம் எப்படி இழக்க முடியும்? நடுத்தர வர்க்க வாழ்க்கை வசதிகளைக் குறைந்த அளவிலேனும் அனுபவித்துக் கொண்டு மக்கள் வாழ்வில் உள்ள சிக்கல்களை எப்படி உணரமுடியும். வரலாற்றில் எங்கே எப்படித் தமிழன் வீழ்ந்தான் என்ற கதையைக் கண்டறிந்து சொல்ல வேண்டாமா? ஆங்கில ஆதிக்கம் படைப்பாளி களுக்குள்ளும் செயல்படத்தானே செய்கிறது. காலனி ஆதிக்கம் நமக்குச் செய்த கொடுமைகளை நம்மைக் கூறுபோட்டதை மக்கள் வாழ்வுக்குள்ளிருந்து கண்டறிந்து எழுதவேண்டாமா?

மக்கள் விடுதலைக்கெனத் தோன்றிய பொதுவுடைமை இயக்கம், பிறகு எப்படித் தனக்குள்ளே சிதைந்து ஆதிக்கங்களுக்கு இடம் கொடுத்து, அரசு அதிகாரத்தில் இடம் பெறத் துடித்து - இப்படியெல்லாம், செய்வதன் மூலம் மக்கள் விடுதலைக்கு எதிராகச் சென்ற நாசம் பற்றி எத்தனை ஆயிரம் கதைகளை இங்கு எழுதமுடியும். மார்க்சிய இயக்கம் போலவே, திராவிட இயக்கமும் தமிழ் மக்களின் விடுதலைக்குக் குறைந்த அளவுக்கேனும் பாடுபட்டு - அப்புறம் அதிகாரம், பதவி செல்வம் எனச் சேர்த்துக் கொண்டு, வெற்றுத் துதிபாடிகளை உருவாக்கி மக்களின் அற உணர்வை அழித்து - இதன் மூலம் மக்கள் சக்தியை சின்னாபின்னம் ஆக்கி - இனி இவர்களை வைத்து எதுவும் செய்யலாம் என்ற நிலைக்கு எப்படி வந்தது. இந்தக் கதைகளை யார் சொல்வார். தனக்குள் மட்டும் தேடலை நிகழ்த்துவதாகக் கருதி, தொடர்ந்து கவிதைகளை, கதைகளை ஆயிரம் ஆயிரமாய் உற்பத்தி செய்யும் படைப்பாளிகளை நாம் எப்படிப் பாராட்ட முடியும். வணிகச் சக்திகளுக்கு சிற்றிதழ்களும் பலியாகி அப்புறம் குழுச் சண்டைகளில் ஈடுபட்டுச் சிற்றிதழ் இயக்கத்தின் பன்முகப் பரிமாணங்களைத் தொடர்ந்து அழிப்பவர்களை எப்படிப் பாராட்ட முடியும். இந்தக் கதைகளை எல்லாம் மக்களிடமிருந்து திரட்ட வரலாற்றுக்குள் செல்ல வேண்டும் ஊர் ஊராக அலைய வேண்டும். உழவர்கள் கைவினைஞர்கள், திருடர்கள், வேசிகள் என்று ஓர் ஆயிரம் பேரையாவது எழுத்தாளர்கள் சந்திக்க வேண்டும்.

சென்னையிலேயே முடங்கி அவ்வப்பொழுது சொந்த ஊருக்குச் சென்று சிலநாள் தங்கி, சிலருடைய கதைகளைச் சேகரித்துக் கொண்டு, அப்புறம் உணர்ச்சிமயமாக எழுதுபவர்கள் என்ன வகை எழுத்தாளர்கள். இவர்களுக்குள் செயல்படுவது முதலாளியப் பார்வை அன்றி வேறு என்ன? தன்னைத் தொலைத்துவிட்டு நாயாய்ப் பேயாய் அலைந்து தனக்குள் ஆயிரம் கேள்விகளை எழுப்பி விடைதேடும் ஒருவனுக்குள் தான் ஞானம் பிறக்கும். உலகமயமாதல் முதலிய கொடுமையான சூழலில் தேசத்தையும் மக்களையும் தலைவர்கள் கைவிடும் சூழலில் ஆயிரம் தலைகள் விரித்து அசுரத்தனமாக முதலாளியம் நமக்குள் வருகையில் இந்த ஞானத்துக்கானத் தேட்டமும் உச்சளவில் தீவிரப்பட வேண்டும். ஓர் அசலான மார்க்சியவாதிக்கு அன்றி இந்த ஞானம் சாத்தியமில்லை. இவனுக்குள் டால்ஸ்டாயும், தாஸ்தாவெஸ்கியும் இயங்கத்தான் செய்வார்கள். அப்பொழுது தான் தமிழ்ச் சமுதாயம் தன்னை உயிர்ப்பித்துக் கொள்ளும். நெடுங்காலத் தமிழ் இலக்கியத்திற்குள் இத்தகைய ஆற்றல் உண்டு. இதைக் கண்டறிந்து வளர்க்கத்தான் வேண்டும். வள்ளுவரையும், இளங்கோவையும், கம்பனையும் தோற்றுவித்த தமிழ்ச் சமூகம் பாரதி கருதியதைப் போல அமரத்துவம் பெறும்.

ஏற்றதாழ்வு வாழ்வை அழிக்கும்; சமத்துவம் சமதர்மமும் வாழ்வை உயிர்ப்பிக்கும்.

நன்றி.

❖

குறிப்பு : 27.01.2002 ஞாயிறு அன்று ஈரோடு நகரில் சாகித்திய அகதெமியும், ஈரோடு தமிழ் இலக்கியப் பேரவையும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் வாசிப்பதற்கு என எழுதப்பட்டது இக்கட்டுரை. சில காரணங்களால் கருத்தரங்கில் இக்கட்டுரை வாசிக்கப்படவில்லை. இதில் எனக்கு வருத்தமில்லை. உடல் நலக்குறைவு காரணமாக நான் நேரில் செல்லாததும் ஒரு காரணமாக இருக்கக்கூடும். விவாதங்களைக் கிளப்புவதற்காக இக்கட்டுரை எழுதப்படவில்லை. சில உண்மைகளை நமக்கு நாமே சொல்லியாக வேண்டும் என்பதற்காக இக்கட்டுரை எழுதப்பட்டது. கருத்தரங்கிற்கு அனுப்பப்பட்ட கட்டுரையில் மேலும் சில விவரங்கள் - விமர்சனங்கள் இப்பொழுது சேர்க்கப்பட்டுள்ளன.



படிப்பகம்

www.padippakam.com

# இளையபாரதியின் கவிதைகள்

## மனக்கடல்

இதுவரை கரைக்கப்பட்ட அஸ்திகளின் துயரம் தாங்காமல்
குற்ற உணர்ச்சியோடு குமுறிக் கொண்டிருக்கிறது கடல்.
உட்கொண்ட நகரங்களுக்காகவும்...
உடைந்த முச்சுக்களுக்காகவும்....
உதிர்ந்தவனுக்கான பாடலைப் பாடிக்கொண்டே இருக்கிறது
தனிமைக்குத் துணையாகி
தான் மட்டும் தனியாகி.

●

கடலை எழுத மைத்துளிகள் போதுமா?
நரைத்த கடலின் நதிமூலம் தெரியுமா?
நுரைத்த மேகங்கள் பெருமழையாய்க்
கருங்கடலில் இழை இழையாய் இறங்கும்போது
அலையோடு ஆகாயம் பேசும் அதிசயம் நிகழ்கிறது.
நதிகளுக்கு மட்டுமல்ல
நகர மக்களின் சுகதுக்கங்களுக்கும்
கடல்தான் வடிகால்.
நம் உலகுக்கு நனைந்த கால்களுடன் வருகிறது
அதன் உலகுக்கு ஈரச் சிறகுகளுடன் பறக்கிறோம்.
அதன் உலகத்திற்கும்
நம் உலகத்திற்கும்
நடுவே உள்ள தூரம்
இன்னும் அளக்கப்படாமலேயே இருக்கிறது.
ஒவ்வொரு அலையும் பிரார்த்திக்கின்றன.
ஒவ்வொருவரின் காயங்களுக்காக.

●

கடல் தன் இசையைப் பாடித் தீர்க்கிறது.
அலைகளின் குணமோ
அமாவாசையில் சிம்பனி
பௌர்ணமியில் பாலே.

●

உப்புச்சுவை அதிகமாயிற்று
கடல் என்னைப் பார்த்தபின் அதன் தண்ணீரில்
நான் கடலைப் பார்த்தபின் என் கண்ணீரில்.

●

மிதந்து கலையும் மேகங்கள்
சினந்து சீறும் அலையாக,
கடலின் ரகசிய கர்ப்பத்தில் நுழைந்தால்
உயிரைக் கேட்கும் விலையாக
கடலைக் காற்று கடையும்போது
பூதம் பிறக்கும் புயலாக.

●

நீரின் வெளியில் கோடிக்கால்களால்
நிருத்தம் நிகழ்த்தும் வெறியாக
அன்பழிந்த வாழ்வில்
மறுபடியும் மறுபடியும்
அன்பை எழுதிச் செல்கிறது
ஒவ்வொரு அலையும் ஒரு புதிய அலை.
மனதைக் கழற்றிக் கடலில் எறிய அலை மீண்டும்
புதிய உயிராக்கித் தருகிறது.

●

அலையின் கோஷம் அடங்குவதுண்டோ?

●

நகரின் முகம்
இந்தத் துறைமுகம்
தார்ச்சாலையில் தகிக்கும் பாழ்பட்ட வெயிலில்
வெம்பிய இருதயங்களை நெகிழ்த்தி இதமூட்டும்
நெய்தலின் நீர்ச்சாமரங்கள்.

●

உயிர் சலிக்கும் தனிமைக்கு
உற்ற தோழமையே!
உன் உப்புத் துளிகள் தித்திப்பாகும்
காதலர்களுக்கு.

●

எல்லா நதிகளும் உன்னிடம் சரணடைகின்றன
நீயோ சூரியனிடம்
பாசிப் பிடிக்காமல் இருக்கிறது
ஆகப் பழசான ஆழி.

●

நள்ளிரவில் கடல்கொண்ட உயிர்களின்
ஆவிகள் கூத்திடுகின்றன அலைகளின் மேலே.

●

சமுத்திரத்தின் ஓங்காரம்
சங்கில்.

●

ஆறுதலாய் விரிந்து கிடக்கும்
உன் மடியில் பதியும் பாதங்களின் கீழே
துயரில் நெரிபடும் மணல்.
ஆயிரம் ஆயிரம் கைகள் அள்ளிச் சிந்தி அலைந்த மணல்
எத்தனை தலைமுறைகள் கோட்டைகள் கட்டிச் சரிந்த மணல்
கானல் வரிகள் படிந்த கண்ணீரின் பிசுக்கேறிய மணல்
மழலைகளின் சின்னப் பாதங்கள் பொன்மெருகூட்டிய மணல்.



படிப்பகம்

www.padippakam.com

•

கடல் தன் விளிம்பை மட்டும்
பாலையாய் வைத்திருப்பது ஏன்?

•

வண்ண நிலவனின் கடல்
ப.சிங்காரத்தின் கடல்
நரசய்யாவின் கடல்
ஜாக்லண்டனின் கடல்
தகழியின் கடல்
தனித்தனிக் கடல்

•

கடல்மீனின் அனுபவங்கள்
கண்ணாடித் தொட்டி மீன்களுக்கு வாய்க்குமா?

•

"நீண்ட பெருமூச்சுகளை உண்டாக்குவதுதான்
உயர்ந்த சங்கீதம்"
உன் நித்ய சங்கீதம்
அற்புத சங்கீதம்
ஒரு சேர்ந்திசையைப் போல.
"காற்றைப் புகழ நம்மால் முடியாது"
கடலையும் தானே.

## லோகபின்ன ருசி

சுவரில் ஒட்டிவைக்க
அவரவர்க்குப் பிடித்த விளையாட்டு வீரர்கள்
சூப்பர் ஸ்டார்கள்.
சுயுமைதுனத்திற்கான கனவுக் கன்னிகள்
அவரவர் விருப்பம்.
உயிரை உதறிடத் தூண்டும் உன்னதத்
தலைவர்களும் உள்ளனர் சிலருக்கு.
அவரவர்க்கு
ஆதர்சக் கவிகளும் உண்டு.
சிலரின் துக்க நிவாரணி
சிலவகை போதைவஸ்துக்கள்.
அவரவர்க்கு இஷ்ட தெய்வங்களும்.
என் பிரார்த்தனைகளைப் பலிதமாக்கும் தெய்வத்தை
நீ சக்தியுள்ள தெய்வமாக நம்புவதில்லை.
என் தெய்வம் உன் தெய்வம் இல்லை.
உன் தெய்வம் என் தெய்வம் இல்லை.
"ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்றாலும்
இஷ்ட தெய்வங்களுக்காகத்தான்
இரத்தக் களறி
குத்து வெட்டு.

## எப்பொழுதும்...

எங்கேயோ
யாரோ சிலர்
சமைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
சாப்பிட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
துணி துவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
ஆடையுடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
தூங்கிக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
தூக்கம் வராமல் புரண்டு கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
வீடுகட்டிக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
நடைபாதையில் வாழ்ந்து வருகிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
சண்டை போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
ராசியாகப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
சில ஜோடிகள்
போகத்தில் திளைத்துக் கொண்டிருக்கின்றன.
எங்கேயோ
சில ஜோடிகள்
கல்யாணக் கனவு கண்டு கொண்டிருக்கின்றன.
எங்கேயோ
யாரோ சிலர்
கடிதம் எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
கவிதை எழுதிக் கொண்டிருக்கிறார்கள்.
எங்கேயோ
யாரோ சிலர்
பிரார்த்தனை செய்து கொண்டிருக்கிறார்கள்.
வானில்
கிரகங்கள்
நகர்ந்து கொண்டேயிருக்கின்றன.
பூமியில்
விதைகள்
முளைவிட்டுக் கொண்டேயிருக்கின்றன.
இதைத்தான்
அந்த கவிஞன்
பிரபஞ்ச இயக்கம் என்றானோ.

- விக்ரமாதித்யன் நம்பி



படிப்பகம்

www.padippakam.com

# வித்தைக்காட்டி

ப்ரைமோ லெவி
தமிழில்: லதா ராமகிருஷ்ணன்

நாங்கள் அவர்களை 'பச்சை முக்கோணங்கள்' என்று அழைத்தோம். அவர்களுடைய இனிஷியல்களிலிருந்து அப்படிப் பெயர் சூட்டினோம். வழக்கமான குற்றவாளிகள், Befaver, அவர்களுக்கு BV என்ற 'இனிஷியல்கள்' அதிகாரபூர்வமாகத் தரப்பட்டிருந்தது. BV என்பது 'பாதுகாப்புக் காவலில் உள்ள கைதிகள் என்பது போல் பொருள்படும் சொற்பிரயோகத்தின் சுருக்கமாகும். நாங்கள் அவர்களோடு இணைந்து வாழ்ந்தோம். அவர்களைக் கீழ்பணிந்து, பயந்து, அடியோடு வெறுத்து, ஆனால், அவர்களைப் பற்றிய விவரங்கள் எதுவுமே அறியாதவர்களாயிருந்தோம். இப்பொழுது கூட அவர்களைப் பற்றி எதுவும் தெரிந்திருக்கிறதென்று சொல்ல முடியாது. அவர்கள் தான் அந்த 'பச்சை முக்கோணங்கள்.' ஏற்கனவே சிறைக்காவலில் வைக்கப்பட்டிருந்த ஜெர்மானியர்கள். தங்களுடைய சிறைத்தண்டனையை சிறையில் அனுபவிப்பதைக் காட்டிலும் ஒரு 'வதை முகாமில் அனுபவித்து வரலாம் என்ற மாற்றுவழி அவர்களுக்கு ஒரு மர்மமான வழிமுறையின் கீழ் வழங்கப்பட்டிருந்தது. வழக்கமாக அவர்கள் எல்லோருமே அசுத்தமாக இருந்தார்கள். அவர்களில் பலர் தங்கள் வீடுகளில் இருப்பதை விட முகாமில் அதிக சௌகரியமாக வாழ்ந்து வருவதாகப் பீற்றிக் கொண்டார்கள். ஏனெனில், தலையைக் கிறுகிறுக்க வைக்கும் அதிகாரபோதையோடு, எங்களுக்கு விநியோகிக்கப்படும் உணவுப்பங்கீட்டிலும் அவர்கள் இஷ்டம் போல் எடுத்துக் கொண்டார்கள். அவர்களில் பலர், கொலைகாரர்களாய், அந்தப் பதத்தின் குறுகிய அர்த்தத்தில், இருந்தார்கள். அவர்களுடைய நடவடிக்கைகளில் அது வெளிப்படையாகவே தெரிந்தது.

எடி(மேப் பெயராக இருக்கக் கூடும்) ஒரு 'பச்சை முக்கோணம்'. ஆனால், கொலையாளி இல்லை. அவனுக்கு இரண்டு தொழில்கள் இருந்தன. அவன் ஒரு வித்தைக்காட்டி. மற்றும், ஓய்வு நேரத்தில் அவன் ஒரு திருடன். 1944ம் ஆண்டு ஜூனில் அவன் எங்களுடைய அசாதாரணத் தன்மைகளால் மிக விரைவிலேயே எங்கள் கவனத்தைத் தன் பக்கம் திருப்பிக் கொண்டான். கண்ணைப் பறிக்கும் பேரழகனாக இருந்த அவன் தலைமுடி பொன்னிறமாக இருந்தது. நடுத்தர உயரத்தில், ஆனால், ஒற்றை நாடியாகவும், திடமாகவும், வெகுசுறுசுறுப்பானவனாகவும் இருந்தான்.



அவனிடம் பிரபுவர்க்க லட்சணங்கள் இருந்தன. அவன் மேனி ஊடுருவிப் பார்க்க முடியும் போல் அத்தனை சன்னமாக இருந்தது. அவனுக்கு அப்பொழுது 23 வயதிற்கு மேல் இருந்திருக்க முடியாது. அவன் எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் - S.S வேலை அல்லது நாங்கள் - கிஞ்சித்தும் பொருட்படுத்தவில்லை அவனிடத்தில் ஒரு சாந்தமான, தன்னுள் ஆழ்ந்த தோற்றம் குடி கொண்டிருந்தது. அதுவே அவனைப் பிறரிடமிருந்து தனிப்படுத்திக் காட்டியது. அவன் வந்து சேர்ந்த நாளிலிருந்தே மிகவும் பிரபல்யமாகிப் போனான். குளியலறையில், முழு நிர்வாணமாக, தன்னை வாசனைத்திரவியமிட்ட சோப்புக் கட்டித்துண்டு ஒன்றினால் கவனமாகத் தேய்த்துக் குளிப்பாட்டிக் கொண்ட பிறகு, அதை

அவன் எங்களைப் போன்று மழுங்கச் சிரைக்கப்பட்டிருந்த தனது தலையின் உச்சியில், அது முன்னோக்கிச் சாய்ந்திருக்கும் நிலையில் இருத்திக் கொண்டு, பிறகு கண்ணுக்குப் புலப்படாத கவனமாகப் பயின்ற, திருத்தமான மடிப்புக்களால் எழும் முதுகுப்புற அசைவுகளால் அந்த அழகுசாதன சோப்புக்கட்டித்துண்டை கொஞ்சங் கொஞ்சமாய் தலையிலிருந்து கழுத்திற்கு வழுக்கிக் கொண்டு போகச் செய்து, பின், அதற்கும் கீழே, கீழேயென்று அவனுடைய முதுகுத்தண்டின் ஆரம்பித்திலிருந்து முடிவு வரைக் கொண்டு வந்து அந்த நுனி முடிச்சிலான எலும்பை எட்டும் போது ஒரு சிறிய


படிப்பகம்

www.padippakam.com

அசைவின் மூலம் அதைத் தனது கையில் நேரே வந்து விழச் செய்தான். நாங்கள் இரண்டு மூன்று பேர் கைதட்டி சிலாகித்தோம். ஆனால், அவன் அதைக் கவனித்தற்கான எந்த அறிகுறியும் அவனிடம் தென்படவில்லை. எங்கே கவனமாய், மெதுவாகத் தன்னுடைய உடைகளையணியத் தொடங்கினான் அவன்.

வேலையில் அவன் எப்போது, எப்படி இயங்குவான் என்பதே புதிராக இருந்தது. சில சமயங்களில் பத்து ஆட்களின் வேலையை அவன் ஒருவனே செய்வான். ஆனால், மிக மிக அலுப்பூட்டும் இயந்திரமயமான வேலைகளில் கூட அவன் திடுமெனத் தனது தொழில் நுட்பத்தை வெளிப்படுத்தத் தவறியதில்லை. அவன் தூசு, தும்பு, அழுக்குகளையெல்லாம் அள்ளியெடுத்து அகற்றிக் கொண்டிருக்கும் வேளை, திடுமென செய்து கொண்டிருக்கும் வேலையை நிறுத்தி கையிலுள்ள மண்வாரியை, அதை ஒரு 'கிட்டார்' வாத்தியமாகப் பாவிப்பதாய் கையிலெடுத்து, அதன் மேல் ஒரு கூழாங் கல்லினால், அதன் மரக்கைப்பிடியிலும், அதன் உலோகப் பகுதியிலுமாய் மாறி மாறித் தாளமிட்டவாறே, ஒரு பிரபல பாடலை, மனம் போன போக்கில் பாட ஆரம்பித்து விடுவான். செங்கற்களை சுமந்தவாறே, நடன அடவுகளைப் போன்ற தனது கனவார்ந்த நடையில் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது, இருந்தாற் போலிருந்து தடாலென்று ஒரு அதிவேகக் குட்டிக்கரணத்தில் உருளுவான். வேறு சில நாட்களில் அவன் ஒரு விரலைக் கூட அசைக்காமல், மூலையில் வெட்டியாக முடங்கிக் கொண்டிருந்தான். ஆனால், அசாதாரண ஜாலங்களை நிகழ்த்திக் காட்டும் திறமை அவனிடம் இருந்ததன் காரணமாக யாரும் அவனிடம் எதையும் கூறத் துணியவில்லை. அவன் தம்பட்டமடித்துக் கொள்பவன் அல்ல. தன்னை மேடைபோட்டு வெளிச்சமிட்டுக் காட்டிக் கொள்கிறவனல்ல. தனக்குக் கைவந்த வித்தைகளைச் செய்கையில் சுற்றியிருப்பவர்களைப் பற்றிய பிரக்ஞை அவனிடம் அறவேயிருக்காது. அதற்கு பதிலாக, தன்னுடைய வித்தைகள் திருத்தமாக, அப்பழுக்கில்லாமல் வர வேண்டுமே என்ற கவனத்தில் ஆழ்ந்திருப்பான். தன்னுடைய படைப்பைத் திரும்பத் திரும்ப திருத்திச் செம்மையாக்கியபடி யிருக்கும் திருப்தியற்ற கவிஞனைப் போல் அவன் தனது வித்தைகளைத் திரும்பத் திரும்பச் செய்தபடி அவற்றை மேம்படுத்துவதிலேயே முனைப்பாக இருப்பான். சில நேரங்களில் வேலைத்தளத்தைச் சுற்றி இறைந்து கிடக்கும் உலோகத் துண்டு, துணுக்குகளுக்கிடையே குடைந்து துழாவி தேடுதல் வேட்டையில் அவன் மும்முரமாக இருப்பதை நாங்கள் கண்டதுண்டு. ஒரு வளையம் அல்லது கழி அல்லது உலோகத்தகட்டின் ஒரு பட்டை என்று எதையாவது பொறுக்கியெடுத்து அதைத் தன் கைகளில் கவனமாக, அப்படியும் இப்படியுமாகத் திருப்பிப் பார்த்து ஆராய்ந்தபடி, அதை விரலொன்றில் சமன் குலையாமல் நிறுத்தியும், அல்லது, ஏதோ காற்றின் சாராம்சத்தை ஊடுருவி அதைச் சுற்றி ஒரு புதிய வித்தையைக் கட்டமைக்க முயல்வதாய், கையில் வைத்திருப்பதைக் காற்றினூடாய் சுழற்றிக் கொண்டும் இருப்பான் அவன்.

ஒரு நாள் வண்டியொன்று அட்டையுருளைகளை நிரப்பிக் கொண்டு வந்தது. துணிச் சுருள்களுக்குப் பயன்படுத்துவது போன்ற உருளைகள் அவை. அவற்றை விண்டியிலிருந்து இறக்கி அடுக்கி வைக்க எங்கள் 'வேலைக்குழாம்' அனுப்பி வைக்கப்பட்டது. 'எடி' என்னை நிலவறைக்கிடங்கு ஒன்றிற்குள் அழைத்துச் சென்றான். அங்கே, ஒரு சிறிய ஜன்னலுக்கு அடியில் அவன் ஒரு மரப்பலகையை சாய்வாக நிறுத்தி வைத்தான். அதைப் பயன்படுத்தி என் சகாக்கள் வண்டி யிலிருந்து அட்டையுருளைகளை நிலவறைக்குள் உருட்டி விட வேண்டும். அவற்றை எப்படி சுவர்களின் மீது வரிசையாக ஒன்றன் மேல் ஒன்றாக சாய்த்து வைக்க வேண்டும் என்று எனக்குச் செய்து காட்டித் தந்து பின், அங்கிருந்து சென்று விட்டான். அந்தச் சின்ன ஜன்னல் மூலமாய் உயரேயிருந்த என் சகாக்களைப் பார்க்க முடிந்தது. அந்த வேலை லகுவாக இருந்ததால் அவர்களெல்லாம் சந்தோஷமாகக் காணப்பட்டார்கள். என்றாலும், அவர்களுடைய இயக்கங்கள் சீரற்றும், தெளிவற்றும் காணப்பட்டது. வண்டிக்கும், கிடங்கு அறைக்குமாய் ஒரு முறைக்கு இருபது அல்லது முப்பது உருளைகள் என்ற கணக்கில் சுமந்து கொண்டு போய் அறைக்குள் சாய்வு மரம் வழியாக உருட்டி விட்டு விட்டுத் திரும்ப வந்த வாறிருந்தார்கள். 'எடி' சில சமயங்களில் குறைவாகச் சுமந்து வந்தான். வேறு சில சமயங்களில் எக்கச்சக்கமாகச் சுமந்த கொண்டு வந்தான். ஆனால், கம்மியோ, அதிகமோ, அவன் இயக்கம் சிறிதளவும் தாறுமாறாய் இல்லை. ஒவ்வொரு முறையும் அவன் போய் வந்த போது அந்த உருளைகளைக் கொண்டு புதிய புதிய எனில் நேர்த்தியான கட்டுமானங்கள் மற்றும் அட்டைமாளிகைகளைப் போன்ற நிர்மாணங்களைக் கண்டுபிடித்தான். ஒரு தடவை அவன் அப்படிப் போய் வந்தபோது, வித்தைக்காரர்கள் ரப்பர் பந்துகளைக் கொண்டு செய்வதைப் போல நான்கைந்து உருளைகளை உயரே காற்றில் சுண்டியெறிந்து பிடித்தான்.

நான் அந்த நிலவறையில் தனியாக, ஒரு முக்கியமான வேலையை எப்படியாவது நிறைவேற்றி விடும் கவலையிலும், பரபரப்பிலும் இருந்தேன். எனக்கு வெள்ளைத்தாள் ஒன்றும், துண்டுப் பென்ஸில் ஒன்றும் கிடைத்திருந்தன. அவற்றின் உதவியுடன் ஒரு கடிதத்தின் மாதிரி வரைவை (இத்தாலிய மொழியில் தான்) எழுதுவதற்கான சரியான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்தபடி பல நாட்களாகக் காத்துக் கொண்டிருந்தேன். அந்தக் கடிதத்தை ஒரு 'சுதந்திரமான' இத்தாலியத் தொழிலாளியிடம் கொடுத்து அவனை பிரதியெடுக்கச் செய்து, தன்னுடைய கடிதம் போல் கையெழுத்திட்டு, அதை இத்தாலியிலுள்ள என்னுடைய குடும்பத்திற்கு அனுப்பி வைக்கத் திட்டமிட்டிருந்தேன். உண்மையில், கடிதம் எழுதுவதெல்லாம் எங்களுக்குத் தீர்மானமாகத் தடை செய்யப்பட்டிருந்தது. ஆனால், என்னால் மட்டும் ஒரு வழியைக் கண்டுபிடிக்க முடிந்தால், யாருக்கு அனுப்பப்படுகிறதோ அவர்களுக்குப் போதுமான அளவு தெளிவாகப் புரிபட்டு அதே சமயம் தணிக்கையாளர்கள் கவனத்தைக் கவராத அளவு வெகுளித்தனமாகவும், இருக்கக்கூடியதாய் ஒரு கடிதவரைவைத் தயாரித்துக் கொண்டு விடுவேன் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. யாரும் என்னைப் பார்த்து விட கூடாது. ஏனெனில் தனியாக எழுதிக் கொண்டிருப்பது என்பது உடனடியாக சந்தேகத்தை கிளப்பக் கூடியது. எந்தக் காரணத்திற்காக மற்றும், யாருக்காக எங்களில் ஒருவர் எழுதிக் கொண்டிருக்க வேண்டும்? தவிர, வதைமுகாமிலும், பணித்தளத்திலும் துப்பறிந்து தகவலளிப் பவர்கள் நிரம்பியிருந்தனர். அந்த அட்டை யுருளைகளின் வேலையில் ஈடுபட்டு ஏறத்தாழ ஒரு மணிநேரம் ஆகியிருந்த



படிப்பகம்

www.padippakam.com

நிலையில் கடிதம் எழுதத் தொடங்குமளவு என் மனம் அமைதியடைந்திருந்தது. உருளைகள் சாய்மரத்திலிருந்து சீரற்ற இடைவெளிகளில் வந்து கொண்டிருந்தன. நிலவறைகளில் பயப்படும்படியான ஒலியெதுவும் இல்லை.

'எடி'யின் ஒலியற்ற காலடியை நான் எதிர்ப்பார்த்திருக்கவில்லை அவன் ஏற்கனவே என்னைக் கண்காணிக்கத் தொடங்கிவிட்டிருந்த போது தான் நான் அவனைக் கவனித்தேன். என்னையும் அறியாமல் - அல்லது, முட்டாள்தனமாக என் விரல்களைப் பிரித்துத் திறந்தேன். அந்தப் பென்ஸில் துண்டு விழுந்து விட்டது. ஆனால், அந்தக் காகிதத்துண்டு கிழிந்த இலையொன்றைப் போல் அசைந்தவாறே மெது மெதுவே தரையை நோக்கிக் கீழிறங்கியது. எடி அதை பாய்ந்து, பாய்ந்து எக்கிப் பிடித்தான். பின், ஒரு 'பேயறையில் என்னைத் தரையில் மோதினான். ஆனால், ஒன்று: இந்த வாக்கியத்தை நான் இன்று எழுதுகையில் பேயறை என்ற வார்த்தையை நான் தட்டச்சு செய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டிருக்கும் போது, நான் பொய் சொல்கிறேன், அல்லது, குறைந்தபட்சம், பாராபட்சமான உணர்வுகளையும், தகவல்களையும் வாசகருக்குத் தருகிறேன் என்பதை என்னால் உணர முடிகிறது. எடி காட்டுமிராண்டித்தனமானவன் அல்ல; என்னைத் தண்டிக்க வேண்டும் என்றோ, அல்லது, துன்புறுத்த வேண்டும் என்றோ அவன் நினைக்கவில்லை. வதைமுகாமில் தரப்படும் 'அறை' என்பது இன்றைய 'இங்கே' மற்றும் 'இப்பொழுதில் நம்மிடையே அதற்கு வழக்கிலிருந்து வரும் அர்த்தத்திலிருந்தும், முக்கியத்துவத்திலிருந்தும் வெகுவாக மாறுபட்ட பொருளையும், குறிப்புணர்த்தலையும் கொண்டிருந்தது. மிகச் சரியாக, அதற்கென்று வதைமுகாமில் ஒரு பிரத்யேக அர்த்தம் இருந்தது: ஒருவர் தன்னை வெளிப்படுத்திக் கொள்ள அது ஒரு மாற்றுவழியாகப் பயன்பட்டு வந்தது. அந்த சூழமைவில் 'எடி' யின் 'அறை' உணர்த்தியது குத்துமதிப்பாக இது தான்'. 'பார்த்து நட. நீ உண்மையிலேயே ஒரு மிகப் பெரிய தவறை இந்த முறை செய்திருக்கிறாய். உன் வாழ்க்கையையே ஆபத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறாய். ஒருவேளை, நிலைமையின் பயங்கரம் தெரியாமலே கூட நீ இதைச் செய்திருக்கலாம். தவிர, என்னுடைய வாழ்க்கையையும் நீ அபாயத்திற் குள்ளாக்குகிறாய் ஆனால், 'எடி' என்ற ஒரு ஜெர்மானியத் திருடன் மற்றும் வித்தைக்காட்டிக்கும், குழப்பமும், பரபரப்பும் கூடிய ஒரு இளம் இத்தாலியனான எனக்கும் இடையே அத்தகைய ஒரு பேச்சு பலனற்றதாக, பொருளறிந்து கொள்ளப்படாததாகவும் (வேறெதனால் இல்லாவிட்டாலும், மொழிசார் பிரச்சனைகள் காரணமாக), அந்தச் சந்தர்ப்பத் திற்குப் பொருத்தமில்லாமலும், பெரிய அளவில் தலையைச் சுற்றி மூக்கைத் தொடுவதாகவும் அமைத்திருக்கும்.

இந்த ஒரு காரணத்திற்காக, குத்துக்களும், அறைகளும் எங்களிடையே தினசரிக் கலந்துரையாடலாகப் புழங்கி வந்தன. பொருள்பொதிந்த அடி உதைகளை, வலியையும், அவமானத்தையும் உண்டு பண்ணுவதே நோக்கமாக, மிருகத்தனத்தோடு பிரயோகிக்கப்படும். பல நேரங்களில் மரணத்தில் முடியும் 'அடி' உதைத் தாக்குதல்களிலிருந்து வேறுபடுத்திக் காண நாங்கள் விரைவிலேயே கற்றுக் கொண்டு விட்டோம். 'எடி'யினுடையதைப் போன்ற 'அறை' என்பது நீங்கள் ஒரு நாய்க்குத் தரும் 'செல்லத்தட்டை ஒத்தது. அல்லது, ஒரு கட்டளை அல்லது தடையுத்தரவைத் தரும் பொருட்டோ, வலியுறுத்தும் பொருட்டோ ஒரு கழுதையின் மேல் பிரயோகிக்கும் 'சுளீர்' அடியைப் போன்றது. சுருக்கமாகச் சொல்வதென்றால், பேச்சொலியற்ற தகவல்பரிமாற்றமேயின்றி வேறு எதுவுமில்லை. வதைமுகாமின் பலப்பல அவலங்களிலும், துயரங்களிலும் இந்த வகையான அடியுதைகளே மிகக் குறைந்த வலியைத் தரக் கூடியவை. இதையே வேறுவிதமாகவும், அதாவது எங்களுடையதிலிருந்து, பெரிதாக ஒன்றும் மாறுபட்டிருக்க வில்லை என்பதாகவும் கூறலாம்.

'எடி' நான் எழுந்திருப்பதற்காகக் காத்திருந்து பின், நான் யாருக்கு எழுதிக் கொண்டிருந்தேன் என்று வினவினான். எனக்குத் தெரிந்த அற்பசொற்ப ஜெர்மானிய மொழியில், 'நான் யாருக்கும் எழுதவில்லை என்று பதிலிறுத்தேன். ஒரு பென்ஸில் எதேச்சையாகக் கிடைத்ததில் தன்னிச்சையாக, காரணமற்ற ஆர்வத்திலும் பழைய ஞாபக ஏக்கத்திலுமாய் கனவில் இயங்குவதைப் போல எழுதிக் கொண்டிருந்தேன். ஆமாம், எழுதுவது தடை செய்யப்பட்ட விஷயம் என்பது எனக்கு நன்றாகவே தெரியும். அதேசமயம், வதைமுகாமிலிருந்து ஒரு கடிதத்தை வெளியே எடுத்துச் செல்வது என்பது அசாத்தியமான விஷயம் என்பதையும் நான் அறிந்திருந்தேன். முகாம் விதிகளை மீற நான் ஒருபோதும் துணிந்திருக்க மாட்டேன்' என்று அவனிடம் அடித்துக் கூறினேன். 'எடி' என்னை நிச்சயம் நம்பப் போவதில்லை என்று எனக்குத் தெரியும். ஆனால் நான், அவனுடைய பச்சாதாபத்தை சம்பாதிப்பதற்காவது எதையாவது சொல்லியாக வேண்டியிருந்தது. அவன் என்னை 'அரசியல் பகுதிக்குப் போகும்படி குற்றஞ்சாட்டி அனுப்பி விட்டானென்றால் அதன் பின் எனக்கு நிச்சயம் தூக்குமரம் தான். ஆனால், தூக்குமரத்திற்கு அனுப்பப்படுவதற்கு முன்னால் ஒரு விசாரணை - ஐயோ, என்ன மாதிரி விசாரணை அது!

- யார் என்னுடைய கூட்டாளி என்பதைக் கண்டறியவும், ஒருக்கால், இத்தாலியில் என்னுடைய கடிதத்தைப் பெறப் போகிறவனின் விலாசத்தைக் கைப்பற்றவுமாக விசாரணை நடத்தப்படும். 'எடி' என்னை ஒரு விநோத முகபாவத்துடன் பார்த்தான். பிறகு, இடத்தை விட்டுச் சிறிதும் நகர வேண்டாம் என்றும், தான் இன்னும் ஒரு மணி நேரத்தில் திரும்பி வந்து விடுவதாகவும் தெரிவித்து விட்டுச் சென்றான்.

அது மிக நீண்ட ஒரு மணி நேரம். 'எடி' மீண்டும் நிலவறைக்கு கையில் மூன்று வெள்ளைத்தாள்களுடன், அவற்றில் என்னுடையதும் இருக்க, திரும்பி வந்தான். அவன் முகத்தைப் பார்த்தவுடனே, நான் பயந்த அந்த அதிகபட்ச அபாயம் நிகழப் போவதில்லை என்பதை என்னால் அறிந்து கொள்ள முடிந்தது. அவன் - இந்த 'எடி' உண்மையிலேயே சாதுர்யமானவனாக இருந்திருக்க வேண்டும். அல்லது, அவனுடைய சூறாவளித்தன்மையான கடந்த காலம் விசாரணையாளனின் துயரமான தொழிலின் அடிப்படை நுணுக்கங்களை அவனுக்குக் கற்றுக் கொடுத்திருக்க வேண்டும். என்னுடைய சகாக்களில் ஜெர்மானிய மொழி, இத்தாலிய மொழி ஆகிய இரண்டுமே தெரிந்திருந்த இரண்டு பேரை (ஒருவரை மட்டுமல்ல) பொறுக்கியெடுத்து என்னுடைய கடிதத்தை அவர்களிருவரும் தனித்தனியே ஜெர்மானியமொழியில் பொருள் பெயர்க்கும்படி கூறி, கூடவே அவர்களிருவரின் மொழிபெயர்ப்புகள் ஒரேமாதிரியாக இல்லாது போனால் என்னை மட்டுமல்லாது அவர்களையும் அரசியல் பகுதிக்கு தான் அனுப்பி விடும்படியாகி விடும் என்று எச்சரிக்கையும் செய்தான்.


படிப்பகம்

www.padippakam.com

அவன் என்னிடம் ஒரு சொற்பொழிவாற்றினான். இன்று அதை அப்படியே திருப்பிக் கூறுவது எனக்குக் கடினம் என்றாலும் அதன் சாரம் இதுதான். அவன் என்னிடம், என்னுடைய அதிர்ஷ்டம் காரணமாக அந்த இரண்டு மொழிபெயர்ப்புகளும் ஒன்றாகவே இருந்ததாகவும், மேலும், கடிதத்தின் உள்ளடக்கமும் ஏதும் வில்லங்கமாக இல்லையென்றும் தெரிவித்தான். நான் பைத்தியம் என்றும், என்னுடைய செய்கைக்கு வேறு எந்தவிதமான விளக்கமும் இருக்கவியலாது என்றும் கூறினான். ஒரு பைத்தியக்காரன் தான் தன்னுடைய வாழ்க்கையையும், எனக்குக் கட்டாயமாக இருக்கக் கூடிய இத்தாலியக் கூட்டாளியினுடையதையும், இத்தாலியிலுள்ள என்னுடைய உறவினர்கள் வாழ்க்கை யையும் மேலும் Kapo வில் உள்ள அவனுடைய உத்தி யோகத்தையும் இப்படிப் பயணம் வைப்பான் என்றான். அந்த 'அறை' எனக்குத் தேவையானது தான் என்றும், இன்னும் சொல்லப் போனால் நான் அதற்காக அவனுக்கு நன்றி நவில வேண்டும் என்றும், ஏனெனில் அவன் செய்தது ஒரு நல்ல காரியம் என்றும், சொர்க்கத்தை வடிவாக்கித் தருவது போன்றது என்றும், அவன், ஒரு strass rauber - தொழில்முறையில் தெருத்திருடன், நல்ல காரியங்கள் செய்ய வேண்டியது மிகவும் அவசியம் என்றும் என்னிடம் கூறினான். இறுதியாக, குற்றஞ்சாட்டுவதற்கு தனக்கு எந்தவொரு வழியும் தென்படவில்லை என்றும், ஆனால் எதனால் தென்படாமல் போயிற்று என்பதை அவனாலும் தீர்மானமாகச் சொல்ல இயலவில்லை என்றும் கூறினான். ஒருவேளை எனக்குக் கிறுக்குப் பிடித்திருந்திருக்கலாம். அப்படிப் பார்த்தால், இத்தாலியர்கள் எல்லோருமே கிறுக்குத்தனத்திற்குப் பெயர்போனவர்கள்தான். பாடுவதற்கும், வம்பில் மாட்டிக் கொள்வதற்கும் தான் அவர்கள் லாயக்கு.

'எடி'க்கு நன்றி கூறியதாக எனக்குத் தோன்றவில்லை. ஆனால், அந்த நாளிலிருந்து, என்னுடைய 'பச்சை முக்கோணவாசிகள் பால் எந்தவித நல்லதனமான ஈர்ப்பும் எனக்கு உணரக் கிடைக்கவில்லையென்றாலும் அவர் களுடைய சின்னத்திற்குப் பின்னால் எந்தவிதமான மானுடம் திரண்டிருக்கிறது என்று என்னை நானே அடிக்கடி கேட்டுக் கொண்டேன். அந்தத் தெளிவற்ற படையினரில் ஒருவர் கூட, எனக்குத் தெரிந்த அளவில், தன்னுடைய கதையைச் சொல்லவில்லை என்பது எனக்கு வருத்தமளித்தது. 'எடி'க்கு என்னவாயிற்று என்று எனக்குத் தெரியாது. இந்த சம்பவத்திற்குப் பிறகு சில வாரங்கள் கழித்து சில நாட்கள் அவனைக் காணவில்லை. பின், ஒரு நாள் மாலை நாங்கள் அவனைப் பார்த்தோம். அவன் முள்கம்பிகளுக்கும், மின்சாரவேலிக்கும் இடையேயான பாதையில் நின்று கொண்டிருந்தான். அவன் கழுத்தைச் சுற்றி URNING (சிறுவர்களைப் புணர்பவன்) என்ற ஒரு அடையாளக்குறி தொத்திக் கொண்டிருந்தது. ஆனால், அவன் அது பற்றிக் கவலைப்பட்டதாகவோ, வருத்தப்பட்டதாகவோ காணப்பட வில்லை. அவன் எங்களுடைய பணிக்குழுவின் மறு வருகையை அசிரத்தையும், அசமந்தத்தனமும், அவமரியா தையும் கூடிய பார்வையுடன், ஏதோ, அவனைச் சுற்றி நடப்பது எதுவுமே அவனுக்கு எள்ளளவும் சம்பந்த மில்லாதது போல, கவனித்துக் கொண்டிருந்தான்.

◆



**பிழைத்திருப்பவன்**

## (The Survivor)

B.V. க்கு

Dopo di allora, ad ora in certa

அது முதல், நிச்சயமற்றதொரு நாழிகையில்
அந்த வேதனை திரும்பி வருகிறது.
என்னுடைய பயங்கரக் கதை சொல்லப்படும் வரை
இந்த என்னுள்ளான மனம் கனன்றெரிகிறது.

மீண்டும் ஒருமுறை அவன் தனது சகாக்களின்
முகங்களைப் பார்க்கிறான்
முதல் மங்கிய வொளியில் வெளிறி யிருப்பவை
சிமெண்ட தூசியால் பழுப்படைந்திருப்பவை
மூடுபனியில் மேகம்படர்ந்திருப்பவை
தங்களுடைய அமைதியற்ற உறக்கத்தில் மரணந் தோய்ந்திருப்பவை
இரவில், தங்கள் கனவுகளின் தாங்கவொன்னா பாரத்தில், அவர்கள் முகவாய்க்கட்டைகள் அசைகின்றன,
இல்லா முள்ளங்கியை மென்று தின்பதாய்.
"தள்ளி நில்லுங்கள், என்னைத் தனியாக விடுங்கள், மூழ்கிய
மனிதர்களே-
போய் விடுங்கள். நான் யாரையும் இழப்புக்குள்ளாக்கவில்லை. யாருடைய
ரொட்டியையும் பறித்துக் கொள்ளவில்லை. யாரும் எனக்கு பதிலாக இறக்கவில்லை. யாருமே.
உங்கள் பனிமூட்டத்திற்குள் திரும்பப் போய் விடுங்கள்.
இன்னமும் நான் உயிருடன் இருக்கிறேன், சுவாசித்துக்
கொண்டிருக்கிறேன்
உண்டு, குடித்து, உறங்கி, உடையணிந்து வருகிறேன் என்றால்
அது என் தவறல்ல.

~



படிப்பகம்

www.padippakam.com

# ப்ரைமோ லெவி

தமிழில்

லதா ராமகிருஷ்ணன்

ப்ரைமோ லெவி 1919ம் ஆண்டு ட்யூரினில் பிறந்தார். யூத குலத்தைச் சேர்ந்தவரான அவர் நிறவெறிச் சட்டங்கள் யூதர்கள் கல்விசார் பட்டப்படிப்புகளை மேற்கொள்வதைத் தடை செய்வதற்கு சிறிது முன்பாக அவர் இரசாயனப் பாடத்தில் சீரிய முறையில் பட்டம் பெற்றார். 1943 ல் வடக்கு இத்தாலியிலிருந்த ஒரு பிரிவினைவாதக் குழுவில் இணைந்து கொண்டார். அதன் விளைவாய் கைது செய்யப் பட்டு ஆஸ்ச்சிட்ஸ் வதைமுகாமுக்கு அனுப்பப்பட்டார். ஒரு வேதியல் நிபுணர் என்ற காரணத் தினாலேயே அவர் அங்கே சாவிலிருந்து தப்பினார். அவருடைய முகாம் 1945ல் விடுவிக்கப்பட்டது. மற்ற இத்தாலியர்களோடு ப்ரைமோ லெவியும் ரஷ்யாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். இத்தாலிக்குத் திரும்பிச் சென்ற பிறகு, 1975ல் ஓய்வு பெறும் வரை தொடர்ந்து வேதியல் நிபுணராகப் பணியாற்றி வந்தார்.

அவருடைய படைப்புக்களில் முக்கியமானவை, The Periodic Table - இது Premio Prato என்ற விருதை வென்றது. 1967ல் வெளியான Natural Stories (Premio Bagatta விருதை வென்றது), A Structural Defect (1971), The wrench/ Moment of Reprieve, (1981), If not Now, When (1982 - இரண்டு விருதுகளை வென்ற படைப்பு ),1958ல் பிரசுரிக்கப்பட்ட 'If This is a Man' மற்றும், 1965ல் பிரசுரிக்கப்பட்ட 'The True' ஆகிய இரண்டும். ஆஸ்ச்விட்ஸ் வதைமுகாமில் அவர் கண்ட மனிதர்கள், அடைந்த அனுபவங்களின் ஆகியவற்றின் தாக்கத்தில் உருவானவை. அவை, லெவியை எழுத்தாளராக உருவாக்கிய படைப்புக்களும் கூட. இதில் 'The True' (La Tregua) Preimio Campiello என்ற விருதை வென்றது. இந்த இரண்டு புத்தகங்களையும் எழுதிய பிறகு ப்ரைமோ லெவி ஒரு வேதியல் நிபுணராகவே வாழ்க்கையைத் தொடர எண்ணியிருந்தார். ஆஸ்ச்விட்ஸ்லும், வீடு திரும்புதலுக்கான அந்த நீண்ட சாலையிலும் தான் கண்ட, அனுபவித்த விஷயங்களெல்லாம் எழுதும்படி அவரை நிர்ப்பந்தித்தலில் அந்த இரண்டு புத்தகங்களையும் அவர் எழுதி முடித்தார். அந்த இரண்டு புத்தகங்களையும் எழுதி முடித்த பின் வரலாறு குறித்த ஒரு முக்கியமான சாட்சியத்தைத் தான் அறிந்து விட்டதாகவும், இனி தான் எழுதுவதற்கு வேறெதுவும் இல்லை என்றும் நினைத்தார். ஆனால், எழுத்து அவரை விடவில்லை. தொழில்முறைப்பட்ட செயல்பாடுகளோடு எழுத்தும் அவருடைய நேரத்தில் தனக்கென்று ஒரு பங்கைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டு வந்தது. இறுதியில் அவர் நேரம் முழுவதையும் படைப்பாக்கத் தொழில் ஆக்ரமித்துக் கொண்டது. அதே சமயம் ஆஸ்ச்விட்ஸ் அனுபவங்களின் ஆக்ரமிப்பிலிருந்தும் அவரால் விடுபட முடியவில்லை. தன்னுடைய வதைமுகாம் வாழ்க்கை அனுபவங்களின் அடிப்படை அம்சங்களை முதலிரண்டு புத்தகங்களில் பதிவு செய்து முடித்திருந்தாலும் வேறு பல விஷயங்கள் தொடர்ந்து அவர் மனதில் அவ்வப்பொழுது மேலெழும்பி அலைக்கழித்து வந்தன. அப்படியே விட்டு விட்டால் ஒருநாள் அவை சுவடின்றிக் காணாமல் போய் விடுமோ என்ற நினைவு அவரை அலைக்கழித்தது. அந்த சோகப் பின்னணியிலும் தங்கள் சுயத்தையும், சுயமரியாதையையும் இழக்காமலிருந்த பல மனிதர்கள் - அவருடைய தோழர்கள், அவருடன் பயணமானவர்கள், ஏன், எதிரிகளும் கூட - தங்களை எழுத்தில் பதிவு செய்யும்படி அவரைத் தூண்டிக் கொண்டேயிருந்தார்கள்.

இந்த ஞாபகத் தாக்கத்தின் விளைவாய் உருவானது தான் 'Moments of Reprieve' (நிவாரணத் தருணங்கள் அல்ல, தற்காலிக நிவாரணத் தருணர்கள் எனத் தமிழ்ப்படுத்தலாம்) என்ற சிறுகதைத் தொகுப்பு.

ஆஸ்ச்விட்ஸ் அனுபவங்களுக்கு ஏறத்தாழ முப்பது, நாற்பது வருடங்களுக்குப் பிறகு எழுதப்பட்ட இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கதையும் அவர் வதைமுகாமில் எதிர்கொண்ட ஒரு தனிமனிதரை மையப்படுத்திக் கட்டமைக்கப்பட்டுள்ளது. வெவ்வேறு சமயங்களில, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப் பட்ட இந்தக் கதைகளில் வரும் மையக் கதாப்பாத்திரங்கள், 'லெவி'யின் வார்த்தைகளில், வாழ வேண்டும் என்ற உத்வேகம் கொண்டு அதன் வலிமையில், வதைமுகாம் வாழ்க்கையில் தங்கள் 'ஆளுமையைத் தக்க வைத்துக் கொண்டவர்கள். அதற்கு அவர்கள் மேற்கொண்ட வழிமுறைகள் சில சமயங்களில் 'பொதுவான அறநெறிகளுக்குப் புறம்பானவையாகக் கூட இருக்கலாம். ஆனாலும், அவற்றையெல்லாம் மீறி வெளிப்படுவது வாழ்க்கையின் மீதான அவர்களுடைய பற்றுறுதி'. ஆஸ்ச்விட்ஸ் அனுபவங்களைப் பற்றிய லெவியின் முதலிரண்டு படைப்புக்கள், அடையாளமற்ற, முகமற்ற, குரலற்ற மக்கள்திரளைப் பற்றியவையென்றால் - தனது Moments of Reprieve கதைகள் வதைமுகாம் வாழ்க்கையிலும் தனிமுகமும், தனி அடையாளமும் கூடியவர்களாய் இயங்கிய மனிதர்களைப் பற்றியது' என்கிறார் லெவி.



படிப்பகம்

www.padippakam.com

மிகக் கடுமையான மனத்தாக்கமுண்டாக்கும் அனுபவங்களை அடைபவர்கள் அந்தத் தாக்கத்தின் அதிர்வுகளிலிருந்து ஒருபோதும் முற்றுமாக விடுபட முடிவதில்லை என்கிறார்கள் உளவியலாளர்கள். அவ்வப்பொழுது அந்த பயங்கர அனுபவத்தின் அதிர்வுகள் திடுமென வெடித்து மேலெழும்பும். லெவியைப் பொறுத்தவரையும் அப்படித்தான். ஆஸ்ச்விட்ஸ் அனுபவங்கள் வாழ்நாள் முழுக்க அவருள் குமுறும் எரிமலையாகக் கனன்ற வண்ணமே இருந்தது. முப்பது நாற்பது வருடங்களுக்குப் பிறகும் அந்த இரண்டு வருட நிகழ்வுகளும், அனுபவங்களும், எந்தப் பிரயத்தனமும் இல்லாமலே, இம்மிபிசகாமல் அவர் நினைவுத் திரையில் பளிச்சிடுவதால் தனது 'Moment of Reprieve' புத்தக முன்னுரையில் குறிப்பிடும் லெவி, அங்கிருந்த காலத்தில் உடனிருந்த எந்தவித பிரத்யேகத் தன்மையுமற்ற சாதாரணர்களைக் கூடத் தன்னால் ஒரு பெரிய ஜனத்திரளுக்கடையிலேயும் சட்டென்று அடையாளங் கண்டு கொண்டு விட முடிகிறது எனவும், அவர்கள் பேசியதெல்லாம் பரிச்சயமில்லாத அந்நியமொழிகளிலென்றாலும் கூட அட்சர சுத்தமாய் தன் ஞாபகத்தில் தங்கியிருக்கிறது எனவும் குறிப்பிடுகிறார். கால இடைவெளியிலும் படைப்பாளிக்கே உரிய கற்பனைதிறனிலுமாய் ஒரு சில நிகழ்வுகளையும், மனிதர்களையும் சற்றே முழுமைப்படுத்துவதும், வர்ணந்தீட்டுவதும் என் எழுத்திலும் நிகழ்ந்திருக்கிறது என்றாலும் இந்தக் கதைகளில் மையமாக இடம் பெறும் சம்பவங்கள் நிஜமாக நிகழ்ந்தவை; மனிதர்களும் நிஜமானவர்கள்; என்கிறார் லெவி. இந்த நிகழ்வுகளும், மனிதர்களும் நிவாரணத் தருணங்களை நல்கியவர்கள் என்கிறார் அவர்.

'பாதுகாப்பில் வாழும் வாழ்க்கையின் சுயநலத்தால் சிறைபிடிக்கப்பட்டிருக்கும் நாம், மிக உச்சபட்ச அடிமை வாழ்க்கையின் இழிவு நிலைமைகளிலும் மனிதர்களால் தங்களுக்கிடையே பரஸ்பர அன்பும், மரியாதையுமாகத் தொடர்புறவாட முடியும்; அப்படி இருந்திருக்கிறார்கள் என்பதை ஒரு போதும் மறந்து விடக்கூடாது என்பதை அறிவுறுத்தும் இந்த நூல், நம்மை மனவெழுச்சியூட்டி மேம்படுத்தும் உன்னதப் படைப்பு என்று The Moments of Reprieve பற்றி Literary Review விமர்சனமெழுதியது.

'If Not Now, When?' என்ற புதினம் ஹிட்லர் காலம் பேரழிவின் சமயம் தன்னம்பிக்கையும் தைரியமுமாக எதிர்த்துப் போராடிய யூதர்களுக்கு அஞ்சல் செலுத்துகிறது. ஒரு உண்மை சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட இந்தப் படைப்பு, ஜெர்மானியர்களால் ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் மாட்டிக் கொண்ட ரஷ்யர்கள், மற்றும், போலந்து நாட்டைச் சேர்ந்த அகதிகள் குழாம் தங்களால் இயன்ற அளவு எதிர்த்து நிற்கும் போக்கில் மேற்கொண்ட வீரசாகசச் செயல்கள், தார்மீகப் போராட்டங்கள், எதிர்கொண்ட இக்கட்டுகள் முதலியவற்றைப் பதிவு செய்கிறது. கற்பனை செய்து பார்க்கவும் இயலாத கஷ்டங்களையும், துயரங்களையும் லெவி எழுதுகிறார். உறையச் செய்யும் குளிர், வலி, பீதி, பசி மற்றும் தாங்க முடியாத உடற்சோர்வு, மானுடத்திலிருந்து விலக்கி வைத்தல், சதுப்புநிலங்கள் மற்றும் காடுகளிலும், குகைகள், சாக்கடைகள், இடிந்து சிதைந்த கட்டிடங்கள் முதலியவற்றில் ஏறத்தாழ ஒருவித ஓநாய்த்தனமான வாழ்க்கை. கூடவே, பரவசக்களிப்பு, பற்றுறுதி, தளரா நம்பிக்கை, தாய்நாட்டிற்கான தணியா தாகம் எல்லாம் லெவியின் கதைகளில் இடம்பெறுகின்றன என்று 'Financial Times' விமர்சனம் கூறுகிறது.

பிரிவினைவாதியின் பாடல் ஒன்று இப்படிக் போகிறது:

If I`m not for myself, who will be for me? (நான் எனக்காக இல்லையென்றால், வேறு யாரிருப்பார் எனக்காக?) If not this way, how? If not now, when? (இந்த வழியில்லை யென்றால், எவ்வாறு? இப்பொழுது இல்லையென்றால் எப்பொழுது?)

The Drowned and the Saved (மூழ்கியவரும், மீட்கப்பட்டவரும்) என்ற படைப்பை எழுதி முடித்தபின் கொஞ்ச காலத்திற்குள்ளாகவே லெவி தற்கொலை செய்து கொண்டார். அவருடைய தற்கொலை திட்டமிடப்படாத, திடீர் நிகழ்வாகவும், மிகவும் கொடூரமானதாகவும் இருந்தது. ஆஸ்ச்விட்ஸின் பயங்கரத்திலிருந்து தான் மீண்டதும், தன்னை விட மேலான பிற பலருக்கு அந்த நல்வாய்ப்பு கிடைக்காமல் அவர்கள் கொல்லப்பட்டதும் அவர் மனதில் ஆறாத குற்றவுணர்வை ஏற்படுத்தியிருந்தது எனவும் அதிலிருந்து மீள முடியாமல் தான் அவர் தற்கொலைக்குத் துணிந்தார் எனவும் கூறப்படுகிறது. இந்தப் படைப்பு, ஜெர்மானியர்கள் யூதர்களுக்கு இழைத்த கொடுமைகளை 'லெவி' மன்னிக்கவேயில்லை என்பதை எடுத்துக் காட்டுகிறது. தன் இன மக்கள் பட்ட அளப்பரிய துன்பத்திற்குக் காரணமானவர்களை அவரால் மன்னிக்க முடியவில்லை. அதே சமயம் அவருடைய எழுத்துக்கள் வெறுப்பு என்ற தீமைக்கும் இறங்கி விடவில்லை. அவருடைய எழுத்துக்களின் குரல் அறிவார்த்தமாகப் பேசும் ஒரு நிதான மனிதருடையது. கற்பனை செய்து கூட பார்க்க முடியாத அந்த நரகம் திரும்ப நேரலாம் என்று அது நமக்கு நினைவூட்டுகிறது. அறிவுறுத்துகிறது. கடந்தகாலத்திலிருந்து நாம் படிப்பினைகள் கற்றுக் கொள்ள வேண்டிய தேவையை லெவியின் எழுத்துக்கள் இடைவிடாமல் எடுத்துரைக்கின்றன.

மூலம்: *ப்ரைமோ லெவியின்* 'The Moments of Reprieve' சிறுகதைத் தொகுப்பு



படிப்பகம்

www.padippakam.com

## ~ ரமேஷ்–பிரேம் கவிதைகள் ~

### பூனையைப் பற்றிய பத்துச் சித்திரங்கள்

**1**

பியானோமீது
நடக்கும் பூனை

அறை நிரம்பித் தளும்புகிறது
ஓசை

ஒலி பொருந்திய பாதை நீள்கிறது
பூனையின் அந்தர நடையில்
வெளி நிரம்பித் தளும்புகிறது

**2**

உனக்கும் எனக்கும் இடையே ஒரு சுவர்
சுவர் மீது ஒரு பூனை
பூனையைக் கொன்றுவிட
உனக்கும் எனக்கும் எண்ணம்
நம் எண்ணம் தனக்கும் தெரியும் என்பதை
வெகுளியாகக் காட்டும் அதன் கண்கள்
சுவரைக் கொஞ்சம்போல இடித்து
ஒரு வாசல் வைத்துக் கொண்ட
நமக்குள்ளான உடன்பாட்டில்
நம்மில் யாரோ அறைந்து சாத்திய கதவில்
வால் அகப்பட்டுக்கொண்டது பூனை

அதன் கொடூரமான அலறலின் முகம்
என் பக்கம்
துடிதுடிக்கும் ஒரு முழவால் உன் பக்கம்

உனக்கும் எனக்கும் இடையே
அடைபட்ட ஒரு வாசல்
கதவிடுக்கில் காய்ந்த எலும்புக் கூடு

**3**

மல்லிகைச் சரக்குவியலென
இருந்த பூனையை
அள்ளித் தூக்கி
கூந்தலில் செருகி
நடந்த நடையின் அதிர்வில்
கொஞ்சம் கொஞ்சமாக நழுவி
கூந்தலின் முனை கழுத்தில்
சுற்றி இறுகி நாக்கு வெளித்தள்ளித்
தொங்கிக் கொண்டிருக்கும்
பூச்சரமே
உன் வாசம் தெருவெல்லாம் மணக்க
தலைக்கு மேலே சுற்றிக்கொண்டிருக்கின்றன
பசிகொண்ட கருத்த அலகுகள்

**4**

யாருமற்ற கடற்கரையில்
ஈரத்தடத்தில் கால்பதிய
நடந்து கொண்டிருக்கிறது பூனை

பூனை மிகவும் சோகமாக இருக்கிறது
ஆனால் கம்பீரமாக நடந்து செல்கிறது
கடலுக்கு முன் அப்படித்தானே இருக்கமுடியும்

கடலைப்போல மோசமான வாயாடி
இந்த உலகத்தில் வேறு இல்லை என்று
பூனை நினைக்கிறது

நினைத்துக்கொள்ளட்டுமே

கடலைப்போல கேவலமான வேசி
இந்த உலகத்தில் வேறு இல்லை என்று
பூனை நினைக்கிறது

தன் நினைப்பு அதற்குத் தெரியாதா என்ன
என்று உள்ளுக்குள் நகைத்துக் கொள்கிறது

இருந்தாலும் பூனை சோகமாக இருப்பது கண்டு
தன் ஆர்ப்பாட்டங்களைக் குறைத்துக்கொண்ட
கடல்
மிக நளினமாக நெளிந்தபடி
பூனையை வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறது

பாவம் பூனை
தன் உலகத்தில் அதற்கு இடமில்லையே என்று
உள்ளுக்குள் தானும் நகைத்துக் கொள்கிறது கடல்
சோகப்படுவது போன்ற குறும்புத்தனத்தோடு
முகத்தை வைத்தபடி

**5**

வட்ட நிலாவின் மேல் விளிம்பில் ஆரம்பித்து
கீழ்விளிம்பில் தலைகீழாக நடக்கிறது பூனை

மேகமற்ற இளநீல வெளிச்சத்தில்
பச்சைநிறப் பூனை தன் முன்னங்கால்களால்
நிலாவை உருட்டிக்கொண்டிருக்கிறது

சிவப்புப் பூனை நக்கிக் குடிக்க அதன்
வாயோரத்தில் நிலா வழிகிறது

கறுப்புப் பூனை நிலாவில் குதித்துக் கரைந்து
புலன்கள் கழன்று திட்டுத் திட்டாக உறைகிறது

அதுசரி
பூனையின் கண்களைப் பார்த்திருக்கிறாயா
அதில் நிலாவின் உட்புறத் தோற்றம்

சரிசரி
பூனையை வரைகிறாயா எழுதுகிறாயா
கண்திறந்த புத்தரைப் பார்த்திருக்கிறாயா
புத்தர் கண்திறந்தால் பூனை



படிப்பகம்

www.padippakam.com

**6**

கீழிமைக்கும் மேலிமைக்குமிடையே
சதாவொரு பூனை தாவிக்கொண்டிருக்கிறது
சில சமயம் மேலிமை விளிம்பில்
அமர்ந்துகொண்டு
பீலிகளில் தன் முகத்தைத் தடவுகிறது
சில சமயம் அதன் வால் விழியில்
பட்டுக்கொண்டிருக்க
கலங்கி வழியும் நீரைச்
சாதுர்யமாகக் குனிந்து தனது துளிர் நாவால்
நக்கிச் சுவைக்கிறது

நமக்கிடையே தாவிக்கொண்டிருக்கும்போது
இந்தப் பூனை நீயாகவும் நானாகவுமாக
மாறிக்கொண்டிருக்கிறது
நம் கனவுகளுக்கிடையே தாவுவதானது
அதன் வாழ்நாளை முடித்துக்கொள்ளும்
பயணமாகி விடுகிறது

**7**

இடைமறித்ததொரு பூனை
சற்றே கறுப்பு
கறுப்பு மல்லிகை
கண்களில் குறுகுறுப்பு
பாதையைக் குறுக்காகக் கடந்தது
ஒரு கணம்
ஒரே கணம்தான்
அதுபோதும்
அந்தக் கண்களிலிருந்து
பற்றிப் படர்கிறது
எனது காலத்தைத் தனதாக்கிக்கொண்ட
காதல் கானகம்

**8**

பசி வேட்கையில்
முட்டிமோதி அலையும் பூனையின்
முகத்தைப் பார்
அதில் தெரிகிறதா
பிரபஞ்சத் தொடக்கத்தின் பெருவெடிப்பு
முகம்
ஆம் வெடிப்பின் வடிவம்
அதன் ஆழ மூலத்தின் முனை
அதைப் பார்த்துக்கொள்
நன்றாக
நன்றாகப் பார்
அதற்கு வாய் இல்லை
வாயற்ற தாடையைப் பார்
அதற்கு மேலாக
மூக்கின் கீழ்முனை விளிம்பிற்கு
10 மி.மீட்டருக்கு அப்பாலிருந்து
உச்சி வரைக்கும்
முகத்தைப்பார்
வாயற்ற முகத்தைப்பார்
பசி வேட்கையில்
முட்டிமோதி அலையும்
வாயற்ற என் முகத்தைப் பார்
அதன் கண்களில்
அதே கணம்
உன் முகங்களையும் பார்

**9**

பூனையைப் போல இரவு
படுத்துக் கொண்டிருக்கிறது

இந்தக் கவிதை இரவைப் பற்றியதா
பூனையைப் பற்றியதா என்கிற குழப்பத்தோடே
எழுதிக்கொண்டிருக்கிறேன்

அமாவாசை இரவு
வாலாக அசைகிறது பால்வீதி
உடலெல்லாம் கண்களாகி விடைத்து
மியாவ் என்கிறது

நிலநடுக்கத்தில் பூமி கால்களை விட்டு
நழுவுகிறது
எம்பித் தாவி வாலைப் பற்ற
வால் முனை சுழற்றி மேலேற
பூமிக்குள் சரிந்து மடிகிறது நிலம்

தனித்த பூமியில் மீந்து நிற்பது
நானா கவிதையா என்ற
குழப்பத்தோடு பார்க்கிறது
பூனை என்ற பெயரை இழந்த இரவு
மண்ணில் புதைந்தது பெயர் மட்டுமே
வேறில்லை

**10**

கண்ணாடிச் சில்லுகள் பதிக்கப்பட்டு
முடிவற்று நீளும் மதில் மீது
நேர்த்தியாக நடந்து செல்கிறது
பூனை என்ற ஒரு சொல்
ஆம் ஒரு சொல்
அதைக் கொஞ்சம் பின்தொடர்ந்தால்
அது வாக்கியமாவதையும்
வாக்கியத்தின் நீண்ட அசைவில்
கண்ணாடிச் சில்லொன்று பொத்துவிட்டால்
மதிலின் பக்கவாட்டில் வழியும் குருதி
கவிதையாவதையும் வாசிக்கலாம்

அது பூனையைப் பற்றிய கவிதையாக
இருக்குமென்று
நீங்கள் எதிர்பார்த்தால் ஏமாந்துபோவீர்கள்

◆



படிப்பகம்

www.padippakam.com

# வெறும் நுரை மட்டும், அவ்வளவு தான்

**Hernando Tellez (1908-1966)**

கொலம்பிய எழுத்தாளர், பத்திரிகையாளராகவும், அயல் உறவுத்துறை அதிகாரியாகவும், செனட்டராகவும் பணியாற்றியவர். நிறைய கட்டுரைகளும், குறிப்பிடத்தக்க சிறுகதைகளும் எழுதியவர். 'வெறும் நுரைமட்டும்' என்ற இந்த கதையாலேயே கொலம்பியா முழுக்க பிரபலமடைந்தவர். லத்தீன் அமெரிக்க சிறுகதைத் தொகுப்புகளில் அடிக்கடி இடம்பெறும் கதை இது. **Pat Mcnees** என்பவரால் தொகுக்கப்பட்ட **'Contemporary Latin American, Short Stories' (1974)** என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.

தமிழில் : ஆர். சிவக்குமார்

உள்ளே நுழைந்தபோது அவன் ஒன்றும் பேசவில்லை. என்னிடமிருந்தவற்றில் மிகச்சிறந்த ஒரு சவரக் கத்தியை நான் தீட்டுவாரில் முன்னும் பின்னுமாகத் தீட்டி கூர்மையேற்றிக் கொண்டிருந்தேன். அவனை அடையாளம் கண்டு கொண்டபோது நான் நடுங்க ஆரம்பித்தேன். ஆனால் அவன் அதைப் பார்க்கவில்லை. என்னுடைய உணர்ச்சியை மறைத்துக் கொள்ளும் முயற்சியில் நான் தொடர்ந்து தீட்டிக் கொண்டிருந்தேன். என் பெருவிரல் சதையில் அதன் கூர்மையை சோதித்துவிட்டு பிறகு அதை வெளிச்சத்தில் உயர்த்திப்பிடித்தேன்.

அந்த நேரத்தில் அவனுடைய துப்பாக்கி உறை தொங்கவிடப்பட்டதும், குண்டுகள் பொருத்தப்பட்டதுமான பெல்ட்டை அவிழ்த்து சுவற்றிலிருந்த ஒரு கொக்கியில் தொங்கவிட்டு அதன்மேல் தன்னுடைய ராணுவத் தொப்பியை வைத்தான். பிறகு என்பக்கம் திரும்பி கழுத்துப்பட்டியின் முடிச்சை நெகிழ்த்திக் கொண்டு, 'வெப்பம் கடுமையாக இருக்கிறது. எனக்கு சவரம் செய்து/விடு.' என்று சொன்னான். நாற்காலியில் உட்கார்ந்தான்.

நான்கு நாள் தாடி அவனுக்கு இருந்ததை நான் கவனித்தேன் - எங்கள் படைகளைத் தேடி சமீபத்தில் அவன் மேற்கொண்ட பயணத்துக்குத் தேவைப்பட்ட நான்கு நாட்கள். வெய்யிலால் வெம்பியிருந்த அவனுடைய முகம் சிவந்து காணப்பட்டது. நான் கவனமாக சோப்பைத் தயாரித்தேன். சிறு துண்டுகளாக வெட்டி கப்பில் போட்டு கொஞ்சம் வெந்நீர் விட்டு பிரஷ்ஷால் கலக்க ஆரம்பித்தேன். உடனே நுரை எழத் தொடங்கியது. 'எங்கள் பிரிவில் இருக்கும் மற்ற சிப்பாய்களுக்கும் இதே அளவு தாடி இருக்கும்', என்று அவன் சொன்னான். நான் நுரை கலக்குவதைத் தொடர்ந்தேன்.

'ஆனால் நாங்கள் காரியத்தை சரியாகச் செய்தோம், தெரியுமா. முக்கியமானவர்களைப் பிடித்துவிட்டோம். சிலரைப் பிணமாக எடுத்துவந்தோம்; சிலரை உயிருடன் பிடித்துள்ளோம். ஆனால் விரைவில் அவர்கள் எல்லாரும் இறப்பது நிச்சயம்.'

'எத்தனை பேரை பிடித்தீர்கள்?' நான் கேட்டேன்.

'பதினாலுபேர். காட்டுக்குள் ரொம்பதூரம் போய்தான் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. ஆனால் அவர்களைப் பழிவாங்கியே தீருவோம். ஒரு ஆள் கூட இந்த வேட்டையில் உயிர்தப்ப முடியாது - ஒரு ஆள் கூட.' நுரை பொதிந்த பிரஷ்ஷை என் கையில் பார்த்ததும் அவன் நாற்காலியில் பின்புறமாக சாய்ந்தான். அவன் கழுத்தைச் சுற்றி நான் இன்னும் துணியைப் போர்த்தவில்லை. நான் நிலைதவறிப் போயிருந்தேன் என்பதில் சந்தேகமில்லை. மேஜை இழுப்பறையிலிருந்து ஒரு துணியை எடுத்து அவனுடைய கழுத்தைச் சுற்றிப் போர்த்தி முடிச்சுப் போட்டேன். அவன் பேசுவதை நிறுத்துவதாகத் தெரியவில்லை. அவனுடைய கட்சிமீது நான் அனுதாபம் கொண்டிருப்பதாக அவன் நினைத்துக் கொண்டிருக்கக்கூடும்.

'எங்கள் செய்கையிலிருந்து இந்த ஊர் ஒரு பாடத்தைக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும்,' என்றான் அவன்.

கறுத்த, வியர்வை கசகசத்த அவனுடைய கழுத்தின் கீழ்ப்பகுதியில் முடிச்சுப் போட்டபடியே 'ஆமாம்' என்றேன்.

'அன்றைக்குப் பள்ளிக்கூடத்தில் நடந்தது அற்புதமான சம்பவம், இல்லையா?'

'ஆமாம், நன்றாக இருந்தது.' என்று சொல்லியபடி பிரஷ்ஷை எடுக்கத் திரும்பினேன்.

களைப்பை வெளிப்படுத்தும் பாவத்தோடு அவன் கண்களை மூடிக்கொண்டு சோப்பின் குளிர்ச்சியான ஸ்பரிசத்துக்காகக் காத்துக்கொண்டிருந்தான். இவ்வளவு நெருக்கமாக எப்போதும் அவன் என்னருகில் இருந்ததில்லை. நான்கு புரட்சியாளர்களைத் தூக்கிலிடுவதைப் பார்ப்பதற்காக பள்ளிக்கூட உள்முற்றத்தில் நகர மக்கள் எல்லாரையும் கூடச் சொல்லி அவன் உத்தரவிட்டிருந்த அந்த ஒரு நாளில் அவனை முகத்துக்கு நேராக ஒரே ஒரு கணம் பார்த்திருக்கிறேன். சிதைந்துபோன உடல்களின் கோரக்காட்சி, அன்றைய சம்பவத்தை ஏவி நடத்திய அவனுடைய முகத்தை நான் பார்ப்பதைத் தடுத்தது; அந்த முகத்தை இப்போது நான் என் கைகளில் ஏந்தப் போகிறேன்.



படிப்பகம்

www.padippakam.com

**வெறும் ஒரு சிறு சத்தத்துடன் இந்தத் தொண்டையை என்னால் அறுத்துவிட முடியும்! எதிர்த்துப் போராட அவனுக்கு நான் நேரம் தரமாட்டேன்;**

வெறுப்பைத் தூண்டும் முகமல்ல அது; அவனுடைய வயதை கொஞ்சம் கூட்டிக் காட்டிய தாடியும் அவனுக்குப் பொருந்தாமலில்லை. அவனுடைய பெயர் டோரெஸ்- கேப்டன் டோரெஸ். கற்பனை நிரம்பியவன்தான்; ஏனென்றால், வேறு யார் புரட்சியாளர்களை நிர்வாணமாக்கி தூக்கிலிட்ட பிறகு, துப்பாக்கியால் சுட்டு பயிற்சி பெற அவர்களுடைய உடல்களை இலக்குக் குறிகளாக்குவார்கள்?

சோப்பின் முதல் பூச்சைத் தொடங்கினேன். மூடியகண்களுடன் அவன் தொடர்ந்தான், 'எந்த முயற்சியும் இல்லாமல் என்னால் நேராக தூங்கப் போக முடியும்; ஆனால், இன்று பிற்பகல் நிறைய வேலை இருக்கிறது.'

சோப் நுரையை பூசுவதை நிறுத்திவிட்டு ஆர்வம் தொனிக்காத பாவனையில் கேட்டேன், 'புரட்சியாளர்களை சுட்டுக்கொல்லப் போகிறீர்களா?'

'அதுமாதிரிதான். ஆனால் போனதடவை போல வேகம் இருக்காது.'

அவனுடைய தாடிக்கு நான் தொடர்ந்து சோப் நுரையைத் தடவினேன். என்னுடைய கைகள் மீண்டும் நடுங்க ஆரம்பித்தன. அதை அவன் உணர்ந்திருக்க வாய்ப்பில்லை; இது எனக்கு சாதகமாக இருந்தது. அவன் என்னுடைய கடைக்கு வராமலிருந்திருப்பதையே நான் விரும்பியிருப்பேன். என்னுடைய குழுவிலிருக்கும் பலபேர் அவன் இங்கு நுழைந்ததைப் பார்த்திருக்கக் கூடும். மேலும், நம் இருப்பிடத்துக்கு வந்திருக்கும் நம்முடைய எதிரி சில கட்டுப்பாடுகளை நம்மீது விதிக்கிறான்.

என்னிடம் வரும் எந்த வாடிக்கையாளருடைய தாடியையும், கவனமாகவும், மென்மையாகவும் எந்த ஒரு மயிர்க்கண்ணும் ஒரு சொட்டு ரத்தத்தைக்கூட வெளியேற்றாதபடியும் சவரம் செய்யும் கடமை எனக்கு உண்டு. கத்தியின் இழுப்பை சிறு மயிர்க்கொத்துக்கள் வழிதவறும்படி செய்யவிடாமல் கவனமாக இருக்க வேண்டும். சவரம் முடிந்த பிறகு வாடிக்கையாளருடைய சருமம் சுத்தமாக, மிருதுவாக, ஆரோக்கியமாக இருக்கும்படியாகவும், என்னுடைய புறங்கையால் அவனுடைய சருமத்தைத் தடவினால் ஒரு முடியைக்கூட நான் உணராதபடியும் விழிப்பாக இருக்க வேண்டும். நான் ஒரு ரகசிய புரட்சியாளன் என்பது உண்மைதான்; ஆனால் அதே சமயம் நான் ஒரு மனசாட்சியுள்ள நாவிதனும்தான்; என்னுடைய தொழிலுக்குத் தேவைப்படும் துல்லியம் குறித்த பெருமிதமும் எனக்குண்டு.

சவரக்கத்தியை எடுத்து அதன் பாதுகாப்புப் பகுதிகளை விரித்து ஒரு பக்க காதோர முடியிலிருந்து கீழ்நோக்கி சவரத்தைத் தொடங்கினேன். கத்தி அற்புதமாக அவனுடைய தாடிக்கு ஈடு கொடுத்தது. அவனுடைய முரட்டு தாடி அதிக நீளமாக இல்லாமல் அதே சமயம் அடர்த்தியாக இருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக சருமம் வெளியே தெரிய ஆரம்பித்தது. சோப்பு நுரையும் மழிக்கப்பட்ட மயிர்க்கற்றையும் கத்தியின் இயக்கத்தோடு சேர்த்து வரும்போது வழக்கமாக உண்டாகும் சத்தம் கேட்டது.

வேலையைத் திருத்தமாக செய்யும் நாவிதன் என்பதால் நான் ஒரு கணம் சவரம் செய்வதை நிறுத்தி கத்தியைத் துடைத்துவிட்டு மீண்டும் தீட்டுவாரை எடுத்து கத்தியைத் தீட்டினேன். கண்களை மூடிக்கொண்டிருந்த அவன் அப்போது கண்களைத் திறந்து துணியின் அடியிலிருந்து

ஒரு கையை எடுத்து சோப்பு நுரை நீங்கி சவரம் செய்யப்பட்ட இடத்தைத் தடவிப் பார்த்துவிட்டு சொன்னான், 'இன்றைக்கு ஆறு மணிக்கு பள்ளிக்கூடத்துக்கு வா.'

'அன்றைக்கு நடந்தது போலவா?' என்று பீதியுடன் கேட்டேன்.

'அதைவிட மேலானதாகவும் இருக்கலாம்,' என்றான் அவன்.

'என்ன செய்வதாக திட்டம்?'

'எனக்கு இன்னும் தெரியவில்லை. ஆனால் அது எங்களுக்கு கேளிக்கையாக இருக்கும்.' மீண்டும் பின்புறம் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டான். தயார்நிலையில் சவரக்கத்தியுடன் அவனை நெருங்கினேன்.

'அவர்கள், எல்லாரையும் தண்டிக்கத் திட்டமிட்டிருக்கிறீர்களா?' மருட்சியுடன் கேட்டேன்.

'எல்லாரையும்தான்'.

அவன் முகத்தில் சோப் உலர்ந்து கொண்டிருந்தது. நான் விரைந்து செயலாற்ற வேண்டும். கண்ணாடி மூலமாகத் தெருவைப் பார்த்தேன். வழக்கம்போல் மளிகைக் கடையில் ஒன்றிரண்டு வாடிக்கையாளர்கள், பிறகு கடிகாரத்தைப் பார்த்தேன் - பிற்பகல் 2.20.

இப்போது மறுபக்க காதோர முடியிலிருந்து சவரக்கத்தி கீழ்வாக்காக இறங்கியது. அடர்த்தியான நீலநிற தாடி சில கவிஞர்கள் அல்லது பாதிரிமார்கள் செய்வதுபோல அவன் அதை வளரவிட்டிருக்க வேண்டும். அது அவனுக்கு அழகாகப் பொருந்தியிருக்கும். பலரால் அவனை அடையாளம் கண்டுகொள்ள முடியாது. அது அவனுக்கு சாதகமாக இருந்திருக்கும் என்று நினைத்தபடியே கழுத்துப்பகுதியை மிருதுவாக சவரம் செய்ய முயன்றேன்.

நிச்சயமாக அந்த இடத்தில் கத்தியை லாகவமாகப் பயன்படுத்த வேண்டியிருந்தது. ஏனென்றால், மிருதுவாக இருந்தாலும் முடி அந்த இடத்தில் சிறு சுழல்களாக வளர்ந்திருந்தது. சுருட்டைத் தாடி சிறு மயிர்க்கால்களில் ஒன்று திறந்து கொண்டு ரத்தத்தை முத்தாக வெளியேற்றலாம்; ஆனால் ஒரு வாடிக்கையாளருக்கு இது எப்போதும் நேர அனுமதிக்காமலிருப்பதில்தான் ஒரு நல்ல நாவிதன் பெருமிதம் கொள்வான்.

எங்களில் எத்தனைபேரை சுட்டுக் கொல்ல உத்தரவிட்டிருக்கிறான்? எங்களில் எத்தனை பேரின் உடல்களை உருக்குலைக்க அவன் உத்தரவிட்டிருக்கிறான்? அதைப் பற்றி நினைக்காமலிருப்பதே நல்லது. நான் அவனுடைய எதிரி என்பது டோரெஸுக்குத் தெரியாது.



படிப்பகம்

www.padippakam.com

அவனுக்கும் தெரியாது. பிறருக்கும் தெரியாது. கொஞ்ச பேருக்கு மட்டுமே தெரிந்த ரகசியம் அது: அப்படி இருந்தால்தான் நகரத்தில் டோரெஸ் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்பதையும், புரட்சியாளர்களை வேட்டையாட அவன் மேற்கொள்ளும் ஒவ்வொரு பயணத்தின்போதும் அவன் என்ன திட்டமிடுகிறான் என்பதையும் என்னால் புரட்சியாளர்களுக்குத் தெரிவிக்க முடியும்.

எனவே, அவனை என்னுடைய கைகளுக்குள்ளேயே வைத்திருந்துவிட்டு சவரம் செய்து உயிருடன் அமைதியாக அனுப்பிவிட்டேன் என்பதை விளக்கிச் சொல்வது எனக்கு மிகவும் சிக்கலாக இருக்கப்போகிறது.

இப்போது அநேகமாக முழுதாடியும் போய்விட்டது. கடைக்கு வந்தபோது இருந்ததைவிட வயதில் குறைந்தவனாகவும் காலம் ஏற்றிய சுமை குறைந்தவனாகவும் அவன் தோன்றினான். சவரக் கடைகளுக்கு வந்துபோகும் எல்லா ஆண்களுக்கும் இது நடக்கிறது என்றுதான் கருதுகிறேன். என் சவரக்கத்தியின் இழுப்பால் டோரெஸ் இளமையூட்டப் பட்டுக் கொண்டிருந்தான்; ஊரிலேயே மிகச்சிறந்த நாவிதனாக நான் இருந்ததால்தான்-அப்படி நான் சொல்லிக் கொள்ளலாம் என்றால்-அவன் அவ்வாறு ஆனான்.

என்ன புழுக்கம்! என்னைப் போலவே டோரெஸும் வியர்த்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் அவன் அமைதியான ஒரு நபர்; இன்று பிற்பகல் அந்தக் கைதிகளை தான் என்னசெய்யப் போகிறோம் என்பதைப் பற்றிக் கூட அவன் நினைத்துக் கொண்டிருக்கவில்லை. மாறாக, இந்த சவரக்கத்தியைக் கையில் வைத்துக் கொண்டு இந்தத் தோலை மழித்துக் கொண்டிருக்கும் என்னால் தெளிவாக சிந்திக்கக் கூட முடியவில்லை.

இங்கு வந்ததற்காக இவன் நாசமாகப் போகட்டும்! நான் ஒரு புரட்சியாளன், கொலைகாரனில்லை. இவனைக் கொல்வது எவ்வளவு எளிதானது! கொல்லப்பட வேண்டியவன்தான். அப்படித்தானா? இல்லை! என்ன சிக்கல் இது! கொலைகாரனாகும் தியாகத்தைச் செய்வதற்கு இன்னொருவனைத் தூண்டுவதற்கு யாருக்கும் தகுதி கிடையாது. அதனால் நமக்கு என்ன லாபம்? ஒன்றுமில்லை. அடுத்து மற்றவர்கள் உடனே வருகிறார்கள்; மேலும் பலர் வருகிறார்கள்; முதலில் வந்தவர்கள் அடுத்து வந்தவர்களைக் கொல்கிறார்கள்; அவர்கள் தங்களுக்கு அடுத்து வந்தவர்களைக் கொல்கிறார்கள்-எல்லாமும் ரத்தக்கடலாக மாறும்வரை அது தொடர்கிறது.

வெறும் ஒரு சிறு சத்தத்துடன் இந்தத் தொண்டையை என்னால் அறுத்துவிட முடியும்! எதிர்த்துப் போராட அவனுக்கு நான் நேரம் தரமாட்டேன்; அவன் கண்களை மூடிக்கொண்டிருப்பதால் மின்னும் கத்தியையோ அல்லது என்னுடைய மின்னும் கண்களையோ அவன் பார்க்க மாட்டான். ஆனால் நான் உண்மையான கொலைகாரனைப் போல் நடுங்கிக் கொண்டிருக்கிறேன். அவன் கழுத்திலிருந்து ரத்தம் பீறிட்டு வெளியேறி துணிமேலும், நாற்காலி மேலும், என் கைகள் மேலும், தரை மேலும் கொட்டும். நான் கதவை மூடவேண்டியிருக்கும். வெதுவெதுப்பான, அழிக்க முடியாத, கட்டுப்படுத்த முடியாத ரத்தம் தரையில் மெதுவாக ஓடி ஒரு சிறு செவ்வோடை போல தெருவை அடையும்.

ஒரு உறுதியான இழுப்பு, ஒரு ஆழ்ந்த வெட்டு எந்த வலியையும் தடுத்துவிடும் என்று நான் திடமாக நம்புகிறேன். அவன் துன்பப்படமாட்டான். ஆனால் நான் அந்த உடலை என்ன செய்வது? எங்கே மறைப்பேன்? எல்லாற்றையும் விட்டுவிட்டு ஓடிப்போய் வெகு தொலைவில் எங்காவது அடைக்கலம் தேடவேண்டியிருக்கும். ஆனால் என்னைப் பின்தொடர்ந்து அவர்கள் கண்டுபிடித்து விடுவார்கள். 'கேப்டன் டோரெஸைக் கொன்றவன். அவனுக்கு சவரம் செய்யும்போது அவனுடைய கழுத்தை அறுத்தவன்-கோழை.'

அடுத்து மறுதரப்பில்: 'நம் எல்லார் சார்பிலும் பழிவாங்கியவன். நினைவில் இருத்திக் கொள்ளவேண்டிய பெயர் அவனுடையது. அவன் நம் ஊரில் நாவிதனாக இருந்திருக்கிறான். நம்முடைய போராட்டத்தை ஆதரித்திருக் கிறான் என்பது யாருக்கும் தெரிந்திருக்கவில்லை.'

கொலைகாரனா? அல்லது வீரனா? இந்த சவரக்கத்தியின் முனையைச் சார்ந்துதான் என்னுடைய விதி இருக்கிறது. என்னுடைய கையை லேசாக திருப்பி, கத்திக்கு இன்னும் கொஞ்சம் அழுத்தம் கொடுத்து அதை உள்ளே அமிழ்த்திவிட முடியும். பட்டைப்போல, ரப்பரைப்போல் சதை வழிவிடும். மனிதச் சதையைவிட அதிக மிருதுவானது வேறெதுவும் இல்லை; பீறிட்டு வெளியேற ரத்தம் எப்போதும் தயாராக இருக்கிறது.

ஆனால் நான் ஒரு கொலைகாரனாக ஆக விரும்பவில்லை. நீ வந்தது சவரம் செய்துகொள்வதற்காக. நான் என்னுடைய வேலையை கௌரவமாக செய்கிறேன்... என்னுடைய கைகளில் ரத்தம் படிவதை நான் விரும்பவில்லை. வெறும் நுரை மட்டும் போதும். நீ தூக்கிலிடுபவன். நான் வெறும் நாவிதம். சமூக அமைப்பில் ஒவ்வொருவருக்கும் ஒரு குறிப்பிட்ட இடம் உண்டு.

இப்போது அவனுடைய தாடை சுத்தமாகவும் மழமழப்பாகவும் சவரம் செய்யப்பட்டுவிட்டது. அவன் நிமிர்ந்து உட்கார்ந்து கண்ணாடியில் பார்த்தான். கையால் முகத்தைத் தடவி அதன் புத்துணர்ச்சியை உணர்ந்தான்.

'நன்றி' என்று சொன்னான். கொக்கியிலிருந்து அவனுடைய பெல்ட், துப்பாக்கி, மற்றும் தொப்பி ஆகியவற்றை எடுக்கப் போனான். நான் வெளுத்துப்போய் தோன்றியிருக்கக்கூடும்; சட்டை நனைந்து போனது போல இருந்தது. பெல்ட்டின் இணைப்பை சரிசெய்து கொண்ட டோரெஸ் உறையில் துப்பாக்கியை நேராக்கிக்கொண்டு தொப்பியை அணியும் முன்பாக தலைமுடியை அனிச்சையாக பின்புறமாக நீவி விட்டான். கால்சட்டைப் பையிலிருந்து சில நாணயங்களை எடுத்து என்னுடைய வேலைக்காகக் கொடுத்துவிட்டு கதவை நோக்கி நடந்தான்.

வாசற்படியில் கொஞ்சம் தயங்கி நின்றபின் அவன் சொன்னான், 'நீ என்னைக் கொன்றுவிடுவாய் என்று அவர்கள் சொன்னார்கள். அது நடக்குமா என்று பார்க்கத்தான் வந்தேன். ஆனால் கொல்வது அவ்வளவு எளிதல்ல. இந்த விஷயத்தில் நீ என்னுடைய வார்த்தையை நம்பலாம்.' சொல்லிவிட்டு திரும்பிய அவன் நடந்து போய்விட்டான்.

◆

*ஸ்பானிஷ் மொழியிலிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்:* Donald A. Yates



படிப்பகம்

www.padippakam.com

# கொல்கதாவில் கிறிஸ்துவின் முதல் புன்னகை

சட்டென்று விழிப்பு வந்தது. கூடவே வலியும். கண்களைத் திறப்பதில் சிரமம் இருந்தது. வெப்ப ஊசிகளாய் சூரியனின் கதிர்கள் கண்களை ஊடுருவின. வெயில் கடுமையாகத்தான் இருந்தது.

'தண்ணீர்... தண்ணீர்....'

வெடித்துக் காய்ந்திருந்த உதடுகள் முணுமுணுப்புக் காற்றை வெளியேற்றின. ரத்தத்தால் தோய்ந்திருந்த தனது நிர்வாண உடம்பை ஒருதரம் அவன் பார்த்துக் கொண்டான். ஆணியால் அடிக்கப்பட்டிருப்பது தனது உடல் மட்டுமல்ல, தனது பார்வைக் கோணமும்தான் என்று புரிந்து கொண்டான். சற்றுத் தொலைவிலிருந்து பார்ப்பவர்களுக்கு சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் தன் உடல் மரத்தில் கட்டித் தொங்கவிடப்பட்ட பொம்மையைப் போல் தோன்றக்கூடும் என்று நினைத்தான்.

ஆணிகளால் அறையப்பட்ட தனது ஒரு ஜோடி பாதங்களும், கைகளும் தாங்கமுடியாத வலியை இன்னமும் உணர்த்திக் கொண்டிருந்தன. விரல்கள் வேதனையைத் தாளாமல் தன்னிச்சையாகத் துடித்துக் கொண்டிருந்தன. இதுபோன்ற தருணங்களில்தான் உடல் என்பது மனிதனுக்கு எத்தனை பெரிய எதிரி என்பது மோசமான உண்மையாக தெரியவருகிறது.

அவனது வலது பக்கத்தில் ஒருவனும் இடது பக்கத்தில் ஒருவனுமாக இரண்டு குற்றவாளிகள் சிலுவையில் அறையப்பட்டிருந்தார்கள். அவர்களில் ஒருவன் பாரபாஸ். அவன் முகத்தில் இகழ்ச்சி குடிகொண்டிருக்கும் என்று இவன் யூகித்துக் கொண்டான். வாழ்நாள் பூராவும் இரண்டு பேரும் எதிரான கருத்தாடல்களுடன் மோதிக் கொண்டிருந்தோம். இப்போது இரண்டு பேருமே அக்கம்பக்கமாக சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கிறோம். வழிகள் வேறானதாக இருந்தபோதிலும் விதி ஒன்றாக இருக்கிறது!

இவனது சிலுவையினருகே அம்மா மரியாளும், மரியாளின் சகோதரியான கிலேயோப்பா மரியாளும் மகதலேனா மரியாளும் நின்று கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளி கொஞ்சம் தொலைவில் அவனது சீடர்களும் அபிமானிகளும் நின்று கொண்டிருந்தார்கள்.

தாகம் நாக்கைப் புரட்டி எடுத்தது. தொண்டைக்குள் ஒரு பாலைவன காற்றை வீசவைத்தது. மீண்டும் முணுமுணுத்தான்:

'தண்ணீர்... தண்ணீர்'

அங்கே வைக்கப்பட்டிருந்த ஒரு பெரிய பாத்திரத்திலிருந்த காடியை, நீண்ட கழியினால் கட்டப்பட்டிருந்த கடற்பஞ்சில் தோய்த்து வாயருகே நீட்டி அந்த உதடுகளை யாரோ நனைத்தார்கள்.

பக்கத்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த குற்றவாளி இன்னும் தனது நகைச்சுவை உணர்வை இழக்கவில்லை.

'காலம் பூராவும் உன்னை யூதரின் ராஜா என்று சொல்லிக் கொண்டாயே குறைந்தபட்சம் உன்னையே காப்பாற்றிக் கொள்ள முடியாத உன்னால் எப்படி பிற யூதமக்களைக் காப்பாற்ற முடியும்?'

இந்தக் கிண்டலால் அவனுடைய இதயம் ஒரு கணம் துணுக்குற்று நிற்கிறது. பின்பு இயங்க ஆரம்பிக்கிறது.

பாரபாஸ் சொன்னான்,

'வாழ்நாள் முழுவதும் நான், நம்மை அடிமைகளாக்கி ஆளும் ரோமானியர்களை எதிர்த்து வந்திருக்கிறேன். நீயோ உன் வாழ்நாள் முழுவதும் அவர்களுக்கு அடிபணிந்தே போயிருக்கிறாய். ஒரு ரோமானியன் ஒரு யூதனின் கன்னத்தில் அடித்தால் அந்த ரோமானியனுக்கு மறுகன்னத்தைக் காட்டுமாறு உபதேசித்தாய். அந்த அளவுக்கு அடிமைத்தனத்துக்கு ஏற்றபடி தகவமைத்து கொள்ளுமாறு யூத மக்களை கூர்மழுங்கடித்தாய்.'

என்று சொல்லிவிட்டு சிரித்தான்.

உடனே இவனது முகம் ஒரு மாதிரி மாறிவிட்டது.

'ஒருவேளை நான் அப்படித்தான் செய்திருக்கிறேனோ.. உண்மையில் நான் அன்பை விதைப்பதற்கல்லவா அப்படிச் செய்தேன்; பகைவனையும் நேசி என்பது இந்த மாதிரியும் புரிந்துக் கொள்ளப்படுகிறதா என்ன?

அவன் யோசித்துப் பார்த்தான்.

இளம் வயதிலிருந்தே வாழ்க்கை அவனுக்குக் கசப்பானதாகவும், வேதனை தருவதாகவும் இருந்து வந்திருக்கிறது. கல்யாணத்துக்கு முன்பே கருவுற்று அதன் விளைவாகப் பிறந்தவன் இவன் என்பதால் தந்தை ஜோஸப் இவனிடம் ஈடுபாட்டுடன் இல்லை என்கிற சந்தேகம் இவனுக்குள் தீவிரமாக இருந்தது. அசூயையுடன் பழகும் தந்தையுடன் தச்சு வேலைக்குப் போகிற அசௌகர்யம் அவனுக்கு நேர்ந்தது. எந்த மகனுக்கும் நேரக்கூடாத துரதிருஷ்டம் அது.



படிப்பகம்

www.padippakam.com

அதைத் தாங்கிக் கொண்டு தொட்டில், கலப்பை, மரச்சாமான்கள் எல்லாம் செய்வதற்குக் கற்றுக் கொண்டான். கற்றுக் கொண்டானே தவிர அவற்றிலெல்லாம் அவனுக்கு ஈடுபாடே இல்லை. தொலைதூரத்தில் பாலைவனத்தில் இருக்கும் துறவிகளைத்தான் அடிக்கடி நினைத்துக் கொண்டான். இந்த வாழ்க்கையிலிருந்து; இதன் க்ரூரத்திலிருந்து தப்பித்துக் கொள்வதற்காகவோ அல்லது தன்னை தண்டித்துக் கொள்வதற்காகவோ அவன் பாலைவனத்தில் ஒரு துறவியாகப் போய்விட ஆசைப்பட்டிருக்கிறான்.

கீழே சேவகர்கள் அடித்துக் கொள்கிறார்கள். இவனது உடையைப் பிரித்துக் கொள்வதில் பயங்கரமான தகராறு நடந்து கொண்டிருக்கிறது.

இவனது முகத்தில் கழிவிரக்கம் தோன்றுகிறது.

இந்த அற்பஜீவிகளுக்காகவா நான் சிலுவையில் அடிபட்டு செத்துக் கொண்டிருக்கிறேன்? என்ன அபத்தம் இது! ஆனாலும் நான் இவர்களுக்காகவும்தானே சிலுவையில் துன்பப்பட்டாக வேண்டும். நான் தேவகுமாரன். இவர்களை எனது ரத்தத்தால் சுத்திகரிக்க வந்தவன்.

கொஞ்சம் கொஞ்சமாகப் புலன்கள் மங்குகின்றன. அழுகைக்குரல் மகதலேனாவினுடையது போல் இருக்கிறது - மகதலேனா அழாதே. நான் சாகமாட்டேன்.

சேவகர்களின் கூச்சல்... சண்டை....

இதெல்லாம் ஏன் இப்படி ஆயிற்று?

'கோழை! பொய்யன் சதிகாரன்!

இவனைச் சிலுவையில் அறையுங்கள்'

பிலாத்துவின் எதிரே சதிக்குற்றம் சாட்டப்பட்டு இவன் நின்றபோது சுற்றியிருந்த ஜனங்கள் இப்படித்தானே கத்தினார்கள்.

பிலாத்து எரிச்சலுடன் கேட்டான்;

'உன்னைப் பார்த்தால் எனக்குப் பாவமாக இருக்கிறது. உன்னை விட்டுவிடுவதா அல்லது சிலுவையில் அறைவதா என்றே எனக்குத் தோன்றவில்லை. பாவம் நீ'

'மன்னிக்க வேண்டும் பிலாத்து. நான் தேவகுமாரன். என்னை விடுவிப்பதற்கும் சிலுவையில் அறைவதற்கும் உனக்கு அதிகாரமில்லை. அந்த அதிகாரம் ஒருத்தருக்கு மட்டுமே உண்டு. அவர் கடவுள்'

மக்கள் பேயாய்க் கத்துகிறார்கள்.

'கொல்லு.. அவனைக் கொல்லு.'

பிலாத்து மக்களைப் பார்க்கிறான் பின்பு இவனைப் பார்த்துக் கேட்கிறான்.

'அவர்கள் ஏன் உன்னை இப்படி வெறுக்கிறார்கள். அவர்களுக்காகத்தான் நீ உழைத்தாய். உன்னை ஏன் அவர்கள் நம்ப மறுக்கிறார்கள்?'

இவன் பெருமூச்சு விட்டான்.

லாஸரஸைக் கொன்ற பாரபாசும் அப்போது அங்கேதான் பிடித்து வைக்கப்பட்டிருந்தான். யூதர்களின் பண்டிகை தினமான அன்று கைதிகளை விடுவிக்கும் மரபும் இருப்பதால் அந்த மரபை சாக்காக வைத்து இவனை விட்டுவிடலாம் என்று பிலாத்து நினைத்தான். அதனால் கூட்டத்தைப் பார்த்துக் கேட்டான்.

'இப்போது நான் உங்களிடம் ஒரு பிரச்சனையை முன் வைக்கப்போகிறேன். பண்டிகை நாளான இன்று ஒரு குற்றவாளியை மன்னித்து விட்டுவிடலாம் என்று இருக்கிறேன். இங்கே நம்மிடையே இரண்டு குற்றவாளிகள் இருக்கிறார்கள். ஒருவன் யேசு; இன்னொருவன் பாரபாஸ். இந்த இரண்டு பேரில் யாரை விடுவித்து விடலாம் என்று நீங்கள்தான் சொல்ல வேண்டும். அவனை மன்னித்து விடு வருகிறேன்.'

உடனே கூட்டம் ஆர்ப்பரிக்கிறது.

'பாரபாஸை விட்டுவிடு; யேசுவை சிலுவையில் அறைந்து கொல்!'

'ஏன் இவர்கள் என்னை மறுதலித்து விட்டார்கள். யேசுவுக்கு வியப்பாக இருக்கிறது. பாவிகளே பார்த்துக் கொண்டே இருங்கள்; என் தேவன் உங்கள் அனைவரின் கண்களுக்கும் முன்பாக வந்து என்னை ரட்சித்து அழைத்துப் போக வருவார்'

இப்படி நினைக்கும்போதே அவனுக்குள் நிம்மதி பரவியது. அது முகத்தில் தெரிந்தது. திடீரென்று வலி உடம்பிலிருந்து நழுவிய மாதிரி இருந்தது. என்ன ஆயிற்று எனக்கு; சாகிறேனோ நான்? கண்கள் இருட்டுகின்றன. கொஞ்சநேரத்தில் வலியிலிருந்தும் வேதனையிலிருந்தும் விடுதலை கிடைத்துவிடுகிறது.

அவன் மீண்டும் விழிக்கையில் எங்கும் அந்தகாரம் வரவேற்கிறது. நள்ளிரவாகி இருக்கும்போல் தோன்றுகிறது. சந்திரன் வானத்தின் மத்தியில் வந்திருக்கிறான். எங்கும் அமைதி நிலவுகிறது. இரண்டு புறமும் தொங்கிக் கொண்டிருந்த சகபயணிகள் இருவரும் அமைதியிலாழ்ந்திருக்கிறார்கள். ஒருவேளை இறுதிப் பயணம் போய் சேர்ந்து விட்டார்களோ?



படிப்பகம்

www.padippakam.com

இன்னும் என் தேவன் ஏன் வரவில்லை. என்ன ஆயிற்று அவருக்கு. இத்தனை மக்கள் திரண்டிருந்தார்களே, அவர்கள் கண்களின் மத்தியில் என்னை அவர் அழைத்துக் கொண்டு போயிருந்திருக்க வேண்டாமோ? அற்புதத்தைக் காணக் காத்துக் கொண்டிருந்த அத்தனை பேரும் ஏமாற்றத்துடன் அல்லவா திரும்பிப் போனார்கள்




'கடவுளே ஏன் இப்படிச் செய்தாய்?'

அவன் கண்கள் கலங்குகின்றன. சட்டென்று ஒருவிதமான பீதி வந்து தாக்குகிறது. அவன் மனம் அமைதியற்று அல்லலுறுகிறது.

அப்போது ஒரு வெண்ணிறப் பறவை போன்ற ஒன்று எங்கிருந்தோ பறந்து வருகிறது. அவன் முகத்துக்கு நேரே சுற்றிச் சுற்றித் திரிகிறது.

யார் இது தேவதையா அல்லது சாத்தானா?

'யார்.. யார் நீ?'

'நான் தேவதூதன். உன் உயிர் பிரியப் போகிறது. உன்னை அழைத்துப் போகவே நான் வந்தேன்.'

'உன்னை யார் வரச் சொன்னது. தேவன் அல்லவா என்னை வந்து அழைத்துப் போக வேண்டும்.'

'ஒரு நாளைக்கு எத்தனையோ பேர் சாகிறார்கள். அத்தனை பேரையும் எப்படி தேவனால்
நேரில் வந்து அழைத்துப் போக முடியும்? நடக்கிற காரிமாய்ப் பேசு.'

இவனுக்குள் பீதி படர்ந்தது. கண்கள் கலங்கினான்.

'யேசு, ஏன் எதற்கெடுத்தாலும் முகம் வெளுத்துப் போகிறாய். வேதனையில் உழல்கிறாய். உன்னைப் பார்த்தாலே எனக்குப் பாவமாக இருக்கிறது. வாழ்நாளில் ஒரு முறையாவது நீ சிரித்திருக்கிறாயா? யோசித்துப்பார். மனிதன் என்பவன் சிரிக்கவும் வேண்டும்.'

யேசுவுக்கு அப்போதுதான் ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது. நான் என் வாழ்நாளில் ஒரு தடவை கூட சிரித்ததே இல்லையே. நினைத்துப் பார்க்கவே வியப்பாகத்தான் இருந்தது. எங்கே சிரிக்கிற மாதிரியான தருணங்கள் வாய்த்தன. ஜோஸப்புடன் தச்சுவேலை செய்தபோது, மகதலேனாவை கற்களால் மக்கள் அடித்ததைத் தடுத்தபோது, சீடர்களில் ஒருத்தன் காட்டிக் கொடுத்தபோது, யாருடைய பாவங்களைக் கழுவுவதற்காக நான் வந்தேனோ அவர்களே நிராகரித்துவிட்டபோது... இது போன்ற மோசமான தருணங்களே வாழ்க்கையில் எதிர் கொண்டன. எப்படி சிரிப்பது? இப்போது

சிரித்துக்கொள். அதன் பிறகு உன் உயிரை எடுத்துக் கொள்கிறேன்.'

திகீர் என்றது அவனுக்கு. அவ்வளவுதானா. நானும் சாகப் போகிற சாதாரண மானுடன்தானா. அவனால் அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

மனம்பதற உடல்பதற திகிலுடன் உரத்துக் கத்தினான்.

'ஏலீ ஏலீ லாமா சபக்தானி...
ஏலீ ஏலீ லாமா சபக்தானி...
(கடவுளே கடவுளே ஏன் என்னை கைவிட்டீர்)

தொண்டைக் கிழிய கத்தியவுடன் ஒரு புன்னகை அவன் உதட்டில் முதன் முறையாக உற்பவித்தது. அது ஒரு விரக்திப் புன்னகை. அவன் தான் ஒரு மனுஷகுமாரன் தான் என்பதைப் புரிந்து கொண்ட புன்னகை. அதுவரை அவனை மறுதலித்தவர்கள் எல்லாம் அதன் பிறகுதான் தன்னை தேவகுமாரன் என்று ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பதை உணர்ந்து கொண்டதால் விளைந்த புன்னகை. எந்த ரோமானியர்கள் இவனை சிலுவையில் அறைந்தார்களோ அவர்கள்தான் இவனை முதலில் தேவகுமாரன் என்று ஏற்றுக் கொள்ளப் போகிறார்கள் என்பதை அறிந்து கொண்டதனால் வந்த புன்னகையாக இருக்குமோ? ஒருவேளை நகை முரண் ஒன்றைப் பற்றி யோசித்ததால் உருவான முரண்நகையாக அது இருக்குமோ?

♦

**எம்.ஜி.சுரேஷின் ''சிலந்தி'' நாவலிலிருந்து.......**



படிப்பகம்

www.padippakam.com

# பால் சக்கரியாவிடமிருந்து

இந்தச் சிறுநாவல், மொழிபெயர்ப்பாளரான திரு. சுகுமாரனின் கைகளினூடே தமிழ் வாசகர்களை அடைவது என்னை மிகவும் மகிழ்ச்சி கொள்ளச் செய்கிறது.

மலையாளிகள் தங்களது இலக்கியம் பற்றியும் கலாச்சாரம் பற்றியும் மிகுந்த பெருமை கொண்டிருப்பவர்கள். சரித்திரம், சூழ்நிலை, இயற்கை ஆகியவற்றின் வரத்தால் பல நல்ல செயல்களைச் செய்துமிருக்கிறார்கள். மலையாள இலக்கியம் உன்னத உயரங்களில் சஞ்சரிக்கும் நிமிடங்களும் உருவாகியுள்ளன. மறுபக்கம், ஆடம்பர வீடுகளின் உயரத்திலும் பிரம்மாண்டத்திலும் மலையாளிகள் ரிக்கார்டு ஏற்படுத்துகிறார்கள். நாங்கள் தின்னுகிற கறிவேப்பிலையிலிருந்து குருவாயூரில் அர்ப்பணம் செய்யும் பூக்கள் வரை, எழுதுகிற சிலேட்டிலிருந்து சாப்பிடும் அரிசி வரை தமிழ் நாட்டிலிருந்துதான் இங்கே வருகிறது. பதிலுக்கு கொடுக்கும் தண்ணீரின் பேரில் இங்கேதான் எத்தனை நறநறப்பு! சஹ்ய பர்வதத்தின் மேற்காகப் பாயும் நீரில் தொண்ணூறு சதவீதத்தை, அடிமணல் வரைக்கும் சுரண்டியெடுத்து, நதியைக் கீறிக் காயப்படுத்திய பிறகு கடலில் பாய்ந்து கலக்க விடுகிறோம். ஆனால் கிழக்கு நோக்கி ஓடும் நீரைப் பயன்படுத்தி தமிழ் மக்கள் பூமியில் சொர்க்கத்தை உருவாக்குவதை, தமிழ்நாட்டில் பயணம் செய்யும்போது நான் பார்த்திருக்கிறேன்.

என் நண்பர்களிடம் நான் திரும்பத் திரும்பச் சொல்லும் ஓர் உண்மை - மலையாளியான நமக்கு இருப்பது படாடோபம் மட்டுமே. சம்பளம் வாங்கவும் தின்று தீர்க்கவுமே நமக்குத் தெரியும். இல்லையென்றால் கேரளத்தைவிட்டு வெளியேறி 'காசின் நிர்வாணம்' தேடத் தெரியும். நீடித்து நிற்கும் கலாச்சாரம் தமிழ் நாட்டினுடையது. நாம் வெறும் நினைவாக மிஞ்சும் வரை அவர்கள் நிலைத்திருப்பார்கள்.

கிறிஸ்தவப் பெயருடைய நான் முஸ்லிம் நண்பருடன் தமிழ்நாட்டில் பிரசித்தி பெற்ற கோவில்களில் தரிசனத்துக்காகப் போயிருக்கிறேன். ஒரு கோவிலில் கூட, எங்கள் பெயரைக் கேட்ட பின்பும், நாங்கள் கடவுளைத் தரிசிப்பதை யாரும் தடை செய்ததில்லை. இதுவே குருவாயூரிலோ, ஸ்ரீபத்மநாபசுவாமி க்ஷேத்திரத்திலோ கேரளத்திலுள்ள மற்ற அநேக ஆலயங்களிலோ எனில் நாங்கள் வெளியே தள்ளப்பட்டிருப்போம் அல்லது விரட்டியடிக்கப் பட்டிருப்போம். கடவுளின் முன்னிலையிலான இந்த சமநோக்குதான் தமிழ்க் கலாச்சாரத்தின் அஸ்திவாரம்.

எழுத்தாளன் என்ற நிலையில் என்னை பிடித்து உலுக்கிய ஒரு சம்பவம் அண்மையில் நிகழ்ந்தது. தெஹல்கா டாட் காம் நிறுவனம் விமர்சனத்துக்காக ஒரு தமிழ் நாவலை எனக்கு அனுப்பி வைத்தது. அசோகமித்திரனின் 'தண்ணீர்' நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பு. மலையாளி புத்திஜீவியின் நிரந்தர உதாசீனத்தோடும் அகந்தையோடும் அதை வாசிக்கத் தொடங்கினேன். ஒவ்வொரு பக்கம் புரளும் போதும் என்மனம் பதைக்கத் தொடங்கியது. ஒவ்வொரு பக்கம் முடியும்போதும் நான் ஒரே சமயத்தில் பதற்றமும் ஆனந்தமும் அடைந்தேன். என்னுடைய முன்தீர்மானங்கள் வீசியெறியப்பட்டன. என்னுடைய மலையாளி கர்வம் அடங்கியது. ஜமுனாவும் சாயாவும் டீச்சரம்மாவும் என்னை அவர்களது தனிமைக்கும் துக்கங்களுக்கும் தண்ணீரில்லாத நாட்களுக்கும் ஒரு பிஞ்சுக் குழந்தைபோல கைப்பிடித்து அழைத்துச் சென்றார்கள். கடின இதயமுள்ளவனான நான் இடையிடையே எனது ஈரமான கண்களை ரகசியமாகத் துடைத்துக் கொண்டேன் 'தண்ணீரை' வாசித்து முடித்தப்பிறகு நான் சிறிது நேரம் மரத்துப் போய் உட்கார்ந்திருந்தேன்.

1971 இல் எழுதிய நாவல். இந்த முப்பது வருடங்களாக கேரளத்தில் நாங்கள் இலக்கியத்தின் பெயரால் என்னவெல்லாம் சமத்காரங்களும் குலுக்கல்களும் தமுக்கடிப்புகளும் நடத்தியிருக்கிறோம். அப்போதெல்லாம் களங்கமில்லாத ரத்தினம் போல இந்த நாவல் தமிழ் மண்ணில் எளிமையும் நிர்மலமுமான வாழ்க்கையை, நவீனத்துவத்துக்கும் அதிநவீனத் துவத்துக்கும் அப்பாலுள்ள நிரந்தர மனிதத்துவத்தின் உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிருக்கிறது 'தண்ணீரை முப்பது வருடங்களுக்கு முன்பே வாசித்திருந்தால் நான் இன்னும் மேன்மையான மனிதனும் எழுத்தாளனுமாகியிருந்திருப்பேன்.

எனவே, எனது இந்தச் சிறுநாவலை தமிழ் வாசகர்களின் கரங்களில், பணிவுடனும் சங்கோஜத்துடனும்தான் சேர்ப்பிக்கிறேன். காந்திஜீயைக் கொன்றவர்களின் குலம் இந்தியாவை ஆட்சி செய்து கொண்டிருக்கும் இன்றைய களங்கம் படிந்த நாட்களுக்கு ஓர் அடிக்குறிப்பு இந்தப் படைப்பு. இதன் ஏதேனும் ஓர் அம்சம் உங்களை ரசிக்கவோ சிந்திக்கவோ தூண்டினால் நான் நிறைவு பெற்றவனாவேன்.

*நன்றி - அகரம் வெளியீடாக வெளிவந்துள்ள* **இதுதான் என் பெயர்** *நாவலின் முன்னுரை.*

◆



படிப்பகம்

www.padippakam.com



# புனைவுகளின் தளம்

ந. முருகேச பாண்டியன்

**சொல் என்றொரு சொல்**
**ரமேஷ் - பிரேம்**
வெளியீடு: காவ்யா, பெங்களூர், பக்: 315, விலை: ரூ.125.00

'சொல்'-நவீன வாழ்க்கையின் இயங்குதளம். சொல்லினால் கட்டமைக்கப்படும் புனைவுகள் வெளியெங்கும் மிதக்கின்றன. ரமேஷ்-பிரேம் சொற்களினால் புனைந்துள்ள ஆக்கமானது வாசிப்பில் எனக்குள் தோற்றுவித்த சொல் 'அமானுஷ்யம்'. இச்சொல்லை எப்படி வேண்டுமானாலும் இழுத்து அர்த்தப்படுத்திக் கொள்ளலாம். அமானுஷ்யம் இக்கணத்தில் 'பேய்' என்ற சொல்லாக வடிவெடுக்கிறது; கொக்கரிக்கிறது.

அறுபதுகளின் முற்பகுதியில் எனக்கு எட்டு வயதிருக்கும். மின்சாரம் ஏதாவது ஒரு வீட்டில் குண்டு பல்ப்பாக மங்கலாக இருக்கும். சாயங்காலம் விளையாடத் தொடங்கியதும், இருட்டாகிறப்ப பேய்க் கதை சொல்றதில போய் முடியும். கதைகளிலிருந்து வெளியேறிய பேய்கள் தெருக்களில் உலாவும். அதிலயும் செக்கடி முண்டம் வானத்துக்கும் பூமிக்கும் அர்த்த ராத்திரியில நடந்து வரும். எங்க வீட்டுப் பக்கத்துச் சந்துல முனியோடும், வெளிக்கிப் போற மூக்க நாடான் கொல்லை; குதியாட்டம் போடுற முட்டிக் கிணறு; வைகை ஆறு; புளிய மரம், பாலத்து மதகு... இப்படி ஊர் முழுக்கப் பேய்களின் ராஜ்யம்தான். ராத்திரி வயலுக்கு தண்ணிப் பாய்ச்சப் போனப்ப, நாண்டுக்கிட்டுச் செத்துப்போன பூச்சி கிழவியைப் பார்த்தேன்னு சத்தியம் பண்ற பெரிசுக ஊருக்குள்ள நிரம்ப உண்டு. பேயோட்டுறவன் அடிக்கிற கோடாங்கி ராத்திரி முழுக்க 'ட்வீன்... ட்வீன்'னு கேட்டுக்கிட்டே இருக்கும். எங்கேயும் ஒத்தையாப் போயிர முடியாது. சந்துக்குள்ளே, மரத்திலே, மூலை முடுக்கெல்லாம் ஏதாவது பேய், முனி இருக்கும். எங்க வாழ்க்கை முழுக்கப் பேய், முனி போன்ற அமானுஷ்ய சக்திகளுடன் கலந்து கிடந்தது. இப்ப யோசிக்கிறப்ப அதெல்லாம் வேடிக்கையாகத் தெரிஞ்சாலும், இன்னக்கி வேற வகையான அமானுஷ்யமான புனைவுகளுடன் வாழ்வதாகத் தோன்றுகிறது. நமக்கென்று அசலான கருத்துத் தோன்றுவதற்கான தளமிருக்கான்னு ரொம்ப யோசிக்க வேண்டியிருக்கு. எல்லாமே தகவல் தொடர்வு ஊடகங்களின் புனைவுகளில் வெளியெங்கும் படிமங்களாகிக் கொண்டிருக்கின்றன. அரசியல், இலக்கியம், கலை... சகலமும் நுண்ணிய அலைவரிசைகளில் நம்மைத் தகவமைக்கின்றன. புதியதான அமானுஷ்ய சக்திகளின் ஆதிக்கம் வேற வழிகளில் பரவுகிறது. இதுக்கு இதுதான்னு உத்திரவாதம் எதுவும் தர முடியவில்லை. எதையும் தீர்மானகரமானதாக முடிவெடுத்துச் சொல்லுவது சாத்தியமற்றுள்ளது. கடைசியில் மீதமிருப்பது என்னவென்று பார்த்தால், எதிரே மலை போல குவிந்து கிடக்கின்றன 'சொற்கள்'. சொற்களை இஷ்டத்துக்குக் கலக்கி அடுக்கிச் சிதைத்துப் புனைவதன்மூலம் ஸ்தாபிக்கப்படும் உலகம் அதியற்புதமாக மின்னுகிறது. இந்த இடத்தில் ரமேஷ் - பிரேம் *'சொல் என்றொரு சொல்'* என்ற பேனரின் கீழ் குவித்து வைத்துள்ள சொற்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. சொற்களின் பிணைப்பில் உருவாகும் தொடர்களும் அவை முன்னிறுத்தும் அர்த்தங்களும் பல்வேறுபட்ட கதையாடல்களை






படிப்பகம்

www.padippakam.com

மரவட்டைகள் விரைந்தோடும் உந்துகளின் சக்கரங்களில் நசுங்கி கொல்லப்படுகின்றன. ஏதாவது ஒரு மரவட்டையாவது சாலையைக் கடந்து சென்று விடாதா என்ற ஏக்கம் வாசிப்பில் தோன்றுகிறது. ஊடகம், போக்குவரத்து இன்று மனிதர்களைச் சூழலிலிருந்து பிரித்து அத்துவானக் காட்டில் தவிக்கவிடுவது குறித்த பிரக்ஞையில் மரவட்டை குறியீடாக உள்ளது. இயற்கையின் சமநிலைப் பாதிப்பென்பது மரவட்டைக்கு மட்டுமல்ல; எல்லோருக்கும்தான். மரவட்டைக்காக சிறுவன் சக்கரத்தில் நசுங்குவதென்பது ஒருவிதமான அபாய எச்சரிக்கை. ரமேஷ் - பிரேம் மொழி ஆளுமையின் சிறப்பினுக்கு எடுத்துக் காட்டாக மரவட்டைச் சித்தரிப்பு உள்ளது.

கதையாடலில் 'நானும் என் பிணமும்' பகுதியானது தமிழ் வாழ்க்கை குறித்த அடிப்படையான கேள்விகளை எழுப்புகிறது. தமிழ்ப் பிம்ப உருவாக்கலில் முக்கிய அம்சம் 'காதல்'. அழகிய இளம் பெண்ணைக் கண்டவுடன் காதல் வயப்படும் சராசரி தமிழன், அவளோ இன்னொருவனைக் காதலித்துக் காதல் நிறைவேறாமையினால் தற் கொலை செய்து கொள்கிறாள். அவளை நேசித்துத் தோல்வியடைந்த இளைஞன், கண்களில் மோகம் வழிய, அவளது பிணத்துடன் உறவு கொள்கிறான். இது வெறுமன பிணத்துடனான வக்கிர புணர்ச்சியல்ல; தமிழ்ச் சூழலில் பெண்ணுடல் பிணமாகிப் போவதைச் சூசகமாகக் காட்டுகிறது; கதையாடல் வேறுதளத்திற்கு விரிகிறது.

தன்னுடலையே பிணம் என்று கருதும் இளைஞன், அதை வெளியே தூக்கிச் சென்று வெளியே கடாசிவிட்டு அறைக்குத் திரும்புகையில் கட்டிலில் கிடக்கும் தன் பிணத்தைக் கண்டு எரிச்சலடை கிறான். தமிழர்களின் உடம்பு என்பது மனத்துடன் தொடர்பற்றுச் சமூகம், குடும்பத்தின் சொத்தாக மாறிப் போகின்றது. சொந்த உடல்களின் மீது சிநேகமும் நேசமும் அற்றவர்களாக மாற்றப் பட்டுள்ள தமிழர்களின் உடல்கள் மீது அரசியல் நுண்ணிய அதிகாரம் செலுத்துகின்றது. புறநெருக் கடியில் தன்னுடலை இழந்து நிற்கும் இளைஞன், சூழலில் உணர்வற்று மரத்துப் போய் பிணமான இளம் பெண் - இருவருக்கிடையிலான உறவென்பது பிணத்துடனான உறவு என்று வாசிப்புக்கு இட முள்ளது. பெண்ணுடல் மீதான அத்துமீறல், வரலாறு முழுக்க அவளை வஸ்துவாக்கி விட்டது. இன்று புணர்ச்சி நிகழ்வதற்கான களமாக மட்டும் மாறியுள்ள பெண்ணுடலைப் பிணமென்று கதையாடலின் மூலம் முன்மொழிவது அற்புதமான சித்தரிப்பு. குறியீட்டு நிலையில் பெண் பற்றிய கற்பிதங்களைத் தகர்த்துப் புதிய புனைவுகளை உருவாக்கும் ரமேஷ் - பிரேம் எழுத்தானது சாதனை படைத்துள்ளது. இருள் நகரமான தமிழ்நாட்டில், தமிழன் அடுத்து என்ன செய்வதென்ற நுட்பமற்று ரப்பராகிப் போயுள்ளான். அப்பாலை உலகில் இடம் பிடிக்கலாமென்று கழிவிரக்கத்துடன் வாழும் தமிழரின் போலி அறிவுஜீவித்தனத்தை நொறுக்கு வதாகப் பெண் சித்தரிக்கப்பட்டுள்ளது நுட்ப மானது. இருள் நகரின் சகல அடக்கு முறைகளையும் மீறி பெண்ணின் யோனிக்குள் பத்திரமாகவுள்ள தீக்குமிழ் என்பது கதையாடலை வேறு தளத்திற்கு இட்டுச் செல்கிறது. அது போல எவ்விதமான உறுதியான நிலைபாடுகளையும் எடுக்காமல், வழவழத்த நிலையில் வாழ நிர்பந்திக்கப்பட்டுள்ள தமிழரின் உடல் ரப்பரலானது என்ற கருத்தும் ஆழ்ந்த சிந்தனைக்குரியது. யோனிக்குள் காத்து வந்த தீக்குமிழ்தான் அவனால் வெறுக்கப்பட்ட பிணம் போன்ற உடம்பை அழித்துப் புதிய மனிதனாக்கி யுள்ளது. ரப்பர் உடலுக்குள் ஒளித்து வைக்கப்பட்ட தீக்குமிழ் என்பதும் தீக்குமிழைத் தந்தமைக்காகப் பெண்ணுடல் திராவகத்திலிட்டு உயிரோடு கொல்லப்பட்டது என்பதும் கதையாடலில் முக்கியமான அம்சங்கள். பெண் - பெண்ணுடல் - ஆண் ஸ்தானங்கள் பற்றிய புதிர்களைப் புதிய வடிவில் புனை கதையாக்கியுள்ள ரமேஷ் - பிரேம் சாதனையாளர்களாக மாறுகின்றனர். அதற்கான பலம் இரட்டையரின் எழுத்தில் பொதிந்துள்ளது.

பல கதைகளின் தொகுப்பாக விரியும் நாவலில் பல்வேறு அம்சங்கள் முதன்மைப் படுத்தப்பட் டுள்ளன. வைதீக சமய நெறியைச் சிதைத்து நாட்டார் வழக்கினை முதன்மைப்படுத்தும் ரெண்டாயிரம் வருஷத்துத் தமிழ்ப் பரப்பானது நுணுக்கமாகப் பதிவாகியுள்ளது. நவீன தமிழ் மனோபாவம் குறித்த சித்திரங்கள் நாவலெங்கும் அநேர் கோட்டுப் பரப்பில் சிதறிக்கிடக்கின்றன. வாசிப்பில் சில காதைகள் உவப்பானதாக இல்லையெனில், அடுத்த காதைக்குப் போய் விடலாம். காதைதோறும் புதிய தகவல்களும் சம்பவங்களும் பொதிந்து கிடக்கின்றன. 'தமிழ்-தமிழன்' என்ற தொன்மக் கருத்தியல் கூறுபோட்டு விளக்கப்பட்டுள்ளதன் மூலம், அதன் சாதக பாதகமான அம்சங்களை உய்த்துணர முடிகிறது. நவீன உலகில் அமானுஷ்யத்தின் பங்கு யாதுவென்ற தேடலை வேறுபட்ட சாத்தியப்பாடுகளின் மூலம் முன்வைப்பதன் மூலம், நாவலானது இடைவிடாது புதிய சொல்லாடல்களை முன்வைத்துள்ளது. அவை வாசிப்பில் கிளர்த்தும் அனுபவங்கள் முக்கியமான வையாகும். வாசகனுடன் நெருங்கிக் கதைப்பதன் மூலம் வாழ்தல் குறித்த ஆழமான விவாதங் களை முன்வைத்துள்ள ரமேஷ் - பிரேமின் **'சொல் என்றொரு சொல்'** அண்மையில் தமிழுக்கு வந்துள்ள முக்கியமான படைப்பாகும். அது ரமேஷ் - பிரேம் இரட்டையரை முன்னணிப் படைப்பாளியாக்கியுள்ளது.

◆


படிப்பகம்

www.padippakam.com

# இடம்

ஆபிதீன்

ஆயிரம் மூட்டை பூச்சிகள் உங்களை ஒன்றாக சேர்ந்து கடிக்கும்போது அந்த அருவருப்பான வலியை மறக்க வழி இருக்கிறது. சரேலென்று யாரேனும் தன் பின் பக்கத்தை வழித்துக்காட்ட வேண்டும் உங்களுக்கு. . .! வலி மறந்து போகும். சில இனத்தார், வலியை மறக்க என்று இல்லாமல் சந்தோஷத்திற்காக அப்படி பார்த்துக் கொண்டு இருக்கலாம். அல்லது அதற்கு அடுத்த கட்டத்திற்கும் போகலாம். நான் அப்படிப்பட்டவன் இல்லை. இரண்டு பக்கத்தையும் சேர்த்துத்தான் சொல்கிறேன்....

அந்தக் கிழவர் தினமும் இதைத்தான் செய்தார். உழைக்கிறவர்கள் எல்லோரும் தன்னை மறந்து தூங்குவதில் தப்பில்லைதான். மற்றவர்களை மறக்கலாமா? மற்றவர்களுக்கு அது ஒரு பிரச்சினையாக தெரியவில்லைதான். அவருக்கு முன்பே அவர்கள் தூங்கிவிடுவது ஒரு காரணமாக இருக்கலாம். அல்லது அந்தக் கிழவர் அப்படி படுத்து ஐந்தே நிமிடத்தில் கைலியை உயர்த்தினால்தான் அவர்களின் கனவுகளில் பாலாறு பொங்குமோ என்னமோ......

எனக்குத்தான் தொந்தரவாக இருந்தது. அந்த ரூம் எனக்கு பத்தாவது இடமோ பதினைந்தாவது இடமோ தெரியவில்லை. விசா பிரச்சினைகளில் சிக்கிக்கொண்டு மூன்று கம்பெனிகள் மாறினாலும், அந்த சிரமங்களை விட இப்படி நாடோடி கூட்டம் போல தங்குவதற்கு ஒவ்வொரு இடமாக 'ரூம்பிற்கு தமிழ் முஸ்லிம்கள் தேவை' போர்டுகள் பார்த்து, நண்பர்கள் மூலம் அணுகி ஒரு படுக்கையைப் பிடித்துக்கொண்டு சாமான்களைத் தூக்கிக்கொண்டு அலைவதுதான் பெரிய சிரமமாக இருந்தது. கிடைப்பதில் தூங்கவும் இயலவில்லையென்றால்?

குடும்பத்தோடு வசிக்காமல் அதற்கான பொருளாதார மற்றும் விசா தகுதிகளும் இல்லாத தனி ஆண்கள் இப்படி வதை பட வேண்டும் என்று மன்னராட்சி விரும்புகிறதோ என்னவோ...

மன்னருக்கு மூட்டைப்பூச்சிகளை தெரியுமா - குதிரைகளை தெரிந்த அளவுக்கு? அது தெரியாமல் போகட்டும் அது இல்லாத இடமே ஒன்றுமில்லை என்றிருந்தாலும். இந்த கிழவர்?

அப்படியும் ஒரிருமுறை கைலியை சரியாக இழுத்து மூடினேன்தான் எனக்கு கடித்தாலும் கடிக்கட்டும் என்று. கிழவர் 'உச்...' சென்று எரிச்சலோடு குரலெழுப்பி மறுபடியும் தூக்கிக்கொண்டு விட்டார். அட, மூட்டைப்பூச்சிகளை பயமுறுத்தத்தான் இவர் இப்படி செய்கிறார்!

" 'பரக்கத்' தா வச்சிக்கிறாஹலே நானா!" என்றான் அங்கே சேர்ந்துவிட்ட என் நண்பன் ஒருநாள் பார்த்து. அவனுக்கென்ன சொல்லிவிட்டு போய்விடுவான்-தன் பொண்டாட்டியின் பரக்கத்தைப்பார்க்க.

இல்லை. பரக்கத்துதான்...

பத்து பதினைந்து பேருடன் ஆளுக்கு நூறு வீதம் ஆயிரத்து ஐநூறு மூட்டைப் பூச்சிகளுடன் படுத்துக்கொண்டு ஒரு டாய்லெட்டில் அத்தனைபேரும் நுழைந்து கொண்டு, கிரேன் வைத்து தூக்கக்கூடிய அளவிற்கு பெரிய மரங்களை வெட்டிப்போட்டு விட்டு அதன் அழுத்தத்தில், தங்கியிருக்கும் தெருக்களில் சாக்கடை மூடிகள் தெறித்து சிறிதும் பெரிதுமாக எல்லாம் வெளி வந்து பலதியாக்காரர்களின் வசவுகளுக்கு ஆளாக வேண்டியதில்லை இனி.

எனக்கென்று தனியாக ஒரு ரூம்! கம்பெனி கொடுத்துவிட்டது ஒரு வழியாக.

தனி ரூம் வேண்டும் என்று அலைபவர்கள் எல்லோருக்கும் கிழவருடையதைப் பார்ப்பதுதான் வழி என்று நான் சொல்லவில்லை. ஆனால் முயற்சிப்பதில் தவறில்லையே. முயற்சி பெருமை தரும். குறைந்த பட்சம் நல்ல குத்தாமட்டையைத் தரும்....

இனி நான் 'வெளிநாட்டவர் ஸ்பெஷல்' தண்ணீர், மின்சாரக்கட்டணத்தை பங்கு போட வேண்டியதில்லை. A/C க்கும் வீடியோவிற்கும் தரைவிரிப்பிற்கும் ஒவ்வொரு முறையும் பணம் கொடுக்க வேண்டியதில்லை.

கம்பெனியின் சம்பளம் லேட்டானால் அனுசரித்துக்கொள்ள ரூமை அல்லது ஃபிளாட்டை பிடித்தவரைத் தொங்க வேண்டியதில்லை. தங்கியிருப்பதில் யார் கழன்று கொண்டு வேறிடம் போனால் மறு தொங்கோட்டம் ஓட வேண்டியிருக்கும் என்று வேவு பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியதில்லை. ஊர் போகும் போது திரும்பி வரும் வரை படுக்கையைத் தக்கவைக்க முன்பணம் கொடுத்த பின், அதே படுக்கையில் வேறு ஆளை தங்கவைத்து வாடகை வசூல் பண்ணி நமக்கு அதில் கால் பங்கு கூடத்தராத பகாசுரர்களுடன் சண்டை போட்டுக்கொண்டிருக்க வேண்டியதில்லை.

கராமாவில் யூனியன் கோ-ஆப்பிற்கு பின்னால் உள்ள வில்லாக்களில் ஒன்றில் தங்கியிருக்கும் போது இப்படித்தான் கும்பகோணத்து ஆள் ஒருவர் 9000 ரூபாயை விழுங்கினார். திரும்பி வந்து கேள்விப்பட்டு கொதித்து 'என் புள்ளை குட்டிக்கு சேரவேண்டிய காசுதானே அது.... இப்படி ஹராமா செய்யிறீங்களே...?' என்று கேட்டதற்கு 'ஒரு ஆளு போனா அவர் வர்ற வரைக்கும் டின்னு கட்டிக்கிட்டு உட்கார்ந்திருக்கனும்-ரூம் புடிச்சவன். தெரியும்லெ உங்களுக்கு?' என்றார்.

'அதுக்குள்ளே காசதான் முன்னாலேயே அடைஞ்சிட்டிங்களே...'

'திரும்ப ஆள் புடிக்கிறது?! உங்க அத்தாவா செய்வாரு?'

நல்ல கேள்விதான். ஒவ்வொருவருக்கும் ஒரு நியாயம்



படிப்பகம்

www.padippakam.com

'இல்லை முதலில் நம்மைத் திருத்திக் கொள்வோம். நம் சமுதாயத்தில் எத்தனை லட்சம் பேர் தொ..' அவரின் பேச்சு அறுபட்டது பாங்கு சத்தம் கேட்டு. தொழப்போய் விட்டார்...!

எல்லோருக்கும் நியாயங்கள் இருக்கின்றன... சௌதியில் தப்லிக் ஜமாக்கள் பயப்படவும் நியாயங்கள் இருக்கின்றன.

நான் தனியறையை விரும்ப நியாயம் இருக்காதா?

பஷீர்காக்காவுக்கும் மெய்தீன் நானாவுக்கும் கூட இந்தப்பகுதியில் தனியறை கொடுக்க கம்பெனி ரெடிதான். அவர் மறுத்துவிட்டார். தேராவிலிருந்து வருவதற்கு கம்பெனி டிரான்ஸ்போர்ட் கொடுக்க மறுத்தால் கூட அங்கிருந்தே நடந்து வந்துவிடும் பிடிவாதம்.

இம்மாதிரி பிடிவாதம் பிடிக்கிறவர்கள் நிறையபேர் இருக்கிறார்கள்... கீஸலில் பலதியா கொடுக்கிற தங்குமிடத்தை புறக்கணித்து வருபவர்கள், சோனாபூரில் சில கம்பெனிகளின் கேம்ப்பில் (ஓரிரண்டு சௌதியின் அராம்போ கேம்ப் போன்று சகலவசதிகளுடன் அட்டகாசமாக இருக்கும்) தங்க மறுத்து பஜார் பக்கம் தன் செலவில் பத்து பேருடன் பகிர்ந்து தங்க வருபவர்கள் என்று ஒரு கூட்டம்...

குவைத் பள்ளியில் தமிழில் நடக்கிற மார்க்கப் பிரசங்கங்கள் மற்றும் ஃபாத்திஹா விஷயங்களில் கலக்கவும் தமிழகத்தின் இஸ்லாமிய அறிவுஜீவிகளைத் தரிசித்து தன் ஜீவிதத்ததை நீடிக்கவும் விதவிதமாக தரீக்கா நதிகளில் பிணமாகவோ மலராகவோ மிதக்கவும் ஒரு ரூபாய்க்கு காலை நாஷ்டாவை சிக்கனமாக முடிக்க வைக்கிற தமிழ் உணவகங்களை வளர்க்கவும் வருபவர்கள்.

நிலவுக்கு போனால்கூட ஒரு ஆப்பமும் பழைய மீன் ஆனமும் இருக்க வேண்டும் இவர்களுக்கு. மீன் அதில் இருக்கக்கூடாது கண்டிப்பாக. பட்ஜெட் தாங்காது.

சாப்பாட்டு விஷயத்தை பார்க்கப்போனால் எனக்கு நஷ்டம்தான். தேரா போல சிக்கனமாக இருக்க முடியாது. அங்குள்ள டோர் டெலிவரி இங்கு கிடைக்காதும் கூட...

'பக்கத்துல உள்ள 'ம' னா கடையிலயா சாப்புடப்போறீங்க? மத்தி மீனைப்போட்டே சாவடிச்சிடுவானே!' என்றார்கள், நான் முதலில் தேரா பக்கம் வேலை பார்த்த ஊர்க்கார கம்பெனியின் காக்காக்கள்...

உண்மைதான் அந்த அல் சாகர் கம்பெனியின் சாப்பாட்டு தரத்திற்கு நிகராவது எதுவுமில்லைதான். சமையல்காரன் சுலைமான் ஊரில் பண்டாரியாக இருந்தவன். உம்மா கையால் சாப்பிடுவது மாதிரிதான் இருக்கும். அது உணவுப் பொருள் இறக்குமதி செய்யும் கம்பெனி வேறு. விற்கப் போவதற்கு முன் தரத்தைப் பரிசோதிக்க அலுவலக ஊழியர்களின் உடம்பும் மெஸ்ஸும் அவசியமானது.

முதலாளி முஹம்மது காக்காவின் தரத்தால்தான் நான் வெளியேற வேண்டியிருந்தது. வேலையில்லாமல் அலைகிற ஊர்ப்பையன்களை குறைந்த சம்பளத்திற்கு பிடித்துப் போட்டு அதையும் துபாய் முழுக்க நகரா அடிப்பவர். அவன் சாகும்வரை இருக்க வேண்டுமா? கடன் என்கிற ஷெனாய்...!

'ஹயாத் உள்ளவரைக்கிம் அந்த ஹராத்துல பொறந்தவன்ற கம்பெனில என் மவன சேர்க்கமாட்டேன்ங்க... ஊர் முழுக்க சொல்லிக் காட்டுவான்: 'எப்புடி அழைஞ்சான் இந்தப் பையன்... இப்ப? மனுசனாயிட்டாரு!' ண்டு... ஊர்லே நாம என்னா குண்டா சட்டியை தூக்கக்கிட்டு, தர்ஹா வாசல்லே கொமஞ்சான் சட்டியெ விசிறிக்கிட்டா இருந்தோம்?' - யாருமில்லை. பிறகு வழியில்லாமல் சேர்ந்துவிட்டு முஹம்மது காக்காவுக்கு விசிறிவிடுகிற ஊர்க்காரர்களின் முதல் பேச்சுதான் இது.

முஹம்மது காக்கா எப்படியும் வாரத்திற்கு எட்டு தடவை, ஊண்டு பஜார் பக்கமிருந்த ஊழியர்களின் தங்குமிடத்திற்கு வருவார். எல்லோரும் எழுந்து நின்று உடல் முழுவதும் சொறியவேண்டும். அதாவது நான் இருந்தவரை அவர்கள் தங்கள் தங்கள் உடலைத்தான் சொறிந்துகொண்டிருந்தார்கள்... நின்று கொண்டு சொறியாமல் இருக்கும் என் மேல் அவருக்கு கோபம் வருவது இயற்கைதான். நான் என்ன செய்ய முடியும்? நான் அதிக பட்ச மரியாதையாக சுயநினைவை இழந்து விடுகிறேன்...

மற்ற இழப்புகளும் உண்டு. ஊரிலிருந்து வருகிற சாபுமார்களுக்கு உதவுகிறேன் என்று தங்க வைப்பது மட்டுமில்லாமல் அவர்கள் ஊர் போகும் போது நம் பங்கை வேறு கொடுக்க சொல்லுவார். உதவிதான்.... ஆனால் சாபுவைவிட நிஜமாக உதவி தேவைப்படுகிற வறியவர்கள் என் குடும்பத்திலேயே இருக்கிறார்களே...

முஹம்மது காக்காவின் கோபம் அதிகமானது என்மேல்...

தமிழ்நாட்டு எழுத்தாளர்கள், இசைக்கலைஞர்கள் வந்தாலும் இதே கதிதான் ஆனால் இவர்களுக்கு பண உதவி செய்ய வேண்டியதில்லை. அவர்கள் விரும்புகிற ஆடைகளையோ பேனாவையோ விஸ்கியையோ வாங்கி கொடுத்தால் போதுமானது.

அல் சாகர் கம்பெனி... அல் சாகிற கம்பெனி என்று பெயர் மாற்றலாம்..!

எத்தனை புரட்சிப் பூக்கள் அவர் தரும் 100 திர்ஹம் காசுக்காக அவர் முன் கூழைக்கும்பிடு போட்டிருக்கின்றன... கண்ணீர்ப்பூக்கள்...!

ஒருவன்தான் எழுத்தாளன். அவன் அவரைப்பற்றி புரியாமல் 'நாளை மற்றுமொரு நாளே' யைப்பற்றி பேச இவருக்கு ஏகப்பட்ட எரிச்சல். தமிழ் இலக்கியம் ரொம்பவும்தான் கெட்டுவிட்டது. எப்படியாவது கம்பன் மறுபடியும் பிறக்க அவர் பண உதவி செய்யத்தான் போகிறார்.

கோபத்தில் அவனைப் பிடுங்கினார்: 'என்ன இது தலைப்பு? ஹே..!'

" 'இன்ஸா அல்லாஹ், நாளை மற்றுமொரு நாளே' என்று பெயரை மாற்றிவிடலாமா?" - பவ்யமாக கேட்டான் அவன்.

சிரித்துவிட்டேன்... என்ன துணிச்சல் எனக்கு!

தமிழன்னையின் முடியை என்றும் கருப்பாகவே வைத்திருக்கவே வாழும் தமிழ்ச் சங்கங்களுக்கும் தமிழ் தொழிலதிபர்களுக்கும் முஹம்மது காக்கா அனுப்பிய செய்தியில் திரும்ப அந்த எழுத்தாளன் ஊர் போயிருக்க முடியும் என்று நம்ப முடியவில்லை...

அவன் எங்கு போனானோ, நான் இந்த அல் முதவ்வா கம்பெனிக்கு மாற்றப்பட்டேன். இதன் முதலாளி அந்த காலத்தில் முஹம்மது காக்காவுடன் கோதுமை தவுடு



படிப்பகம்

www.padippakam.com

வியாபாரம் பண்ணியவர். அவர் தனக்கு ஒரு புரோகிராமர் தேவை என்று கேட்டாராம். விசாவும் உடன் தந்து விடுவதாக சொன்னாராம் - முஹம்மது காக்கா இன்னொருவரிடம் சொன்னது இது.

நல்ல வேலையெல்லாம் கிடைத்தாலும் நன்றிக் கடன் என்று இருந்ததற்கு அவர் செய்த உதவி என்றும் எடுத்துக் கொள்ளலாம். ஏன் எப்போதுமே ஒருவரை குறை சொல்ல வேண்டும்? அவரால் ஊரில் எத்தனையோ பெண் குமர்கள் கரையேறுகின்றன. நமக்கு வலிமையுண்டா? கரையில் நின்று கட்டத்தான் முடியும்..!

இப்படி எப்போதாவது வாழ்க்கையில் சில நல்ல சம்பவங்கள் நடப்பதுண்டு. மூட்டைப்பூச்சி பண்ணையிலிருந்து விடுதலை...

கராமா, சத்வாவில் ஜாஃப்லியா, முரக்காபாத் என்று சின்ன சின்ன மூட்டைத் தொட்டிகளிலிருந்து தனியறையாக ராஸ் அல் கோர் வாசம்...

'பேய்க்கு பயப்படுவீங்கலே... இப்ப எப்படி தனியா இருக்கிறீங்க' என்று பயமுறுத்தினார் ஒருவர். 300 திர்ஹம் மிச்சமாகிறது எனக்கு. பேயா? பேய் வந்தால் அதற்கு ஒரு 50 திர்ஹம் கொடுத்தால் கூட மீதி 250 திர்ஹம். இப்போது உம்மாவுக்கும் பணம் அனுப்ப முடியும்.

கம்பெனிக்கு தேவையான புதிய புரோகிராம்கள் எழுதவும் இருப்பதை தனக்கு ஏற்றார்போல் மாற்றவும் தவறுகளைத் திருத்தவும் தேவைப்படுகிற, பல்லிடுக்கில் மாட்டியுள்ள துரும்பை எடுக்கும் ஆழ்ந்த கவனத்திற்கு தனியறை அவசியமாக இருக்கலாம். எனக்கு அக்கௌண்ட்ஸ் அவ்வளவாகத் தெரியாததால் கம்பெனியின் அக்கௌண்டிங் ஸாஃப்ட்வேர் உபயோகிக்கும் லாஜிக்குகளை கண்டுபிடித்து மாறுதல் செய்ய, பிரபஞ்சத்தில் மிதக்கிற அறிவு வங்கியிலிருந்து தேவையான செய்திகளை எடுக்க வேண்டும். ஸாஃப்ட்வேர் விற்பவன் சோர்ஸ் கோடையுமா கொடுப்பான்? தனியறை மிகவும் உதவிற்றுத்தான். இனியும் கழுதைகள் போல டாட்டா என்ட்ரி செய்துக் கொண்டு இருந்தால் இந்த ஃபீல்டில் நிற்க முடியாது. படித்ததைப் புதுப்பிக்க இன்னும் ஆழ உழ இந்த தோண்டல்கள் அவசியம்.

ஆனால் தனியறையில் இருக்கும் தைரியம், மிச்சப்படும் பணத்தால் வந்ததுதான். மூத்திரம் பெய்ய அறையை விட்டு வெளியே வந்து மாடியிலிருக்கும் அலுவலகத்திற்கு போக வேண்டும். நான் இருண்ட மைதானத்திலேயே அடித்துவிடுவேன். சமயத்தில் அங்கே சுத்தி அடிக்கிற புழுதிக் காற்றும் குளிர்க் காற்றும் கிளப்புகிற 'ஊ...' வெனும் சத்தம் மூத்திரத்தை நிறுத்தி இருக்கிறது...

இந்த பயங்கள் உம்மா கொடுத்தது. ஆனால் இந்தப் பயத்தை வென்றால்தான் அவர்களுக்கு உதவ முடியும்! எனக்குப் பிள்ளைகள் பிறந்த பிறகு அவர்களுக்குப் பணம் அனுப்ப முடியாததில் அவர்களுடைய வருத்தத்திற்கு வேறு ஆளாகியிருந்தேன்...

வாப்பா ஹயாத்தாக இருந்திருந்தால் உம்மாவுக்கு பிள்ளைகள் அவ்வளவாகத் தேவைப்பட்டிருக்க மாட்டார்கள். வாப்பாவை அலட்சியப் படுத்த வேண்டுமானால் தேவைப் பட்டிருக்கலாம்..

பிள்ளைகள் சம்பாதிக்க ஆரம்பித்ததும் தன்னை உம்மா மதிக்கவில்லை என்று வாப்பாவுக்கு வருத்தம். வருத்தப்படவா வாழ்க்கை? பயங்களை வேரோடு அறுக்க... இருண்ட மைதானமும் அலுவலகமும் இரவில் என்னதான் செய்துவிடும்?

சப்தம் கேட்காத இடமில்லை... நாள் முழுவதும் ஓடிக் கொண்டிருக்கிற பல்வேறு நீள டிரக்குகளின் சப்தம் ஹத்தா ரோட்டிலிருந்து வந்து கொண்டே இருக்கும். எனவே பேரமைதி என்று சொல்ல முடியாது.

இரவு, இஷா தொழுததும் அலுவலகம் விட்டு நகரத்திற்கு கிளம்புவார்கள் ஒரு மாதிரியான பார்வையை என்மேல் வீசிவிட்டு போவார்கள். இந்தப் பார்வைதான் உண்மையில் பயத்தைக் கொடுத்தது! அதை விரட்டவே நான் நாத் அல் ஷிபா வரை வாக்கிங் போய்விட்டு வரும் வழியில் டிஃபனை முடித்துவிட்டு அறையில் அடங்கி விடுவேன்... களைத்துப்போய்...

டிவி. இருக்கிறது. சானல்-33, நகரத்தில் உள்ளதைவிட தெளிவாக வருகிறது - ஆன்டெனா இல்லாமல். டிவி. - கம்பெனி வாங்கிக் கொடுத்ததுதான். நாத்தூர் என்று தனியாக வைத்தால் அவனுக்கு கொடுக்கிற சம்பளத்தைக் கணக்கிட்டால் இது ஒரு செலவா என்ன?

அரபாப் வீட்டிலிருந்து பழைய ஃபிரிட்ஜ் வந்தது. 20 வருடமாகத் தன் வீட்டில் உழைக்கிறது என்று புகழ்ந்து கம்பெனிக்கு எழுதலாம் என்று பார்த்தால் அதில் கம்பெனியின் முகவரி இல்லை. அதனால் என்னிடம் கொடுத்து விட்டார்.

சாமான் பழையதா புதியதா என்றா பார்ப்பார்கள்? பொருளை உள்ளே வைத்தால் சூடாகிறதா? ஓகே...

முதலாளி நல்லவர். தேவையில்லாத நேரத்தில் கதவைத் தட்டி சீண்டுவாரோ என்று தான் முதலில் பயம். அப்படியில்லை. வியாபாரத்தையே சீண்டாதவர் நம்மை சீண்டப்போகிறாரா என்ன?

யாருடைய பரக்கத்திலேயோ கம்பெனி ஓடிக் கொண்டிருந்தது. அத்தனை பேரும் அது தன் பரக்கத்துதான் என்று நினைத்துக்கொண்டு இருந்தார்கள். வருடத்திற்கு ஒரு மில்லியன் லஞ்சமாக வாங்குகிற அரசாங்க அதிகாரிகள், 'மால்' வாங்குகிற பண்ணைகளின் அரபி, பிரிட்டிஷ் ஃபோர்மேன்களின் பரக்கத்தாகக் கூட இருக்கலாம்.

இதில் 300 திர்ஹம் வெளியில் தங்குவதற்கென்று கொடுக்கக்கூட கம்பெனி தயார் எனக்கு. ஆனால் அது ஒரு படுக்கைக்கு இடம் பிடிக்கத்தான் உதவும். தனியறையை நகரத்தில் நாடினால் மூன்று பங்கு கூட கொடுக்க வேண்டி வருமே...

ஆனால் அதில் மைதானம் இருக்கிறதா?

எத்தனை சுதந்திரமான இயற்கை காற்று! அது வெகு தூரத்தில் மேய்கிற ஒட்டகங்களைத் தொட்டுக்கொண்டு வந்தாலும், உடம்பைக் கருக்க வைக்கிற உஷ்ணமாக இருந்தாலும் 'விசா... விசா...' என்று ஜபிக்கிற நகரத்து காற்று இல்லை. இதமான குளிர் வரும் வருடக் கடைசி மாதங்களில் ரசிக்கிற காற்றுத்தான்...



படிப்பகம்

www.padippakam.com

பெரிய ஷேக்மார்கள் எல்லாம் இந்தப் பகுதியில்தான் தூர தூரமாக மாளிகைகள் கட்டியிருக்கிறார்கள். ஏன், மன்னர் மக்தூம், இளவரசர் ஷேக் முஹம்மதின் அரண்மனைகள் எல்லாம் இந்தப் பக்கம்தான். அவர்களின் அரண்மனைகளைச் சுற்றிலும் மிகப் பெரிய மைதானம் பஞ்சு மணலோடு இருக்கிறது.

அவர்கள் குடும்பங்களோடு இருக்கிறார்கள். காற்றை ரசிக்கலாம்...

'அவீர் ஷேக்' என்று அழைப்பான் சொக்கலிங்கம். என் நண்பன். அல் ஃபுத்தைம் கம்பெனியில் சிஸ்டம் அனலிஸ்ட்டாக இருக்கிறான்.

இந்த மைதானம் அவனுக்கு மிகவும் பிடித்து இருந்தது...

'ரொம்ப பிடிச்சு இருக்குடா... ஊர்ல வயல்வெளியில உட்காருற மாதிரி ஒவ்வொரு இடமா உட்கார்ந்தாக் கூட ஒரு வருடம் பேலலாமே!... 'என்றான்.

'இந்த ப்ரோக்ராம் சி யில போட்டியா விசுவல் பேசிக்ஆ?'

அவன் பதில் பேசவில்லை. மறுமுறை வந்து அவன் ஆசையை ஒரு இரவில் நிறைவேற்றிவிட்டுத் தான் போனான்.

நகரத்தில் தன் அறைகளில் மூட்டைப்பூச்சி மருந்து வைக்கிற சொந்தங்கள் சமயத்தில் அன்று மட்டும் எட்டிப்பார்க்கும். அதில் ஒன்று அறையின் அநியாயமான உயரத்தைப் பார்த்துவிட்டு 'ஆவு கெச்சேனுங்...' என்று ஊர் பெண்கள் மூக்கில் விரலை வளைத்து வைப்பதுபோல வைத்து சொன்னது:

'தூக்குக்கூட போட முடியாது போலக்கிதே!'

இடைவெளியின்றி சிரித்தார்கள். இடைவெளி...

நான் அவர்கள் வரும் ஒவ்வொரு முறையும் உஷாராக இருந்தேன். எங்கே என்னை மேலே தொங்கவிட்டு விடுவார்களோ என்று. ஆனால் அவர்கள் நல்லவர்கள். திட்டங்களைச் செயல் படுத்துவதில்லை. உறவு இரத்தம் மிகவும் பிசுபிசுப்புள்ளது காரணமாக இருக்கலாம். போகும்போது மட்டும் ஒரு வார்த்தை.

'என்னா நம்ம ரூம் பக்கமே தலையை காட்ட மாட்டேங்குறீங்க நானா?'

'இல்லே பஜார் பக்கம் வந்தா அப்படியே செம்பி தம்ஜூ தீனைப் பார்த்துப்புட்டு வந்துபுடுறது... பஸ் கிடைக்கிறதும் கஷ்டமில்லே இங்கே வர?'

'ஓ... கீழைக்கரை சாப்பாடை சாப்புட?'

'இல்லே... அங்கு மூட்டைப் பூச்சி கக்கூஸ் பிரச்சனை இல்லே - தங்கும்போது'

அவர்கள் முகம் சுருங்கும். அதற்காக வேறா தூக்குப் போட்டுக் கொள்ள முடியும்?

சமயம் பார்த்து அவமானப் படுத்த முனைவார்கள். நான் நகரத்து பக்கம் ஏதும் சாமான்கள் வாங்கவோ பேங்க் டிராப்ட் எடுக்க போகும்போது...

'மறுபடியும் காட்டுக்கு எப்போ போவப் போறீங்க?'

அல்லாஹ்வே... உங்களால்தானே மனிதன் காட்டை நாடுகிறான். தவிரவும் காடு மாதிரி தோன்றுவதெல்லாம் காடா? சொல்பவர்கள் பார்க்க மனிதர்கள் போலத்தான் இருக்கிறார்கள். உண்மையில் அப்படித்தானா...?

பொறாமை... என்று என்னை சமாதானப் படுத்திக் கொள்வேன்.

வெற்றிடம் நோக்கிப் பாயும் சுழற் காற்றைச் சமாளிப்பதில் ஒரு பெருமிதம் இருக்கிறது. மன இறுக்கங்களைக் குறைக்க நாலு பேரிடம் சொல்வதால் விளைவு இன்னும் மோசமாகிறது என்பதை ஹஜ்ரத் சொல்லி புரிந்திருந்தேன்.

'ஏன் இவங்கள்லாம் தனியா இருக்க பயப்படுறாங்க? தன்னை உற்றுப் பார்த்தா வெறுமைதான் இருக்கு!' என்பார்கள் கௌஸ் ஹஜ்ரத்.

என்னை உற்றுப் பார்க்க முனைந்தேன். அவர்கள் தந்த பயிற்சிகளைச் செய்ய முனைந்தேன். 'இந்தப் பயிற்சிகள் எல்லாம் உங்க சக்தியை வளர்க்க அல்ல. சக்திதான் ஏற்கனவே வளர்ந்து இருக்கே, அதை மூடிக்கிட்டு நீறு இருக்கு. அதைப் போக்கத்தான்...' என்பார்கள்.

அதில் ஒரு பயிற்சி ரிலாக்ஸாகப் படுத்து கையை தானாக மேலே எழுப்ப வைப்பது...

எனக்கு வேறு ஒன்று மேலே எழும்பியது!

வாஞ்சூரில் 'சில்லா' இருக்கப் போகிறேன் என்று சொல்லிப் போய் மனாரடி துப்பட்டிப் பெண்ணை மனதில் கொண்டு வந்தால் முகத்தில் தேஜஸா வரும்? மூவாயிரம் பருக்கள் தான் வெடிக்கும்...

தவறு என்மேல்தான் இருக்க வேண்டும். இதைப் புரிவதே வெற்றிதான்... இதைப் புரியவா தனியறை என்றால் இதை விட வேறென்ன புரிய வேண்டும்.

ஹஜ்ரத் சொல்லிக் கொடுத்த விதியை கண்டு பிடிக்கும் 'ரமல்' கணக்கை புரோகிராமிங் செய்ய தனியறைதான் தேவை. இதில் துல்லியமாக ரிஸல்ட் எடுக்க ரியாலத், தேவை என்றாலும் பாமரரும் போடுவது போல் அதன் ஒரு பிரிவான முஸல்லஸ் இருக்கிறது. ரியாலத் இல்லாதவர்கள் கூட கணக்கு பார்க்கலாம். முதலில் ஒரு எண்ணை எடுத்து அதை நாலு கட்டங்களாக ஆக்கி அதிலிருந்து கிளைத்து மொத்தமாக வரும் பதினாறு கட்டங்களில் மீஜான் கட்டமான பதினைந்தில் வரும் ஷகல்ஐப் பார்த்து அதன் படி கட்டங்களைப் பெருக்கி வரும் 3 எண்களின் விதவிதமான காம்பினேஷனில் நமது விதி! அந்த எண்களின் வடிவமே அழகு. புள்ளியும் படுக்கை கோடுகளுமாய்... இப்படி பதினாறு எண்கள்... இதில் ஒரு எண்ணை மற்றொரு எண்ணோடு பெருக்குவது மிகவும் சுவாரஸ்யம். மூச்! உங்கள் விதி என் கையில்.

இதை ஆரம்பத்தில் உள்வட்ட சீடர்களுக்கான அமர்வில் அவர்கள் லேசாக சொன்ன போதே எனக்கு அசுவாரஸ்யமாகத்தான் இருந்தது. என்ன இது பதினாறு!? ஹஜ்ரத்திற்கு முகத்தைப் படிக்கத்தெரியும். தனியறைக்கு என்னைக் கூப்பிட்டார்கள்.

கம்ப்யூட்டரை ஆன் செய்து Ecel ன் மொத்த வரிசைகளின் எண்ணிக்கையைப் பார்க்கச் சொன்னார்கள். 65536... இது 256X256 லிருந்து வருகிறது. 256 என்பது, 16லிருந்து வருகிறது!. சரி, பழைய லோட்டஸின் மொத்த வரிசைகள்? அதுவும் 16ன் பெருக்கல்!



படிப்பகம்

www.padippakam.com

32 Bit DLC Protocol - 256 color - 64,128, 256 mb RAM...

இல்முல் ஹக்... கணிதம்... மாறாக உண்மை..!

என் விதி என்ன? கணக்கே சொல்..!

விரைவில் இடமாற்றம் ஏற்படும் என்றது!

ரமல்ஜத் தூக்கிப் போடு!

நான் ஊர்போய், இந்த முறை மனைவி வழக்கத்தைவிட கூடுதலாக சேர்த்து வைத்திருந்த சண்டைகளையும் பிரச்சினைகளையும் சமாளித்துவிட்டு திரும்பி வந்த போது அது நேர்ந்துவிட்டிருந்தது....

கம்பெனி, தன் அலுவலகத்தை தனது கிடங்கு இருக்கும் ராஸ் அல் கோரின் உள் பக்கத்திற்கு மாற்றி விட்டது. வெளியாட்களுக்கு வாடகை கொடுப்பதை விட தன் இருப்பிடத்திலேயே வைத்துக் கொள்வது புத்திசாலித்தனம்தான் என்றாலும் அந்த புத்தியை இரண்டு வருடம் சும்மாவே வருடத்திற்கு 90,000 திர்ஹம் என்று கொடுத்ததில் காட்டியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

இப்போது என்ன? இது எத்தனை நாளைக்கு? தெரியவில்லை. ஆனால் ஒன்று தெரிந்தது. இனி தனியறை கிடையாது. வழக்கம்போல நகரத்தில் தங்கிக் கொண்டு அல்லல் பட வேண்டியதுதான். இதற்குள் இன்னும் ஒரு லட்சம் மூட்டைப் பூச்சிகள் கூடி இருக்கும்.

இருக்கிற 3 மதறாசியையும் தனித்தனியாக தேராவில் தங்க அனுமதித்து இதற்கென்று டிரான்ஸ்போர்ட் கொடுத்துக் கொண்டு...

முதலாளிக்கு குழப்பம்தான்... செலவுகளையும் குறைக்க வேண்டும்...

அவர் பிரச்சினையை தீர்ப்பதற்குப் பதிலாக பஷீர்காக்கா 30000 திர்ஹம் செலவு வைத்தார். முதலாளியின் அனுமதி பெறாமல் மனைவியையும் பிள்ளையையும் வரவழைத்ததில் வந்த செலவு... நியாயமாக முதலாளி கோபப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இயலவில்லை. அவர் முஹம்மது காக்கா கம்பெனியில் பங்குதாரராக இருக்கிறார்...

ஜென்ம எதிரியான பஷீர்காக்காவும் முஹம்மது காக்காவும் எப்படி ஒத்துப் போனார்கள். இவர் 'எட்டு'. அவரோ 'இருபது'... இவரின் சிங்கப்பூர் பாட்டனார் கடையில்தான் முஹம்மது காக்காவின் வாப்பா, கடையை கூட்டிப் பெருக்கும் வேலையில் இருந்திருக்கிறார். 'செருப்பு போடாம இருந்தவனுவ..' என்ற பஷீர்காக்காவின் பிஸாது கொதிக்க வைத்திருந்தது முஹம்மது காக்காவை.

இப்போது திடீரென்று எப்படி?

பஷீர்காக்கா, சண்டைக்காரன் காலில் விழுந்ததுதான் காரணம்! தவிர பஷீர்காக்காவால் நிறைய கம்பெனி ரகசியங்களைச் சொல்ல முடியும்...

காக்காக்கள் ஒற்றுமைக்குப் புகழ் பெற்றவர்கள். எட்டாவது, இருபதாவது? நம் தெரு இருபத்தெட்டு!

இந்த சம்பளத்தில் இவர் எப்படி குடும்பத்தை வைத்துக்கொள்ள முடியும் என்று ஊர்க்காரர்கள் அநியாயமாக புழுங்கிக் கொண்டிருந்தார்கள்...

எனக்கு புழுக்கமில்லை. இது ஒரு வாய்ப்புதான். சக ஊழியனுக்கு குடும்பத்திற்காக தங்குமிடம் கொடுக்கும் போது எனக்கும் கொடுத்தாக வேண்டுமில்லையா? ஆனால் அவருக்கு மற்ற காக்காக்களும் முக்கியமாக முஹம்மது காக்காவின் ஜக்காத்து பணமும் உதவியாகக் கிடைப்பதுபோல் நமக்கு இல்லாத பட்சத்தில் எப்படி செலவை சரிகட்ட முடியும்?

செலவு பிரச்சினை பின்பு. இப்போது தங்குமிடத்தைப் பார்ப்போம்.

முஹம்மது காக்காவின் 'வாஸ்தா' வையும் தாண்டி, இப்போது கம்பெனிக்கான அரசாங்க சப்ளை சரிபாதியாகக் குறைந்து விட்டதில் முதலாளி திணறிக் கொண்டிருப்பதால் பஷீர்காக்காவின் மனைவியை என்ன செய்யப் போகிறார் என்று எல்லோருக்கும் ஒரு திகில் நாடகம் பார்க்கிற உணர்ச்சிகள்...

முஹம்மது காக்காவின் அறிவுரைப்படி பெண்டாட்டியுடன், ராஷிதியாவிலுள்ள அரபாப் வீட்டிற்கே போய்விட்டார். முதலாளியின் மனைவி இரக்கப்பட்டுவிட்டாள் என்று பேச்சு.. கண்ணீருக்கு என்ன மொழி...? ஆனால் முதலாளி மனைவி அப்போது ஈரானுக்கல்லவா போயிருந்தாள்!?...

பந்தர் அப்பாஸ், போட்டில் போனால் கூட 3 மணி நேரம்தான். அவள் திரும்பி வந்திருக்க வேண்டும்.

ஆனாலும் இதென்ன பிச்சை?

பதினைந்து வருடமாக இருப்பவர் இப்படி செய்தால்தான் தங்க இடத்தைத் தேட வேண்டுமென்றால் நான் என் மனைவியுடன் மகளையும் கூட்டிக் கொண்டு போக வேண்டும்.

கண்ணீர் விடத்தான்...

ஊழியர்கள் இத்தனை வருடம் பணி புரிந்தால் அவர்களுக்கு தகுதியின் அடிப்படையில் குடும்பத்தை வைத்துக்கொள்ள தங்குமிடம் இலவசமாக கொடுக்கும் கம்பெனிகள் இருக்கத்தான் செய்கின்றன. டுபால் போன்ற பெரிய கம்பெனிகளைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டாம். அவைகள் ஆங்கிலேயர்களுக்காக வசதிகளை வாரி வழங்குபவை. பிரச்சினைகள் ஆசியர்களுக்குத்தான்...

ஏன், பதினாறாயிரம் தொழிலாளர்களுக்கு மேலுள்ள ஒரு தமிழ் கம்பெனி கூட இந்த விசயத்தில் - அலுவலக ஊழியர்களைப் பொறுத்தவரை - சரியாகவே நடந்துக் கொள்கிறது. ஊழியர்கள், கம்பெனியின் ரியல் எஸ்டேட் பிரிவு குத்தகை எடுத்து இருக்கிற ஃபிளாட்டுகளில்தான் தங்க வேண்டும், தன் பங்காக சில ஆயிரங்களையும் அந்த ஊழியர்களே முன்பணமாக கொடுக்க வேண்டும் என்றிருந்தாலும்...

எந்த ஊழியரானாலும் எத்தனை குறைவான சம்பளத்தில் இருந்தாலும் அவர்கள் தங்கள் குடும்பத்தாரைக் கூட்டி வரலாம் என்று ஜாமியா இஸ்லாமிய கம்பெனி சொல்லவில்லையா? அரசாங்கத்தின் கண்களில் மண்ணைத்தூவ அது அவர்களின் தொழிலாளர் ஒப்பந்தப்பத்திரத்தைக் கூட மாற்றித் தருகிறது. சம்பளம் பிறகு. தங்குமிடம் முதலில்... தவிர குடும்பம் வந்தால் அவர்களின் கடைகளில்தானே வியாபாரம் அதிகமாகும்? தங்குமிடம் கூடக் கடைக்கு மேலேதான் பெரும்பாலும்...



படிப்பகம்

www.padippakam.com

இந்த அல் முத்தவ்வா கம்பெனி மட்டும் ஏன் இப்படி நடக்கிறது? மில்லியன்களாக லாபம் சம்பாரித்தபோது கூட வேலை செய்பவர்களுக்கு ஏதும் தராதவர்கள், வியாபாரம் குறைந்த நிலையில் தரவா போகிறார்கள்?

தந்தது! அரபாப் மூளையும் புழுதிக்காற்றும் ஒன்று... எப்போது கிளம்பும் என்று சொல்ல முடியாது..

'பகாலா' வையெல்லாம் கம்பெனி என்று நினைத்தது தப்பு என்று திட்ட வேண்டியது இல்லை.

கராமா சிந்து பஞ்சாப் ரெஸ்டாரெண்டுக்கு எதிர்ப்புறம் புத்தம் புதிய கட்டிடத்தில் முதல் மாடியில் ஒரு ஃபிளாட். ஒரு ரூம் எனக்கு மற்றொரு ரூம் மெய்தீன் நானாவுக்கு. இந்த இரண்டு ரூம்களிலும் கம்பெனியின் வேறு ஆட்களும் தங்க வரலாம் என்பதால் அதைத் தனியறை என்று சொல்ல முடியாது. அப்படியானால் பஷீர்காக்கா? அவர் ஹாலில்தான் தங்கிக் கொள்ள வேண்டும். அதை ஒட்டினாற்போல் சமையலறையும் ஒரு அரை பாத்ரூமும் இருந்ததால் அதுதான் குடும்பத்திற்கும் தனது துப்பட்டி மனைவியின் மறைவுகளுக்கும் பொருத்தமாக இருக்கும் என்று அவர் சரி கண்டார். சரிகண்டுதான் ஆக வேண்டும்...

பாதாள சாக்கடை வழிபோல திரைச்சீலைகளால் மறைத்து 'ஆம்பளையிலுவ' அவர்களின் அறைகளுக்குப் போக வழி ஏற்படுத்திக் கொடுத்தார். ரோட்டிலிருந்தே பால்கனிக்கு பறந்து வரவேண்டும் நாங்கள் என்று யோசனை வைத்திருந்தவர்தான். மெய்தீன் நானாவின் வயதைப் பார்த்துதான் சொல்லவில்லை போலும்.

மெய்தின் நானாவும் வர மறுத்துவிட்டார்.

'மௌத்தா போறதுக்கா? உம்மாடி!' என்றார். இது மிகை. உயிரோடு இருப்பது சிரமமே தவிர மௌத்தாகவெல்லாம் தேவையில்லை. தேராவில் மதராஸி பஜார் என்று அழைக்கப்படுகிற சிக்கத் அல் ஹைல் ரோட்டில் நின்று கொண்டு உண்டியல் மீன்களை லபக்கென்று கவ்வி இழுக்குற கொக்குக்கு ஐம்பது பைசா கொடுத்து ஆப்ராவில் ஏறி ஐந்தே நிமிடத்தில் அந்த ஃப்ளாட்டுக்கு வருவது பெரிய காரியம் இல்லை. ஆனால் கொக்குக்கு தன் உயிரும் மரியாதையும் பெரிது...

மெய்தீன் நானா வராமல் போனது எனக்குத்தான் இழப்பு.... அவர் வராததால் தனியாக ஒரு ரூம் பாத்ரூம் இணைப்புடன் கிடைத்ததென்று நான் நினைத்த நினைப்பின் வாசம் தன் மூக்கில் பட்டதும் பஷீர்காக்கா முந்திக்கொண்டு வந்தார்.

'பாத்ரூம் உள்ள ரூமை எங்கள்ட்ட கொடுத்துடுங்க ஆபிதீன்' என்றார்.

'கம்பெனி ஆளுங்க இன்னும் ரெண்டு பேரை இங்கே போடுறதா அரபாப் சொல்லி இருக்கிறாரு. அவங்க வந்தால் உங்களுக்குச் சிரமம் நாங்க வெளி பாத்ரூமை உபயோகிக்கும்போது'

'வர்ற போது பாத்துக்கலாம்...' கெஞ்சினார்போல் பார்த்தார்.

சரி என்றேன். அவர் பெண்டாட்டியின் உடம்புக்கு அரை பாத்ரூம் போதாதுதான். மகன் உடம்பிற்கோ முழு பாத்ரூம் வேண்டும்...!

'என் ஈரக்குலை...' என்றுதான் ஹைருன் தன் மகனைக் கூப்பிடும். அவனும் உண்மையிலேயே ஒரு மிகப்பெரிய ஊதிய ஈரக்குலை மாதிரிதான் இருந்தான். ஏழெட்டு வருடம் கழித்து பல அவுலியாக்களுக்கு நேர்ந்து கொண்டு பிறந்த பிள்ளையாதலால் செல்லம்...

அவுலியாக்களுக்கு, இப்படி ஆகும் என்று பல சமயம் தெரிவதில்லை...

நகத்தின் நுனி பசியால் துடிப்பதில் பிள்ளையின் கண்ணில் எப்போதும் இரை தேடும் ஜந்துவின் ஒளி.

'அல்லாஹ்வே... எனக்கு ஒரு புள்ளை போதும் ஆனா அவன் நாலு பேருக்கு தெரியிற மாதிரி 'நறுக்' குண்டு இருக்கனும்டு கேட்டேன் காக்கா...' என்றது ஹைருன்

நாநூறு பேருக்கு நடுவில் இருந்தாலும் அவன் தனியாகத் தெரிவான்தான்.

'நறுக்' கென்றா? 'சுருக்' கென்றும்தான்...

'கும்பகோணம் கான்வெண்ட்ஐ விட்டுட்டு ஏன் வந்தீயும்..?' என்றார் அவனை ஒரு நண்பர்.

'ஏன் கொளுத்திட்டு வரலேண்டு கேளுங்க....' - குரல், உடைந்த கண்ணாடி துண்டுகளால் கீறப்பட்டு பிறகு ஆணிகள் நிரம்பிய சரளைக் கற்களில் புகுந்து வெளி வந்தது இனிமையாக.

நண்பர் அதற்கப்புறம் என்னைப் பார்க்க வரவேயில்லை. அவரது ஈரக்குலையில் என்னமோ ஆகிவிட்டது!

'துள்ளனமா' இருக்கிற அவன் விரைவில் ஊர்க்காரர்கள் மத்தியில் பிரபலமாகத்தான் ஆகிவிட்டான். பையனை பேச விட்டு ரசிக்கிற கூட்டம் டெலிபோனில் வந்தது நிறைய.

'உம்மா எங்கே' என்று கேட்ட அந்தப் பையனின் உறவுக்காரன், பையன் பாத்ரூமை எட்டிப் பார்த்துவிட்டு 'உம்மா..

மூத்திரம்...

பேஞ்சிக்கிட்டு...

இருக்கிறாஹா...' என்று ராகமாய் (சிந்து பைரவி என்கிறார்கள்) பாடியதைக் கேட்ட ரசித்து அதை மற்றவர்களும் கேட்க மறுபடியும் நேயர் விருப்பம் கேட்டு, பையனின் பாடலை டெலிபோன் ஸ்பீக்கரில் போட்டான். 'உம்மா மூத்திரம் பேஞ்சிக்கிட்டு...'

பஷீர்காக்கா பையனைக் கொலை செய்வது போல்தான் அடிப்பார் பையனின் திருவிளையாடல்களை கேள்விப் படும்போதெல்லாம். 'ஈரக்குலை' ஒளிவதெல்லாம் என் அறையில்தான். அங்கே இன்னும் இடமிருந்தது...

பையனுக்குப் படிப்பு சொல்லிக் கொடுக்க முழு ஹால் லையும் ஆக்கிரமித்து, சமையலறையை தன் குடும்பஸ்தன் என்ற ஹோதாவில் முழுதாக எடுத்துக் கொண்டு, பாத்ரூமும் பால்கனியுமுள்ள மெயின் ரூமையும் ஏப்பம்விட்டுவிட்டு, தன் அவ்வப்போது சேர்க்கிற பழைய சாமான்களையெல்லாம் போட இடம் பார்த்து கெஞ்சி என் ரூமில் போட்டு...

கால்வாசி ரூமில் நான். இதில் அவரது மகனும் நுழைந்தால்?

இந்த லட்சணத்தில் அவர் மறுபிள்ளைக்கும் முயற்சி மேற் கொண்டிருக்கிறார். அதையும் என்ரூமில் வைத்துக்கொண்டால் நன்றாக இருக்கும்-அவ்வப்போது வரும் உறவுக்காரர்கள் சூழ நிற்க.



படிப்பகம்

www.padippakam.com

மெய்தீன் நானாவிடம் சொல்லிப் புலம்பினால், 'இந்த கூட்டமே அப்படித்தான்.. தெரிஞ்சிக்கிட்டுதான் நான் வரலே!' என்று சிரித்தார்.

சிரிப்பா? இடத்தையாவது அனுசரிக்கலாம் என்றால் அந்தக் குடும்பம் நாள் முழுவதும் போடும் காட்டுக் கூச்சலைத் தாங்க முடியவில்லை. ஊர்க்கார ஆள் இருக்கிறார் என்று 'மௌனமாக' போடு சண்டைகளும் பையனுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கவும் ஸ்கூல் பஸ் ஏற்றவும் செய்கிற அமர்க்களங்களும்...

பையன் என் TV யை வெறும் V- யாக்கிப் பழுதாக்கிய கடுப்பு வேறு...

'இர்ஷாத் சாஹிப்... எனக்கு தங்க அலவன்ஸ் கொடுங்கள் - ஒரு படுக்கைக்காவது. நான் நகரத்தில் எங்காவது தங்கிக்கொள்கிறேன்' மேனேஜரிடம்.

கையை விரித்து விட்டார். கம்பெனியே தங்க இடம் கொடுத்து இருக்கும் போது அதை விட்டுப் போகிறவர் அப்படிக் கேட்க கூடாதாம். தங்கவா?

இந்த லட்சணத்தில் என் மனைவியை வேறு கூட்டி வந்து த(ா)ங்க வைப்பதா?

'ரெண்டு 'தலை' ஒண்ணா இருந்துடும். ஆனால் நாலு முலை ஒண்ணா இருக்காது' என்று, சேர்ந்து தங்கி சீரழிந்தவர்களின் புலப்பம் காதுக்கு கேட்கிறது.

இல்லை. குனிந்துக் கொண்டே இருந்தால் தலையில் ஏறி விடுவார்கள் இவர்கள். முஷ்டியை உயர்த்தியே ஆகவேண்டும். தினம் பார்க்க வந்து குடும்ப பிரச்சினைகள் பேசுகிற (அப்படி என்னதான் குடும்பத்தில் இருக்கிறது?) அவரின் சொந்தக் காரர்கள் தடுக்கத் தடுக்க, அவர் மனைவியின் கூச்சலையும் மீறி, என் அறைக்கு தன் மகனை அடிக்க பஷீர்காக்கா நுழையும் போது 'நில்லுங்கனி அங்கேயே..! அறிவில்லே? இப்பவே உம்மட 'அஹட பஹட' சாமானையிலாம் எடுத்து உம்மட ரூமுல் வச்சாவனும்... இன்னமே எந்தக் காரணம் கொண்டும் நீம்பரோ, உம்பருட ஹராத்துல பொறந்தப் புள்ளையோ காலடி எடுத்து வைக்கக் கூடாது... எவ்வளவுதான் பொறுக்குறது? ம்..' என் உறுமல்.

ஃபிளாட்டே உறைந்து நின்று விட்டது! அந்த நொடியிலிருந்து அடுத்த நாள் காலை வரை முழு மௌனம்...

எவ்வளவு பெரிய சக்தி என்னிடம் இருக்கிறது! இதை வைத்துக்கொண்டு புழுப்போல நெளிந்துக் கொண்டு இருந்திருக்கிறேன்!

பஷீர்காக்காவின் உரத்த குரல் எங்கே போயிற்று?

என் சக்தியின் மேல் பூத்திருக்கும் நீறு நிறையத்தான் விலகி விட்டது.

'அந மர்கஜ் உல் வஹி... அந மர்கஜ் உல் இல்ஹாம்... அந மர்கஜ் உல் குல்லி சய்..' விரல் அசைத்தால் அண்ட சராசரமே அசைகிறதைச் சொன்ன கௌஸ் ஹஜ்ரத்திற்கு நன்றி சொன்னேன். அது அது அந்தந்த அளவில் அசைந்து கொண்டுதான் இருக்கிறது. நமக்குத்தான் பார்க்கத் தெரியவில்லை.

அசைகிறதா? நின்றே விட்டது!

அந்த தங்குமிடத்தின் காண்ட்ராக்டை புதுப்பிக்க முடியாது என்று சொல்லிவிட்டார் முதலாளி. அதுவே யாருக்கோ பிடித்து வைத்து இருந்ததைக் கொடுத்ததுதானே...

'அரபாப் நான் எங்கே போக முடியும் என் மனைவி பிள்ளைகளுடன்?' - கெஞ்சினார் பஷீர்காக்கா. கம்பெனியில் பதினைந்து வருடம் நாயாக உழைத்தவர் அவர்.

'ஜஹன்னம் கரோ!.. நானா கூட்டி வரச் சொன்னேன்...?

'இல்லை அரபாப். நீங்கள் தான் உதவி செய்யனும்... மே பஹூத் மின்னத் கர்தாஹூங்..' - கெஞ்சினார்.

'கம்பெனி 'நுக்ஸானி' ல் ஓடுகிறது... தெரியவில்லையா 'ஹிசாப்' பார்க்கிற உனக்கு?'

'தெரியும் அரபாப் ஆனால் என்னுடைய வாடகையால்தான் 'நுக்ஸான்' என்று இல்லை' - மேனேஜருக்குப் பெரிய தங்குமிடம் கொடுத்து இருப்பதை மறைவாகச் சுட்டிக் காட்டினார்.

'லா' - ஒற்றையெழுத்து. முடியாது...

இவருக்கு சிபாரிசு செய்த காக்காவின் மனைவி பெயரான 'செல்லா'விற்குள் இந்த 'லா'வும் அடக்கம்! எனவே பஷீர்காக்கா தன் மூட்டை முடிச்சுடன் மதீனா பதர் அருகேயுள்ள ஒரு கட்டிடத்தில் ஒரு ஸ்டூடியோ ஃபிளாட்டிற்கு என்னை விட்டுப் போனார். வாடகை பத்தாயிரம் என்றாலும் பதினெட்டாயிரம் என்று மாற்றி கம்பெனியை அவர் முட்டாளாக்க முடியும்.

நான்? ரமலே நீ சொல்..!

அது சிரத்தையாக மறுபடியும் இடமாற்றம் என்று சொன்னது! ஓ. அதுதான் எனக்கும் தெரியுமே... ஆனால் எங்கே?

அதை நான் தான் தீர்மானிக்க வேண்டும்.

'இந்த குடவுனிலேயே தன் போர்டபில் அமைத்து தந்து விடுவதாக சொல்கிறார் அரபாப்' என்றார் மேனேஜர்.

'சரி ஆனால் ஜாவித் வந்து தங்க வேண்டும். இடத்தை சுத்தமாக வைத்துக் கொள்பவர் அவர்'

ஜாவித், மிடுக்கான சுத்தமான பாகிஸ்தானி - மெயின்டனென்ஸ் சூப்பர்வைசர். அல்கோசிலிருந்து, அபுதாபி ராணுவத்தில் ஏலத்தில் வாங்கி வைத்திருந்த பழைய போர்டபில் ஒன்றோடு டிரக்கில் வந்து கிடங்கு வாயிலில் நின்றார் ஒரு நாளாக...

வாசல் சிறிது!

கிரேன் வைத்து போர்டபிளைத் தூக்கி ஆபீசின் இடது புறத்தில் வைத்தார்கள். வலது புறம் பாகிஸ்தானி கூலிகள் இருக்கிறார்கள் ஓரிண்டு போர்டபிள்களில். இது அலுவலக ஊழியர்கள், மேற்பார்வையாளர்கள் போன்ற ஏழெட்டு நட்சத்திரப் பதக்கங்கள் உள்ளவர்களுக்கு.

'இது இவ்வளவு பெரிதாக இருக்கிறதே... ஜாவிதுக்கு தனியாக வருமா?'

'இல்லை இதிலேதான் அவரும் தங்குவார்'

'தனியறை என்று சொன்னீர்கள் சாப்..'

'உள்ளே அழகான தனியறை இருக்கிறது ஆபிதீன். மீதிப் பகுதி ஜாவித் ரூமாக மாறும்'



படிப்பகம்

www.padippakam.com

ஜாவித் ரூம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் வேறு சில பதக்கம் பெற்றவர்களும் வருவார்கள் என்றார் அரபாப்.

எல்லாம் வந்த பிறகு என்ன செய்ய முடியும்? தனியறை கிடைத்து விட்டது என்று சந்தோஷப்பட்டுக்கொள்ள வேண்டியதுதான். போர்ட்டபிள், கழித்துக்கட்டப்பட்ட பழையதுதான் ஆனாலும் ஜாவித் அதற்கு புதிய பெயிண்ட் அடித்து வாசல் பகுதிக்கு விளக்குகள் போட்டு உள்ளே கார்பெட் விரித்து நன்றாகத்தான் ஆக்கினார். ஆனால் அதென்னமோ கருப்புக் கண்ணாடிபோட்டு ஒரு பல் இல்லாத கிழவி சிரிப்பது போல்தான் தெரிந்தது எனக்கு. சவூதியில் சில கேம்ப்களைப் பார்த்து அசந்து போனதை யெல்லாம் இப்போது நினைக்கக் கூடாது. கிடைக்கிற கிழவியோடு படுத்துக்கொள்.

இது கிழவியின் சிரிப்பு இல்லை. சாகப்போற கிழவனின் பெரும் இருமல்.

படுத்த பின்புதான் தெரிகிறது?

ஆட்கள் நகர்ந்தால் போர்ட்டபிளில் உள்ள அத்தனை பொருள்களும் ஒட்டு மொத்தமாக நடுங்கின. இலேசானவை கீழேயும் விழுந்தன. ஜாவித், போர்ட்டபிள் கீழே தாபூக் கற்களைக் கால்களுக்கு அடியில் வைக்க மறந்து விட்டார்.

இந்த பாகிஸ்தானிகளுக்கு இலேசாக நடக்கவும் தெரியாது. தன் உறுதியை நடந்து காட்டுபவர்கள். நான் அவர்களின் ஒவ்வொரு அடிக்கும் படுக்கையிலிருந்து மேலே கிளம்பி பொத்தென விழுந்தேன். Astral Travel என்பது இதுதானா ஹஜ்ரத்? ஆஜானுபகவான்களுக்கு முன்னால் நான் ஒரு அற்பக் கொசு என்ன செய்ய முடியும்? அதுவும் ஒரு மலபாரிக்கொசு.

மதராசியாக இருந்தாலும் மலையாளியாக இருந்தாலும் பெரும்பான்மையான பாகிஸ்தானியர்களுக்கும் அரபி களுக்கும் மலபாரிதான். இரண்டிலும் 'ம்' வருகிறதென்றோ? இதனால் ஒன்றும் வந்து விடப் போவதில்லை. ஆனால் எல்லா பாகிஸ்தானிகளும் சேர்ந்து ஒரு 'ச்சாவல் கானே வாலா ஆத்மி' ஐ (அரிசி தின்பவன்) கிண்டல் செய்வதுதான் பொறுக்க முடியவில்லை.

'இந்தியாவில் குரங்குகள் அதிகமாமே...!' என்றான் ஒருவன் - நான் அவர்களைக் கடந்து போகும்போது.

'ஆமாம். அங்கே குரங்குகள் என்று தனியாக இருக்கின்றன. மனிதர்கள் என்று தனியாக இருப்பார்கள்'

அன்றிலிருந்து என் வாய்க்கு பயந்தார்கள்.

ஆனாலும் தினமும் அவர்களின் கைகளின் வலுவிற்கு நான் பயந்து சாக வேண்டியிருந்தது. கதவைச் சாத்தினால் துபாயின் சாப்பாட்டுத்திருவிழா, மன்னிக்க, ஷாப்பிங் திருவிழாவில் வெடிக்கும் வெடிகளின் அதிர்வு போன்று மொத்த போர்ட்டபிளும் குலுங்கிற்று...

'திடும்...'

தொழுது கொண்டிருக்கும்போது சுஜூதில் நெற்றியில் இடிகள் விழும். இது சிமெண்ட் சுவர் அல்ல. அதுவும் பழையது. யார் சொல்வது இந்த மோடு முட்டிகளிடம்?

'தர்வாஜா ஆஹிஸ்தா பந்த் கரேங்' என்று மானேஜரிடம், கதவை மெதுவாக சாத்துவதற்கு எழுதி வாங்கி ஒட்டி, எச்சரித்த பிறகும் தான் இப்படி. ஒரு வேளை எழுதியதால் அப்படியோ. இல்லை அவர்களுக்கு மெது அதுதான். மற்றபடி அடுத்தவர்களைப் புண்படுத்த வேண்டும் என்று செய்வதில்லை.

அதேபோல்தான் ஜாவிதின் தம்பி ரஜாக், கூடவே தங்க தன் கூட்டாளிகளுடன் வந்தவன் அரபாப் வளர்க்கும் ஆடுகள் குட்டிகள் போட்டால் அதை தன் ரூமில் எடுத்து வைத்துக் கொள்வதும்.. இரவு முழுவதும் அது கத்தும். அதற்கும் பக்கத்து ரூமில் இருப்பவனைத் தொந்திரவு செய்யவேண்டும் என்ற நோக்கம் இல்லை.

நல்லவேளை ஆடுகளாகப் போயிற்று!

அரபாபிடம் புகார் செய்தேன். சிறு காற்றுக்கும் தள்ளாடுகிற போர்ட்டபிளின் நிலமையையும் சொன்னேன்.

'வேண்டுமானால் ஹயாத் ரீஜென்ஸியில் ரூம் போட்டுத் தரவா?' - எரிச்சலாகக் கேட்டார்.

அரசாங்கத்தை ஏமாற்றி சரக்கை அனுப்பாமலே இன்வாய்சுகள் போட உதவுகிற இங்கிலீஸ்காரன் நைஜலுக்கும் ஒரு பாலஸ்தீனிக்கும் வெகுமதியாக, அவர்களை எந்த இடத்தில் குட்டிகளுடன் தங்க வைப்பாரோ அந்த இடம் ஞாபகம் வந்து விட்டது!

கல்லி வல்லி!

நாள் முழுக்க தீய்க்கும் வெயிலிலும் அதை விட தீய்க்கும் குறைந்த சம்பளத்திலும் லட்சக் கணக்கானோர் வேலை பார்க்கிறார்களே...

நான் நகரத்திலேயே 'லோல்' படத் தீர்மானித்து விட்டேன். கூவம் அருகில் வாழ்பவர்களெல்லாம் மனிதர்களில்லையா? வல்லரசுகள் வான வேடிக்கைகள் நடத்தும் போது, பதறித் துடித்து பதுங்கு குழிகளில் ஒரு குவளை தண்ணீருக்கு கூட வழியின்றி சாகிற லட்சக்கணக்கான மனிதர்களின் (அரேபியர்களும் இதில் அடக்கம்) அவலங்களுக்கு முன்னால், அதிர்ச்சி தரும் ஓசைகளும் அசிங்கம் பிடுங்கும் மூட்டைப் பூச்சி படுக்கைகளும் எம்மாத்திரம்?

அல்லாஹ் இந்த நிலமையில் நம்மை வைத்திருப்பதற்கு 'சுக்ர்' சொல்ல வேண்டும். மூட்டைப் பூச்சியை படைத்தவனும் அவனே...

தீர்மானி!

சுப்ஹானக்க லா இல் மலனா இல்லாமா அல்லம்தனா இன்னக்க அன்த்தல் ஹலீமுல் ஹகீம்..

'ஹஜ்ரத், எத்தனை நாளைக்குத்தான் இப்படி வதை பட வேண்டும்?' என்று கேட்டேன் ஃபோன் போட்டு. 'கணக்கு' சொல்லிக் கொடுத்தவர்கள்...

'ம்... முடிவு வந்துவிடும். ஆனால் அது சீக்கிரம் வந்துட்டா தேவலை!'

இந்த ஹஜ்ரத்மார்களே இப்படித்தான். பதிலைக் கேட்டால் கேள்வியைப் பெருக்கினால்? விதியை மாற்றுவார்கள், வீதியென்று - சூரா 9:51ஐ தெரியாத மாதிரி...

இந்தக் கம்பெனி ஒன்றுதான் வாழ்வா என்ன?

'ச்...! சொல்வாதீங்க! ஷோக்கான கம்பெனியே இதுதான் - தர்ஹா வாலையிலே தங்குற மாதிரி. அங்கே தங்கி சுகத்தை அனுபவிச்சிட்டு. துனியாவிலே எங்கேயாவது போய் இருக்க


படிப்பகம்

www.padippakam.com

முடியுமா? கதவு திறந்த உடனேயே சூப்பு... அப்புறம் வாடா... கோதுமை ஹல்வா... கஞ்சி இதற்கிடையிலே பொட்டி சோறு. ராத்திரி ரெண்டு மணியா? மறுபடி சுட சுட சூப்பு..! அதமாதிரி இது' - மெய்தீன் நானா.

'மத்த கம்பெனிலாம்?'

'லாடம் கட்டிப்புடுவான் பார்த்துக்குங்க! அதனால, இருக்கிறவரைக்கும் இதிலேயே ஓட்டுங்க'

கடைசியில் மையத்தாங்கொல்லையில் 'மீங்கோரி' யா? இப்போது ஊரில் அதுதான் பிரபலம். விரைவில் 'சவர்மா'வும் வந்து விடும்.

உண்மைதானோ? சுகம் கண்டுவிட்டது போலும். தைரியமாக ஊருக்கு போகிறவர்களில் பெரும்பாலோர் திரும்பவும் ஈச்ச மரத்தில் ஏற வருவது சுகத்திற்காகவா? மேலும் உயர அல்லவா?

நான் உயர்வது எப்படி? ஜபல் ஹஃபீத் மலையுச்சியில் நிற்கலாமா?

உயர்வது அப்புறம். இருப்பது முதல்...

முதலில் தேராவில் ஜர்வூனி பள்ளியின் பின்புறம் மலையாளிகள் இருபது பேருடன் 3 மாதம். இப்போது கோட்டைப் பள்ளியின் பக்கத்தில் அப்பா கடைக்கு எதிரே உள்ள 'ஒன்றரை ஏக்கரா பில்டிங்' கில் தங்கியிருக்கிறேன். இந்த அறையில் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று எண்ண முடியவில்லை.

மூட்டைப் பூச்சிகளா? அவைகள் கடிக்குமா என்ன?

இடையில் பஷீர்காக்கா எப்படி இருக்கிறார் என்று பார்க்க போனேன். மூன்று நட்சத்திர இடத்திலிருந்து மூன்று சிமினி விளக்குகள் இடத்திற்கு வந்த வருத்தத்தை விட ஊர்க்காரர்கள் 'பஷீர்காக்கா இப்ப துபாயில இல்லே... மஞ்சக்கொல்லை மாதிரி ஒரு இடத்துல இக்கிறாஹா..' என்று ஊரில் தன் வீட்டில் சொல்வதைதான் வருத்தப்பட்டு சொல்லிக்கொண்டு இருந்தார் மூலையில் உட்கார்ந்து. மஞ்சக்கொல்லை மேல் என்ன வெறுப்போ? இடம் கிடைக்க நேர்ந்து கொள்ள, இவருக்குத் தெரியாமல் ஜு பிலி பாவா தைக்காவுக்குப் போன ஹைருன், இன்னொரு மூலையில் உட்கார்ந்து 'ஆமாம் காக்கா...' என்றது. பாவமாகத்தான் இருந்தது.

பையன் பிரம்மாண்டமாக ஸ்டீல் கட்டிலின் வலைகள் தரையில் படுமளவிற்கு தூங்கிக் கொண்டு இருந்தான்...

அத்தனை சாமான்களையும் எப்படித்தான் இந்த சின்ன இடத்தில் வைத்தாரோ?

பக்கத்து ஃபிளாட் காரனின் ரூமில் போட்டு இருப்பார்...!

இவர்களுடன் சேர்ந்து இருப்பதற்கு என் படுக்கை எவ்வளவோ தேவலை - கைக்காசு போனாலும். கம்பெனி வேன் வராவிட்டாலும் கூட பர்துபை போய் 61ம் நம்பர் பஸ் பிடித்து போய்விட முடியும். 'மேனேஜர் மட்டும் வானத்துலேந்தா குதிச்சாரு?' என்கிற பிடிவாதம் வந்தால் நானும் குடும்பத்தை வரவழைத்துக் கொள்வேன் என்றாவது. அதற்குள் மேனேஜருடைய சகிக்கும் குணத்தைக் கற்றுக் கொள்ள வேண்டும். அவருடைய அற்புதமான ஆங்கிலத்தை ஒரு வார்த்தை கூட எழுதத் தெரியாத அரபாப், ஆயிரம் முறை திருத்தினாலும் இரவு பத்துமணி வரை முகம் சுளிக்காமல் இருந்து கடிதம் எழுதுவது சாதாரண விசயமில்லை.

'பெஹன்ஜ் கா சாம்னே பீன் பஜானா' வை (எருமைக்கு முன்னால் மகுடி ஊதுவது) அவர் எரிச்சலின்றி செயல்படுத்துவது பற்றி எரிச்சல் ஏன்?

'எரிச்சல், பண்டி ஹராம்! பச்சை ஹராம்' என்பார்கள் கௌஸ் ஹஜ்ரத்.

மூட்டைப் பூச்சிகளை அடிப்பதும் ஹராம்தான். சக்தி விரயமும் கூட...

ஒழுங்கான காபிலியத் (தகுதி) இல்லாமல் வந்த நாம்.. சம்பாதிக்கும் இடத்தில் சக்தியையும் செலவழிக்கலாமோ? ஊர் போனால் விளக்குமாற்று அடி கிடைக்கும்! இருக்காது. அவர்களுக்கு அதுவா தேவை? நாம் இங்கு எல்லோருடனும் ஒத்து இருப்பதுதான் தேவை - பணம் அனுப்ப.

நான் அதில் இப்போது நிபுணன். கடலில் கலந்து விட்டேன்.

காலை முழித்ததும் 'இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி..?' என்ற திகீர்ப்பில் மனம் எல்லாம் வலிக்கப் போவதில்லை.

இன்று காலை முழித்ததும் எதிர் படுக்கையிலிருந்த இளைஞனின் பீதி படர்ந்த முகம்தான் தெரிந்தது. இரவு முழுவதும் அவன் தூங்கியிருக்கவில்லை என்பதும் தெரிந்தது. விசிட் விசாவில் வந்து வேலை கிடைக்காத பிரச்சினையா? இல்லை. இது அதைவிட பெரும் அதிர்ச்சியாக இருக்க வேண்டும். எதையோ பார்த்து பயந்திருக்கிறான்.

'என்ன தம்பி?'

'ச்சே! என்ன நானா நீங்க ...? படுத்தவுடனே உங்களை மறந்துடுறீங்க...'

'என்னா சொல்றே?'

'முதல்ல கைலியை உடுத்துங்க. எத்தனை தடவை சரிபண்ணுறது...? ச்சே!'

'நீ சீக்கிரம் இடம் மாறிடுவே...!' என்றேன்.

ooo

அருஞ்சொற் பொருள்

பரக்கத் - சுபிட்சம்
பலதியா - முனிசிபாலிட்டி
ஹராம் - அனுமதிக்கப் படாதவை
கல்ப் - நாய்
ஆப்ரா - கால்வாய்
நிய்யத் - எண்ணம்
தரீக்கா - பாதை
ஹயாத் - உயிர்
இன்ஷா அல்லாஹ் - அல்லாஹ் நாடினால்
சில்லா - தியானம்
பகாலா - பெட்டிக்கடை
நுக்ஸான் - நஷ்டம்
ஹிஸாப் - கணக்கு
கல்லி வல்லி - விட்டுத் தள்ளு
சுக்ர் - நன்றி.

*விரைவில் ஸ்நேகா வெளியீடாக வெளிவர இருக்கும் ஆபிதீன் எழுதிய குறுநாவல்களும் சிறுகதைகளும் அடங்கிய தொகுதியான **கடை** என்ற நூலிலிருந்து.*



படிப்பகம்

www.padippakam.com

# பன்முகம் நூலகம்

## கவிதை

1. **அலமாரியில் ஓர் இராஜகிரீடம் - ஆசிரியர்: தமிழ்மணவாளன், ரூ.30/-** . கோமளவல்லி பதிப்பகம், 18, பத்மாவதி நகர், மாதவரம் பால்பண்ணை, சென்னை-600 051.

**"ஆடைகளைப் போலவே**
**மாட்டி வைக்கப்பட்டிருக்கின்றன**
**முகங்களும்**
**மரஸ்டாண்டில்**
**எப்போதேனும் அரிதாய்ப்**
**பயன்படும் முகங்கள்**
**இஸ்திரி போட்டு பத்திரமாய்**
**பரணைச் சுத்தம் செய்யக்**
**கிடைக்கும்**
**பழைய முகங்கள்"**

பல தளங்களில் இயங்கும் கவிமனம் கவனத்தில் நிற்கும் வரிகள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.

2. **பயணவழிக் குறிப்புகள் - ஆசிரியர் : கே.ஸ்டாலின், ரூ.37/-** சல்லிகை, 5, கம்பன் வீதி, கண்டாச்சிபுரம்-605 701.

**"சற்றைக்குமுன்**
**நீ நிகழ்த்திய உரையாடல்**
**வேறு எந்த அழைப்பும் வராத**
**எனது தொலைபேசியின்**
**சுருள் இணைப்பில்**
**இன்னமும் உறைந்திருக்கிறது.**

பாசாங்கற்ற கவிதைகள்.

3. **கல்தூங்கும் நேரம் - ஆசிரியர் : விக்ரமாதித்யன், ரூ.35/-** மார்ஸ்விஷன், 39, தாமோதர மூர்த்தி சாலை, கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.

**"எப்பொழுதாவது**
**வானத்தைப் பார்க்கிறவர்களை**
**போலத்தான் இவனும்**
**செப்பிடி வித்தை போல**
**எப்படி கவிஞனானான்**
**இப்பொழுது**
**அப்படியெல்லாம்**
**அற்புதங்கள் நிகழாது போனால்**
**அப்புறமென்னதான் இருக்கிறது**
**பிரபஞ்ச ரகசியம்.**

விக்ரமாதித்யனின் தனித்துவமான கவிதைகள்.

4. **தணல் கொடிப் பூக்கள் - ஆசிரியர் : மாலதி, ரூ.45/-** சாந்தினி பதிப்பகம், ஆர்.எண்.6, பட்டினப்பாக்கம், சென்னை-600 028.

**"நீ நோய்ப்பட்டால்**
**என் முதுகிலையின் நடு நரம்பை**
**உரலிடித்துப் பொடி கசக்கி**
**உன்**
**விசக்கிருமி விசையழிக்க**
**உறு மருந்து நான் சமைப்பேன்"**

கொஞ்சம் ரொமாண்டிஸம்; கொஞ்சம் செய்யுள் வார்த்தைப் பிரயோகங்கள்; நிறைய கவித்துவம் வித்தியாசமான கவிதைகள்.

5. **காற்றுக்குப் பதிலாய் - ஆசிரியர் : குகை மா.புகழேந்தி, ரூ.25/-** மதி நிலையம், பிருந்தாவன் அடுக்ககம், 4 (39) தணிகாசலம் சாலை, சென்னை-17.

**"நின்றிருக்கிறேன் நானும்**
**அவ்விடத்தில்**
**மரமில்லாத பொழுதில்**
**என்றாலும்**
**என் மீதில் அமர்ந்ததில்லை**
**ஒரு நாளும் எந்தப் பறவையும்."**

ஒரு புதிய கவிஞரின் முதல் கவிதைத் தொகுதி.

6. **சூரியனுக்கும் கிழக்கே - ஆசிரியர் : திலகபாமா, ரூ.45/-** டாக்டர் மகேந்திர சேகர், மதி மருத்துவமனை, 15/1, ஆறுமுகம் ரோடு, சிவகாசி-626 123.

ஒரு பெண் கவிதாயினியின் முதல் தொகுப்பு. கவிதைகளில் நல்ல சிந்தனைகள் இருந்தபோதிலும் தேய்ந்துபோன மொழிப் பிரயோகங்களும், வெகுஜனப் பத்திரிகைகளில் வெளிவரும் பரபரப்புத் தன்மையை தோற்றுவிக்கின்றன. அடுத்த தொகுப்பில்தான் இவர் தனது வெற்றியை நிரூபிக்க வேண்டும்.

7. **சங்கராபரணி - ஆசிரியை : மாலதி மைத்ரி, ரூ.30/-** காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில்-629 001.

**"பறவையின் பார்வைக்கு**
**அப்பால்**
**பாறைக்குள் விரிகிறது**
**தேரையின் இன்னும் ஓர்**
**உலகம்"**

தமிழின் முக்கியமான பெண்கவிகளுள் ஒருவராக உருவாகி வரும் மாலதி மைத்ரியின் அன்பும், கோபமும், எரிச்சலும் கலந்த கவிதைகள்.

## சிறுகதை

1. **ஏழு லட்சம் வரிகள் - ஆசிரியர் : பாவண்ணன், ரூ.70/-** காவ்யா, 16, 17வது குறுக்குத் தெரு, இந்திரா நகர் II ஸ்டேஜ், பெங்களூர்.

நவீன சிறுகதைப் புனைவுகளில் புதிய தளத்தில் இயங்கும் செறிவான சிறுகதைகள்.

2. **புலலுள்ள நதி - ஆசிரியர் : பா.செயப்பிரகாசம், ரூ.35/-** சந்தியா பதிப்பகம், 52 (ப.எண்.7), முதல் தளம், நான்காவது தெரு, அஞ்சுகம் நகர், சென்னை-83.



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதைகளில் கவித்துவ நெடி குறைந்திருப்பது வாசிக்க ஆறுதலாக இருக்கிறது.

## கட்டுரை

1. **வனத்தின் குரல் - ஆசிரியர் : பா.செயப்பிரகாசம், ரூ.85/-** சந்தியா பதிப்பகம், சென்னை-83, திறனாய்வுக் கட்டுரைகள்.

2. **முகமூடிகளும் முகமூடி வியாபாரிகளும் - ஆசிரியர் : சுரேஷ் (எ) ஆர்.சீனிவாசன், ரூ.60/-** பைந்தமிழ்ப் பதிப்பகம், 10/86, நடுப்பாளையம், சித்தோடு - 638 102.

ஒரு இடதுசாரி சிந்தனையாளரரின் மிகக் கூர்மையான, கறாரான திறனாய்வுக் கட்டுரைகள். கவனத்துக்குரிய தீவிரமான சிந்தனைகள்.

3. **கலைகள் (உறவும் உருமாற்றமும்) - ஆசிரியர் : தமிழ்நாடன், ரூ.60/-** செட்டியார் பதிப்பகம், சீதை ஆச்சி இல்லம், அம்மாப்பேட்டை, சேலம் - 636 003.

தமிழில் ஒரு புதிய பார்வையுடன் வெளிப்பட்டிருக்கும் ஒரு அரிய நூல். அனைவரும் படிக்க வேண்டும்.

4. **உயிர் ஒன்று உடல் நான்கு (ஒரு படைப்பியல் ஒப்பியல்) - ஆசிரியர் : சேலம் தமிழ்நாடன், ரூ.50/-** பார்வதி பப்ளிகேஷன், 19D ராமலிங்கம் தெரு, அம்மாப்பேட்டை, சேலம் - 636 003.

பாரதிதாசனின் ஒரே கரு காவியம், நாடகம், உரைநடை, சினிமாப்பாடல் என்று பல்வேறு விஷயங்களில் உருவாகியிருந்த ஒரு செய்தியை விளக்கிக் காட்டி வியப்படைய வைக்கிறார் ஆசிரியர். தமிழுக்கு இது மாதிரியான ஆய்வு புதியது மட்டுமல்ல; அவசியமானதும் கூட.

5. **முக்கோணத்தில் நாலாவது பக்கம் - ஆசிரியர் : அமிர்தம் சூர்யா, ரூ.30/-** அன்னை ராஜேஸ்வரி பதிப்பகம், 41, கல்யாண சுந்தரம் தெரு, பெரம்பூர், சென்னை-11.

ஆழமான தீவிரமான கட்டுரைகள். இளம் கவிஞரான அமிர்தம் சூரியாவின் இன்னொரு பரிமாணம் தேர்ந்த கட்டுரையாளராக அவரைக் காட்டுகிறது.

6. **வலது கை மின்னல் - ஆசிரியர் : வே. எழிலரசு, ரூ.50/-** எழில், 21, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை-11.

பல தளங்களில் விரிவாக இயங்கும் கோபமும் ஆதங்கமும் தெறிக்கும் கட்டுரைகள்.

7. **திருமுருகாற்றுப்படை அமைப்பியல் ஆய்வு - ஆசிரியர் : முனைவர் பூந்துறையான், ரூ.35/-** வாசிப்பு இயக்கம், 337, திருவள்ளுவர் நகர், கள்ளிப்பட்டி-638 505, ஈரோடு மாவட்டம்.

## மொழிபெயர்ப்பு

1. கார்க்கி கட்டுரைகள், தமிழில் வல்லிக்கண்ணன். ரூ.30/-.

2. தாத்தாவும் பேரனும் (நாவல்), ராபர் ஸி.ரூவர்க். ரூ.100/- தமிழில் : வல்லிக்கண்ணன்.

3. மணல் பிரதி (சிறுகதைகள்), ஜோர்ஜ் லூயி போர்ஹே. ரூ.35/- தமிழ்த் தொகுப்பு : தளவாய் சுந்தரம்.

4. மஞ்சள் பூ (அயல்மொழி சிறுகதைகள்), தொகுப்பு : தளவாய் சுந்தரம். ரூ.50/-.

மேற்கண்ட நான்கு நூல்களும் சந்தியா பதிப்பகம், 52, ப.எண்.7, முதல் தளம், நான்காவது மாடி, சென்னை-83.


**மருதா**

நூல் அச்சு ○ பதிப்பு ○ விற்பனை

# 3, கீழ்த்தளம், 'ரியல் ரீஜென்ஸி', 102, பாரதிசாலை, சென்னை-14, ✆ 8485426,
மின்னஞ்சல் : marutha1999@rediffmail.com

| நூலின் பெயர் / ஆசிரியர் | விலை ரூ. |
|---|---|
| மின்மினிக்காடு / ஈரோடு தமிழன்பன் | 25 |
| கவிமூலம் / விக்ரமாதித்யன் | 35 |
| Glow-Worm Woods / S.A. Sankaranarayanan | 40 |
| கிட்டி / ப்ரஸன்னா | 60 |
| திசைக்குள் திசைகள் / ஈரோடு தமிழன்பன் | 130 |
| என்றும் இளமை / எஸ்.மோகனா | 40 |
| வேட்டையாடு விளையாடு / எஸ்.மோகனா | 40 |
| ஒரு வண்டி சென்ரியு / ஈரோடு தமிழன்பன் | 40 |
| கலையா! கைவினையா! / ஈரோடு தமிழன்பன் | 30 |
| Methods & Meanings in Tamizhanban / S.A. Sankaranarayanan | 40 |
| அங்கீகரிக்கப்படாத களவின்... / சி. மோகன் | 10 |
| Salutations Valluva! / Tamizhanban / S.A. Sankaranarayanan | 75 |
| கவிதைரசனை / விக்ரமாதித்யன் | 100 |
| மிதக்கும் இருக்கைகளின் நகரம் / சங்கர ராமசுப்ரமணியன் | 40 |
| சோ. தர்மன் கதைகள் / சோ. தர்மன் | 140 |
| புத்தம் வீடு / ஹெப்ஸிபா ஜேசுதாசன் | 70 |
| அவ்வை மண்ணில் பெண் எழுத்தாளர்கள் / பிரம்மராஜன் & ஆர். சிவக்குமார் | 70 |
| மற்றும் சிலர் / சுப்ரபாரதிமணியன் | 75 |
| வேர்கள் விழுதுகள் / திலகவதி | 70 |
| ஒரு ஆத்மாவின் டயரி / திலகவதி | 70 |
| கூச்சங்கள் / க.முத்துகிருஷ்ணன் | 50 |
| வில்லிசை வேந்தன் பிச்சைக்குட்டி / சோ. தர்மன் | 50 |
| உபகதை / பிரளயன் | 50 |
| இன்று விடுமுறை / பாலு சத்யா | 40 |
| காரணங்களுக்கு அப்பால் / ஜசக் அருமைராஜன் | 75 |
| கல் தூங்கும் நேரம் / விக்ரமாதித்யன் | 35 |

நல்ல நூல்களை அச்சாக்கி, வெளியிட்டு, விற்பனை செய்து தருகிறோம்.

நூல் விற்பனை நிலையம் உண்டு


அன்னம், அகரம், நாட்டார் வழக்காற்றியல் மையம், சவுத் விஷன், சிநேகா, புதுப்புனல், கல்லாத்தி, ருத்ரா பதிப்பக வெளியீடுகளும் சிற்றிதழ்களும் கிடைக்கும்.




படிப்பகம்

www.padippakam.com

## ~ மாலதி கவிதைகள் ~



### தூக்கமே காதலாக

அணிந்து கொள்ள வேண்டும் நான்
அவருடைய கண்களை
தூங்காமல் இருந்து விட.
ஏனே தெரியாது.
தூக்கமேயில்லை என்பார்.
என் தூக்கம் பெரிது
எழுந்து விடவே வேண்டாம்
என்பதாக.
எப்போது நினைத்தாலும்
உலகம் இருண்டு
என்னைத் தூக்கத்தில்
இழுத்துக் கொள்ளும்.
நிகழில் என் விழிப்புக்கான
இருப்பில்லை என்பதால்.
என் மணி பல்லவங்களின்
கொக்கிப் பிடி
உறக்கங்களில் மட்டுமே
பளு இறக்கம் என்பதால்.
கனவின் மீன்கள்
திமிங்கிலங்களாகு முன்
தப்பித்து எழுவேன் மீண்டும்
துயில்களை வேண்டியபடி.
என்றாலும் தூங்காத கண்கள்
கிடைத்தால் மேன்மை.
அவருடன் கண்களை
நிலையெதிர் மாற்றிக்
கொள்ள வேண்டும்.
அவ்வப்போது
உடனிருக்கும் நாட்களில்
அவருக்குத் தூக்கமும்
எனக்குத் தூங்காமையும்
நேர்ந்து போவது
வேறு விஷயம்.

### ஆனால்....

கலியுகங்கள் கிருதங்களாகி
மணல் மடிகள் தடாகமாகி
வெளிகள் எல்லாம் படிகளாகி
வேண்டுமவை கைக்குளாகி
மலர் விழியில் மயக்கம் ஏறி
மன அரங்கில் வெளிச்சம் மீறி
தொடர் நடையில் துள்ளல் ஊறி
தொடு விரலில் அமிர்தம் பேசி
நெடுநாளும் தொலைவில் ஓடும்
இதழோரம் மனசு பூக்கும்
நீயிருந்து பேசி வைத்ததை
அசை போட்டு ஆனந்தித்தால்.



### காதலர்

காதலர் தினத்தில்
சந்திப்பர்
காதலரல்லாதவர்
திருமண தினங்களில்
போல்.
காதலர் சந்திப்பதில்லை.
இருப்பர்
சொட்டச் சொட்டத்
தீக்குளியில் அருகும் போது
காதலர் இருப்பர்.
பரஸ்பர பரிசுக் கென்று
அவர்களுக்கு
உலகங்கள் வாய்ப்பதில்லை,
பரிசுகள் வாய்க்கும் நேரம்
உலகங்களில் அவர்களில்லை,
தெய்வங்களும் காதலர் தாம்
ஆவிகள் போல.

◆


படிப்பகம்

www.padippakam.com

## தமிழ் மணவாளன் கவிதைகள்

### கீற்று

மின்னலாய் நிகழ்ந்த கணத்தைச்
சேமித்தந்த
ஒளிக்கீற்றை மடித்து
பத்திரப்படுத்துகிறேன்
இருட்டுக்கும் வெளிச்சத்திற்குமான
உறவினை சமன்படுத்த
ஒளியின் உக்கிரம் தீர்ந்து விடாதவாறு.

### வரைவு

வெகு நாட்களாக ஒரு படத்தை
வரைந்து கொண்டிருக்கிறேன்
எந்தப் புள்ளியில் தொடங்கியதென
நினைவில்லையிப்போது
அவ்வப்போது
மனசின் தாளத்திற்கேற்ப நாட்டியமாய்
அபிநயித்த விஷயங்கள்
பரவிக் கிடக்கும் சிலையில்
அதனதன் இடத்தில் கால முறைமையற்று
தலையிலிருந்து கால் அல்லது
காலிலிருந்து தலை
என்றில்லாது வடிவானதொரு
மாயப் பெண்ணுருவின்
விழிதிறக்கும் வேளையிலே
பூர்த்தியாகக் கூடுமந்தப் படம்.

### தீவு

தீவென இருக்கிறது
தீவுக்குள் சஞ்சாரம்
அலையுங் கடல்
மணல் கொண்ட கரை
யாய் இறந்துறையும் மீன்
காயும் வாழ்வு
அற்றுப் போன நாற்றத்துள்
அக்தியுற்ற மரத் துண்டங்கள்
மிதக்கின்றன நீரில்
பறக்கின்றன காகங்கள்
கடல் தாண்டி
யும் எங்கு எங்கோ
உறவென யார் யாரோ
இருந்தாலும்
நீர் கொள்ளுமா கவிதை
நீலமாய் விரிகிறது
வார்த்தையும் வானம்.

- ஹவி

## கனவுகள்

முந்தைய நாள் இரவில்
மூன்று கனவுகள் கண்டேன்
முதல் கனவில்
வார்த்தைகளைக் கட்டுப்பாட்டில்
வைத்திருந்த மனிதர்
புள்ளியாகக் கூட இல்லாமல்
கரைந்து போனார்.

இரண்டாவது கனவில்
ஒரு பெண்ணுடன் மட்டும்
உறவு வைத்திருந்தவன்
விலாசம் தேடி தேடி
இளைத்துப் போயிருந்தேன்.

என் மூன்றாவது கனவில்
விசுவாசத்தையே வலியுறுத்திய
கணவர்களின் ஊர்வலத்தை
எதிர்த்த மனைவிகள்
ஆடைகளைக் களைந்து
மறுப்பைத் தெரிவித்தார்கள்.

மறுநாள்
மூன்று கனவுகளையும்
சரிவிகிதத்தில் கலந்து
குலுக்கி எடுத்த காக்டெயில் கரைசலில்
பார்த்தால்...
என் விடியல்

- இரா.கை.சங்கர்

## எனது இப்போதைய வீடு

வீடு விற்பனைக்கென்று
அதிகாரபூர்வமாய் அறிவித்தாயிற்று
வந்து பார்த்துவிட்டு அதிர
சென்றவர்களின் பெருமூச்சில்
புதிய வண்ணங்கள் கலைகின்றன.

கடைசியாக வந்தவனின் ஈரம் தோய்ந்த
காலடித்தடம் இன்னும் காயவில்லை
இனி
புதிதாய் வருபவர்களுக்காக நவீன
ஓடுகள் வேயப்பட்டாலும்
தேடுபவர்கள் என்றேனும்
கண்டடையக்கூடும்
பழைய விரிசல்கள் தேங்கியிருக்கிற
பூர்வீக ஈரத்தை....

- கீதாஞ்சலி ப்ரியதர்ஷினி



படிப்பகம்

www.padippakam.com

## காளான்கள் அரும்பிய காகை உடல்

யவனிகா ஸ்ரீராம்

*மாயா*
*உன் வண்ணத்திகள் குழந்தைகளின்றி மலைச் சரிவுகளில்*
*பதற்றத்துடன் அலைகின்றன*
*உன் கொங்கைகளை நீர் தழுவிப் போகும் புனலில்*
*நஞ்சு கலந்திருப்பதை யாருமுனக்குச் சொல்லவில்லையா*
*கண்கள் மயங்க உனைப் புணர்ந்த யோனி புத்திரர்கள்*
*தங்கள் குறிகளை இசைக் கருவிகளாக*
*மாற்றிக் கொண்டு விட்டார்கள்*
*கற்றாளைக் குழம்பெடுத்து மேனி பூசி மழை நனைகிறாய்*
*அகிற்புகை கனிய நிலவொளியில் கூந்தல் கோதிய வண்ணம்*
*உன் ஏகாந்தப் பார்வை நெடிய புணர்ச்சிக்கென*
*விழுதூன்றும் மரங்கள் பார்த்திருக்கும்*
*ஈரக் காற்றில் உடல் குறு, குறுத்துப் புல்லரிக்க*
*அடர்ந்த மழைக்காலம் வன்ங்களை*
*கடும பசலையாக முறுக்கிக் கொண்டிருப்பதையும்*
*இலைவழி நீரை ஓந்திகள் ருசித்துக் கொண்டிருப்பதையும்*
*உன் கானகக் கனவில் பாம்புகள் புணரும்*
*கோடைக்காலப் பதிவுகளாய் முலைப்பாலில்*
*சேகரித்திருப்பாய்*
*அதிர்வூட்டும் சங்கீதத்தோடும் மயக்கமூட்டும்*
*குளிகைகளோடும் கடற்கரை நகரங்களில்*
*உன்னை வெல்வதற்கியலாமல் பிரிந்து விட்ட தந்திரத்தை*
*அவைகளோடு இரைந்து அவர்கள் உற்சாகிக்கிறார்கள்*
*பால் கசியாத நைலான் தாவரங்கள் பிளாஸ்டிக்*
*பனிச் சொட்டுகள் காட்டி உன் கானகத்தை*
*போலி செய்கின்றன*
*தொழிற்சாலை விளக்குகளின் அடியில் திரியும்*
*உன் சின்தடிக் பெண்கள் நாரிழைக் கண்கள் மின்ன*
*உயிர்த்த கருமுட்டைகளை*
*உறைபனிக் குடுவையிட்டு*
*இறந்த வண்ணத்திகளை சிலிக்கான் மார்புகளில் செருகி*
*செயற்கை ஆணுறுப்பை முத்தமிட்டும இணைகிறார்கள்*
*கானகத்திலோ உன்யுகக் கனவுகள் உறைந்து உன் உடல்*
*பச்சையம் பாரித்து காளான்கள் அரும்பியிருக்கக் கூடும்.*


## பன்முகம்

| விளம்பரக் கட்டணம் | ரூபாய் |
|---|---|
| பின் அட்டை (வண்ணத்தில்) | 5000.00 |
| உள் அட்டை (வண்ணத்தில்) | 4000.00 |
| உள் அட்டை (கருப்பு வெள்ளையில்) | 2000.00 |
| முழுப்பக்கம் | 1000.00 |
| அரைப்பக்கம் | 500.00 |
| கால்பக்கம் | 250.00 |


## ஒரு கடிதம்

திரு. எம்.ஜி. சுரேஷ்,

உங்கள் 'சிலந்தி' நாவலைப் படித்தேன். இயல்பான வெளிப்பாட்டு மொழிநடை உங்களுக்கு வாய்த்திருக்கிறது. எவ்வளவு சிக்கலான, கதை நிகழ்வுகளையும், உங்களால் எளிமையாக தெளிவாக சொல்ல முடிகிறது. வார்த்தை வித்தைகளைவிட, கருத்துக்களின் நூதனத்திற்கே முக்கியத்துவம் கொடுக் கின்ற உங்கள் நோக்கம் வரவேற்கத் தகுந்தது.

மிகவும் பிரக்ஞையுடன் சிலந்தியின் கட்டமைப்பு யோசனை செய்யப் பட்டுள்ளது. 'கொலை' என்ற மையமான நிகழ்வுக்கு அகம், புறம் என்ற இரண்டு தளங்களிலும் பொருத்தமான, நம்பகமான ஓவிய பூர்வமான கற்பனை உலகம் உருவாக்கப்பட்டுள்ளது.

நீங்கள் மிகவும் பாதிக்கப்பட்ட உம்பர்ட்டோ ஈக்கோவின் இலக்கியக் கோட்பாடுகளை, உள்வாங்கி தமிழுக்கு ஒரு புதினமாக, ஒரு புதிய கிளை இலக்கியமாகப் படைத்ததில் நீங்கள் வெற்றியடைந் திருக்கிறீர்கள் என்று சொல்லலாம்.

இன்று வணிகக் கலாசாரத்தை தவிர்க்க முடியாது. அதே சமயம் அறிவியல் சிந்தனைகளின் திவிர வளர்ச்சியை நுண்மையை இலக்கியம் புறக்கணித்து விட முடியாது. இந்த இரண்டு இணைகோடுகளையும், ஒன்றுக் கொன்று ஆதாரமாக்கி புதினம் படைக்கும்போது, அது வாசகர்களின் கவனிப்பை ஈர்க்கும். அதேசமயத்தில், சிந்திக்கவும் தூண்டுகிறது. அந்த வகையில் 'சிலந்தி' ஒரு வித்யாசமான நாவல். வழக்கமான நாவல் இலக்கணங்களை எதிர்பார்ப்பவர்கள், ஏமாந்து போவதற்கும், வாய்ப்பு உண்டு.

– எஸ். வைதீஸ்வரன்.



படிப்பகம்

www.padippakam.com

# எதிர்வினை

யஷ்வந்த சித்தாள் அவர்களின் கதை அற்புதமாக எழுதப்பட்ட ஒன்று. பாவண்ணன் மொழிபெயர்ப்பு சிறப்பாக அமைந்துள்ளது. பாவண்ணனின் 'மூன்று கற்கள்' மற்றும் 'நாலுவேலி நிலம்' கவிதைகள் - மிதக்கும் கேள்வியையும் சேர்க்கலாம். இவரது கவிதைகள் திருப்புமுனை கண்டுள்ளன என்று எண்ண வைக்கிறது.

ஜோஸ் சரமாகோவை பிரம்மராஜன் நன்றாக அறிமுகப்படுத்தியிருக்கிறார். ரெய்ஸ்-லிடியா விவரம் கதையைப் படித்ததுபோல் அமைந்துள்ளது. சிந்தனைகளை மறைத்துக் கொள்வதற்காகத்தான் மனிதனுக்கு மொழி கொடுக்கப்பட்டுள்ளதாக ரெய்ஸ் கருதுவதாக பிரம்மராஜன் குறிப்பிட்டுள்ளார். எதை, எந்த அளவுக்கு என்பதில்தான் வேறுபாடு. கட்டுரையின் கடைசிப் பகுதியில் ஆங்கிலத்தில் சொல்லப்பட்டதை அதே படிமத்தோடு நான் 1973ல் நான் சொன்னேன். 'இன்று' என்ற ஏட்டில் அது வெளியாயிற்று. யாரும் தன்னை ஒரு இலக்கியவாதியாகக் கருதக் கூடாதென்று ஈரோடு ராமச்சந்திரன் எச்சரிப்பதைப் பார்க்கப் பயமாயிருக்கிறது. திரு.ம.தவசி எழுதிய 'நகுலன்' சிறுகதை கவனிக்கத் தூண்டியது. நகுலன் விஷயம் ரெமாண்டிசைஸ் ஆவது தொடர்கிறது.

திரு.சிவக்குமார் தன் கட்டுரையில் உறுப்பு களவாடுதல், உறுப்பு விற்பனை பற்றிக் குறிப்பிட்டுள்ளார். இவை கவிதையில் இடம்பெற்று 32 ஆண்டுகள் ஆகிவிட்டன தெரியுமா?

**ஞானக்கூத்தன்,** சென்னை-5

பன்முகம் இதழ் கிடைத்தது. உங்களுடைய எழுத்துக்களைப் படிக்கும்போது உங்களோடு நெருக்கம் கூடி வருமென எண்ணத் தோன்றுகிறது.

**லக்ஷ்மி மணிவண்ணன்,** நாகர்கோவில்-2

பன்முகம் இரண்டாவது இதழ் படித்தேன். ஜெயமோகனின் 'விரல்' சிறப்பாக இருந்தது. குழந்தையின் வளர்ச்சி; அதை உணரும் தகப்பனின் மனநிலை; அவன் உணர்வுகள்; விரலுக்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பு இவற்றை வடித்தெடுத்துள்ளார். சிறப்பான நடை. துணிச்சலான கரு.

பாவண்ணனின் மொழிபெயர்ப்பு 'பயணம்' மிகப் பெரிய ஒரு முடிவுக்கு நம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டே செல்கிறது. சரளமான மொழிபெயர்ப்பு. இறப்பிற்கு தன்னைத்தானே அவர் ஆயத்தப்படுத்திக் கொண்டது அனுதாபத்தைத் தேற்றுவிக்கிறது.

முடிச்சை மையமாக வைத்த ஒன்றுக்கும் உதவாதவன் கதை முடிச்சையா சொல்கிறது. இன்றைய உலக மக்களின் பிரச்சனையை சிக்கலையே சொல்கிறது. நல்ல குறியீட்டுக் கதை.

'கேசவபட்டர் கதை' கவிதையிலும் ஞானக்கூத்தன் கதை சொல்கிறார். அருமையான அகவற்பா ஓசை வருகிறது. அடி எதுகை இல்லாத நாலசைச் சீர் பாடல்.

பாவண்ணன் கவிதைகளில் மிதக்கும் கேள்வி சற்று மயக்கம் ஏற்படுத்துகிறது. நவீன ஊடகங்களால் அலைக்கழிக்கப்பட்டு நகர வாழ்வால் நசுக்குறும்போது நாலுவேலி நிலம் போன்றவற்றை நினைப்பதே ஆறுதல்தான்.



படிப்பகம்

www.padippakam.com

ஞானியுடன் உரையாடல் பல புதிய தளங்களில் நடைபெற்றுள்ளது. ஞானியின் கவலை தார்மீகக் கோபம் போன்றவை தெரிகின்றன.

✱ மார்க்சின் எழுத்து வேறு; மார்க்சியம் வேறு.

✱ எல்லாவற்றையும் மறு உருவாக்கம் செய்ய வேண்டும்.

என்பன இன்றைய இளம் படைப்பாளிகளுக்கு பெரும் சவால்கள்.

சர்ரியலிஸம் புரிந்து கொள்ள தங்கள் கட்டுரை ஓரளவு உதவுகிறது.

சாகித்ய அகாதமி பாவம்! இப்பொழுது பன்முகத்திடமும் அடி வாங்கிக் கொள்கிறது. எங்கிருந்து எடுத்தீர்களோ சாரு நிவேதிதா அறியாத காளிதாசன் கவிதை! நல்ல உதாரணம்.

இறுதியாக பன்முகம் அச்சமைப்பு அழகாய் உள்ளது. எழுந்துவிழும் எண்ண அலைகளாய் இருந்துவிடாமல் தொடர்ந்து வரவேண்டும். வீணான குழாயடிச் சண்டைக்கு ஆளாகாமல் தரமான மோதல்களுக்கு வழிவகுத்து பன்முகம் பலமுகங்களைக் காட்ட வாழ்த்துக்கள்.

**வளவ.துரையன்,** கிருட்டினாபுரம்.

புனைகளம், பன்முகம், அட்சரம் இவை மூன்றும் காலச்சுவடுக்கு மாற்றாக, காலச்சுவட்டை விட ஆழமும் அடர்த்தியும் கொண்டு இலக்கிய போக்கை தீர்மானிக்கும் சக்தியாய் மாறியுள்ளது பாராட்டுக்குரியது.

**அமிர்தம் சூர்யா,** சென்னை-39.

முதல் இதழ் நம்பிக்கையூட்டுகிறது. வரும் இதழ்கள் இன்னும் ஆழமாய் அழுத்தமாய் பேசும் என்ற எதிர்பார்ப்பை முன் வைக்கிறது.

தொடக்கத்தில் இரண்டு கடிதங்கள், அவை மட்டுமே இடம் பெற்றிருப்பதே சரி. சுரேஷின் பதில் (ஞானிக்கு) ஒரு இலக்கிய வரலாற்று ஆவணம். ஓர் ஆவணம் வெளிப்படுவதற்கு உரிய காலம் உண்டு. காரண காரியமும் உண்டு. உயர் படைப்பாளியின் பணி, கலைப்படைப்பை அக்கு அக்காகப் பிரித்துப் போட்டு விளக்குவதல்ல. என் கருத்தை இப்போது ஏற்காவிட்டாலும் பின் ஒரு பொழுது ஒப்புவீர்கள் என்று நம்புகிறேன்.

**தமிழ்நாடன்,** சேலம்

அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பை தேநீரும் என்னை வெகுவாக கவர்ந்தது. பன்முகத்தில் அது குறித்த பலரின் விமர்சனங்களையும் வாசித்தேன். ஞானி, ஜெயமோகன் மட்டுமல்லாது வாசிப்பின் துவக்க நிலையில் உள்ள வாசகனுக்கும், அவனுக்கேயான வாசிப்பனுபவத்தையும், சிந்தனை விரிவையும் அளிப்பதே இந்நாவலின் சிறப்பாக எனக்குப் படுகிறது. இதுகாறும் மகாவீரனென்று வரலாற்றின் பக்கங்களில் வீற்றிருந்த அலெக்ஸாண்டரை எந்த பிரயத்தனமுமின்றி ஒரு சாதாரண மனிதனின் பலவீனங்களுடன் சித்தரித்திருப்பது நாவலாசிரியர் என்ற முறையில் உங்கள் வெற்றி என்றே கூற வேண்டும். (இது உளவாளி ரனிலுக்கும் பொருந்தும்) செய்தி தன்மையுடன் அமைந்த விவரிப்புகள் நாவலின் சுவாரஸ்யத்தை சற்றே குறைப்பது இதன் பலவீனம். ஆனாலும், இந்நாவல் உங்களின் அத்தனை எழுத்துக்களையும் படிக்கும் ஆர்வத்தை தூண்டிவிட்டதை மறுப்பதற்கில்லை.

**ஜான் பாபு ராஜ்,** மடிப்பாக்கம்.

Panmugam, Editor : M.G.Suresh, Published by : Pudhu Punal, 32/2, Raji Street, First Floor, Ayanavaram, Chennai - 600 023.
Printed at : J.M.Process, 8/2, Mukthar Unisa Begum Street, Ellis Road, Chennai - 600 002. Ph.8415748

www.padippakam.com

# சந்தியா பதிப்பகம்

52 (பழைய எண் : 7), முதல் தளம், நான்காவது தெரு, அஞ்சுகம் நகர்,
அசோக் நகர், சென்னை - 600083. தொலைபேசி : 044 - 4899968

| | | |
|---|---|---|
| **சின்னுமுதல் சின்னுவரை** | வண்ணதாசன் | 15 |
| **ஏலேய்...** | பூமணி | 40 |
| **புத்தர் [நாடகம்]** | பம்மல் சம்பந்த முதலியார் | 40 |
| **புத்தரின் வரலாறு** | மயிலை சீனி. வேங்கடசாமி | 50 |
| **தாகூர் கதைகள்** | மகாகவி பாரதியார் | 35 |
| **கார்க்கி கதைகள்** | வல்லிக்கண்ணன் | 50 |
| **கார்க்கி கட்டுரைகள்** | வல்லிக்கண்ணன் | 50 |
| **உயிர்ச்சுழி** | பாரதிபாலன் | 50 |
| **வனத்தின் குரல்** | பா.செயப்பிரகாசம் | 65 |
| **புயலுள்ள நதி** | பா. செயப்பிரகாசம் | 35 |
| **வானப் பிரஸ்தம்** | எம். டி. வாசுதேவன் நாயர் | 20 |
| **கடலும் கிழவனும்** | எர்னெஸ்ட் ஹெமிங்வே | 30 |
| **திறந்த படகு** | ஸ்டீபன் க்ரேன் | 50 |
| **மாறிய தலைகள்** | தாமஸ் மன் | 50 |
| **சக்கரியா கதைகள்** | தமிழில் : சுரா | 30 |
| **நூறு எண்ணுவதற்குள்...** | விக்ரமாதித்யன் | 15 |
| **மந்திரப் பூனை** | | 40 |
| **ஐசுக் குட்டி** | | 40 |
| **முதல் முத்தம்** | | 35 |
| **சப்தங்கள்** | | 20 |
| **கம்யூனிஸ்ட் பாசறை** | | 45 |
| **நிர்வாணத் தம்புரான்** | எம். முகுந்தன் | 20 |
| **ஓ. வி. விஜயன் ஓர் அறிமுகம்** | தமிழில் : சுரா | 15 |
| **அன்னா தாஸ்தாயெவ்ஸ்கியின் காதல்** | தமிழில் சுரா | 25 |
| **சினிமா சிந்தனைகள்** | ஏ. கே. செட்டியார் | 15 |
| **கலை இலக்கியம்** | வெ. சாமிநாத சர்மா | 35 |
| **டி.க்யூலாவின் முத்தம்** | சக்கரியா | 30 |
| **மகாகவி பாரதியார்** | வ. ரா. | 50 |
| **அழியா ஓவியம்** | ஆஸ்கார் ஒயில்டு | 50 |
| **மேரிக்யூரி** | சுந்தானந்த பாரதியார் | 20 |
| **தமிழ்க்குமரி** | ச. து. சு. யோகியார் | 50 |
| **மணல் பிரதி** | ஜோர்ஜ் லூயி போர்ஹே | 35 |
| **மஞ்சள் பூ** | கால்வினோ - மார்க்வெஸ் | 50 |
| **பதேர் பாஞ்சாலி** | விபூதி பூஷண் வந்த்யோபாத்யாய | 100 |
| **தாத்தாவும் பேரனும்** | ராபர்ட் ஸி. ருவர்க் | 100 |
| **அன்புள்ள தியோ...** | வான்காவின் கடிதங்கள் | 100 |
| **கடல் வீரன்** | விக்டர் ஹியூகோ | 100 |
| **தாத்தாவும் பேரனும்** | வல்லிக்கண்ணன் | 100 |
| **சிவஞான போதம்** | வ. உ. சிதம்பரம்பிள்ளை | 15 |
| **புத்தர் கதைகள்** | | 15 |
| **லெனின் வரலாறு** | | 50 |
| **கார்க்கியின் வரலாறு** | | 50 |
| **கார்க்கியைப் பற்றி லெனின்** | | 10 |
| **வ. உ.சி. கண்ட பாரதி** | | 15 |
| **வண்ணநிலவன் கதைகள்** | | 250 |
| **வண்ணதாசன் கடிதங்கள்** | | 75 |
| **வள்ளலார் கடிதங்கள்** | | 50 |
| **வ. உ. சி. நூல் திரட்டு** | | 300 |
| **சுபமங்களா மொழிபெயர்ப்புக் கதைகள்** | | 75 |
| **குரு தத்** | இளையபாரதி | - |
| **பிரபஞ்ச கானம்** | உலகச்சிறுகதைகள் | - |
| **பார்கவி நிலையம்** | வைக்கம் முஹம்மது பஷீர் | - |
| **பாறைகள்** | இந்தியச் சிறுகதைகள் | - |
| **திருக்குறள் – தெளிவுரை** | சாமி சிதம்பரனார் | - |

படிப்பகம்

www.padippakam.com

# புதுமைப்பித்தன் பதிப்பகம்

52 (பழைய எண் : 7), முதல் தளம், நான்காவது தெரு, அஞ்சுகம் நகர்,
அசோக் நகர், சென்னை - 600083. தொலைபேசி : 044 - 4899968

| | | |
|---|---|---|
| தமிழர் தலைவர் | சாமி சிதம்பரனார் | ரூ. 100 |
| வான்கா | தமிழில் : சுரா | 100 |
| மரணத்தின் நிழலில்... | வைக்கம் முஹம்மது பஷீர் | 100 |
| கல்யாண்ஜி கவிதைகள் | கல்யாண்ஜி | 100 |
| மார்க்ஸ் | வெ. சாமிநாதசர்மா | 50 |
| சிங்கிடி முங்கன் | வைக்கம் முஹம்மது பஷீர் | 50 |
| மதில்கள் | வைக்கம் முஹம்மது பஷீர் | 30 |
| பத்திக் சந்த் | சத்யஜித் ரே | 50 |
| கானகத்தின் குரல் | ஜாக்லண்டன் | 75 |
| கிருஷ்ணன் வைத்த வீடு | வண்ணதாசன் | 75 |
| செங்கல்லும் ஆசாரியும் | சக்கரியா | 30 |
| பாஸ்கரபட்டேலரும் என் வாழ்க்கையும் | சக்கரியா | 50 |
| முத்தாரம் | சின்னக்குத்தூசி | 75 |
| நிலா பார்த்தல் | கல்யாண்ஜி | 35 |
| மா சே துங் கவிதைகள் | எஸ். வி.ராஜதுரை | 50 |
| இகுரு | அகிரா குரோசாவா | 50 |
| த்ரோன் ஆப் பிளட் | அகிரா குரோசாவா | 30 |
| மரண வீட்டின் குறிப்புகள் | தாஸ்தாயெவ்ஸ்கி | 60 |
| விவாதங்கள் தொடரட்டும் | ச. செந்தில்நாதன் | 50 |
| வண்ணதாசன் கதைகள் | | 350 |
| விக்ரமாதித்யன் கவிதைகள் | | 100 |
| யானை - போலந்துச் சிறுகதைகள் | ஸ்லவோமிர் ம்ரோசெக் - பூமணி | 80 |
| கண்மணி கமலாவுக்கு... | புதுமைப்பித்தன் கடிதங்கள் - இளையபாரதி | 75 |
| மரணத்தின் நட்சத்திரங்கள் | இளையபாரதி | 35 |
| குருதி கசியும் இசைத்தட்டு | மரணத்தின் நட்சத்திரங்கள் பற்றிய மதிப்பீடுகள் | 65 |
| நானும் சினிமாவும் | அகிரா குரோசாவா | - |
| சிட்டிசன் கேன் | ஆர்சன் வெல்ஸ் | - |
| பூமாலை | சின்னக்குத்தூசி | - |

**தனிச்சுற்றுக்கு மட்டும்**

தொடர்புக்கு: புதுப்புனல், 32/2 ராஜித் தெரு (முதல் மாடி) அயனாவரம் சென்னை - 600 023